...ஹை லக்னவி (ரஹி) அவர்களின்

# குதபா கொத்து

## தமிழ் பெயர்ப்பு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 SEP 1955
MADRAS

20
4-55




உத்தமபாளையம், அல்ஹாஜ் மௌல்வி

**S. S. முஹம்மது அப்துல்காதிர் சாஹிப்**

(பாக்கவி) அவர்களைக்கொண்டு எழுதப்பட்டது.

—பிரசுரம்—

**...ல் இஸ்லாம் புக்டிபோ**

**...லிக்கேணி மதராஸ்-5.**

Q7
N54.1
83340

மௌலானா அப்துல்ஹை லக்னவீ (ரஹ்) அவர்களின்

# குத்பா கொத்து

## தமிழ் பெயர்ப்பு


உத்தமபாளையம், அல்ஹாஜ் மௌலவி

**S. S. முஹம்மது அப்துல்காதிர் சாஹிப்**

(பாக்கவி) அவர்களைக்கொண்டு எழுதப்பட்டது.





— பிரசுரம் —

**தப்லீகுல் இஸ்லாம் புக்டிபோ**

**திருவல்லிக்கேணி மதராஸ்-5.**

முதற் பதிப்பு 1954.

تبارك اسم ربك ذي الجلال والإكرام

1-வது பாகம்

முஹர்ரம் மாதம் முதல்
றமலான் மாதம் வரை

இதன் விலை ரூ. 5—0—0

2-வது பாகம்

ஷவ்வால் மாதம் முதல்
துல்ஹஜ் வரை
ஈதுல் அல்ஹா
ஈதுல் பித்தர் & நிகாஹ்
குத்பாக்களும்

இதன் விலை ரூ. 2—8—0

All Righ Registered.

قد انطبع في المطبع تعليم الاسلام مدراس

Printed at the Hajee Meeran Press, Triplicane Madras-5.

# முகவுரை

---

اعوذ بالله من الشيطان الرجيم بفضلى بسم الله الرحمن الرحيم

الحمد لله الذي هدانا بارسال الرسل وانزل الكتب لعلية وبين لنا الحلال والحرام
واوضح السبل المرضية اشهد ان لا اله الا هو وحده لا شريك له وان سيدنا
محمدا عبده ورسوله صاحب الفضائل الجلية والخفية صلى الله عليه وعلى اله
وصحبه واتباعه صلوة دائمة بعدد السموات والارض والمخلوقات السنة

றஸூல்மார்களை அனுப்பி, அவர்களுக்கு வேதங்களை, அருளி, நமக்கு நன்மை தீமைகளையும், சன்மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதையும் விலக்கப்பட்டதையும் விளக்கிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப்புகழும் தகும். றஸூல் மார்களுக்கு நாயகமானவர்களும் நபிமார்களுக்குக் கடைசியானவர்களும், மனுஜின் ஆகிய இருவர்க்கங்களுக்கும் எஜமானரானவர்களுமான ஸெய்யிதுனா முஹம்மது (ஸல்) அவர்களுக்கும், மணமானவர்களான அவர்களது கிளையாருக்கும், பரிசுத்தவான்களான அவர்களது தோழர்களுக்கும், இவர்களைப் பின்பற்றியவர்களுக்கும், இறுதி நாள்வரை இறைவன் ஸலாத் என்னும் கருணையையும் ஸலாம் என்னும் ஈடேற்றத்தையும் நாடோறும் நல்குவானாக.

சோதரீர்! நாம் வாழும் இத்தமிழ் நாட்டில் இலட்சக்கணக்கில் முஸ்லிம்கள் வாழ்ந்தாலும், அவர்களிற் பெரும்பாலர் நமது வேத பாஷையாகிய அறபியைக் கற்கவில்லை. ஆனால், அவர்களது மத சம்பந்தமான அநேக காரியங்கள் அறபிப்பாஷையிலேயே நிகழுவதால் அவர்கள் அதனை வெறும் சடங்கு என்ற முறையிலேயே நிறைவேற்றி வருகின்றனர். அவைகளின் கருத்தையோ அருத்தத்தையோ விளங்குவதுமில்லை உணருவதுமில்லை. ஆதலால் அறபிப்பாஷையிலுள்ள நூல்களையும் சிறப்பாக திருகுர்ஆனையும் ஹதீதுகளையும் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும், இதரபல முக்கிய கிரந்தங்களைத் தமிழில் எழுதிப் பிரசுரிக்க

வேண்டும் என்ற எண்ணம் நம்மவருக்குத் தோன்றி வெகுகாலமாக அக்காரியங்கள் நமது மார்க்க அறிஞர்களான உலகமாக்களது உதவியாலும், மார்க்கபக்தி நிறைந்த பரோபகாரப் பணக்காரர்களது சகாயத்தாலும் வளர் பிறை, சந்திரனைப்போல் வளர்த்தோங்கி வருகிறது,

பொதுநலமான இப்பணியைச் செய்யும் முகத்தான் பிரதி வெள்ளிக்கிழமைகள் தோறம் ஜும்ஆவில் ஓதப்படுகிற குத்பா மகோபன்யாசங்களைத் தமிழில் மொழி பெயர்த்துப் பிரசுரிக்க வேண்டும் என்ற விருப்பம் சென்னை பிரபல இஸ்லாமிய நூல்களின் பிரசுரக்கர்த்தரும், புத்தக வியாபாரியுமான ஆலிஜனுப் ஹாஜீ எம். எ. ஷாஹுல் ஹமீது லெப்பை மர்ஹூம் அவாகளது சிரேஷ்ட புதல்வரான ஆலிஜனுப் ஹாஜீ எம். எஸ். அஹ்மது மீரான் ஸாஹிப் அவர்களுக் கேற்பட்டதன் பயனாக உங்களுக்குச் சமர்பிக்கப்படுகிற இக்கிரந்தம் எழுதப்பட்டது.

இது வடஇந்தியாவிலுள்ள லக்ஷ்மணபுரியில் வாழ்ந்த மௌலானா அல்ஹாஜ் மௌலவி அப்துல்ஹை மர்ஹூம் அவர்கள் மஸ்ஜிதில் பேஷ் இமாமாக இருந்து வேலைபார்த்த காலத்தில் சுயமே இயற்றி ஓதப்பட்டு, அப்பால் புத்தகரூபமாக அவைகளைத் தொகுத்து வகுத்து வெயிடப்பட்ட லத்தாயிபுல் (முஸ்தஹ்ஸனு) என்ற மஜ்மு அத்துல் குத்பு என்றகிரந்தத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாகும்.

நமது நாட்டிலுள்ள பட்டணங்களிலும் கிராமங்களிலும் பிரதி வெள்ளிக்கிழமைகளிலும் குத்பாக்கள் ஓதப்பட்டாலும், ஒரே விதமான குத்பாக்கள் ஓதப்படவில்லை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. ஆயினும், மேற்கண்ட அல்லாமா அவர்களால் எழுதப்பட்ட அறபி குத்பாதான் பெரும்பாலான இடங்களில் விசேஷமாக ஓதப்பட்டுவருகிறது. ஆதலின், கத்தீபுகளுக்கும் பொதுஜனங்களுக்கும் பிரயோஜனமாக இருக்கட்டும் என்ற நன்னோக்கத்தால் அதே கிரந்தத்தை மொழி பெயாக்கலானோம்.

எம்மால் மொழி டெயர்க்கப்பட்டும், எமது ஆப்த நண்பர் ஆலீஜனுப் ஹாஜீ M.S. அஹ்மதுமீரான் சாஹிபு அவர்களால் பிரசுரிக்கப்படுகிற இந்நூலைத்தான் யாவரும் வெள்ளிக்கிழமை ஜும்ஆவில் ஓத வேண்டும் என்ற நோக்கம் எங்களுக்கில்லை. ஏனெனில், குத்பாப் பிரசங்கத்தை அறபிப்பாஷையிலேயே ஓதவேண்டுமோ?, அறபியல்லாத பாஷையிலும் ஓதலாமா?, அறபிப்பாஷையில் ஓதி அதனை வேறு பாஷையில் மொழி பெயர்க்கலாமா என்ற பிரசினை விவாதத்துக்கிடமானதாக இருக்கிறது.

இப்பிரசினை சம்பந்தமான விவாதங்களில் ஒரு கக்ஷியில் சேர்ந்து தர்க்கவாதம் புரிய நாம் விரும்பவில்லை, இப்பிரசினையை மார்க்க அறிஞர்களான உலமாக்களது பத்வா என்னும் மார்க்கத்தீர்ப்பின் மூலமாகத்தான் தீர்த்துக் கொள்ள வேண்டும், ஆனால், சில ஊர்களில் அறபிப்பாஷையில் குத்பாவும் அதன் தமிழ் மொழிபெயர்ப்பும் ஓதப்படுகிறது. சில இடங்களில் குத்பாவில் வாஜிபு ஸுன்னத்துகளான பகுதிகள் அறபியிலும், உபதேசம் சம்பந்தப்பட்டவைகள் மட்டிலும் தமிழிலும் ஓதப்படுகிறது, பெரும்பாலான இடங்களில் அறபியிலேயே குத்பா ஓதப்படுகிறது. இரண்டொரு இடங்களில் அறபிப் பாஷையில் ஓதப்பட்ட குத்பாவை தொழுகை முடிந்த பிறகு தமிழில் மொழி பெயர்த்துச் சொல்லப்படுகிறது. ஷாபிஈ மதுஹபைச் சேர்ந்தவர்கள் மிகுதமாகவுள்ள சில ஊர்களில் அறபித் தமிழில் அச்சிடப்பட்ட குத்பாவும் தர்ஜுமாவும் ஓதப்படுகிறது. ஆதலால், இவைகளைக் கருதி கத்தீபுமார்கள் தங்கள் இஷ்டம் போல் நடந்து கொள்ளாமல் ஆங்காங்குள்ளமார்க்க அறிஞர்களது மார்க்கத் தீர்ப்பின் பேரில், அறபி குத்பாவை மட்டிலுமோ அதன் மொழி பெயர்ப்பையோ ஓதிக்கொள்வாரென எதிர்பார்க்கிறோம்.

உங்களுக்குச் சமர்பிக்கப்பட்ட இந்த நூல் வெள்ளிக்கிழமைகளில் ஓதப்படும் குத்பாக்களில், கூறப்பட்டுள்ள விஷயங்கள் யாவை என்பதைப் பொது ஜனங்கள் அறிந்து கொள்ளட்டும் என்பதற்காக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. உலமாக்களது மார்க்கத்தீர்ப்பின் பேரில் இந்நூலையும் தர்ஜுமாவாக உபயோகப்படுத்திக் கொள்ள இயலும். அல்லாமலும் குத்பாவிலுள்ள முக்கிய பகுதிகளை அறபியிலும் உபதேசம் சம்பந்தப்பட்ட பகுதிகளைத் தமிழில் ஓதவும் விரும்பும் கத்தீபுகளுக்கும் இந்நூல் அதிகப்பிரயோஜனந்தரும் என நம்புகிறோம். எவ்வாறாயினும் அறபிப்பாஷையில் மார்க்கக் கல்விபயின்ற உலமாக்களல்லாத கத்தீபுகள் ஸ்தலத்திலுள்ள உலமாக்களின் ஆலோசனையின் பேரில் இந்நூலிலிருந்து பிரயோஜனத்தை அடைந்து கொள்ளவேண்டும் என்பதை அழுத்தமாக அறிவித்துக்கொள்கிறோம்.

இந்நூல் யாவரிடமும் பரவி சன்மார்க்கத்துக்கு விரோதமில்லாத முறையில் உபயோகப்பட எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

*ஊழியன் :*

**S. S. முஹம்மது அப்துல் காதிர் சாஹிபு.**

1—7—1942
Uthamapalayam

# குத்பா சம்பந்தமான சில விதிகள்

உலமாக்கள் வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகைக்குப் பிறகு மஸ்ஜிதுகளில் மார்க்கப் பிரசங்கம் செய்வதையும், தெருக்களில் மதோபன்யாசம் செய்வதையும்போல் குத்பா பிரசங்கம் இல்லை. குத்பா பிரசங்கத்திலும் ஹிதோபதேசங்கள் இருக்கின்றனவாயினும் இவைகளை நிறைவேற்றும் தோரணையில் அதிக வித்தியாசமிருக்கிறது. ஆதலால், குத்பா பிரசங்கத்தை ஏனைய மத போதங்களைப்போல் கருதக்கூடாது.

குத்பாவில் நிறைவேற்றப்படவேண்டிய பல அம்சங்களிருக்கின்றன. அவை வருமாறு:—

1. குத்பாவை ஆடவர்கள் தான் ஓதவேண்டும்.

2. ஜும்ஆ வாஜிபாகுவதற்கு குத்பா ஓதுவதும் ஒரு ஷர்த்து.

3. ஜும்ஆத் தொழுகைக்கு முன்னதாகவே குத்பாவை ஓதுவது ஷர்த்து.

4. குத்பா ஓதும்போது தொழுகக்கூடாது.

5. தொழுகையில் விலக்கப்பட்டுள்ள சகல காரியங்களும் குத்பாவிலும் விலக்கப்பட்டிருக்கின்றன.

6. குத்பா ஆரம்பிப்பதற்கு முன்னதாக அதான் என்னும் பாங்கு சொல்லப்படும்.

7. குத்பாவுக்கும் ஜும்ஆத் தொழுகைக்கு மிடையில் வேறு காரியம் செய்யப்படக்கூடாது. அவ்வாறு செய்தால் குத்பா பாத்திலாகிவிடும். அதனைத் திரும்பவும் ஓதுவது வாஜிபு.

8. குத்பா ஓதிக்கொண்டிருக்கும்போது உலக சம்பந்தமான பேச்சுக்களைப் பேசக் கூடாது.

9. குத்பா ஓதும்போது கத்தீபு தமது கையில் கைத்தடியை யாவது அல்லது வாள்போன்ற ஆயுதத்தையாவது வைத்துக்கொண்டிருப்பது ஸுன்னத்து.

10. ஒலுவுடன் குத்பாவை ஓதுவது ஸுன்னத்து.

11. குத்பாவை கத்தீபு மட்டிலும் தனியாக இருக்கும்போது ஓதக்கூடாது. கத்தீபு ஓதும் குத்பாவைக் கேட்க ஜனங்களும் இருக்கவேண்டும். ஆனால், குறைந்த பக்ஷம் எத்தனை பேர் இருக்க வேண்டும் என்பதில் இமாம்களுக்கிடையில் அபிப்பிராய வித்தியாசமிருக்கிறது. கத்தீபு ஒருவர் மட்டிலும் குத்பாவை ஓதி முடித்த பிறகு ஜனங்கள் வந்து இமாம் ஜமாஅத்தாக ஜும்ஆவைத் தொழுதால் குத்பாவும் துருஸ்தாகாது. ஜும்ஆத் தொழுகையும் நிறைவேறாது.

12. குத்பாவில் அம்மா பஅது என்ற வாக்கியத்தைக் கூறுவது ஸுன்னது.

13. முதலாவது குத்பாவில் முதலில் தனா, பிறகு கலிமா ஷஹாதத்து, பிறகு ஸலவாத்து, பிறகு தக்வாவைக் கடைப்பிடிக்குமாறு வஸிய்யத்துச் செய்தல், இறுதியாக திரு குர்ஆனின் ஆயத்து ஆகியவைகள் இருக்கவேண்டும்.

14. இரண்டாவது குத்பாவில் தனா, கலிமா ஷஹாதத்து, ஸலவாத்து, வஸிய்யத்து தக்வா, ஆகியவைகளை ஓதிய பிறகு முஸ்லிம் ஆண் பெண் ஆகிய இருபாலருக்காகவும் துஆச் செய்ய வேண்டும். முதலாவது குத்பாவில் உபதேசம் இருக்கவேண்டும். இரண்டாவது குத்பாவில் துஆ இருக்கவேண்டும்.

15. இரண்டாவது குத்பாவில் குலபாயே ராஷிதீன்கள், நாயகம் (ஸல்) அவர்களது சிறிய தந்தைகள் ஆகியவர்களைக் குறித்து பிரஸ்தாபிப்பது முற்காலத்திலிருந்து வழக்கமாக இருந்து வருகிறது முஸ்தஹப்பு.

16. குத்பாவை ஆரம்பிக்கும்போது கத்தீபு மெதுவாக அஊது சொல்லிக்கொள்ளவேண்டும்.

17. குத்பா முடிந்தவுடன் இக்காமத்துச் சொல்லவேண்டும். தாமதிப்பது மக்ரூஹு.

18. குத்பாவை மின்பர் மீதோ அல்லது உயரமான மேடையின் மீதோ நின்றுகொண்டு ஓதவேண்டும். உட்கார்ந்து ஓதுவது மக்ரூஹு தஹ்ரீமி.

19. குத்பாவை ஆரம்பிக்கும்போது பிஸ்மில்லா ஓதுவது ஸுன்னத்துக்கு மாறான பிதுஅத்தான செய்கையாகும்.

20. குத்பா ஓதுபவர் தலைப்பாகைகட்டி இருப்பது முஸ்தஹப்பு.

21. இரண்டு குத்பாக்களும் சுருக்கமாகவே இருக்கவேண்டும். ஸுன்னத்து. திரு குர்ஆனிலுள்ள திவால் முபஸ்ஸலைப்பார்க்கினும் அதிகமாக இருக்கக்கூடாது. அத்தஹிய்யாத்து ஓதுகிற அளவைப்பார்க்கினும் குறைவாகவும் இருக்கக்கூடாது. ஆனால், அல்ஹம்து லில்லாஹி என்றோ லா இலாஹ இல்லல்லாஹு என்றோ ஒருமுறை கூறினாலும் மக்ரூஹுடன் குத்பா நிறைவேறி விடும்.

22. குத்பா ஓதும்போது கத்தீபு வலதுபுறமும் இடதுபுறமும் திரும்புவது பிதுஅத்து.

23. முதல் குத்பாவுக்கும் இரண்டாம் குத்பாவுக்கு மிடையில் மூன்று ஆயத்துகள் அளவுக்கு கத்தீபு உட்கார்ந்திருப்பது ஸுன்னத்து.

இவைகளையல்லாமல் இன்னும் அநேக விஷயங்கள் இருக்கின்றன. இவைகள் ஸுன்னத்துகளாகவும் முஸ்தஹப்புகளாகவுமிருக்கின்றன.

# பதிப்புரை

சோதரீர் !

எனது தந்தை சென்னை திருவல்லிக்கேணி, பிரபல புத்தக வியாபாரியான ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது லெப்பை (மர்ஹூம்) அவர்கள் காலந்தொடுத்து நீண்ட காலமாக நாங்கள் புத்தக வியபாரம்செய்து கொண்டிருந்தோம் என்பது தெரிந்த விஷயம். மதிப்பிற்குரிய எங்கள் தந்தை அவர்கள் வபாத்தான பின்னர், நாங்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டதுடன் ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது அண்டு சன்ஸ் என்ற விலாசத்தில் நடந்து வந்த புத்தகவியாபாரத்தை எமது சகோதரர்கள் ஏற்றுக்கொண்டதால், அந்த விலாசத்தில் நாம் புத்தக வியாபாரம் செய்வதிற்கில்லை. என்றாலும், இத்தொழிலில் எமக்கு நீண்டகால அனுபோக மிருப்பதை முன்னிட்டு, எமது சொந்த விலாசத்தில் புத்தக வியபாரத்தைத் தொடங்கி, "ஹாஜி மீரான் பிரஸ்" என்ற பெயரால் ஒரு அச்சகத்தையும் ஸ்தாபித்து, பல இஸ்லாமிய கிரந்தங்களை தமிழ் நாட்டு பிரபல நூலாசிரியான உத்தம பாளையம் ஹாஜி மௌலவி S. S. முஹம்மது அப்துல் காதிர் சாஹிபு பாக்கவி அவர்களைக் கொண்டு எழுதுவித்து, அவைகளை எமது சொந்த அச்சகத்திலேயே பிரிண்ட் செய்து வெளியிட முன் வந்து தஃலீமுல் இஸ்லாம், ஹனபீ, ஷாபிஈ, ஸெய்யிதுநா இமாம் ஹுஸைன் (றலி) அவர்களின் ஷஹீதே கர்பலா என்ற கிரந்தங்களையும் வெளியிட்டிருக்கிறோம்.

இரண்டாவது:—

தொழுகையின் சீரிய முறையில் தொழுகையை நிறை வேற்ற தெரிந்துக் கொள்ளலாம். ஹனபி, ஷாபிஈ என்னும் இருவகை தனித்தனியாக தொழுகை படங்களுடன் 4-ம் பதிப்பு அச்சிடப்பட்டுள்ளது.

தர்ஜமதுல் குதுபில் மஜ்முஅதி பில்அர்வீ மௌலானா அப்துல்லைஹ வெள்ளவி (றஹ்) அவர்களின் குத்பா கொத்து தமிழ் பெயர்ப்பு இரண்டு பாகங்களாக அச்சிட்டுள்ளோம்.

இக்காலத்துக்கேற்றவாறு நவீன முறையில் இஸ்லாமிய கிரந்தங்களை அச்சிட்டு, முடிந்த வரை சரசமான விலைக்கு விற்கவேண்டும் என்பதும் பொது ஜனங்கள் அதிகமாக பிரயோஜனம் அடைய வேண்டும் என்பதும் எமது நோக்கம். இக்கிரந்தத்தையும் கூட இன்னும் குறைந்த விலையில் வினியோகிப்பதே எமது எண்ணமாயினும் அகவிலையும், தொழிலாளர் கூலியும் அதிகமாகவுள்ள இக்காலத்தில் இதனைப் பார்க்கினும் குறைந்தவிலை ஏற்படுத்த இடம் கிடைக்கவில்லை. ஆகையால் எல்லா வியாபாரிகளும், ஆலிம் உலமாக் களும், பொதுஜனங்களும் எம்மை ஆதரித்து, நம் சமூகத்துக்கு பணிசெய்ய முன் வந்துள்ள எமக்கு உற்சாக மூட்டுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். இக்கிரந் தத்தை வெளியிட எமக்கு ஆலோசனைகள் பல கூறிய நண்பர்களுக்கும், எமது வேண்டு கோளுக்கு இணங்கி இக்கிரந்தத்தை எழுதித் தந்த பேராசிரியர் அவர் களுக்கும் எமது மனமார்ந்த நன்றி. இக்கிரந்தத்தில் பல குறைகள் இருக்கலாம். அவைகளைக் கண்ணுறும் அன்பர்கள் எமக்கறிவித்தால் இன்ஷா அல்லாஹ் அடுத்த பதிப்பில் அவைகளைத் திருத்தி வெளியிட சித்த மாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளு கிறோம்.

இப்படிக்கு,

தஃலீமுல் இஸ்லாம் புக் டிப்போ.

# பொருள் அட்டவணை


| நெ. | விஷயம் | பக்கம். |
|---|---|---|
| 1. | முகவுரை ...... ...... ...... | 3 |
| 2. | குத்பா சம்பந்தமான சில விதிகள் ...... ...... | 6 |
| 3. | பதிப்புரை ...... ...... ...... | 9 |
| 4. | முஹர்ரம் மாதம் 1-வது ஜும்ஆ ...... | 2 |
| 5. | முஹர்ரம் மாதம் 2-வது ஜும்ஆ ...... | 7 |
| 6. | முஹர்ரம் மாதம் 3-வது ஜும்ஆ ...... | 19 |
| 7. | முஹர்ரம் மாதம் 4-வது ஜும்ஆ ...... | 24 |
| 8. | முஹர்ரம் மாதம் 5-வது ஜும்ஆ ...... | 32 |
| 9. | ஸபர் மாதம் 1-வது ஜும்ஆ ...... | 38 |
| 10. | ஸபர் மாதம் 2-வது ஜும்ஆ ...... | 45 |
| 11. | ஸபர் மாதம் 3-வது ஜும்ஆ ...... | 52 |
| 12. | ஸபர் மாதம் 4-வது ஜும்ஆ ...... | 60 |
| 13. | ஸபர் மாதம் 5-வது ஜும்ஆ ...... | 67 |
| 14. | ரபீஉல் அவ்வல் 1-வது ஜும்ஆ ...... | 74 |
| 15. | ரபீஉல் அவ்வல் 2-வது ஜும்ஆ ...... | 81 |
| 16. | ரபீஉல் அவ்வல் 3-வது ஜும்ஆ ...... | 88 |
| 17. | ரபீஉல் அவ்வல் 4-வது ஜும்ஆ ...... | 94 |
| 18. | ரபீஉல் அவ்வல் 5-வது ஜும்ஆ ...... | 100 |
| 19. | முஹர்ரம், ஸபர், ரபீஉல் அவ்வல் ஆக மூன்று மாதங்களுக்கு பொதுவான இரண்டாவது குத்பா | 106 |
| 20. | ரபீஉல் ஆகிர் மாதம் 1-வது ஜும்ஆ ...... | 114 |
| 21. | ரபீஉல் ஆகிர் மாதம் 2-வது ஜும்ஆ ...... | 121 |
| 22. | ரபீஉல் ஆகிர் மாதம் 3-வது ஜும்ஆ ...... | 126 |
| 23. | ரபீஉல் ஆகிர் மாதம் 4-வது ஜும்ஆ ...... | 132 |
| 24. | ரபீஉல் ஆகிர் மாதம் 5-வது ஜும்ஆ ...... | 137 |
| 25. | ஜமாதுல் அவ்வல் மாதம் 1-வது ஜும்ஆ ...... | 143 |
| 26. | ஜமாதுல் அவ்வல் மாதம் 2-வது ஜும்ஆ ...... | 148 |
| 27. | ஜமாதுல் அவ்வல் மாதம் 3-வது ஜும்ஆ ...... | 154 |

28. ஜமாதுல் அவ்வல் மாதம் 4-வது ஜும்ஆ ...... 160
29. ஜமாதுல் அவ்வல் மாதம் 5-வது ஜும்ஆ ...... 166
30. ஜமாதுல் ஆகிர் மாதம் 1-வது ஜும்ஆ ...... 172
31. ஜமாதுல் ஆகிர் மாதம் 2-வது ஜும்ஆ ...... 179
32. ஜமாதுல் ஆகிர் மாதம் 3-வது ஜும்ஆ ...... 186
33. ஜமாதுல் ஆகிர் மாதம் 4-வது ஜும்ஆ ...... 192
34. ஜமாதுல் ஆகிர் மாதம் 5-வது ஜும்ஆ ...... 197
35. றபீஉல் ஆகிர், ஜமாதுல் அவ்வல், ஜமாதுல் ஆகிர் ஆகிய மூன்று மாதங்களுக்கு இரண்டாவது குத்பா 203
36. றஜபு மாதம் 1-வது ஜும்ஆ ...... 212
37. றஜபு மாதம் 2-வது ஜும்ஆ ...... 218
38. றஜபு மாதம் 3-வது ஜும்ஆ ...... 224
39. றஜபு மாதம் 4-வது ஜும்ஆ ...... 230
40. றஜபு மாதம் 5-வது ஜும்ஆ ...... 236
41. ஷஅபான் மாதம் 1-வது ஜும்ஆ ...... 242
42. ஷஅபான் மாதம் 2-வது ஜும்ஆ ...... 248
43. ஷஅபான் மாதம் 3-வது ஜும்ஆ ...... 254
44. ஷஅபான் மாதம் 4-வது ஜும்ஆ ...... 261
45. ஷஅபான் மாதம் 5-வது ஜும்ஆ ...... 267
46. றமலான் மாதம் 1-வது ஜும்ஆ ...... 273
47. றமலான் மாதம் 2-வது ஜும்ஆ ...... 280
48. றமலான் மாதம் 3-வது ஜும்ஆ ...... 283
49. றமலான் மாதம் 4-வது ஜும்ஆ ...... 294
50. அல்விதாஉ குத்பா ...... 301
51 றஜபு, ஷஅபான், றமலான் ஆகிய மூன்று மாதங்களுக்கு இரண்டாவது குத்பா ...... 310

2-ம் பதிப்பு! 2-ம் பதிப்பு!!

ஈமான், இஸ்லாம், தொழுகை, நோன்பு, ஜக்காத்து, ஹஜ்ஜு

என்னும்

# தஃலீமுல் இஸ்லாம்

## ஹனபியா & ஷாபி இய்யா

தொழுவதற்குச் சாதகமாய் அமைந்துள்ள அனுஷ்டானங்களும், தொழுகைக்கு ஓதவேண்டிய ஸூறாக்களும் ஸூறத்துல் பாத்திஹா முதல் ஸூறத்துல் லைல்வரை ஒரு வரி அறபியும், ஒரு வரி தமிழும், அதன் அர்த்தங்களும், தாத்பரியங்களும் விரிவாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளன.

ஹஜ்ஜு செய்யவேண்டிய அனுஷ்டானங்களும், இஹ்ராம் கட்டுவது முதல் திருமக்காவில் பிரவேசித்து தவாபு செய்து ஸபா மர்வா அறபாத் வரை ஓதவேண்டிய துஆக்களும், மதினா ஜியாரத்து வரை ஓதவேண்டிய துஆக்களும் ஒருவரி அறபியும் ஒருவரி தமிழும் தாத்பிரியமும் எழுதப்பட்டுள்ளன. ஹஜ்ஜு யாத்திரையாளர்களுக்கு இந்நூல் இருக்கவேண்டியது அவசியம். இத்துடன் அரேபியாவிலுள்ள மிக முக்கியமான புண்ணியஸ்தலப் படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இது சுத்தமான கிரௌன் காகிதத்தில் 1x16ல் அச்சிட்டு நேர்த்தியான பைண்டு செய்யப்பட்டது. சுமார் 480 பக்கங்கள் கொண்டது. ஹனபீ இதன் விலை ரூ. 4 0 0

சுமார் 512 பக்கங்கள் கொண்டது. ஷாபீ ரூ. 4 0 0

4-ம் பதிப்பு ——— 4-ம் பதிப்பு

# தொழுகையின் சீரியமுறை

நம் நாட்டில்வாழும் முஸ்லிம்களில் அநேகர் மத கிரந்தங்களைப் படிக்க சந்தர்ப்பம் வாய்க்காமல், எவ்வாறு தொழுதல் என்பதைக்கூட சரிவர அறிந்து கொள்ளமுடியாதவர்களாக இருக்கிறார்கள். இந்நிலையில் பாமரர்கள் ஏழைகள் எனப் படுவோரில் மட்டுமில்லை. படித்தவர்களிலும் பணக்காரர்களிலும் கூட அநேகர் இதே நிலையில் இருக்கின்றனர். இவர்கள் இந்நூலை வாங்கிப்படித்தால் மிகவும் சீரான முறையில் தொழுகையை நிறைவேற்றத்தெரிந்து கொள்ளலாம். ஹனபீ என்றும் ஷாபியீ என்றும் இரு வகையாக இந்நூல் தனித் தனியே அறபி பிளாக்குடன் அச்சிடப் பட்டுள்ளது. கீழ்கண்ட விஷயங்கள் யாவும் அடங்கியிருக்கிறது.

(120-பக்கம்) (தொழுகை படங்களுடன்) ஷாபீயி விலை அணா 0 12 0

(160-பக்கம்) (தொழுகை படங்களுடன்) ஹனபீ விலை அணா 0 12 0

ஸெய்யிதுனா இமாம் ஹுஸைன் (றலி) அவர்களின்

# ஷஹீதே கர்பலா

இஸ்லாமிய சரித்திரத்திலேற்பட்ட துக்ககரமான சம்பவங்களுள் கர்பலாசம்பவம் முதல் ஸ்தானம் பெற்று விளங்குகிறது. முஸ்லிம்கள்இருபிரிவுகளாகப் பிரிந்து ஹிஜ்றத் 61-ஆம் ஆண்டில் நடத்திய கர்பலாச் சண்டையின் விவரமும் அங்கு ஷஹீதானஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (றலி) அவர்களின் வாழிக்கைச் சரித்திரமும் அடங்கிய இந்நூல் இதற்கு முன் தமிழில் வெளிவந்திருக்கும் இத்தகைய நூல்களையெல்லாம் விடச் சிறந்ததாகக் கொள்ளப்படக் கூடியது ஏனெனில், கர்பலா சம்பவத்தைப்பற்றி இது காலை பல தரப்பட்ட தவறான அபிப்பிராயங்களும் கொள்கைகளும் முஸ்லிம் பொதுமக்களிடையே பரவி வந்திருக்கின்றன. சிலர் இதைக்கொண்டு சங்கைவான்களான அஸ்ஹாபிகள் பேரில் பழி சுமத்தவும் அன்னாரைத் தூஷிக்கவும் முற்படுகிறார்கள். கர்பலாப் போரை காரணமாக வைத்து அவ்வாறு செய்வது மத நம்பிக்கைக்குப் பாதகமானதென்பதை அவர்கள் உணருகிறார்களில்லை. ஆகவே, சரித்திர சம்பவமொன்றின் உண்மைத் தண்மையை அறிந்து கொள்ளும் நோக்கத்துடனன்றி கட்சிப்பிரதி கட்சியாகப் பிரிந்து அபிப்பிராயம் தெவிக்கும் நோக்கத்தோடு இந்தச் சம்பவதை அறிந்துக்கொள்ள முயற்சிக்கக் கூடாதென்ற இமாம்களின் கூற்றுப்படி இந்நூல் எழுதப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. அன்றியும் கர்பலாச் சண்டை நடைப்பெற்ற மாதத்தில் சில முஸ்லிம்கள் கையாண்டு வரும் மத விரோதமான செய்கைகளை ஒழிப்பதற்கும் இந்த வெளியீடு பெரிது உதவியாக இருக்குமென்று கூறலாம் முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் இதனை வாசித்துப் பயனடையலாம். இதன் விலை ரூ. 3 0 0

# நஜ்முல் மவாலித் தமிழ் மூன்று மவுலூது

இதில் றஸூலுல்லாவுடைய மவுலூதும், ஷை. மௌலூதின் வரிசைகளும், ஒவ்வொரு பைத்தின் தலைப்பில் அதற்குள்ள ஸலவாத்துப் பாட்டுகளும் அதபுகளும் இத்துடன் முஹ்யித்தீன் ஆண்டவர்கள் மவுலூதும் ஒவ்வொரு பைத்துகளின் தலைப்பில் அதற்குள்ள ஸலவாத்து பாட்டும் அதின் வரிசைகளும், மீரான் சாஹிபு ஆண்டவர்கள் மவுலூதும், அதின் வரிசைகளும், யாஸெய்யதி, யாகுத்பா, யாஸெய்யதி ஷைகி, மழைபைத்து, பிஹுப்பி ஸையிதினா பைத்து முதலியவைகளும் தமிழால் சுத்தமாக யெழுதி கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. ஒவ்வொரு மௌலூதுகளுக்கும் பெரிய துஆ சிறியதுஆ அறபியிலும் அதன் அர்த்தம் தமிழில் எழுதப்படடது.

விலை ரூ. 1 4 0

மூன்று மௌலூது அறபு விலை ரூ. 1 8 0

ஈமான், இஸ்லாம் தொழுகை, நோன்பு, ஜக்காத்து, ஹஜ்ஜு

# அறபுத் தமிழ் தஃலீமுல் இஸ்லாம்

## ஹனபிய்யா & ஷாபி இய்யா

பிரசித்தி பெற்ற நூலாசிரியரான உத்தமபாளையம் அல்ஹாஜ் மௌலவி S. S. முஹம்மது அப்துல் காதிர் சாஹிபு பாக்கவீ அவர்களால் இயற்றப்பெற்ற "தஃலீமுல் இஸ்லாம்" என்ற பிக்ஹு கித்தாபை சுத்த தமிழில் 3 வருடங்களுக்கு முன் யாம் பிரசுரித்தது உங்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இறைவன் கிருபையால் அதன் முதற் பதிப்பு ஒரு வருஷத்தில் செலவாகி விட்டது. அப்புறம் அதன் இரண்டாம் பதிப்பையும் சுத்தத்தமிழிலேயே வெளியிட்டோம். இதுவும் வெகுவிரைவில் செலவாகிக் கொண்டிருக்கிறது, சிறியோர், பெரியோர், ஸ்த்ரீ, புருஷர், முஸ்லிம், முஸ்லிம் அல்லாதார் என்ற பாகு பாடியின்றி யாவரும் எளிதில் விளங்கிக் கொள்ளும் விதத்தில் இக்கிரந்தம் தெய்வ அனுக்கிரஹத்தால் அமைந்து விட்டது. ஆதலால், இதற்கு முன் தமிழ் நாட்டில் வெளியான பிக்ஹு கித்தாப்புகளை பார்க்கினும் இதற்கு அதிக ஆதரவு ஏற்பட்டிருக்கிறது. இதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

முன்னோர்களால் எழுதப்பட்ட புத்துஹாத்துல்ஸலாம். மவாஹிபுல் மன்னான் போன்ற அறபுத்தமிழ் பிக்ஹு கிரந்தங்கள் இப்பொழுது மார்க்கட்டில் இல்லை. ஆதலால், அக்கிரந்தங்களில் கூறப்பட்டுள்ள மஸ்அலாக்கள் புதிய முறையில் இக்கிரந்தத்தில் இருப்பதால் இதனை அறபுத் தமிழில் வெளியிட வேண்டும் என்று அநேக அன்பர்கள் இதன் முதற்பதிப்பு வெளியான காலத்திலிருந்தே எம்மைத் தூண்டிக்கொண்டிருந்தனர். பல அன்பர்கள் கடிதம் மூலமாகவும் எமக்குத் தெரிவித்தனர். இக்கிரந்தம் அறபுத் தமிழில் வெளியானால் கிடைப்பது அருமையாக இருக்கிறது முற்காலத்து அறபுத்தமிழ் பிக்ஹு கிரந்தங்களின் தாகத்தை இக்கிரந்தம் தீர்த்து விடும் என்று எமக்கு உற்சாக மூட்டினர். ஆகவே, ஆலிம்களுடையவும் பொது ஜனங்களுடையவும் அபிப்பிராயத்துக்கு மதிப்புக் கொடுத்து அதனை அறபுத் தமிழில் வெளியிட ஏற்பாடு செய்து அச்சிட்டுள்ளோம்.

அறபு தமிழ் ஹனபீ கலிகோ பைண்டு ரூ. 6 0 0
அறபு தமிழ் ஷாபீ கலிகோ பைண்டு ரூ. 6 0 0

---

## பெரிய எழுத்து அறபி பிளாக்கு களுடன்

## (தொழுகையடவு)

ஹனபீ விலை அணா 0 4 0 ஷாபீ விலை அணா 0 4 0

# துஆ கன்சுல் அர்ஷ்
# &
# நஜ்முஉல் ஸலாத்

## ஸலவாத்துகளும் அறபி பிளாக்குகளுடன்

துஆ வணக்கத்துக்கு மூளை என்றும், துஆவைத் தவிர வேறு எதுவும் கற்பனையை மாற்றாது என்றும் நபிகள் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறி இருக்கிறார்கள். இந்த ஹதீது களின் இறைவனிடம் நாம் கேட்கும் துஆக்கள் நம்முடைய இபாதத் என்னும் வணக்கங்களாகவும், நமக்கு சம்பவிக்கும் தீமைகளை அகற்றி நன்மை பயப்பனவாகவும் இருக்கின்றன என்பது தெரிந்த விஷயம். ஆனால், அந்த துஆக்களை எப்படி ஓத வேண்டும் எந்தச் சந்தர்ப் பத்தில் ஓத வேண்டும் என்ற முறைகள் மட்டும் நமக்குத் தெரியவில்லை.

முன்னோர்களாகிய பெரியோர்கள் நமக்குத் தெரியாத இவ்விஷ யங்களை விபரித்து இன்னின்ன காலத்தில் இன்னின்ன விதமாக துஆச் செய்யவேண்டும் என்ற முறைகளை ஹதீது தலீல்களின் ஆதாரங்களைக் கொண்டு எடுத்தெழுதி அவைகளுக்குத் தனித்தனி பெயர்களையும் ஏற்படுத்தியுள்ளார்கள். இவ்வாறு ஏற்படுத்தப்பட்டவைகள் தான் துஆ அய்யாமுல் பீழ், துஆஉல் அர்ஷ், துஆஉல் கதஹ், முதலியவைகள்.

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது அல்லாஹு தஆலா ஸலவாத்துச் செய்ததுடன் நம்மையும் ஓதும்படி கட்டளையிட்டிருக் கிறான். உண்மையில் நாம் ஓதும் ஸலவாத்துகளும் கூட துஆக்களின் வகையைச் சேர்ந்ததே. ஆகவே, இறைவனது கட்டளைப்படி நாம் ஸலவாத்துகளை ஓதுவதால் அந்த ஸலவாத்துகள் அவசியம் அங்கீ கரிக்கப்படுகின்றன. அவைகளின் மூலமாக நமது கோரிக்கைகளும் நிறைவேறுகின்றன. ஆயினும், ஸலவாத்துகள் பலவகை. இவை அத்தனையையும் வரையறுத்துக்கூற இச்சிறு நூல் இடங்கொடாது. ஆதலால், அவைகளில் தருதே தாஜ், உம்முஸ் ஸலவாத், கவ்ஸிய்யா ஸலவாத், போன்ற சில பிரபலமான ஸலவாத்துகளையும், இறைவனின் திரு நாமங்களான அஸ்மாஉல் ஹுஸ்னா துஆ கன்ஜுல் அர்ஷ் போன்ற முக்கிய விர்துகளையும் இக்கிரந்தத்தில் ஒன்று பிரட்டி, அவைகளுக்குப் பக்கத்தில் அவைகளின் சிறப்புகளையும், ஓத வேண்டிய முறைகளையும் சேர்த்து தமிழ் மக்களின் நலங்கருதி அச்சிட்டுள்ளோம். அன்பர்கள் இவைகளில் கண்டவாறு ஸலவாத்து களையும் துஆக்களையும் விர்துகளையும் ஓதி இம்மை மறுமைப் பயன் களையும் அடைவார்களாக! ஒவ்வொருவர்களுக்கும் அவசியம் தேவைப்பட்டது. இது அழகிய காகிதத்தில் அச்சிட்டு பைண்டு செய்து விற்பனைக்கு தயாராகயிருக்கிறது. விலை ரூ. 1 00

---

**தஃலீமுல் இஸ்லாம் புக் டிப்போ.**

நெ. 642, திருவல்லிக்கேணி ஹைரோட், மதராஸ்-5.

بسم الله الرحمن الرحيم

# شرح الخطب المجموعة على الابتدائي

# குத்பா கொத்து

## தமிழ் பெயர்ப்பு

الحمد لله نحمده ونستعينه ونؤمن به ونتوكل عليه ونعوذ بالله

من شرور انفسنا ومن سيئات اعمالنا من يهده الله فلا مضل له

ومن يضلله فلا هادي له ونشهد ان لا اله الا الله وحده لا

شريك له ونشهد ان سيدنا محمدا عبده ورسوله

சர்வ புகழும் அல்லாஹுத் தஆலாவிற்கே தகும். அவன் மனித வர்க்கத்தினர் இம்மையில் சன்மார்க்கர்களாகத் திகழும் பொருட்டு ஷரீஅத்துகளை அருளி, அவைகளை மார்க்கச் சட்டங்களாக்கி இருக்கிறான். அந்த ஷரீஅத்துகளில் இறுதியான ஷரீஅத்தே முஹம்மதிய்யாவை இனியில்லாவண்ணம் நமக்குப்போதித்து இறுதி நாள்வரை அது உலகில் அனுஷ்டான மதமாக இருக்கத் தக்க விதமாக மக்களின் மனதில் பதியச் செய்த எங்கள் நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மீதும், அவர்களைக் கண்டு களித்த ஸஹாபிகள், குடும்பத்தினர் யாவர் மீதும், இவர்களைப் பின்பற்றியவர்கள் மீதும் இறைவனின் ஸலாத் என்னும் கருணையும் ஸலாம் என்னும் ஈடேற்றமும் இறுதிநாள் வரை உண்டாவதாக! ஆமீன் யாறப்பல் ஆலமீன்!!

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الْاُوْلٰى لِلْمُحَرَّمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ لَا تَصِلُ اِلٰى دَرْكِ حَقِيْقَتِهِ الْاَفْهَامُ ○ وَلَا تُدْرِكُ كُنْهَهُ الْعُقُوْلُ وَالْاَوْهَامُ ○ نَحْمَدُهُ حَمْدًا كَثِيْرًا عَلٰى حِلْمِهِ بَعْدَ عِلْمِهِ وَهُوَ الْعَلِيْمُ الْعَلَّامُ ○ وَنَشْكُرُهُ عَلٰى عَفْوِهِ بَعْدَ قُدْرَتِهِ وَهُوَ شَدِيْدُ الْاِنْتِقَامِ ○ فَسُبْحَانَهُ مَا اَعْظَمَ شَانَهُ، نَشْهَدُ اَنَّهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ، يُدَبِّرُ الْاَمْرَ بَيْنَ السَّمٰوٰتِ وَالْاَرَضِيْنَ، وَهُوَ مُنْفَرِدٌ فِيْ تَدْبِيْرِهِ لَا نَظِيْرَ لَهُ فِى الْعَالَمِيْنَ، يُنَزِّلُ الْغَيْثَ وَيَعْلَمُ مَا فِى الْاَرْحَامِ ○ وَنَشْهَدُ اَنَّ سَيِّدَنَا وَمَوْلَانَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ الَّذِيْ بَيَّنَ لَنَا الْحَلَالَ وَالْحَرَامَ ○ وَاَوْضَحَ مُتَشَابِهَاتِ الْاَحْكَامِ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ○

# يَا أَيُّهَا النَّاسُ اتَّقُوا اللهَ الْعَظِيمَ عَزَّ وَجَلَّ وَأَطِيعُوهُ

# أُوصِيكُمْ عِبَادَ اللهِ وَإِيَّايَ بِتَقْوَى اللهِ

## முஹர்ரம் மாதம்

## முதல் ஜும்ஆ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடை
யோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால்
(இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே தகும். அவனது அகமியத்தை புணரும் வரை விளக்கங்கள் செல்லமாட்டா. இன்னும் அவனது குன்ஹை அறிவுகளும் யூகங்களும் உணரமாட்டா. அவன் தெரிந்து கொண்ட பிறகும் அவனது பொறுமையைக் குறித்து அவனை மிகுதமான புகழாகப் புகழ்கின்றோம். மேலும், அவனே மிக அறிந்தவன், ரொம்ப அறிந்தவன்.

இன்னும் அவனுக்குச் சக்தியிருந்தும் அவன் மன்னிப்பதைக் குறித்து அவனுக்கு நாம் நன்றி செலுத்துகிறோம். ஆனாலும், அவன் தண்டிப்பதில் மிகக்கடியவன். எனவே, அவனது அந்தஸ்து எவ்வளவு மகத்தாக இருக்கிறது. அவன் தூயவன்.

அவனைத் தவிர்த்து வணக்கத்துக்குரியவன் இல்லை; அவன் தனித்தவன், அவனுக்கு இணையானவனில்லை என்று நாம் சாக்ஷியங் கூறுகிறோம். வானங்களுக்கும் பூமிகளுக்குமிடையிலுள்ள சகல காரியத்தையும் அவன் நிர்வகிக்கிறான். இன்னும் அவனது நிர்வாகத்தில் அவன் தனித்தவனே. இன்னும் அவனுக்கு அகிலங்களில் நிகர் இல்லை. மழையை அவன் வர்ஷிக்கச் செய்கிறான். இன்னும் கர்ப்பங்களிலுள்ளதை அவன் அறிகிறான்.

இன்னும், எங்களது நாயகரும் எங்களது எஜமானருமான முஹம்மது (ஸல்) அவனது அடியாரும், அவனது தூதருமாக இருக்கிறார்கள் என்று நாம் சாக்ஷியங் கூறுகிறோம். அனுமதிக்கப் பட்டதையும் விலக்கப்பட்டதையும் நமக்கு அவர்கள் விபரித்தார்கள். இன்னும் கட்டளைகளில் சந்தேகமானவைகளை விளக்கினார்கள்.

أما بعد அறிந்து கொள்ளுங்கள்! என் சகோதரர்களே! என் நண்பர்களே! அல்லாஹ்வுக்கு அவனது அருட்கொடைகளைக் குறித்து நன்றி செலுத்துங்கள். இன்னும் அவனது கொடைகளுக்காக அவனைப் புகழுங்கள். எனவே, அல்லாஹ்வின் அருட்கொடையை நீங்கள் கணித்தீர்களாயின் அவைகளை நீங்கள் கியாமத்து நாள்வரை சூழ்ந்தறியமாட்டீர்கள்.

உங்களை இன்மையிலிருந்து உண்மையின்பால் வெளிப்படுத்தி உங்களுக்கு உபகாரம் செய்திருக்கிறான். இன்னும், அவன் கொடையும், தர்மமும் உள்ளவன். இன்னும், கர்ப்பங்களில் சிசுக்களாக இருந்த காலத்தில் உங்களை அவன் வளர்த்தான். இந்திரியத்துளியினால் உங்களை அவன் சிருஷ்டித்தான். பின்னர், உங்களை ரத்தக் கட்டியாகவும் தசைக்கட்டியாகவும் ஆக்கினான். இன்னும், மிக அழகான வடிவத்தில் உங்களை உருப்படுத்தினான்.

மேலும், தசையையும் எலும்புகளையும் உங்களுக்கு உடுத்தினான். இன்னும் காலத்தை உங்கள் மீது சுற்றவைத்தான். இன்னும்

அதனை வருஷங்களாகவும், மாதங்களாகவும், நாட்களாகவும் பங்கு வைத்தான். இன்னும், அதில் உங்களுக்கென முபாரக்கான மாதங்களையும், சிறப்பான நாட்களையும் வைத்தான். முஹர்ரம்மாத ஆரம்பத்தில் சங்கையான துல்ஹஜ்ஜு மாதத்தை முடித்தான்.

எனவே, நீங்கள் ஞாபகிக்காமல் இருக்கிறீர்களே உங்களுக்கென்ன நேர்ந்தது? இன்னும் உங்களுக்கென்ன? நீங்கள் சிந்திக்கிறீர்களில்லை. நன்மைகளை நீங்கள் புறக்கணிக்கிறீர்கள். இன்னும் இன்பங்களில் நீங்கள் கவிழ்ந்திருக்கிறீர்கள். இன்னும், பெருந் தவறுகளைச் செய்துவிடுகிறீர்கள். உங்கள் தந்தையர்கள் மூதாதையர்களில் நின்றும் சென்று போனவர்களைக்கொண்டு நீங்கள் படிப்பினை கொள்கிறீர்களில்லை. உங்கள் தோழர்களும், உங்கள் கூட்டாளிகளும் எங்கே? உங்களுடனிருப்பவர்களும் உங்கள் நண்பர்களும் எங்கே? உங்கள் ஸுல்த்தான்களும் உங்கள் காக்கான்களும் எங்கே? இரவுகள் மடங்கி மடங்கி வருவதும், பகல்கள் செல்வதும் அவர்களை அழித்து விட்டது. கூடிய சீக்கிரத்தில் உங்களுக்கு ஒருகாலம் வரும். அவர்களாகிவிட்டதுபோல நீங்களும் ஆகிவிடுவீர்கள். அவர்கள் கைசேதப்பட்டது போல நீங்களும் கைசேதப்படுவீர்கள். அச்சமயத்தில் கவலைகளை யல்லாமல் அக்கைசேதம் உங்களுக்கு வேறெதையும் பிரயோஜனப்படுத்தாது.

எனவே, இரகசியத்திலும் பரகசியத்திலும் அல்லாஹ்வுக்கு பயபக்தி செலுத்துவதையும சகல விதமான தவறுகளையும் மாறுகளையும் தவிர்த்துக்கொள்வதையும் முக்கியமாக பெரும் நாட்களில் நீங்கள் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள்.

இதோ புதியதான வருஷம் உங்களுக்கு முன் வந்திருக்கிறது. கடந்த வருஷத்தை நல்ல கிரியைகளைக்கொண்டு வழியனுப்பி, இவ்வருஷத்தை சங்கையான செய்கைகளைக்கொண்டு வரவேற்று, மாறு செய்வதையும் குற்றங்களையும் விலக்கிக் கொண்டவருக்கே சோபனம்.

இந்தச் சங்கையான மாதத்தை அதாவது கண்ணியமும் பெருமையுமுள்ள முஹர்ரம் மாதத்தைப்பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். இந்த மாதம்: இதில் தான் அல்லாஹு தஆலா நமது நபிய்யினாஹு மூஸா அலா நபிய்யினா அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்களை விடுவித்து, பிர்அவ்னைச் சமுத்திரத்தில் மூழ்கடித்து, அவனை இருள்களில் போட்டுவிட்டான். இதில் தான் ஆஷூரா நாளிருக்கிறது.

ஆஷூரா நாள் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? அது ஒருநாள். அதன் சிறப்பு மிகச் சிறந்தது, மிக அழகியது. எவர் தனது குடும்பத்தாருக்கு அதில் விசாலப்படுத்துகிறாரோ அவருக்கு வருஷம் முழுவதில் அல்லாஹு தஆலா விசாலத்தை யளிப்பான். இவ்விதமாக மனிதர்களுக்கு நாயகமானவர்கள் கூறி இருக்கிறார்கள். இது ஒருநாள்; இதில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நோன்பு நோற்றதுடன், தங்கள் அஸ்ஹாபுகளான தோழர்களை நோன்பு நோற்குமாறு ஏவினார்கள்.

இது ஒருநாள்; இதில் நோன்பு நோற்பதில் ஸஹாபிகள் சிரத்தை கொண்டிருந்தார்கள். சிறு பிள்ளைகள் உள்பட ஜனங்கள் இந்த நோன்பை நோற்கவேண்டுமென ஏவினார்கள். இதில் மிகவும் சிரத்தை எடுத்துக்கொண்டார்கள்.

இது ஒருநாள். இதில்தான் றஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது மகளார் ஈன்றெடுத்தவரும் ஹஜ்ரத் அலி (றலி) அவர்களது புதல்வரும், நாயகம் (ஸல்) அவர்களது ஸ்வீகாரப்புதல்வருமாகிய ஸெய்யிதுனா ஹுஸைன் (றலி) அவர்கள் தம்முடைய மனோபீஷ்டத்தின் நீர்ச் சைசையை அளிக்கப்பட்டார்கள். இன்னும் செவிப்புலன்கள் மயிர்க் கூச்செறியும்படியான அநீதமாக அநியாயம் செய்யப்பட்டார்கள். இன்னும் அதனைப்பற்றி மனங்கள் வெறுப்படைகின்றன.

இன்னும், பல நாட்கள்வரை அவருக்கு ஜலம் தடுக்கப்பட்டிருந்தது. இன்னும் கடுமையான கஷ்டத்தில் முற்றுகையிடப்பட்

டிருந்தார். இது கர்பலா என்று பெயர் சொல்லப்படுகிற இடத்தில் நிகழ்ந்தது. அது வருத்தமும் கஷ்டமுமுள்ள இடம். அங்கு அல்லாஹ் தஆலாவின் தூதரது குடும்பத்தார் மீது சகல துக்கங்களும், கவலைகளும், விசனங்களும் வார்க்கப்பட்டன. எனவே, தமது சகோதரர்கள், உதவியாளர்களுடன் ஷஹாதத்து என்னும் பானத்தை அருந்தி சங்கைவான்களான ஷஹீதுகளில் சேர்ந்து விட்டார்கள்.

எனவே, அல்லாஹ் தஆலா அவருக்கும் அவரது உதவியாளர்களுக்கும் கிருபை செய்து, அவருக்கு அநீதி செய்தவர்களையும் சதி செய்தவர்களையும் தண்டிப்பானாக. ஆகவே, எவர் இம்மகாப்பெரிய ஆபத்தை ஞாபகம் செய்து இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன் (நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே சொந்தம். இன்னும் நிச்சயமாக நாம் அவனிடத்திலேயே மீளுகிறவர்கள்) என்று கூறுகிறாரோ அவர் மகா பெரிய அந்தஸ்தையடைந்து விடுவதுடன், கியாமத்து நாளில் பொறுமையாளர்களில் எண்ணப் படுவார்,

எனவே, இந்த தினத்தை நன்மைகளையும், தவறுகளை விட்டுத் தௌபாச் செய்வதையும், குற்றங்களை விடுவதையும் கொண்டு வரவேற்பதை உங்கள் மீது கடமையாக்கிக்கொள்ளுங்கள். அல்லாஹுத் தஆலா உங்களுக் கிருபை செய்யக்கூடும். இன்னும் உங்களது றப்பின் கிருபை உங்களுக்குச் சேர்ந்து தாருஸ்ஸலாம் என்னும் சுவர்க்கத்தில் உங்களைப் பிரவேசிக்கச் செய்யக்கூடும்.

இன்னும், கார்மானம் எவனிடத்திலிருக்கிறதோ அவனிடத்தில் இரக்கும் கரங்களை நீட்டியவண்ணம் மனப்பூர்வமாக "நாயனே! கிருபையுள்ளோனே! உபகாரியே! நீதான் மன்னிப்பளிப்பவன்; ஈடேற்றம் உன்னிடமிருக்கிறது. நாங்களோ பாவிகளாகிய மாறு செய்கிறவர்களான உனது அடியார்கள். எங்கள் குற்றங்களை நாங்கள் ஏற்று ஒப்புக்கொள்கிறோம். ஆதலின், உன்னைத் தவிர

வுள்ளவர்களை விட்டு எங்களை தேவையற்றதாக்கும் படியான கிருபையை எங்களுக்கருள்வாயாக! இன்னும் தாருஸ்ஸலாம் என்னும் சுவனபதியில் கேள்வி கணக்கில்லாமல் எங்களைப் பிரவேசிக்கச் செய்வாயாக!'' என்று கூறுங்கள்.

மேலும், சங்கையுள்ளவனை றப்பாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் தகும்.

أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ○

○ فَلَا تَحْسَبَنَّ اللهَ مُخْلِفَ وَعْدِهِ رُسُلَهُ إِنَّ اللهَ عَزِيزٌ ذُو انْتِقَامٍ

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹ்வினிடம் காவல்தேடுகிறேன்.

அல்லாஹ் தனது தூதர்களுக்கு அளித்த தனது வாக்குறுதிக்கு மாறு செய்பவன் என்று நீர் எண்ணிக் கொள்ளவே வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவன், தண்டனை கொடுப்பவன். (திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيْمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيْمٌ مَلِكٌ قَدِيْمٌ بَرٌّ رَؤُوْفٌ رَحِيْمٌ وَرَبٌّ حَلِيْمٌ ○

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الثَّانِيَةِ مِنَ الْمُحَرَّمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ بَسَطَ الْاَرْضَ بِلَا مَدَدٍ وَّرَفَعَ السَّمَآءَ بِغَيْرِ
عَمَدٍ وَّدَوَّرَه ○ وَخَلَقَ الْخَلْقَ بِلُطْفِهٖ وَكَرَمِهٖ وَبِاَحْسَنِ
الصُّوَرِ صَوَّرَه ○ هُوَ الَّذِيْ كَرَّمَ وُلْدَ اٰدَمَ عَلٰى مَا سِوَاهُ
وَفَضَّلَ نَبِيَّنَا مُحَمَّدًا صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَعَلٰى اٰلِهٖ وَسَلَّمَ عَلٰى
سَائِرِ الْمَخْلُوْقَاتِ وَجَعَلَ اٰدَمَ وَمَنْ دُوْنَه تَحْتَ لِوَآئِهٖ
وَكَمَّلَه ○ نَحْمَدُه حَمْدًا كَثِيْرًا عَلٰى اَنْ جَعَلَنَا مِنْ اُمَّةِ النَّبِيِّ
الْمُخْتَارِ الَّذِيْ عَظَّمَه وَبَجَّلَه ○ لَمْ يَتْرُكْ كَمَالًا اِلَّا اَعْطَاهُ
اِلَّا الْقَتْلَ فِي الْمَعْرَكَةِ فَخَصَّ بِهٖ سَيِّدَنَا الْحُسَيْنَ بْنَ عَلِيٍّ
وَّهُوَ ابْنُ بِنْتِهٖ وَمُتَبَنَّاهُ فَكَمَّلَه بِهٖ وَسَجَّلَه ○ وَنَشْكُرُه عَلٰى
اَنْ جَعَلَنَا مِنْ سَالِكِي الدِّيْنِ الْقَوِيْمِ، وَالطَّرِيْقِ الْمُسْتَقِيْمِ،
رَدَّ مَا سِوَاهُ وَتَقَبَّلَه ○ وَنَشْهَدُ اَنَّه لَآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَه
لَا شَرِيْكَ لَه وَلَا ضِدَّ لَه وَلَا نِدَّ لَه ○ وَنَشْهَدُ اَنَّ سَيِّدَنَا

مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ الْمَبْعُوثُ إِلَى كَافَّةِ الْخَلْقِ فَمَا أَحْسَنَهُ وَمَا أَكْمَلَهُ ۝

صَلَّى اللهُ وَسَلَّمَ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَآلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ ۝

يَا أَيُّهَا النَّاسُ ۝ اِتَّقُوا اللهَ الْعَظِيمَ عَزَّ وَجَلَّ وَأَطِيعُوهُ أُوصِيكُمْ عِبَادَ اللهِ وَإِيَّايَ بِتَقْوَى اللهِ ۝

## முஹர்ரம் மாதம்

# இரண்டாவது ஜும்ஆ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்.)

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே தகும். அவன் பூமியை உதவியில்லாமல் விரித்தான். இன்னும் வானத்தை தூண் இல்லாமல் உயர்த்தி, அதனை வட்டமாக்கினன். இன்னும் அவன் தனது

அன்பினாலும் தயையினாலும் சிருஷ்டிகளை சிருஷ்டித்து, அதனை அழகான வடிவத்தில் வடிவமாக்கினான். அவன் தான் ஆதமுடைய மக்களை மற்றவைகளைப் பார்க்கினும் சிறப்பாக்கினான். இன்னும் ஏனைய சிருஷ்டிகளைப் பார்க்கினும் எங்களது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹி வஸல்லம் அவர்களைச் சிறப்பாக்கினான். இன்னும் ஆதமையும் அவருக்குப் பிறகு உள்ளவர்களையும் அவரது கொடிக்குக் கீழில் ஆக்கி, அவரைப் பரிபூரணமாக்கினான்.

மகத்துவப் படுத்தி சிறப்பித்துத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிற நபியின் உம்மத்தில் நம்மை அவன் ஆக்கியதற்காக ஏராளமான புகழாக அவனை நாம் புகழ்கின்றோம். யுத்தத்தில் வெட்டுப்படுவதொன்றைத் தவிர மற்றைய மேன்மையில் எதனையும் அவருக்களிக்காமல் அவன் விட்டு விட வில்லை. இதற்கு (அதாவது யுத்தத்தில் வெட்டுப் படுவதற்கு) ஹஜ்ரத் அலி (றலி) அவர்களது புதல்வரான ஸெய்யிதுனா ஹுஸைன் (றலி) அவர்களைச் சொந்தப்படுத்திவிட்டான். அவர் அந்நபியவர்கள் புதல்வியின் புத்திரர். அந்நபியவர்களது ஸ்வீகாரப்புதல்வர். அவரைக்கொண்டு அவர்களுக்கு நிறப்பமாக்கி அழகாக்கி வைத்தான்.

நேரான பாதையிலும், நேர்மையான மார்க்கத்திலும் நடப்பவர்களில் எங்களையும் ஆக்கியதற்காக அவனுக்கு நாங்கள் நன்றி செலுத்துகிறோம். அம்மார்க்க மல்லாததை அவன் தள்ளிவிட்டதுடன், அதனை அவன் அங்கீகரித்து மிருக்கிறான்.

மேலும், நிச்சயமாக அவனைத் தவிர்த்து வணக்கத்துக்குரியவன் வேறு யாருமில்லை. அவன் தனித்தவன், அவனுக்குப் போட்டியானவனுமில்லை, அவனுக்கு நிகரானவனுமில்லை என்று நாங்கள் சாக்ஷியங்கூறுகிறோம்.

இன்னும் எங்களது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும், சிருஷ்டிப் பொருள் யாவற்றின் பாலும்

அனுப்பப்பட்ட அவனது தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாக்ஷியங்கூறுகிறேன். எனவே, எவ்வளவு அழகாகச்செய்துவிட்டான் இன்னும் அவரை எவ்வளவு பரிபூரணமாக்கி விட்டான்.

أَمَّا بَعْدُ அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹுத் தஆலாவின் அடியார்களே! நிச்சயமாக இவ்வுலகம் அழிவுக்குரிய உலகம். இதில் நிரந்தமானது எதும் நிரந்தரமாக இராது. குழப்பங்களும் கஷ்டங்களும் நிறைந்த உலகம். கவலைகளும் விசனங்களுமுள்ள உலகம். ஹஸன், ஹுஸைன் (றலியல்லாஹு அன்ஹுமா) ஆகிய இருவர்களுக்கும் மோசம் செய்த உலகம். அல்லாஹுத் தஆலா தனது அடியார்களைப் பரீக்ஷிப்பதற்காக அலங்காரமாக்கிய உலகம் இது.

எனவே, அதனை எவர் தள்ளிவிட்டாரோ அவரை அவன் கண்ணியப்படுத்துகிறான். இன்னும் எவர் அதனைத் தேடுகிறாரோ அவரைத் தாழ்த்துகிறான்.

அவன் தூயவன், அவனது அந்தஸ்து எவ்வளவு மகத்துவமுள்ளது. சிருஷ்டிகளை எவ்வஸ்துவிலிருந்து சிருஷ்டித்தான்? (தெரியுமா?) இந்திரியத்துளியிலிருந்து சிருஷ்டித்தான். அப்புறம் அதனை அமைத்தான். பின்னர், அப்பாதையை அவனுக்கு இலேசாக்கினான். இன்னும் நேர்வழி என்ற பாதையின்பால் அவனுக்கு வழிகாட்டி, அதனைச் சுலபமாக்கினான்.

இன்னும் மனிதர்களில் நின்றும் ஒவ்வொரு வருக்கும் தனது அடியார்களில் நின்றும் கிராமன் பாரா (சங்கைவான்களான நல்லோர்கள்)என்னும் மலக்குகளை நியமத்திருக்கிறான். தங்களுக்கு ஏவப்படுவதை அவர்கள் செய்வார்கள், அவர்கள் செய்வதை சங்கையான, உயர்வான, தூயதான பட்டோலைகளில் அவர்கள் எழுதுகிறார்கள்.

இன்னும், தனது சிருஷ்டிகளின்பால் சுவிசேஷஞ் சொல்பவர்களான எச்சரிக்கை செய்பவர்களான தூதுவர் (றஸூல்)களை அனுப்பினான். இன்னும் அவர்களது தலைவர்களில் நின்று முள்ளவராக நபிமார்களுக்கு முத்திரையானவரை ஏற்படுத்தினான். அவரைக்கொண்டு நபித்துவத்தை முற்றுப்பெறச் செய்துவிட்டான். இன்னும் அனுமதிக்கப்பட்டதையும் விலக்கப்பட்டதையும் விபரித்து, பாபங்களையும், பாபியினிடம் சிநேகம் செய்வதையும் விட்டுக் கண்டித்து எச்சரிக்கை செய்துள்ளான்.

அறிவுள்ளோரே! அந்தரங்கத்திலும் பகிரங்கத்திலும் அல்லாஹுத் தஆலாவுக்குப் பயபக்தி செய்வதைக் கடைப்பிடித்துக் கொள்ளுங்கள். வணக்கத்திலும் மாறுசெய்வதை விட்டு விலகிக் கொள்வதிலும் உமது வயதைச் செலவு செய்வதைப்பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். எஜமானாகிய மௌலாவுக்குக் கீழ்ப்படிவதை உம்மீது கடமையாக்கிக் கொள்வாயாக. நீ ஏவப்பட்டதைச் செய்வாயாக! இன்னும் உமது இருதயத்தில் அவன் பாலுள்ள அன்பைக் குடியிருக்கச் செய்வாயாக!

தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றுவதை அவசியமாகக் கடைப்பிடிப்பாயாக! எனவே, எவர் ஜமாஅத்தென்னும் கூட்டத்தை விட்டுத்தனிக்கிறாரோ அவர் வழி கேட்டில் தனித்து விடுகிறார். உன்னைப் பேணிக்கொள். பின்னரும் உன்னைப் பேணிக் கொள். உன் சககாலத்தினருக்கு நீ கீழ்ப்படிவதை விட்டு. ஏனெனில், நிச்சயமாக அவர்கள் காலத்தைக் கெடுத்து விட்டார்கள். முஸ்லிம்களைக் குறித்து இரகசியமாகவும் பரகசியமாகயும் (பரிகசித்துச்) சிரிக்கிறார்கள். இன்னும் சகோதரர்களது இறைச்சிகளைப் பற்களால் பட்சிக்கின்றனர்.

தொழுகைகளை அவர்கள் விட்டு விடுகிறார்கள். ஜமாஅத்தை விட்டு விரண்டோடுகின்றனர். இன்னும் முஸ்லிம்களைக் கேவலமாக மதிக்கின்றனர். மூமின்களுக்கிடையில் அவர்கள் சீர்திருத்தம்

செய்வதில்லை. இன்னும் மஸ்ஜிதுகளில் இவ்வையகத்தின் காரியங்களைக் குறித்து ஒருவருக்கொருவர் பேசிக் கொள்கிறார்கள்.

முஹாஜிர்களையும், சன்மார்க்க யுத்தம்செய்த முஜாஹிதுகளையும் குறித்து குறைகூறுகின்றனர். உணவையும் உறக்கத்தையும் அதிகப்படுத்துகின்றனர், வீணான பேச்சுக்களில் மூழ்கியிருக்கின்றனர். அவர்களிலுள்ள அறியாதவர்களை அறிந்தவர்களாக நிர்ணயித்துக் கொண்டனர், அவர்களிலுள்ள அறிவிலிகளை அறிஞர்களான புக்ஹாக்களாக ஏற்படுத்திக் கொண்டனர்.

எனவே, அவர்களிடம் பத்வா என்னும் மார்க்கத் தீர்ப்புகளைத் தேடுகின்றனர். அவர்களும் மார்க்கத் தீர்ப்பளிக்கின்றனர். ஆகவே, அவர்களும் வழி தவறி மற்றவர்களையும் வழி தவறச்செய்து விட்டனர். ஆனால், அல்லாஹு தஆலாவை அஞ்சுவதில்லை.

பித்அத்துகளை ஸுன்னத்துகளாக எடுத்துக்கொண்டனர். எனவே, அவர்களது (பாவச்) சுமையையும், அவர்களைப் பின் பற்றியவர்களது (பாவச்) சுமையும் அவர்கள் மீதிருக்கின்றன. இன்னும் ஸுன்னத்தையும் பித்அத்தாக ஆக்கிக்கொண்டனர். எனவே, அவர்களது தீய பயனும், அவர்களைப் பின்தொடர்ந்தவர்களது தீய பயனும் அவர்களுக்கிருக்கிறது.

பனத்துக்குள் பகை சாதித்து நாவில் நட்புக்கொள்கின்றனர். இன்னும் தங்களுக்குள் இந்நயவஞ்சகத்தை வெளிப்படுத்திக் கொள்கின்றனர். எனவே, இவ்விழி குணங்களில் இவர்களை நீ பின்பற்றினால் திட்டமாக நீ கெட்டுப்போவாய். உன்னை நீ பேணிக்கொள். மேலும், இவர்களுக்கு நீ மாறு செய்தால் உயரிய அந்தஸ்துகளையும், உன்னதமான மாளிகைகளையும் சுவர்க்கத்தில் அடைவாய்.

தவிர, அல்லாஹுத் தஆலா தனது அடியார்களது மாறான செய்கைகளை உதயமாகிப் பார்க்கின்றான் என்பதையும் அணுப் பிரமாணம்கூட அவனுக்கு மறையாது என்பதையும் நீ அறிய

வில்லையா? பின்னரும், அவர்களை அவன் அம்பலப்படுத்துவதில்லை, அவர்களது குறைகளை அவன் மறைக்கின்றான். மேலும், அவர்கள் தங்கள் செய்கைகளுக்கு தவ்பாச் செய்து மீளுவார்களாயின் அவர்களது குற்றங்களை அவன் மன்னிக்கிறான். எனவே, சிருஷ்டிகளை அவன் எவ்வளவு தூரத்துக்கு அறியாமலாக்கி, அதனை மறக்கடிக்கிறான்.

கப்று என்னும் குழிகளுக்குள்ளிருப்பவர்களை அல்லாஹுத்தஆலா எழுப்புவான் என்பதையும், பகிரங்கமான பிரசன்னமாகும் இடத்தில் பிரசன்னப்படுத்தி, குறிப்பானவர் பொது ஜனங்கள் ஆகிய ஒவ்வொருவரையும் விசாரணை செய்வான் என்பதையும் அவர் சம்பாதித்த பொருளையும், அவர் அழித்த வயதையும், அவர் வீணாக்கிய நேரத்தையும் குறித்து அவன் வினவுவான் என்பதையும் அறியவில்லையா?

அச்சமயத்தில் தக்க ஜவாபு சொல்ல உன்னால் இயலுமா? உனது றப்பு உனக்குக் கிருபை செய்து, மன்னிக்கும் பார்வையுடன் உன்னைப்பார்த்தால் அல்லாது பரிந்து பேசுபவர்களது பரிதாபம் உனக்குப் பிரயோஜனப்படுமா அல்லது வேதமும், நபித்துவமும் உனக்கு உதவுமா?

என்னுடைய இச்சொல்லை நான் கூறுகிறேன். “எனது காரியத்தை அல்லாஹ்வின் பால் ஒப்புக்கொடுக்கிறேன். நிச்சயமாக அவன் நாம் செய்வதை நன்கு பார்க்கிறவன். ஞாபகமடைந்து கொள்ளவேண்டும் என நாடுபவருக்கு இது ஞாபகமூட்டல். எனவே, இஷ்டப்பட்டவர் இதனை ஞாபகித்துக் கொள்ளலாம்”.

நாயனே! நாங்களோ பாபிகளான மாறுசெய் தோழர்களான உனது அடியார்கள். எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்துக் கொண்டோம். ஆதலின், நஷ்டவாளர்களில் எங்களை நீ ஆக்காதிருப்பாயாக. இன்னும் சன்மார்க்கவான்களான நல்லோர்களுடன் எங்களை ஆக்குவாயாக! ஆமீன், மேலும், சகல புகழும் அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹ்வுக்கே தகும்.

أَعُوذُ بِاللَّهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○ قُتِلَ الْإِنْسَانُ مَا أَكْفَرَهُ ○ مِنْ أَيِّ شَيْءٍ خَلَقَهُ ○ مِنْ نُطْفَةٍ خَلَقَهُ فَقَدَّرَهُ ○ ثُمَّ السَّبِيلَ يَسَّرَهُ ○ ثُمَّ أَمَاتَهُ فَأَقْبَرَهُ

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹ்விடத்தில் காவல் தேடுகிறேன்.

மனிதன் சாகக்கடவன்! அவன் எவ்வளவு நன்றி கொன்றவன்! எவ்வஸ்துவிலிருந்து அவனை அவன் சிருஷ்டித்திருக்கிறான். இந்திரியத்துளியிலிருந்து, அவனை அவன் சிருஷ்டித்து, அவனை அமைத்திருக்கிறான். பின்னர், அப்பாதையை அவனுக்குச் சுலபமாக்கி இருக்கிறான். பின்னர், அவனை மரிக்கச்செய்து, அப்புறம் அவனைக் கப்ரிலாக்கினான். பின்னர், அவன் நாடும்போது அவனை உயிர்ப்பித்தெழுப்புவான்.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللَّهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

# الخطبة الأولى للجمعة الثالثة لشهر المحرم

بسم الله الرحمن الرحيم ۝

الحمد لله الذي نزل علينا الكتاب ۝ وجعل لنا طرق الهداية والأسباب ۝ نحمده على أن جعل النطفة علقة فخلق العلقة مضغة فخلق المضغة عظاما وجعل أصلها التراب ۝ سبحانه ما أعظم شانه خلق الخلق من ذكر وأنثى وجعله شعوبا وقبائل فمنهم العصاة ومنهم أولوا الألباب ۝ نشكره على أن أرسل إلينا نبيا وجيها في الدنيا والآخرة ۝ شفيعا لأهل الكبائر في الآخرة ۝ وانتخبه حق الانتخاب ۝ ونشهد أنه لا إله إلا الله وحده لا شريك له العزيز الوهاب ۝ ونشهد أن سيدنا محمدا عبده ورسوله المؤيد بالحجج القاطعة والبراهين الساطعة وفصل الخطاب ۝

صلى الله وسلم على سيدنا محمد وآله وصحبه أجمعين ۝

يَا أَيُّهَا النَّاسُ اتَّقُوا اللهَ الْعَظِيمَ عَزَّ وَجَلَّ وَأَطِيعُوهُ
أُوصِيكُمْ عِبَادَ اللهِ وَإِيَّايَ بِتَقْوَى اللهِ

முஹர்ரம் மாதம்

# மூன்றாவது ஜும்ஆ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்.)

சகல புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும். நமக்கு அவன் வேதத்தை அருளி, நேர்வழியின் பாதைகளையும் சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தினான். இந்திரியத்துளியை உதிரக்கட்டியாகவும், உதிரக்கட்டியை தசைக்கட்டியாகவும், தசைக்கட்டியை எலும்புகளாகவும் ஆக்கி, இதன் அசலை மண்ணாக ஆக்கி இருப்பதற்காக அவனை நாம் புகழ்கின்றோம்.

அவன் தூயவன். அவனது அந்தஸ்து எவ்வளவு மகத்தானது. சிருஷ்டிகளை ஆணும் பெண்ணுமாகச் சிருஷ்டித்து, அதனைப் பிரிவு

களாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினான். எனவே, அவர்களில் மாறு செய்பவர்களுமிருக்கின்றனர். அவர்களில் நுண்ணறிவுள்ளவர்களுமிருக்கின்றனர்.

நம்மிடம் இவ்வுலகிலும் அவ்வுலகிலும் மேன்மை வாய்ந்தவரான, பெரும்பாவம் செய்தவர்களுக்கு மறுமையில் ஷபாஅத்துச் செய்பவரான நபியை அனுப்பி, தெரிந்தெடுக்க வேண்டிய முறைப்படி அவரைத் தெரிந்தெடுத்ததற்காக அவனுக்கு நாம் நன்றி செலுத்துகிறோம்.

இன்னும் நிச்சயமாக அவனைத் தவிர்த்து வணக்கத்துக்குரியவன் (வேறு எவனும்) இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணையில்லை, மிகைத்தவன், நன்கொடையளிப்பவன் என்று நாம் சாக்ஷியங் கூறுகிறோம். இன்னும் நிச்சயமாக எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடிமையும் அவனது தூதரும் ஆவார்கள் என்று நாம் சாக்ஷியங் கூறுகிறோம். அவர்கள் உறுதியான ஆதாரங்களையும், பிரத்தியட்சமான அத்தாட்சிகளையும், சத்தியம் அசத்தியம் ஆகியவைகளைப் பிரிக்கும்படியான பேச்சுக்களையும் கொண்டு ஆதரவு செய்யப்பட்டவர்கள்.

أَمَّا بَعْدُ அறிந்து கொள்ளுங்கள்! ஜனங்களே!

உங்களது றப்பின் செயலிலுள்ள நூதனங்களையும், உங்கள் எஜமானனது யுக்தியிலுள்ள ஆச்சரியங்களையும் கவனியுங்கள். உங்களை ஆணாகவும் பெண்ணாகவும் எப்படிச் சிருஷ்டித்திருக்கிறான். பின்னர், பல கிளைகளாகவும் பல கோத்திரங்களாகவும் ஆக்கி இருக்கிறான். உங்களிடம் றஸூல்மார்களையும் நபிமார்களையும் அனுப்பி இருக்கிறான். உங்களில் நின்றும் களங்கமற்றவர்களையும், அன்பர்களையும் தெரிந்தெடுத்திருக்கிறான். முக்திக்கும் வெற்றிக்கு முரிய பாதையை உங்க

ளுக்குச் சுலபமாக்கி இருக்கிறான். நப்ஸுகளுக்கும் ஆன்மாக்களுக்கும் நேரான வழியை இலேசாக்கினான். அனுமதிக்கப் பட்டதையும் விலக்கப்பட்டதையும் விபரித்திருக்கிறான். கட்டளைகளில் சந்தேகாஸ்பதமானவைகளை விளக்கி இருக்கிறான். சில வரம்புகளை உங்களுக்கு வரையறுத்திருக்கிறான். ஆகவே, அல்லாஹுத் தஆலாவின் வரம்புகளை எவர் கடக்கிறாரோ, அத்தகையோர்தான் வேதனையுள்ளவர்களைச் சார்ந்தவர்கள்.

**வயோதிகர்களே!** இன்பங்களை இடிப்பவரும் கூட்டங்களைப் பிரிப்பவரும் உங்களிடம் சீக்கிரத்தில் வருவார். உங்களுக்கு வாலிபம் போய் விட்டது. ஆதலின், வீணானதையும் விளையாட்டையும் விட்டு விடுங்கள். நீங்கள் நல்ல ஒதுங்கு மிடத்தை அடையும் பொருட்டு அனாவசியமான சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் விட்டுத்திரும்பி விடுங்கள்.

தடுப்பவன் உங்களைத் திட்டமாகத் தடுத்துக் கொண்டிருக்கிற நிலைமையில் உங்களுக்கு இது என்ன அசட்டை? தடுப்பவன்தான் வாலிபத்துக்குப் பிறகு வந்த வயோதிகம். தாழ்ந்ததாகிய இவ்வுலக இச்சையை விட்டு விடுங்கள். ஏனெனில் நிச்சயமாக இது சவம் போன்றது. இதனைத் தேடுபவர் நாய்களே.

ஸ்திரீகள், மக்கள், தங்கம் வெள்ளிக்குவியல்கள் ஆகியவைகளிலுள்ள இச்சைகள் உங்களுக்கு அழகாகக் காட்டப்பட்டிருக்கின்றன. இது அற்பஜீவியத்துக்குரிய ஊதியங்கள். ஆனால், அல்லாஹுத் தஆலாவினிடத்தில்தான் அழகிய மீளும் ஸ்தல மிருக்கிறது.

**வாலிபர்களே!** குழந்தைப் பருவம் போய்விட்டது, க்ஷமிக்கும் காலமும் தேவையற்ற சமயங்களும் தப்பிவிட்டன, மதச்சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட வேண்டியதும் நன்கொடையளிப்பவனும், அரசனுமான அல்லாஹுத் தஆலாவினது ஏவல்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியதுமான காலம் வந்து விட்டது.

எனவே, இறைவனுக்கு வழிப்பாடு செய்வதை இக்காலத்தில் நீங்கள் குறைத்துக் கொண்டீர்களானல், அப்புறம் எக்காலத்தில் நீங்கள் ஈடு செய்யப் போகிறீர்கள்? விளையாட்டிலும் வீணிலும் இவ்வாலிப காலத்தை நீங்கள் செலவு செய்து விட்டீர்களாயின் பின்னை எப்பொழுது நீங்கள் விழித்துக்கொள்ளப் போகிறீர்கள்?

நான்கு காரியங்கள் வருவதற்கு முன் உங்களிடமிருக்கிற நான்கு காரியங்களைக் கொள்ளை முதலாகக் கருதுங்கள். மரணத்துக்கு முன்னுள்ள இந்த ஜீவியத்தை, நோய்க்கு முன்னதாக இருக்கிற இந்த சுவாத்தியத்தை, தரித்திரத்துக்கு முன்னதாக இருக்கிற இந்த சீமான் தனத்தை, வயோதிகத்துக்கு முன்னுவிருக்கிற வாலிபத்தை கொள்ளை முதலாகக் கொள்ளுங்கள்.

ஏனெனில், வாலிபம் மீளாதோ என்று வயோதிக காலத்தில் நீங்கள் கூற நேரிடும். சென்று போனவாலிபம் கேள்வி கணக்குக் கேட்கப்படும் நாள்வரை ஒருபோதும் திரும்பவே மாட்டாது.

மித உணவையும் மித நித்திரையையும் மிதப் பேச்சையும், பாபம் பழிகளை வெறுத்துத் தள்ளுவதையும், நியமமாக நோன்பு நோற்பதையும், நிரந்தரமாகத் தொழுகையில் நிற்பதையும், மனிதர்களில் நின்று முள்ள நோவினையைச் சகிப்பதையும், அறிவிலிகளுடனும் மடையர்களுடனும் கூடியிருப்பதை விடுவதையும் சங்கைவான்களான நல்லோர் உறவையும் கடைப் பிடியுங்கள்.

இன்னும் ஜனங்களுக்கு முந்தி ஸலாம் சொல்லுங்கள், ஏழைகளுக்கு அன்னமிடுங்கள். பந்துக்களை அரவணையுங்கள். மனிதர்கள் நித்திரை செய்யும்போது இராக்காலங்களில் தொழுங்கள். இன்னும் நீங்கள் கேள்வி கணக்குக் கேட்கப் படுவதற்கு முன் உங்களையே நீங்கள் கேள்வி கணக்குக் கேட்டுக் கொள்ளுங்கள். ஏனெனில், நிச்சயமாக அல்லாஹ் கேள்வி கணக்குக் கேட்பதில் மிகத் தீவிரமானவன். ஒவ்வொரு அணுவைக் குறித்தும் உங்களிடம் கேள்வி கணக்கு வாங்குவான். ஒவ்வொரு தின்மையைப் பற்றியும் உங்களை விசாரணை புரிவான். மேலும், அவனே உங்கள் ஸ்திதியைப்பற்றி மிக

மிக அறிந்தவன். இன்னும் அவனிடம் எழுதப்பட்ட அறிவு ஆகிய இல்முல் கித்தாபு இருக்கிறது.

குற்றஞ் செய்வதை அடியோடு விட்டு விடுங்கள். சிறு பாவங்கள், பெரும் பாவங்கள் ஆகிய யாவற்றையும் விட்டு கழி விரக்கங்கொண்டு மீளுங்கள். ஏனெனில், நிச்சயமாக உண்மை முஸ்லிம் என்பவர் எவரது நாவையும் கையையும் விட்டு மற்றைய முஸ்லிம்கள் ஈடேற்றம் பெற்றிருக்கிறார்களோ அவர்தான். இன்னும் தனது நப்ஸுக்கு மாறாகப்போர் தொடுப்பவர்தான் உண்மை முஜாஹிது. அதாவது சன்மார்க்க யுத்தம் செய்பவர். இன்னும், அல்லாஹுத் தஆலாவும் அவனது றஸூலும் விலக்கியதை வெறுத்துத் தள்ளி, கேள்வி கணக்கு நாளில் கேட்கப்படும் கேள்வி கணக்கை ஞாபகப்படுத்திக் கொண்டவர்தான் உண்மை முஹாஜிர்.

இன்னும் உங்களைக் காத்துக் கொள்ளுங்கள், பின்னரும் உங்களைக்காத்துக் கொள்ளுங்கள். புறங்கூறுவதில் நீங்கள் வீழ்ந்து விடுவதை விட்டு உங்களைக்காத்துக் கொள்ளுங்கள். ஏனெனில், நிச்சயமாக அது வியபிசாரத்தைப் பார்க்கினும் கடுமையானது. இன்னும் உங்கள் சகோதரர்களுக்கு உதவி செய்யுங்கள். (அதாவது புறம் கூறுவதை விட்டு அவர்களையும் விலக்குங்கள்) ஏனெனில், (புறங்கூறுவதைக் கேட்டுக் கொண்டு, அதனை விலக்காமல்) வாய் மூடி இருப்பவர் புறங்கூறுபவருடன் கூட்டாளியாகவே இருக்கிறார்.

"எவர் தனது சகோதரரின் மாமிசத்தைப் புசிப்பதை விட்டு விலகிக்கொள்கிறாரோ நரகத்தை விட்டு அவரை உரிமை விடுவது அல்லாஹுத் தஆலாவின் மீது கடமையாகிறது. ஆகவே எவர் புறங்கூறுகிறாரோ அல்லது அதனைச் செவியேற்கிறாரோ அவர்கடுமையைச் சகிப்பவராகவும், தாழ்த்தப்பட்டவராகவும், அழிக்கப்பட்டவராகவும், வினவப்படுபவராகவும் கியாமத்து நாளில் எழுப்பப்படுவார். இன்னும் அவர் மீளுமிடம் தீயமீளுமிடமாக இருக்கும்'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஆலிஹி வஸல்லமவர்கள் நவின்றிருக்கிறார்கள்.

நாயனே! பிடரிகளுக்கு எஜமானே! வாசல்களைத் திறப்பிப்பவனே! நாங்கள் குற்றமிழைத்தவர்களான பாவிகள். எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்துக் கொண்டோம். எங்களது பாவங்களை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். கேள்வி கணக்கில் எங்களை விசாரணை புரியாதிருப்பாயாக.

மேலும், மகத்தான உயர்வான அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் தகும்,

أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○
حٰمٓ تَنْزِيلُ الْكِتَابِ مِنَ اللهِ الْعَزِيزِ الْعَلِيمِ ○ غَافِرِ
الذَّنْبِ وَقَابِلِ التَّوْبِ شَدِيدِ الْعِقَابِ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹ்விடம் காவல் தேடுகிறேன்.

ஹாமீம் வேதத்தை இறக்கி வைப்பது மிகைத்தவனான மிக அறிந்தவனான பாபத்தைப் பொறுப்பவனான, இன்னும் தௌபாவை அங்கீகரிப்பவனான வேதனை செய்வதில் கடுமையானவனான அல்லாஹ்வில் நின்று மிருக்கிறது. (திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ
بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الْاُوْلٰى مِنَ الْمُحَرَّمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ خَلَقَ الْاِنْسَانَ مِنْ طِيْنٍ ○ وَجَعَلَهُ نُطْفَةً
فِيْ قَرَارٍ مَّكِيْنٍ ○ وَجَعَلَ النُّطْفَةَ عَلَقَةً فَخَلَقَ الْعَلَقَةَ
مُضْغَةً فَجَعَلَ الْمُضْغَةَ عِظَامًا وَّشَكَّلَهَا بِالشَّكْلِ الْحَسِيْنِ ○
وَفَضَّلَهُ عَلٰى سَآئِرِ مَخْلُوْقَاتِهٖ وَشَرَّفَهُ بِكَرِيْمِ خِطَابِهٖ
فَتَبَارَكَ اللّٰهُ اَحْسَنُ الْخَالِقِيْنَ ○ نَحْمَدُهُ حَمْدًا كَثِيْرًا
وَّنَشْكُرُهُ شُكْرًا جَمِيْلًا وَّنَسْتَغْفِرُهُ وَنَتُوْبُ اِلَيْهِ تَوْبَةً
تُنَجِّيْنَا مِنَ الْعَذَابِ الْمُهِيْنِ ○ اَشْهَدُ اَنَّهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ
وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَاَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
خَاتَمُ الْاَنْبِيَاءِ وَالْمُرْسَلِيْنَ ○ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَعَلٰى اٰلِهٖ
وَصَحْبِهٖ وَمَنْ تَبِعَهُمْ اِلٰى يَوْمِ الدِّيْنِ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ○

يَاأَيُّهَا النَّاسُ اتَّقُوا اللّٰهَ الْعَظِيمَ عَزَّ وَجَلَّ وَأَطِيعُوهُ
أُوصِيكُمْ عِبَادَ اللّٰهِ وَإِيَّايَ بِتَقْوَى اللّٰهِ

## முஹர்ரம் மாதம்

# நான்காவது ஜுமுஆ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

சர்வபுகழும் அல்லாஹ்வுக்கே தகும். அவன் மனிதனைக் களிமண்ணால் சிருஷ்டித்து, அவனை நிலையான தங்கு மிடத்தில் இந்திரியத்துளியாக ஏற்படுத்தினான். தவிர அவ்விந்திரியத்துளியை ரத்தக் கட்டியாகவும், பிறகு அவ்வுதிரக் கட்டியை சதைக் கட்டியாகவும், அச்சதைக் கட்டியை அப்புறம் எலும்புகளாகவும் ஆக்கி, அதனை அழகான உருவத்தில் உருப்படுத்தினான்.

மேலும், அவனைத் தனது சிருஷ்டிகளனைத்திலும் மேன்மையாக்கி, தனது சங்கையான சம்பாஷணையைக் கொண்டு அவனைச் சிறப்பித்தான், ஆகவே சிருஷ்டிப்பவர்களில் மிக அழகியவனான அல்லாஹு தஆலா புனிதனாகி விட்டான்.

ஏராளமான புகழாக அவனை நாம் புகழ்கின்றோம். இன்னும் அழகிய நன்றியறிதலாக அவனுக்கு நாம் நன்றி செலுத்துகிறோம். இன்னும் அவனிடத்தில் நாம் மன்னிப்புக் கேட்டு, கடுமையான வேதனையை விட்டு நம்மை ஈடேற்றம் செய்யும்படியான தௌபாவான தௌபாவையும் நாம் செய்கிறோம்.

அவனையன்றி வணக்கத்துக்குரியவன் (வேறு யாரும்) இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை இல்லை, இன்னும் நிச்சயமாக எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும், அவனது தூதராகவும் நபிமார்களுக்கும் முர்ஸல்களுக்கும் கடைசியானவராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாக்ஷியங்கூறுகிறேன். அவர்களுக்கும், அவர்களது கிளையாருக்கும், அவர்களது தோழர்களென்னும் அஸ்ஹாபுகளுக்கும், இவர்களைப்பின் பற்றுபவர்களுக்கும் அல்லாஹுத் தஆலா கியாமத் நாள்வரை ஸலாத் என்னும் கருணை புரிவானாக,

أَمَّا بَعْدُ அறிந்து கொள்ளுங்கள்! என் சோதரர்களே! என் தோழர்களே! அல்லாஹுத் தஆலாவுக்கு அவனது அருட் கொடைகளுக்காக நன்றி செலுத்துங்கள், அவனது உபகாரங்களுக்காக அவனைப் புகழுங்கள். அவனுக்கு எவ்வஸ்துவையும் இணையாக்காதீர்கள். ஏனெனில், வானங்களிலோ அல்லது பூமிகளிலோ அவனைப் போன்று எவ்வஸ்துவுமில்லை.

சகல காரியங்களிலும் அவனிடம் பொறுப்பை ஒப்படையுங்கள் (தவக்கல் வையுங்கள்). உணவுகளைத் தேடுவதிலேயே உங்கள் வாழ்நாட்களை வீணாக்காதீர்கள். நிச்சயமாக அவன்தான் உணவளிப்பவன் ; உறுதியானவன் ; பலமுள்ளவன்.

"மேலும் பூமியிலுள்ள பிராணியில் நின்றும் அதற்கு உணவளிப்பது அல்லாஹ்வின் மீதில்லாமல் இல்லை. இன்னும் அது தங்கு

மிடத்தையும், அது (மரித்து அடக்கப்பட்டு திரும்ப) ஒப்புவிக்கப்படும் இடத்தையும் அறிகிறான். யாவும் தெளிவான புத்தகத்தில் (எழுதப் பட்டு) இருக்கின்றன" என்று அல்லாஹுத் தஆலா அறைந்திருப்பது உங்களது செவிப்புலன்களைத் தட்டவில்லையா?

இன்னும், அவனுக்கு வழிப்பாடு செய்வதைக் கடைப் பிடியுங்கள், அவனுக்கு பயபக்தி செலுத்த வேண்டிய அளவுக்கு பயபக்தி செலுத்துங்கள். மேலும், நீங்கள் முஸ்லிம்களில் நின்று மில்லாமல் மரிக்காதீர்கள். ஆகவே, எவர் பயபக்தி கொள்கிறாரோ ஈடேற்ற மடைந்து விடுவார். எவர் அவனுக்கு மாறு செய்கிறாரோ வழி தவறி விடுகிறார்.

"மேலும், நீங்கள் கட்டுச் சாதத்தைச் சித்தஞ் செய்து கொள் ளுங்கள். ஏனெனில், நிச்சயமாக கட்டுச் சாதத்தில் நல்லது பயபக்தி கொள்வதுதான்" என்று, அல்லாஹுத் தஆலா கூறியிருக்கிறான். இன்னும் "நிச்சயமாக அல்லாஹ் உபகாரிகளுடன் இருக்கிறான்" என்றும் அல்லாஹுத் தஆலா கூறி இருக்கிறான்.

அறிந்து கொள்ளுங்கள்! தக்வா என்னும் பயபக்தியானது நற்காரியங்களுக்கு மூலதனமாகவும், வழிப்பாடுகளுக்குத் தலையாகவும் இருக்கிறது. அதுதான் இவ்வுலகிலும் சன்மார்க்கத்திலும் ஏற்படுகிற ஆபத்துகளை விட்டு ஈடேற்ற மளிப்பதாக இருக்கிறது. "மேலும், அல்லாஹ்வை எவர் பயபக்தி கொள்கிறாரோ அவருக்கு ஒரு வெளிப் படுகையை ஏற்படுத்துகிறான். இன்னும் அவரறியாப் புறத்திலிருந்து அவருக்கு உணவளிக்கிறான். மேலும், எவர் அல்லாஹ்வினிடம் பொறுப்புக்கொடுக்கிறாரோ அவருக்கு அவன் போதுமானவன்" என்று அல்லாஹுத் தஆலா கூறி இருக்கிறான்.

தவிர, இஸ்லாத்தின் தூண்களையும், சன்மார்க்கத்தின் ருக்னு களையும் முக்கியமாக மிகவும் லாபந்தரக்கூடிய கொள்முதல் சரக்கா கவும், வழிப்பாடுகளில் மிகவும் சிறந்ததாகவும் இருக்கிற தொழுகை

யையும் நீங்கள் அவசியமாகக் கடைப்பிடித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் "தொழுகை சன்மார்க்கத்துக்கு தூண். எனவே, எவர் அதனை நிற்கச் செய்கிறாரோ அவர் சன்மார்க்கத்தை நிலைக்கச் செய்கிறார். இன்னும் எவர் அதனை இடிக்கிறாரோ அவர் சன்மார்க்கத்தை இடித்து விடுகிறார்" என்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றிருக்கிறார்கள்.

"இன்னும் குப்ருக்கும் ஈமானுக்கு மிடையில் தொழுகையை விடுவதிருக்கிறது" என்றும் அப்பெருமகர் (ஸல்) அவர்கள் கூறி இருக்கிறார்கள். இன்னும் "தொழுகையை வேண்டுமென்றே எவர் விடுகிறாரோ நிச்சயமாக அவர் காபிராகி விட்டார்" என்றும் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

எனவே, அதனை இமாம் ஜமாஅத்தாக நிறைவேற்றுவதைக் கடமையாகக் கொள்ளுங்கள். நிச்சயமாக அது இமாம் ஜமாஅத்தாக நிறைவேற்றுவது உங்கள் நபியின் ஸுன்னத்து. ஆகவே, உங்களது இல்லங்களில் நீங்கள் தொழுதாலும் உங்கள் நபியின் ஸுன்னத்தை நீங்கள் விட்டவர்களாக இருக்கிறீர்கள். மேலும், உங்கள் நபியின் ஸுன்னத்தை நீங்கள் விட்டு விடுவீர்களாயின் நீங்கள் வழி தவறி விடுவீர்கள்; கேவலப்படுத்தும்படியான வேதனைக்கு நீங்கள் உரியவர்களாகி விடுவீர்கள்!

உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்! பின்னரும் உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்!! தொழுகையில் நீங்கள் சோம்பலாக இருக்கும் விஷயத்தில் உங்களைக் காத்துக் கெள்ளுங்கள். ஆகவே, எவர் அதில் சோம்பலாக இருந்து அதனைப் பேணிக் காத்துக் கொள்ளவில்லையோ அவர் பிர்அவ்ன், ஹாமான், காறூன், ஷைத்தான்களின் தலைவர்கள் ஆகியவர்களுடன் எழுப்பப்படுவர்.

மேலும், "அல்ஹாக்கத்" என்ற கியாமத்து நாளை நீங்கள் நினைத்துப் பாருங்கள். இன்னும் அல்ஹாக்கத் என்பது எது என்பது

உங்களுக்குத் தெரியுமா? அது ஒருநாள். அதன் கஷ்டம் மிக மகத்தானது. அதன் பயங்கரம் மிகக் கடுமையானது. அதில் பாவிகளும் குற்ற வாளிகளும் அம்பலத்துக்கு வருவார்கள். அதில் பிந்தி இருந்து விடுபவர்களும் தூரமாகி விடுபவர்களும் அந்நாளில் கைசேதப்படுவார்கள்.

இன்னும் அது ஒருநாள். அதில் மிக அற்பமான வஸ்துவைக் குறித்துங் கூட கேள்வி கணக்குக் கேட்கப்படும், சிறிய பெரிய காரியங்கள் ஒவ்வொன்றைக் குறித்து விசாரணை புரியப்படும். ஆவோ வாலிபமே என்று எத்தனையோ வாலிபர்கள் இறைஞ்சுவர். ஆவோ மானக்கேடே என்று எத்தனையோ ஸ்திரீகள் சப்தமிடுவர். அன்றோ வயோதிகமே என்று எத்தனையோ வயோதிகர்கள் வருந்துவர். ஏழ்மையும் இழிவுமுள்ள நாள் அது. பழிப்பும் தனிமையு முள்ள நாள் அது. சிருஷ்டிகள் யாவரும் ஒரே மண்ணில் கூடும் நாள் அது.

எனவே, ஆற்றலுள்ள அரசன் முன் நீ ஆஜராகி, கிராமன் காத்திபீன்களான மலக்குகளிடமுள்ள புத்தகத்தில் பதிவு செய்யப் பட்டிருப்பதாகிய சிறிய பெரிய சகல காரியங்களும் உனக்கு எடுத்துக் காண்பிக்கப்படும் போது உன் நிலை என்னாகும் என்பதை யோசித்துப்பார். அதனை நீ பார்த்தால் உனது பாவங்கள் நிறைந்த கருப்பாகவே அதனை நீ காண்பதுடன், இப்புத்தகம் சிறுபாவம் பெரும்பாவம் ஆகிய எதனையும் விடாமல் சூழ்ந்து கொண்டிருக்கிறதே என்று கூறுவாய். எனவே, உனது தலையைக் கவிழ்த்தி, கைசேதப்பட்டு, அழிபவர்களில் நீயும் ஒருவன் என்று உன்னை எண்ணிக் கொள்வாய்.

அப்புறம் உனது றப்பு உனது பொருளைக் குறித்து எங்கிருந்து அதனைச் சம்பாதித்தாய்? உனது வாணுளைக் குறித்து எதில் அதனை வீணுக்கிஞய்? என்று வினவுவான். அப்பொழுது மன்னிப்பவர்களி லெல்லாம் மகா பெரிய மன்னிப்பாளஞன உனது றப்பு உனது பாவங்களை மன்னித்து, உனக்குக் கிருபை செய்தால் அல்லாமல் நீ அழிந்து விடுவாய் என்பதை உறுதி செய்து விடுவாய்.

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வையே, அல்லாஹ்வையே, அல்லாஹ்வையே, நீங்கள் அஞ்சுங்கள். அசட்டையாளர்களில் நீங்களிருக்கவேண்டாம். பாபம் செய்வதில் உங்களுக்கிருக்கிற துணிச்சல்தான் என்னே! விலக்கல்களைச் செய்வதன் மூலம் உங்களுக்கிருக்கிற அசட்டைதான் என்னே! நரகத்தை விட்டு உங்களுக்கு உரிமைச் சீட்டிருக்கிறதா? அல்லது நீங்கள் இவ்வுலகில் நிரந்தரமாக இருக்கப்போகிறீர்களா?

எனவே, இவ்வுலகில் நல்லோர் தீயோர் ஆகிய யாவருக்கும் சமமாகக் கிருபை செய்வோனே! நாங்களோ பாபிகளான குற்றவாளிகளான உனது அடியார்கள். எங்களது பாவங்களை நாங்கள் ஏற்றுக் கொள்கிருேம். நாங்கள் செய்ததைக் குறித்துக் கழி விரக்கங் கொள்கிருேம். எங்களை க்ஷமிப்பாயாக! அநியாயஸ்தர்களுடன் எங்களை ஆக்காதிருப்பாயாக! உனது கிருபையினுல் சுவர்க்கத்தில் எங்களைப் பிரவேசிக்கச் செய்வாயாக! நீ தான் கிருபையாளர்கள் யாவரினும் அதிகமாகக் கிருபை செய்வோன். மேலும், சகல புகழும் அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹ்வுக்கே தகும் என்று மனப்பூர்வமாகக் கூறுங்கள்.

أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ○

إِنَّا أَنْزَلْنَا إِلَيْكَ الْكِتَابَ بِالْحَقِّ فَاعْبُدِ اللهَ مُخْلِصًا لَهُ الدِّيْنَ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலா வினிடம் காவல் தேடுகிறேன்.

நிச்சயமாக நாம் உமக்கு வேத (கிரந்த)த்தை உண்மையைக் கொண்டு அருளி இருக்கிறோம். எனவே, அல்லாஹ்வை,—அவனுக்கு மார்க்கத்தைக் கலப்பற்ற தாக்கிய நிலையில்-நீங்கள் வணங்குங்கள். (திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيْمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيْمٌ مَلِكٌ قَدِيْمٌ بَرٌّ رَؤُفٌ رَحِيْمٌ وَرَبٌّ حَلِيْمٌ ○

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الْخَامِسَةِ مِنْ شَهْرِ الْمُحَرَّمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ رَفَعَ السَّمَآءَ بِغَيْرِ عِمَادٍ ○ وَبَسَطَ الْاَرْضَ فِرَاشًا وَّخَلَقَ لَهَا الْاَوْتَادَ ○ سُبْحَانَهٗ مَآ اَعْظَمَ شَانَهٗ خَلَقَ الْخَلْقَ فِيْ سِتَّةِ اَيَّامٍ ○ وَاَحْكَمَ الْعَالَمَ بِغَايَةِ الْاِحْكَامِ ○ ثُمَّ اسْتَوٰى عَلَى الْعَرْشِ اسْتِوَآءً يَّلِيْقُ بِشَانِهٖ وَهُوَ الْكَرِيْمُ الْجَوَادُ ○ اَحْمَدُهٗ حَمْدًا عَلٰٓى اِنْعَامِهٖ وَاَشْكُرُهٗ شُكْرًا عَلٰٓى اِحْسَانِهٖ خَلَقَ الْخَلْقَ وَاصْطَفٰى مِنْهُ بَنِيْٓ اٰدَمَ وَاخْتَارَ مِنْهُمُ الْعِبَادَ ○ نَشْهَدُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهُ الْمُنَزَّهُ عَنِ الشُّرَكَآءِ وَالْاَنْدَادِ ○ وَنَشْهَدُ اَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ رَحْمَةٌ لِّلْعَالَمِيْنَ خَاتَمُ الْمُرْسَلِيْنَ سَيِّدُ كُلِّ حَاضِرٍ وَّبَادٍ ○ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَعَلٰٓى اٰلِهٖ وَصَحْبِهٖ صَلٰوةً دَآئِمَةً اِلٰى يَوْمِ التَّنَادِ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ○

# يَا أَيُّهَا النَّاسُ اتَّقُوا اللهَ الْعَظِيمَ عَزَّ وَجَلَّ وَأَطِيعُوهُ أُوصِيكُمْ عِبَادَ اللهِ وَإِيَّايَ بِتَقْوَى اللهِ

## முஹர்ரம் மாதம்

## ஐந்தாம் ஜும்ஆ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

அளவற்ற அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்.)

சர்வ புகழும் அல்லாஹ்வுக்கே தகும். தூண் இல்லாமல் அவன் வானத்தை உயர்த்தினான். பூமியை விரிப்பாக விரித்து, அதற்கு முளைகளையும் சிருஷ்டித்தான். அவன் தூயவன்- அவனது பெருமை எவ்வளவு மகத்துவமுள்ளது. ஆறு நாட்களில் சிருஷ்டிகளை அவன் சிருஷ்டித்தான். இன்னும், இவ்வகிலத்தை மிகப் பலமாக பலப்படுத்தினான். பின்னர், தனது அந்தஸ்துக்குத் தகுதியான விதத்தில் அர்ஷின் மீது அமர்ந்தான். அவன் நன்கொடையளிப்பவன்; இரக்கமுள்ளவன்.

அவனது அருட் கொடைகளுக்காக அவனைப் புகழ்ந்து, அவனது உபகாரங்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துகிறேன். சிருஷ்டிகளை அவன் சிருஷ்டித்து, ஆதமுடைய மக்களைத் தெரிந்

தெடுத்து, அவர்களில் தனக்குரிய நல்லடியார்களைப் பொறுக்கி எடுத்தான்.

வணக்கத்துக் குரியவன் அவனைத் தவிர்த்து (வேறு யாரும்) இல்லை. அவன் தனித்தவன். இணையானவர்கள், சமமானவர்கள் ஆகியவர்களையும் விட்டு அவன் நீங்கியவன் என்று சாக்ஷியங் கூறுகிறோம். எங்களது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும், தூதராகவும், அகிலத்தாருக்குக் கருணையாகவும், முர்ஸலான நபிமார்களுக்குக் கடைசியாகவும், தோன்றியுள்ள பொருளனைத்துக்கும் தலைவராகவும் இருக்கிறார்கள் என்று சாக்ஷியங் கூறுகிறோம். அவர்களுக்கும், அவர்களது கிளையார் தோழர்களுக்கும், அல்லாஹுத் தஆலா கியாமத்து நாள்வரை நிரந்தரமான கருணையாக கருணை புரிவானாக.

أَمَّا بَعْدُ ஜனங்களே! அல்லாஹுத் தஆலாவை பயப்படவேண்டிய அளவுக்கு அவனைப் பயப்படுங்கள்! காலையிலும் மாலையிலும் உங்களையே நீங்கள் கேள்வி கணக்குக் கேட்டுக் கொள்ளுங்கள்! தூக்கத்தையும் உரக்கத்தையும் விட்டு நீங்கள் விழித்துக் கொள்ளுங்கள்! எத்தனை காலத்துக்கு இந்தத் துணிச்சல்? எத்தனை காலத்துக்கு இவ்வசட்டை? எத்தனை காலத்துக்கு இவ்வுரக்கம்?

அசட்டை என்ற தூக்கத்தை விட்டெழுங்கள்! பொருள்களும், புத்திரர்களும், பௌத்திரர்களும் அல்லாஹுத் தஆலாவை ஞாபகிப்பதை விட்டு உங்கள் கவனத்தை ஈர்த்துக் கொள்ள வேண்டாம்.

இவ்வுலகம் அழிவுக்குரிய ஸ்தலம்! இவ்வுலகம் வழிப் போக்கன் தங்காமல் செல்வதற்குரிய இடம்!! காலம் கழிவதன் மூலம் இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு வஸ்துவும் அழிவதாக இருக்கிறது. ஆனால், அல்லாஹ்வைத் தவிர என்பதை நீங்களறிய வில்லையா?

உங்களுக்கு முன்னால் சென்று போனவர்களைக் கொண்டு நீங்கள் பாடங் கற்றுக் கொள்ள வேண்டாமா? பிர்அவ்னும் ஹாமானும், எங்கே? ஷத்தாதும் நௌஷேர்வானும் எங்கே? தமூது, ஆதுக் கூட்டங்கள் எங்கே? ஏகச் சக்கரவர்த்திகளாக இருந்தவர்கள் எல்லாம் எங்கே? உலகத்தை அடக்கி யாண்டவர்க ளெல்லாம் எங்கே? பள்ளத்தாக்கில் பாறைகளைக் குடைந்து வசித்துக் கொண்டிருந்தவர்கள் எங்கே? அந்த நாடுகளின் தலைவர்கள் எங்கே? அவர்களைப்போல் பலாட்டிய முள்ளவர்கள் அப்புறம் சிருஷ்டிக்கப்படவில்லையே.

உங்கள் உற்றார் உறவினர் எங்கே? உங்கள் தோழர்களும் சமஸ்தர்களும் எங்கே? உங்கள் தந்தையரும் மூதாதையரும் எங்கே?

இந்த உலகம் உங்களுக்காகத்தான் சிருஷ்டிக்கப்பட்டது, ஆனால், நீங்களோ மறுமைக்காகச் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறீர்கள் என்பதை நீங்களறியவில்லையா? உங்களுக்கு முன்னுள்ளவர்கள் மரித்ததுபோல இனி நீங்களும் மரிக்கக் கூடியவர்களே! உங்களுடனிருந்தவர்கள் தவறிப்போனது போல நீங்களும் இனி ஒரு காலத்தில் தவறிப் போவீர்கள். இவ்வுலகம் நிலையற்றது, ஆனால், அவ்வுலகம் நிலையுள்ளது.

உங்கள் இரகசியத்தையும், நீங்கள் இரகசியமாகக் கூடிப் பேசுவதையும் நிச்சயமாக அல்லாஹ் அறிவான். அவனுக்கு எந்த இரகசியமும் மறைவாயில்லை. உங்களது றப்பு உங்களை வழிபார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற விபரங்களை நீங்கள் அறிய வில்லையா?

உங்களது றப்பினிடத்தில் நீங்கள் ஆஜர் செய்யப்படுவீர்கள். அப்பொழுது நீங்கள் செய்த யாவற்றையும் குறித்து உங்களை அவன் விசாரணைசெய்வான். நீங்கள் சம்பாதித்ததைக் குறித்து உங்களிடம் கணக்கு வாங்குவான். நீங்கள் புண்படுத்திய ஒவ்வொன்றையும்

குறித்து உங்களைக் கண்டிப்பான் என்பதை நீங்கள் அறிவீர்களா? இவைகளை நீங்கள் நிராகரித்தால் உங்களது உடலிலுள்ள அங்கங்களே உங்களுக்கு விரோதமாக, பகிரங்கமாகச் சாக்ஷியம் பகரும். என்னே! கைசேதமும், தவறிப் போனதைக் குறித்த கவலையும். இனி உலகத்துக்கு நாங்கள் திரும்பச் சென்றால் நாங்கள் நன்றி செலுத்தியவர்களாக ஆகிவிடுவோமே என்று அச்சமயத்தில் நீங்கள் கூறுவீர்கள். அப்பொழுது அழைப்பவன் உங்களை அழைத்து "இது மிகத்தூரமான திரும்புகை. ஆனால், இதற்கு முன்னர் நீங்கள் மாறுசெய்து, விஷமஞ் செய்பவர்களில் நின்று மிருந்தீர்கள்" என்று கூறுவார்.

எனவே, அல்லாஹ்வை, அல்லாஹ்வை, அல்லாஹ்வையே பயந்து கொள்ளுங்கள்! அவனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படியுங்கள்! அவனது விலக்கல்களை விலக்கிக் கொள்ளுங்கள்! சென்று போன காரியங்களுக்காக தவ்பாச் செய்யுங்கள்! அல்லாஹுத் தஆலா உங்களுக்குக் கிருபை செய்து, உங்களது பாவங்களை மன்னித்து, கியாமத்து நாளில் கைசேதங்களை விட்டு உங்களுக்கு ஈடேற்றமளிக்கப் போதும்.

எந்நேரமும் அவனிடம் மன்னிப்புக் கேளுங்கள். உங்களது பிரார்த்தனை அங்கீகரிக்கப்படும் என்ற உறுதியுடன் அவனை நீங்கள் பிரார்த்தியுங்கள். ஏனெனில், பிரார்த்தனைதான் வணக்கத்துக்கு மூளை. அதன் மூலமாகத்தான் அவன் அடியார்களுக்குக் கிருபை செய்கிறான். நாயனே! உலகில் நல்லோர் தீயோர் யாவருக்கும் ஒன்றுபோல் கிருபை செய்வோனே! எங்களது இருதய இறுக்கத்தையும், எங்கள் குற்றங்களின் மிகுதியையும், வழிப்பாடு செய்வதிலுள்ள எங்கள் சோம்பலையும், சன்மார்க்கத்துக்கு மாறான காரியங்களில் எங்களுக்குச் சிரத்தை ஏற்படுவதையும் குறித்து உன்னிடம் முறையிடுகிறோம். எங்களை மன்னிப் பாயாக! எங்களை க்ஷமிப்பாயாக! கியாமத்து நாளில் எங்களுக்குக் கிருபை புரிவாயாக! அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும்.

أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ۝
أَلَمْ تَرَ كَيْفَ فَعَلَ رَبُّكَ بِعَادٍ إِرَمَ ذَاتِ الْعِمَادِ الَّتِي لَمْ
يُخْلَقْ مِثْلُهَا فِي الْبِلَادِ ۝

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹ்வினிடம் காவல் தேடுகிறேன்.

பெரும் கட்டிடங்களையுள்ள இரம் என்ற ஆதுக் கூட்டத்தாரை உமது றப்பு எவ்வாறு செய்தான் என்பதை நீர் காணவில்லையா? அவர்களைப் போல் தேசங்களில் ஒருவரும் சிருஷ்டிக்கப்பட வில்லை.”

(திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ
بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ۝

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الْاُوْلٰى مِنْ صَفَرَ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

اَلْحَمْدُ لِلّٰهِ الْجَلِيْلِ الْاَكْبَرِ ۝ لَا رَادَّ لِمَا قَضَاهُ وَلَا دَافِعَ لِمَا قَدَّرَ ۝ نَحْمَدُهٗ عَلٰى اَنْ كَمَّلْنَا خَلْقًا وَّفَضَّلْنَا خُلُقًا مِّنْ نُّطْفَةٍ خَلَقَنَا فَقَدَّرَنَا ثُمَّ السَّبِيْلَ يَسَّرَنَا وَبِاَحْسَنِ الصُّوَرِ صَوَّرَ ۝ نَشْكُرُهٗ عَلٰى اَنْ بَعَثَ عَلَيْنَا نَبِيَّنَا هُوَ سَيِّدُ الْاَنْبِيَاءِ وَالْمُرْسَلِيْنَ فَاَخْرَجَنَا مِنْ حُفْرَةِ الْهَالِكِيْنَ وَطَهَّرَ ۝ نَشْهَدُ اَنَّهٗ لَا اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ صَاحِبُ الْقُوٰى وَالْقَدَرِ ۝ وَنَشْهَدُ اَنَّ سَيِّدَنَا وَمَوْلَانَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ صَاحِبُ الْجَاهِ وَالْقَدْرِ الْاَبْهَرِ ۝ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ مَا دَامَتِ السَّمٰوٰتُ وَالْاَرْضُ وَدَارَتِ الشَّمْسُ وَالْقَمَرُ ۝

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ۝

يَا أَيُّهَا النَّاسُ ۝ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَأَطِيْعُوْهُ
أُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَإِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ۝

## ஸபர் மாதம்

## முதலாவது ஜும்ஆ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடை-
யோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால்
(இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

சர்வ புகழும் மிகப் பெரியவனை வலுப்பமுள்ளவனை அல்லாஹ்வுக்கே தகும். அவன் கற்பித்ததைத் தட்டுபவனில்லை. அவன் அமைத்ததை விலக்குபவனில்லை. சிருஷ்டியில் நம்மை நிறப்பமாக்கி, ஒழுக்கத்தில் நம்மை மேன்மைப்படுத்தி, இந்திரியத்துளியிலிருந்து நம்மைச் சிருஷ்டித்து, நம்மை அமைத்து பின்னர், அப்பாதையை நமக்கு இலேசாக்கி, அழகிய உருவத்தில் உருவாக்கியதற்காக அவனை நாம் புகழ்கின்றோம்.

நபிமார்களுக்கும் முர்ஸல்களுக்கும் தலைவராக இருக்கிற ஒரு நபியை நம்மிடம் அனுப்பி, அழிபவர்களது கிடங்கிலிருந்து நம்மை வெளிப்படுத்திச் சுத்தம் செய்ததற்காக அவனுக்கு நாம் நன்றி செலுத்துகிறோம்.

வணக்கத்துக் குரியவன் அவனைத் தவிர்த்து (வேறுயாரும்) இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணையானவனில்லை, அவன் சக்தியும், வல்லமையு முள்ளவன் என்று நாம் சாக்ஷியங் கூறுகிறோம். எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவு மிருக்கிறார்கள். அந்தஸ்தும், மேலான பதவியுமுள்ளவர்கள் என்று சாக்ஷியங் கூறுகிறோம். வானங்களும் பூமியும் இருந்து, சந்திரனும் சூரியனும் சுற்றிக்கொண்டிருக்கும் காலமெல்லாம் அவர்கள் மீதும் அவர்களது கிளையார்கள், தோழர்கள் மீதும் அல்லாஹுத் தஆலா ஸலாத் என்னும் கருணையைப் புரிவானாக.

أما بعد சபையோர்களே! அஜாக்கிரதை என்ற சிறு தூக்கத்தை விட்டு எழுந்திருங்கள்! ஒருமாதம் சென்று மற்றொரு மாதம் வருவதைக் கொண்டு படிப்பினையைக் கற்றுக் கொள்ளுங்கள்! அல்லாஹ்வின் சங்கையான முஹர்ரம் மாதம் முடிந்து, ஸபர் மாதம் வந்து விட்டது.

இது பிரயாணத்துக்கும் பயணத்துக்கு முரிய அடையாளங்களாக இல்லாமல் வேறு என்ன? இந்த உலகம் நீங்கிப் போகக் கூடியது, அவ்வுலகம் நிர்ணயமானது; இந்த ஜீவியம் அழியக் கூடியது, கியாமத்து நிலைக்கக் கூடியது, எனவே, இதிலுள்ள எவரும் பிரயாணம் என்ற இறகின் மீதிருக்கிறார் என்பதை யூகித்தறிய மாட்டீர்களா?

எனவே, தன்னுடைய இம்மையிலேயே தனது மறுமைக்கும் தனது ஜீவியத்திலேயே தனது மரணத்துக்கும், தனது வாலிபத்திலேயே தனது வயோதிகத்துக்கும், தனது சௌக்கிய காலத்திலேயே தனது அசௌக்கியத்துக்கும் கட்டமுதைச் சித்தஞ் செய்து கொண்டவர்களுக்கே சோபனம். இன்னும் கேள்வி கணக்கு ஒப்புவிப்பதற்காக நிற்கும் நாளில் அவர்களுக்கு சுவிசேஷமுண்டவதாக!

வாலிபர்களே! நன்மைகளைத் திரட்டி, வழிப்பாடுகளைச் சம்பாதித்து, உயர்வாகிய மிகப் பெரியவனாகிய அல்லாஹு்வுக்குக் கீழ்ப்படிவதற்குரிய காலம் இது. உங்களது வாலிபம் போய்விட்டால் உங்களுக்குத் தப்பி விட்டதற்காக நீங்கள் வருந்துவீர்கள். வாலிபம் திரும்ப வராதா என வீண் ஆர்வங்கொள்வீர்கள். நியமிக்கப்பட்ட நேரம் வரை அதாவது கியாமத்து நாள்வரை அது திரும்ப வராது. உங்களது வாலிப சேஷ்டையில் ஜாக்கிரதையாயிருந்து கொள்ளுங்கள். அது ஷைத்தானின் வேட்டை ஸ்தலத்தையும் சதிகளையும் சேர்ந்தது.

"தன் இரு கால்களுக்கிடையிலிருக்கிற வஸ்து, தன்னிரு இதழ்களுக்கு மிடையிலிருக்கிற வஸ்து (அதாவது வெட்க ஸ்தலம், நா) ஆகிய இரண்டுக்கு எவர் எனக்கு ஜாமினாக இருக்கிறாரோ அவருக்கு சுவர்க்கத்துக்கு நான் ஜாமினாக இருக்கிறேன்" என்று நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றிருக்கிறார்கள். (ஹதீது)

எனவே, உங்களுக்கு எச்சரிக்கின்றேன். மேலும் உங்களுக்கு எச்சரிக்கின்றேன். இன்பங்களில் நீங்கள் மூழ்குவதையும், காம விகாரங்களைப் பின் பற்றுவதையும், வெறுக்கத் தக்கவைகளையும் மானக் கேடானவைகளையும் நீங்கள் செய்வதையும் விட்டுக் காத்துக் கொள்ளுங்கள்.

வயோதிகர்களே! வாலிபம்போய், நிர்ணயிக்கப்பட்ட தவணை காலம் நெருங்கிவிட்டதென்பதை அறிவிக்கும்படியான வயோதிகம் வந்துவிட்டது. ஆதலின், மனப்பூர்வமாக உங்களது எஜமான்பக்கல் முன்செல்லுங்கள். காலையிலும் மாலையிலும் நடுநிசியிலும் அவனிடம் மன்னிப்புக் கேளுங்கள். அல்லாஹு்த் தஆலாவுக்கு பயபக்தி செலுத்துவதை இரகசியத்திலும் பகிரங்கத்திலும் கடைப்பிடியுங்கள்.

ஒவ்வொரு க்ஷணத்திலும் அவனது திருப்தியைத் தேடுங்கள். ஏனெனின், அல்லாஹுத் தஆலாவில் நின்றுமுள்ள திருப்தி மிகப் பெரிது.

தொழுகையை நிரந்தரமாக நிறைவேற்றி ஜக்காத் என்னும் மார்க்க வரியைக் கொடுத்து, றமலான் மாதத்தின் நோன்பு நோற்று, கஃபா என்ற தேவாலயஞ் சென்று ஹஜ்ஜுச் செய்ய முடியாமற் போவதற்கும் மரணம் என்ற கஷ்டங்கள் உங்களுக்கு திடீரென வந்து கவர்ந்து கொள்வதற்கும் முன்னர் நீங்கள் ஹஜ்ஜையும் செய்து கொள்ளுங்கள். அக்கஷ்டங்கள் மிகக் கடுமையாகவும் மிகக் கசப்பாகவுமிருக்கும்.

பெருமை, தற்பெருமை, கோபம், அகம்பாவம் ஆகிய இழி தன்மைகளையும், கெட்ட அற்ப குணங்களையும் விட்டு உங்களிருதயங் களைச் சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள். எனவே, எவரது ஹிருதயம் இணக்கமாகி விடுகிறதோ அவரது ஸ்தூலம் முழுவதும் இணக்கமாகி விடுகிறது. எவரது ஹிருதயம் கெட்டுப்போகிறதோ அவரது ஸ்தூலம் முழுவதும் கெட்டுப் போய் "ஸக்கர்" என்னும் நரகுக்கு அருகதை யாகி விடுகிறது.

சகல காரியங்களிலும் அல்லாஹு தபாரக்க வ தஆலாவின் பால் பொறுப்புக் கொடுப்பது உங்களுக்கு அவசியமாகும். ஏனெனில், அவனிடத்தில்தான் உம்முல் கித்தாபு இருக்கிறது. முன்னர் நிகழ்ந்தது, தற்போது நிகழ்வது, இனிமேல் கியாமத்து நாள் வரை நிகழப்போவது ஆகிய யாவும் அதில் எழுதப்பட்டிருக்கிறது. அவனது கட்டளையில்லாமல் ஒரு அணுவும் அசையாது. அவனது ஏவல் இல்லாமல் ஒருகஷ்டமும் வராது, ஒவ்வொரு வஸ்துவையும் ஒரு அளவாகவே அவன் சிருஷ்டித்திருக்கிறான்.

இணைவைப்பதையும் துர்ச்சகுனம் பார்ப்பதையும் விட்டு உங்களைப் பேணிக் கொள்ளுங்கள். இவைகளில் சோதிக்கப்படாதவர் உங்களில் எவருமில்லை. என்றாலும், களா கத்ரின்பால் தவக்கல் என்னும் நன்னம்பிக்கை கொள்ளும்படி அவரை அல்லாஹுத் தஆலா கொண்டுபோகிறான்.

மேலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நற்சகுனம் பார்ப்பதை நேசிப்பவர்களாகவும், துர்ச்சகுனம் பார்ப்பதை வெறுப்பவர்களாகவும் இருந்தார்கள். "தொத்து நோய் இல்லை, துர்ச்சகுனம் இல்லை, கொல்லப்பட்டவனது உயிர் ஆந்தை ரூபமாக வந்து பழி கேட்கும் என்பதும் இல்லை" என்று நாயகம் (ஸல்) அவர்கள் கூறி இருக்கிறார்கள் (ஹதீது). ஆதலின், பெரும் பங்கை நீங்கள் அடைவதற்காக உங்களது நபியின் குணத்தைப் பின்பற்றி, உங்களிலுள்ள பெரியோர்கள் நடந்த வழியில் செல்லுங்கள். எனவே, தனது நபியையும், நபியின் தோழர்களாகிய ஸஹாபிகளையும் பின்பற்றியவர் நேர்வழி பெற்றவராகி விடுகிறார். அவர்களுக்கு மாறு செய்பவர் வழி தவறி விடுகிறார். அவர்களைப்பின் றொடர்ந்தவர் ஈடேற்றம் பெறுவார். அவர்களுக்கு மாறுசெய்பவர் வழி கெட்டு, கெட்ட தங்கு மிடத்திலாவார்.

எனவே, துர்ச்சகுனம் பார்த்தல், பெரும் இணை வைத்தல், சிறு இணைவைத்தல் ஆகியவைகளை விட்டு நம்மையும் உங்களையும் அல்லாஹுத் தஆலா காப்பானாக! கியாமத்து நாளில் எங்கள் பாவங்களையும் உங்கள் பாவங்களையும் மன்னித்து, எங்களுக்கும் உங்களுக்கும் கிருபை செய்வானாக! மகத்துவமுள்ள உயர்வுள்ள அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப்புகழும் தகும்,

أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ۝
وَلَقَدْ أَنْزَلْنَا الْقُرْآنَ لِلذِّكْرِ فَهَلْ مِنْ مُدَّكِرٍ ۝

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹ் வினிடம் காவல் தேடுகிறேன்.

மேலும், திரு குர்ஆனை உபதேசத்துக்காக நாம் அருளி இருக்கிறோம். ஆகவே, (அதனை) உபதேசங் கொள்பவர் இருக்கிறார்.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ
بَرٌّ رَؤُفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ۝

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الثَّانِيَةِ مِنْ صَفَرٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الْعَلِيِّ الْجَلِيْلِ ○ اَلَّذِيْ بَعَثَ عَلَيْنَا رُسُلًا
وَّاَنْبِيَاءَ وَاَوْضَحَ لَنَا السَّبِيْلَ ○ نَحْمَدُهٗ حَمْدًا كَثِيْرًا
وَّنَشْكُرُهٗ شُكْرًا جَمِيْلًا عَلٰى اَنْ جَعَلَنَا مِنْ اُمَّةِ حَبِيْبِهٖ
وَصَفِيِّهٖ وَخَيْرِ خَلْقِهِ الْمَوْصُوْفِ بِالْكَرَامَةِ وَالتَّبْجِيْلِ ○
اَشْهَدُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ تَفَرَّدَ
بِوَحْدَانِيَّتِهٖ وَتَنَزَّهَ عَنِ الشَّرِيْكِ وَالْمَثِيْلِ ○ وَاَشْهَدُ اَنَّ
سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهُ الْمُخْتَصُّ بِفَصْلِ الْخِطَابِ
وَفَضْلِ التَّنْزِيْلِ ○ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَعَلٰٓى اٰلِهٖ وَصَحْبِهٖ
وَمَنْ سَلَكَ سَوَآءَ السَّبِيْلِ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ۞

يَاأَيُّهَا النَّاسُ اتَّقُوا اللهَ الْعَظِيمَ عَزَّ وَجَلَّ وَأَطِيعُوهُ
أُوصِيكُمْ عِبَادَ اللهِ وَإِيَّايَ بِتَقْوَى اللهِ

## ஸபர் மாதம்

## இரண்டாவது ஜும்ஆ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்.)

உயர்வுள்ள வலுப்பமுள்ள அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் தகும். அவன் நம்மிடம் றஸூல்மார்களையும் நபிமார்களையும் அனுப்பி, நமக்குப் பாதையைத் தெளிவாக்கி இருக்கிறான். அவனுக்குப் பிரியமானவரும் (ஹபீபும்), தெளித்து வடித்தெடுக்கப்பட்டவரும், சங்கையையும் சிறப்பையும் கொண்டும் வர்ணிக்கப்பட்ட அவனது சிருஷ்டியில் உத்தமருமானவரது உம்மத்தில் நம்மை அவன் சேர்த்ததற்காக அவனை நாம் அதிகமாகப் புகழ்ந்து, அழகிய நன்றியறிதலை நாம் செலுத்துகிறோம்.

அவனைத் தவிர்த்து வணக்கத்துக் குரியவன் (வேறு எவனும்) இல்லை; அவன் தனித்தவன்; அவனுக்கு இணை இல்லை; தனது ஏகத்துவத்தில் தனித்தவன். இணையானவன் நிகரானவனை விட்டு

நீங்கியவன் என்று நான் சாக்ஷியங் கூறுகிறேன். எங்களது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும், தூதராகவும், சத்தியம் அசத்தியம் ஆகியவைகளைப் பிரிக்கும் கட்டளையையும், மேன்மையான வேதத்தையும் கொண்டு சொந்தப்படுத்தப் பட்டவராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாக்ஷியங் கூறுகிறேன்.

அவருக்கும் அவரது கிளையார், தோழர்கள், நேரான பாதையில் நடந்தவர் யாவருக்கும் அல்லாஹுத் தஆலா ஸலாத் என்னும் கருணையை அருள்வானாக!

أَمَّا بَعْدُ ஆதமுடைய மகனே! இவ்வுலகில் அன்னியனாக இருப்பவனே! வழிப் போக்கனே! "இவ்வுலகில் நீ ஒரு அன்னியனைப் போல அல்லது வழிப் போக்கனைப்போல இருப்பாயாக" (ஹதீது). எவ்வளவு காலத்துக்கு இந்தச் சோம்பல்? எவ்வளவு காலத்துக்கு இந்த யுக்தி? உனது ஜீவியத்தில் குறைவு ஏற்படாமலும் உனது மரணத் தவணை நெருங்காமலும் காலம் செல்வதில்லையே. இந்த ஜீவியத்தில் கொஞ்சம் தான் எஞ்சி இருக்கிறது.

இந்த உலகம் நித்திரையில் காணப்படும் சொர்ப்பனத்தை அல்லது நீங்கிப் போகக் கூடிய நிழலை அல்லது சாய்ந்து விடக் கூடிய சாய்மானங்களை அல்லது உயிரைக் கொல்லும் நஞ்சைப் போலிருக்கிறது என்பனத நீ உணர வில்லையா? எத்தனை பேரை இவ்வுலகம் மாய்த்திருக்கிறது?

பிரயாண சமயத்தில் உனக்கு ஆபத்துகளும் மயக்கங்களும் சீக்கிரத்தில் வரும் என்பதை நீ உணரமாட்டாயா? உன்னை மரணத்தின் மயக்கங்கள் சூழ்ந்து, தவறிப் போவதிலுள்ள கஷ்டங்கள் உன்னையடைந்து, பிரயாணத்துக்கு அழைக்கும் மலக்குகள் உன்னிடம் ஆஜராகி விட்டால் உனக்கு எப்படி இருக்கும்?

எனவே, நீ நிர்யாணமாகி விட்டால் உற்றாரும் உறவினரும் உனக்கு கபன்உடையை அணிவிப்பதிலும், உன்னை அடக்கம் செய்வதிலும் தீவிரமாவார்கள். எங்கே என்னைக் கொண்டு போகிறீர்கள்? மருவுதலில்லாத, அந்நிய வீட்டுக்கா? எங்கே என்னை விடுகிறீர்கள்? இருளும் கைசேதமுள்ள வாசஸ்தலத்திலா? என்று அவர்களை நீ அழைத்துக் கூறுவாய். ஆனால், அவர்களோ இதனைச் செவியேற்காமல் தீவிரமாக இருப்பதிலேயே கவனம் செலுத்துவார்கள்.

எனவே, தோழர்கள் உன்னைக் கப்ரில் அடக்கி, உன்னை விட்டு உற்றார் ஒதுங்கியவுடன் கரிய, நீல வர்ணமும், முகங்கடுகடுப்பும், வன்னெஞ்சமுமுள்ள இரண்டு மலக்குகள் உன்னிடம் வந்து "உனது மார்க்கத்தையும், உன் நபியையும், மகத்துவமுள்ள உனது றப்பையும் குறித்து உன்னிடம் விசாரணை புரிவார்கள். நேர்மையான முறையில் அவர்களுக்கு நீ பதில் கூறுவாயாயின், நன்மைப் பயனை நீ வெற்றிக்கொள்வாய். உனது நா தடுமாறிவிடுமாயின், கடுமையான வேதனையில் உன்னை வதைப்பார்கள்.

ஏ மிஸ்கீனே! உன்னைப்பற்றி மகா ஆச்சரியமாகஇருக்கிறது. இவ்வித நிலைமையில் நீ இன்பங்களில் மூழ்கி இருக்கின்றனே! தீமைகளைப் பிடிவாதமாகச் செய்கின்றனை! கட்டுச் சாதமும், நற்கிரியைகளும் குறைவாயிருப்பதை நீ லக்ஷியம் செய்கிறாயில்லை! மகத்துவம் பொருந்திய எஜமானனை நீ அஞ்சுகிறாயில்லை!

உனது தசையைக் கழற்றி, உடலைக் கரிக்கும்படியான நெருப்பு உனக்குப் பின்னால் இருக்கிறதென்பதை நீ உணர்ந்துகொள்! நரகவாதிகளது தோல்கள் வெந்துபோகுந்தோறெல்லாம், கடுமையான வேதனையை அனுபவிப்பதற்காக வேறு தோல்களில் அவர்கள் மாற்றப்படுவார்கள். அப்பொழுது அழுகையும் பிரலாபமும் அதிகமாகும். நெருப்பும், ஜுவாலையும் அவர்களில் பரவும். இவ்வுலகில் மதிப்புக்குரியவனாக இருந்தவன் கேவலப்பட்ட அடிமையாக அப்பொழுதிருப்பான்.

அப்பொழுது நீ (தவறிப்போனதைக் குறித்து) ரொம்பவும் விசாரப்படுவாய். அவ்விசாரம் உனக்குப் பிரயோஜனப்படாது. உனது இருகன்னங்களிலும் ஓடுகிற உனது கண்ணீரும் உனக்குப் பயன்படாது. நான் மண்ணாக இருந்திருக்கக் கூடாதா? நான் தூசாக இருந்திருக்கக்கூடாதா? என்னை என் மாதா பிரசவிக்காமல் இருந் திருக்கக்கூடாதா? என்று நீ கூறுவாய். "உனது தப்பு வாக்களித்தது இதுவே. உனக்கு உனது தப்பு வாக்களித்ததை உண்மையாகக் கண்டு கொண்டாயா? நீ சம்பாதித்ததன் பிரதி பலன் இதுதான். அற்ப வயதை நீ வீணாக்கி விட்டாய்" என்று கூப்பிட்டுச் சொல் பவர் உன்னைக்கூப்பிட்டுக் கூறுவார்.

சகோதரரே! உனக்கு நான் புத்தி கூறுகிறேன். சிருஷ்டிப் பொருள்களைப் படைத்தவனான அல்லாஹ்வுக்குப் பயப்படவேண்டும், கேவலமான ஒரு அடிமை பலாட்டியமுள்ள தனது எஜமானனுக்கு வழிப்படுவதுபோல அவனது ஏவல்களுக்குக் கீழ்ப்படியவேண்டும், அவனது விலக்கல்களை விட்டு விலகிக் கொள்ளவேண்டும் என்று உபதேசம் செய்வது தான் சன்மார்க்கம். உன்னைக் காத்துக்கொள்! பின்னும் உன்னைக் காத்துக்கொள்!! அழிவைத்தரும் குற்றங்களையும் வீழ்த்துகிற குறைகளையும் முக்கியமாக புறங்கூறல், கோள் சொல்லல், பின்னின்று குறை சொல்லல், கோபங் கொள்ளல், பொறாமை, பிணங்குதல், முஸ்லிம்களைப் பரிகசித்தல், முஸ்லிம்களுக்குத் தொந் தரை செய்தல், கேவலப்படுத்துதல் இழிவு செய்தல் முதலியவை களில் பங்கெடுத்துக்கொள்ளல் ஆகியவைகளை விட்டு உன்னைக் காத் துக்கொள்.

நீ கேள்விகணக்குக் கேட்கப் படுவதற்கு முன்னதாகவே ஒவ்வொரு காலையிலும் மாலையிலும் உன்னை நீயே கேள்வி கணக்குக் கேட்டுக் கொள்! ஒவ்வொரு இரவிலும் பகலிலும் உன்னை நீயே கண்டித்துக் கொள்! அழுகை கூக்குரலிட்டு நீ அழுவதற்கு முன்னதாகவே உன் நப்ஸுக்காக நீயே அழுதுகொள்!

எனவே, தான் செய்ததற்குப் பச்சாத்தாபப்பட்டு, தவறிப் போன நன்மைகளைக் குறித்து அழுது, தனது றப்பினிடத்தில் எவர் மீளுகிறாரோ அவர் அழகிய நன்மைப் பயனை வெற்றி கொள்வார்.

கடைசி மூன்றாவது பங்கு இரவில் நீ பாப மன்னிப்புக் கேட்பது அவசியம். ஏனெனில், நமது றப்பு தபாரக்க வ தஆலா இவ்வுலகின் வானத்தில் இறங்கி, பாப மன்னிப்புக் கேட்போருக் மன்னித்து, தௌபாச் செய்வோருக்கும் தள்ளப் பட்டோருக்கும் கிருபை செய்யும் நேரம் அது.

இராக்காலங்களில் நித்திரை செய்யாமல் விழித்திருந்து தொழுவதைக் கடைப்பிடித்துக்கொள்! இது நல்லோர்களது வழி. ஜெயம் பெறுவோரின்பாதை. இதனைக் குறித்து அப்துல்லாஹிப்னு உமர் (றலி) அவர்களுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "அப்துல் லாஹி மனிதரில் நல்லவர்தான். அவர் இரவில் வணங்குவாராயின்" என்று கூறியிருக்கிறார்கள் (ஹதீது).

இரவில் நிறைவேற்றப்படும் தொழுகைகளில் குர்ஆன் ஷரீபை அழுத்தம் திருத்தமாக ஓதுவது அவசியம். அல்லாஹுத் தஆலா உன்னை மேலான பாதையில் நடத்தக் கூடும். மகத்துவமுள்ள எஜமானிடம் கேவலமான அற்பஅடிமை கூறுவதுபோல களங்க மற்ற மனத்துடன், "நாயனே! குறைகளை மறைப்போனே! அழகனே! என்னை மன்னிப்பாயாக! எங்கள் குற்றங்களை மறைப்பாயாக! எங்களை க்ஷமிப்பாயாக சகலவிதமான கஷ்டங்கள், களைப்புகள், பளுவான துக்கங்கள் ஆகியவைகளை விட்டு எங்களைக் காப்பாயாக!" என்று பிரார்த்தியுங்கள்!

எங்கும் வியாபகமான கடாக்ஷமுள்ள அல்லாஹுத் தஆலா வுக்கே எல்லாப்புகழும் தகும்.

أَعُوذُ بِاللَّهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○
وَيَوْمَ يَحْشُرُهُمْ وَمَا يَعْبُدُونَ مِن دُونِ اللَّهِ فَيَقُولُ أَأَنتُمْ
أَضْلَلْتُمْ عِبَادِي هَٰؤُلَاءِ أَمْ هُمْ ضَلُّوا السَّبِيلَ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹ் வினிடம் காவல் தேடுகிறேன்.

“மேலும், அவர்களையும், அல்லாஹ்வை யன்றி அவர்கள் வணங்குவதையும் அவன் எழுப்பி, எனது இவ்வடியார்களை நீங்கள்தானு வழி கெடுத்தீர்கள் அல்லது அவர்கள் (தாங்களாகவே) வழியைத் தவற விட்டு விட்டார்களா என்று கூறும் நாளை (நினைத்துப் பாருங்கள்).

(திரு குர்ஆன்)

بَارَكَ اللَّهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ
بَرٌّ رَؤُفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الثَّالِثَةِ لِشَهْرِ صَفَر

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ عَلٰى حِلْمِهٖ بَعْدَ عِلْمِهٖ وَعَلٰى عَفْوِهٖ بَعْدَ قُدْرَتِهٖ
يَطَّلِعُ عَلَى الْعُصَاةِ وَهُوَ فِيْ مَعَاصِيْهِمْ فَيَتُوْبُ عَلَيْهِمْ
وَيَسْتُرُ عُيُوْبَهُمْ وَهُوَ كَثِيْرُ الْغُفْرَانِ ○ خَلَقَ الْاِنْسَانَ
وَعَلَّمَهُ الْبَيَانَ ○ وَهَدَاهُ بِاِرْسَالِ الْاَنْبِيَاءِ وَالرُّسُلِ ذَوِى
الْعَزْمِ وَالشَّانِ ○ اَحْمَدُهٗ عَلٰى اَنْ بَعَثَ عَلَيْنَا سَيِّدَ
الْاَنْبِيَاءِ خَاتَمَ الرُّسُلِ وَاَنْزَلَ عَلَيْنَا الْقُرْاٰنَ ○ وَوَعَدَنَا
بِالْمُبَشَّرَاتِ وَالْكَرَامَاتِ وَدُخُوْلِ الْجِنَانِ ○ وَنَشْكُرُهٗ
شُكْرًا عَلٰى اَنْ رَفَعَ السَّمَآءَ بِغَيْرِ عِمَادٍ وَّبَسَطَ الْاَرْضَ
وَوَضَعَ الْمِيْزَانَ ○ اَشْهَدُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا
ضِدَّ لَهٗ وَلَا نِدَّ لَهٗ وَهُوَ الْكَرِيْمُ الْمَنَّانُ ○ وَاَشْهَدُ اَنَّ
سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ لَوْلَاهُ لَمَا كَانَ يَكُوْنُ
وَمَا كَانَ ○ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ مَا دَارَ الْقَمَرَانِ ○

صَلَّى اللهُ وَسَلَّمَ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّآلِهِ وَصَحْبِهِ أَجْمَعِيْنَ

يَاأَيُّهَا النَّاسُ ۝ اِتَّقُوا اللهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَأَطِيْعُوْهُ
أُوْصِيْكُمْ عِبَادَ اللهِ وَإِيَّايَ بِتَقْوَى اللهِ ۝

## ஸபர் மாதம்

## மூன்ருவது ஜுமுஆ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

அல்லாஹுத் தஆலா அறிந்துகொண்டே பொறுமையாக இருப்பதற்காகவும், அவனுக்கு தத்துவமிருந்தும் அவன் மன்னிப்பதற்காகவும் அவனுக்கே சர்வ புகழும் தகும். பாபிகள் தங்களது பாப கிர்த்தியங்களிலிருக்கையில் அவர்களைத் தெரிந்து கொண்டே, அவர்களுக்குத் தௌபாவை அங்கீகரித்து, அவர்களது குறைகளை மறைக்கிருன். அவன் மிகுதி மன்னிப்புள்ளவன். மனிதனைச் சிருஷ்டித்து அவனுக்கு பிரசங்கத்தையும் கற்பித்தான். கண்ணிய

மும் அந்தஸ்துமுள்ள நபிமார்களையும் றஸூல்மார்களையும் அனுப்பி மனிதனுக்கு நேர்வழி காட்டினான்.

நபிமார்களுக்கு நாயகராகவும், றஸூல்மார்களுக்குக் கடைசியானவராகவுமுள்ள வரை நம்மிடம் அனுப்பி, திரு குர்ஆனை நமக்கருளி, சுவிசேஷங்களையும், கண்ணியங்களையும், சுவர்க்கத்தில் பிரவேசிப்பதையும் நமக்கு வாக்களித்த அவனை நான் புகழ்கின்றேன். தூண்களில்லாமல் வானத்தை உயர்த்தி, பூமியை விரித்து, நிறுவையை ஏற்படுத்திய அனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

வணக்கத்துக்குரியவன் அவனைத் தவிர்த்து (வேறுயாரும்) இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு முரணானவனில்லை, அவனுக்கு நிகரானவனுமில்லை என்று நான் சாக்ஷியங்கூறுகிறேன். அவன் கிருபை செய்பவன்; தயாளன்.

எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவும் இருக்கிறார்கள் என்று சாக்ஷியங் கூறுகிறேன். அவர்களில்லாவிடில் இப்பொழுது நிகழ்வதும், இதற்கு முன் நிகழ்ந்ததும் நிகழ்ந்தே இருக்காது. இரு சந்திரர்களும் சுற்றுங் காலமெல்லாம் அவர்களுக்கும், அவர்களது கிளையார் தோழர்களுக்கும் அல்லாஹுத்தஆலா ஸலாத் என்னும் கருணையை அருள்வானாக.

أَمَّا بَعْدُ மனு, ஜின் ஆகிய இரு வர்க்கங்களையும் சேர்ந்தவர்களே! தீமையும் வழி கேடுமுள்ள இந்தக் காலத்தைக் கவனித்துப் பாருங்கள். பஞ்சம், ஜீவனம்சக் கஷ்டம், இழிவு ஆகியவைகளைக் குறித்து நாம் முறையிடுகிறோம். ஆனால், நம்மிலிருந்து நிகழுகிற பாவங்களையும் மாறுபாடான செய்கைகளையும் நாம் உற்று நோக்குகின்றோமில்லை.

கியாமத்து நாள் வருவதற்குரிய அடையாளங்கள் யாவும் வந்து விட்டன. இதனைக் குறித்து மனிதருக்கும் ஜின்களுக்கும் நாயகராக இருப்பவர் கூறியதுபோல கியாமத்து நாளைக் குறித்த அறிகுறிகளில் எதுவும் அதன் தீர்ச்சையை அடையாமல் எஞ்சி இருக்கவில்லை. அமானிதமாக வைக்கப்பட்ட பொருள்கள் கொள்ளை முதல்களைப்போல் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ஜக்காத்து முதல் கடனாக ஆகிவிட்டது. பட்டு அணியப்படுகிறது. தீமை மலிந்து விட்டது. ஆடவன் தன் மனைவிக்குக் கீழ்ப்படிகிறான். தனது மாதா பிதாக்களுக்கு அநீதி செய்து கொண்டு, தன் தோழனுக்கு நன்மை செய்கிறான். பந்தத்துவம் துண்டிக்கப்பட்டுவிட்டது. அநாதைகள் அக்கிரமிக்கப்படுகிறார்கள். பாதரக்ஷையில்லாமல், தலை மொட்டையாக ஆடு மேய்த்துக் கொண்டிருந்தவர்களெல்லாம் பெரும் பெரும் மெத்தை வீடுகளைக் கட்ட வாரம்பித்து விட்டனர். நாணம் குறைந்துவிட்டது. அமானிதம் எடுபட்டுவிட்டது. உலமாக்களது மரணத்தின் மூலம் கல்வி கரைந்து விட்டது. அற்பர்களிடமும் அறிவிலிகளிடமும் கல்வி இருப்பதாக நம்பப்படுகிறது. மெய் நீங்கி, பொய் மலிந்து விட்டது.

பாவங்களிலும் அழிச்சாட்டியங்களிலும் நாம் மூழ்ந்து விட்டோம். ஒருவருக்குப் பின்னிருந்து குறை கூறவும், பொறாமை கொள்ளவும், எரிச்சல்படவும், பிணங்கிக் கொள்ளவும் ஆரம்பித்து விட்டோம். முகஸ்துதியும், வட்டி வாங்குவதும், விபசாரத் தொழிலும், வாத்திய கோஷங்களைக் கேட்பதும் நம்மில் பெருகி விட்டன. இரகசியமாகவும் பகிரங்கமாகவும் மதுபான மருந்தப்படுகிறது.

அத்னான் கோத்திரத்து ஸெய்யிதானவர்களது தாட்சண்யமில்லாதிருக்கும் பக்ஷத்தில் றஹ்மான் நம்மைக் கோபித்துக்கொள்வான், பூமி நம்மைப் பிடித்து அமுத்திக்கொள்ளும், உருமாற்றுதல், குணமாற்றம், பூகம்ப அதிர்ச்சி, தாழ்மை ஆகியவைகளெல்லாம் நமக்கேற்பட்டிருக்கும். துறவிகளும், வயோதிகர்களும், பால்

குடிக்கும் குழந்தைகளும், மேய்ச்சலுக்குச் செல்லும் பிராணிகளும் இல்லாதிருக்கும் பக்ஷத்தில் நெருப்புக் கரிப்பதில் நாம் வீழ்த்தப் பட்டிருப்போம்.

எனவே, அந்தரங்க சுத்தியான உறுதியுடன் தௌபாச் செய்யுங்கள். உண்மையுணர்ச்சியுடன் அல்லாஹுத் தஆலாவைக் கெஞ்சுங்கள். அவ்வாறு செய்தால் அல்லாஹுத் தஆலா நம்மை மன்னித்து, நமது குற்றங்களை அழித்து, சுவர்க்க வீடுகளில் நம்மைப் பிரவேசிக்கச் செய்யக்கூடும். அல்லாஹுத் தஆலாவினது பொறுமையையும் கிருபையையும் கண்டு நாம் ஏமாற்றமடைந்து விடக் கூடாது. ஏனெனில், அவன் கடுமையான பிடியுள்ளவன். பலமாகத் தண்டிக்கக்கூடியவன். அவனை எவ்வஸ்துவும் இயலாமலாக்காது. ஒவ்வொரு நாளிலும் அவனுக்கு ஒரு நிலை இருக்கும். ஆனால், அவனது கிருபை நமக்கு எங்கே கிடைக்கப்போகிறதெனக் கருதி நிராசையாகி விடாதீர்கள். நிச்சயமாக அவன் பாவங்களனைத்தையும் மன்னித்து விடுவான். நிச்சயமாக அவன் மிக மன்னிப்பவன்; தயாளன்.

உங்களை நீங்கள் காத்துக்கொள்ளுங்கள். கியாமத்து நாள் வருவதற்கு அல்லது நீங்கள் இன்பங்களில் மூழ்கி ஈடுபட்டிருக்கும் போது பெரிய அடையாளங்கள் உங்களுக்குத் திடீரென வருவதற்கு முன்னதாகவே உங்களை நீங்கள் காத்துக்கொள்ளுங்கள். மனிதர்களுக்கு—அவர்கள் மறதியில் முகந்திரும்பி இருக்கும்போது—அவர்களிடம் கேள்வி கணக்கு வாங்குவது நெருங்கிவிட்டது (திரு குர்ஆன்) என்று அல்லாஹுத் தஆலா கூறி இருக்கிறவர்களைப்போல் நீங்களும் ஆகிவிடுவீர்கள்.

கியாமத்து நாள் ஏற்படுவதற்குச் சமீபமாகவுள்ளகாலம் இது. கடைசிக்காலத்து இமாமான அல்இமாமுல் மஹ்தியி முஹம்மதுப்னு அப்தில்லாஹி தோன்றுவது அடுத்து விட்டது. இந்த நூற்றாண்டிலேயே அவர் வெளியாகிவிடக்கூடும். இன்னும் அவருடைய

காலத்திலேயே தஜ்ஜால் வருவான். அவன் வருவது ஆபத்தாகவும் கடுஞ் சோதனையாகவும் இருக்கும்.

எந்த நபியும் தமது உம்மத்துகளுக்கு இவனது விஷமங்களைக் குறித்து எச்சரிக்கை செய்யாமல் இருக்கவில்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களது தொழுகையில் இவனது விஷமத்தை விட்டு எப்பொழுதும் காவல் தேடிக்கொண்டே இருந்தார்கள். இன்னும் அவனது தன்மைகளையும் அடையாளங்களையும் குறித்து நமக்கறிவித்து மிருக்கிறார்கள்.

அவன் குராஸான் எல்லைப்புறங்களிலிருந்து தான் வெளிப் படுவான். இஸ்பஹானிலுள்ள யூதர்களின் மாபெரும் கூட்டம் அவனைப் பின்பற்றும். அவன் தன்னை நாயன் என்று தாவாச் செய்வான். மனிதர்களுக்கும் ஜின்களுக்கும் சோதனையாக அவனி லிருந்து அற்புதங்கள் வெளியாகும்.

மழையை வருஷிக்குமாறு அவன் மேகத்துக்குக் கட்டளை யிடுவான். உடனே மழை வருஷிக்கும். பூமியில் விவசாய மேற் படும். சுவர்க்கமும் நரகமும் பிரசன்னமாகும். அவனை நிராகரிப் பவர்களைத் தனது நரகினில் அவன் பிரவேசிக்கச் செய்வான். அது உண்மையில் சுவர்க்கமே ; அவனை விசுவாசிப்பவர்களை தனது சுவர்க் கத்தில் அவன் பிரவேசிக்கச் செய்வான். அது உண்மையில் நரகமே.

அவன் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் இரண்டு மலக்கு களிருப்பார்கள். என்னை றப்பு என்பதாக இவ்விரு மலக்குகளும் சாக்ஷியங்கூறினால் என்னை நீங்கள் விசுவாசிப்பீர்களா என்று ஜனங் களிடம் அவன் கூறுவான். அதற்கு ஜனங்கள் "ஓம்" என்று ரைப்பர். உடனே, அம்மலக்குகளை நோக்கி "நான் உங்கள் றப்பல்லவா ?" என்று வினவுவான். அதற்கு வலப்புறம் இருக்கிற மலக்கு "இல்லை, நீ பொய்யுரைக்கிறீர்" என்று கூறுவார். ஆனால், அவர் கூறும் மறுமொழி ஜனங்களுக்குக் கேட்காது. வலப்புறத்து மலக்கை நோக்கி இடப்புறம் இருக்கிற மலக்கு "நீர் கூறியது சரி தான்" என்பார். இவ்வார்த்தைகள் ஜனங்களுக்குக் கேட்கும்.

எனவே, அந்த மலக்கானவர் தஜ்ஜாலை மெய்யென்றுரைக்கிறார் என்று ஜனங்கள் கருதி அவனை விசுவாசிப்பார்கள்.

ஆவோ கைசேதமே! பூமியில் அவன் நீந்துவான். நாற்பது நாட்களில் பூமியின் கீழ்த்திசையிலிருந்து மேற்றிசையாவற்றிலும் சஞ்சரிப்பான். அந்நாட்களில் ஒருநாள் ஒரு வருஷத்தையும், மற்றொரு நாள் ஒரு மாதத்தையும், இன்னொரு நாள் ஒரு வாரத்தையும், பாக்கியுள்ள நாள் உங்களது சாமான்ய நாட்களையும் போலிருக்கும்.

அப்புறம் ஸெய்யிதுனா ஈஸா (அலை) அவர்கள் இறங்கி வந்து, தஜ்ஜாலை வெட்டி, அவனது கஷ்டங்களை விட்டு மூமின்களுக்கு விமோசனம் அளிப்பார்கள். அச்சமயத்தில் சன்மார்க்கம் யாவும் பூரணமாக அல்லாஹுத் தஆலாவுக்காகவே இருக்கும். ஜிஸ்யா வரியை நீக்கி விடுவார்கள். பன்றியைக் கொல்லுவார்கள். சிலுவையை முறிப்பார்கள். ஈமான் கொள்வதைத் தவிர்த்து வேறு எதையும் அங்கீகரிக்கமாட்டார்கள்.

மேலும், ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்களைப் பெற்றுகொண்டவர் தமது ஸலாமை அவர்களிடம் சொல்லவேண்டும் என நாயகம் (ஸல்) அவர்கள் வஸிய்யத்துச் செய்திருப்பதாக தக்க ஆதாரத்துடன் ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

மிகப்பெரிய ஸஹாபிகளில் ஒருவரான ஹஜ்றத் அபூஹுறைறு (றலி) அவர்களும் தமது ஸலாமை ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்களுக்குச் சொல்லுமாறு வஸிய்யத்துச் செய்திருக்கிறார்கள்.

எனவே, இந்த வஸிய்யத்தை நீங்கள் பாடமிட்டுக்கொண்டு உங்கள் மக்களுக்கும், அவர்களுக்குப் பின்னால் வருபவர்களுக்கும் சொல்லிவையுங்கள். ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்கள் காலம்வரை இருந்து, அவரை அடைந்தவர் நமது நாயகம் (ஸல்) அவர்களுடையவும், அவர்களது ஸஹாபியான ஹஜ்றத் அபூஹுறைறு (றலி) அவர்களுடையவும் ஸலாம்களை அவருக்குச் சொல்லட்டும்.

இன்னும் மனப்பயத்துடனும் உண்மை நாவுடனும் "நாயனே! இவ்வுலகில் நல்லோர் யாவருக்கும் சமமாகக் கிருபை செய்யும் றஹ்மானே! தயை புரியும் மன்னனே! கிருபையாளர்களிலெல்லாம் அதிகக் கிருபை செய்யும் அர்ஹமுர்ராஹிமீனே! பரந்த மன்னிப்புள்ளவனே! எங்களை மன்னித்து, எங்களுக்குக் கிருபை செய்வாயாக! எங்களது குற்றங்களுக்காக எங்களை அழிக்காதிருப்பாயாக! ஆபத்துக்களையும் விட்டு எங்களைக் காப்பாயாக.

இரக்கமுள்ளவனாகிய றப்பாகிய அல்லாஹுத்தஆலாவுக்கே சர்வ புகழும் தகும்.

أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○
اَلرَّحْمٰنُ عَلَّمَ الْقُرْاٰنَ ○ خَلَقَ الْاِنْسَانَ عَلَّمَهُ الْبَيَانَ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹ்வினிடத்தில் காவல் தேடுகிறேன்.

அர்ரஹ்மான் (திரு) குர்ஆனைக் கற்பித்தான். மனிதனைச் சிருஷ்டித்து, அவனுக்குப் பிரசங்கத்தை அவன் கற்பித்தான்.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْاٰنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَاِيَّاكُمْ
بِالْاٰيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ اِنَّهُ تَعَالٰى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَرِيبٌ
بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

## الخطبة الأولى للجمعة الرابعة من صفر تكلم فيها قدوم الحجاج

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الْكَرِيْمِ التَّوَّابِ ○ مُسَبِّبِ الْاَسْبَابِ وَمُفَتِّحِ
الْاَبْوَابِ ○ اَلَّذِي اصْطَفٰى لِجَنَّتِهٖ عِبَادًا، وَعَهِدَ مَوَاسِمَ
وَاَعْيَادًا، لِقُرْبِهِمْ مِنْ ذٰلِكَ الْجَنَابِ ○ نَحْمَدُهٗ حَمْدًا عَلٰى
اَنْ جَعَلَ الْبَيْتَ الْعَتِيْقَ قِبْلَةً لِلْاَنَامِ وَنَادٰى بِلِسَانِ
خَلِيْلِهٖ فِي النَّاسِ بِالْحَجِّ فَاَجَابُوْهُ مِنْ كُلِّ مَرْمًى سَحِيْقٍ وَ
وَعَدَ لَهُمْ جَزِيْلَ النِّعَمِ وَاَحْسَنَ الثَّوَابِ ○ وَنَشْكُرُهٗ
عَلٰى اَنْ سَهَّلَ لَهُمُ الطَّرِيْقَ فَتَرَكُوا الْاَوْلَادَ وَالْاَحْفَادَ
وَصَلُوْا اِلَيْهِ مِنْ كُلِّ فَجٍّ عَمِيْقٍ وَنَالُوْا اَحْسَنَ مَاٰبٍ ○ اَشْهَدُ
اَنَّهٗ لَا اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ شَهَادَةً تُدْخِلُنَا
دَارَ الثَّوَابِ ○ وَنَشْهَدُ اَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
الَّذِيْ تَشَرَّفَ عُنْصُرُهٗ وَطَابَ ○ صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلٰى
اٰلِهٖ وَصَحْبِهٖ اُولِي الْاَلْبَابِ ○

صَلَّى اللهُ وَسَلَّمَ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَآلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

يَا أَيُّهَا النَّاسُ ○ اتَّقُوا اللهَ الْعَظِيمَ عَزَّ وَجَلَّ وَأَطِيعُوهُ
أُوصِيكُمْ عِبَادَ اللهِ وَإِيَّايَ بِتَقْوَى اللهِ ○

## ஸபர் மாதம்

## நான்காவது ஜும்ஆ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்.)

சர்வ புகழும் அல்லாஹ்வுக்கே தகும். அவன் இரக்கமுள்ளவன், தௌபாவை அங்கீகரிப்பவன். காரணங்களுக்குக் காரணமாயமைந்தவன். வாசல்களைத் திறப்பவன். தனது சுவர்க்கத்துக்கென சில அடியார்களை அவன் தெரிந்தெடுத்திருக்கிறான். அவனிடம் அவ்வடியார்கள் முடுகுதலாவதற்காக சில குறிப்பிட்ட காலங்களையும் பெருநாள்களையும் ஏற்படுத்தியுள்ளான்.

பழமையான அவ்வாலயத்தை (அதாவது கஃபா ஷரீபை) ஜனங்களுக்கு கிப்லாவாக ஆக்கி, தனது அன்புக்குரியவரின் மூலம்

(அதாவது இப்ராஹீம் கலீலுல்லாஹி-அலை-அவர்கள் மூலம்) ஹஜ்ஜுக்கு வரும்படியாக ஜனங்களை அழைத்த அவனை மிகுதமாகப் புகழ்கின்றோம். ஜனங்கள் மிகத்தூரமான இடங்களிலிருந்தெல்லாம் அவனது அழைப்புக்கு இணங்கி இருக்கிறார்கள். இன்னும் அவர்களுக்கு ஏராளமான பாக்கியங்களையும், அழகிய நற்பயனையும் அளிப்பதாக வாக்களித்திருக்கிறான்.

பாதையை அவர்களுக்கு இலேசாக்கி, அவர்கள் புத்திர பௌத்திரர்களை விட்டுப் பிரிந்து தூரதேசங்களிலிருந்து அவனிடம் சேர்ந்து, நல்ல ஒதுங்கு மிடத்தை அவர்கள் அடைந்ததற்காக நாம் அவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

"வணக்கத்துக்குரியவன் அவனைத் தவிர்த்து (வேறு ஒருவரும்) இல்லை. தனித்தவன். அவனுக்கு இணை இல்லை" என்று நன்மைப் பயனையுள்ள வீட்டில் நம்மைப் பிரவேசிக்கச் செய்யக் கூடிய சாக்ஷியமாகச் சாக்ஷியங்கூறுகிறோம்.

எங்களது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் அவனது தூதராகவும் இருக்கிறார்கள். அவர்களது அசல் சிறப்புள்ளதாகவும் மணமானதாகவும் இருக்கிறது என்று சாக்ஷியம் கூறுகிறோம். அவர்களுக்கும் நுண்ணறிவுள்ளவர்களான அவர்களது கிளையாருக்கும் தோழர்களுக்கும் அல்லாஹுத் தஆலா ஸலாத் என்னும் கருணையை அருள்வானாக.

أَمَّا بَعْدُ ஜனங்களே! இப்பொழுது முடிவடைந்த வருஷத்தில் தனது சங்கையான வீட்டை ஹஜ்ஜுச்செய்ய அல்லாஹுத் தஆலா நல்லுதவிசெய்து, தனது நபியின் கப்ரை ஜியாரத்துச் செய்து, அவர்களது சந்நிதானத்தில் நிற்கச்செய்து சிறப்பித்தவர்

களுக்கு மங்களமுண்டாவதாக! அவர்களுக்கு அவன் பாதையைச் சுலபமாக்கி, நீண்ட பிரயாணத்தை வசதியாக்கி, தங்கள் பொருள்களையும் மக்களையும் உறவினரையும் அவர்கள் துறந்து, திரு கஃபாவை அடைந்தனர். இன்னும், அவர்கள் தவாபு செய்யும்போது "நிச்சயமாக நீங்கள் நரகத்தைவிட்டு உரிமை விடப்பட்டவர்கள், வேதனையை விட்டு விடுவிக்கப்பட்டவர்கள்" என்று அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சங்கையான ஹறமில் அவர்கள் தங்கி இருந்தனர். அவர்களது நற்கிரியைகள் அங்கீகரிக்கப் பட்டு, அவர்களது தீமைகள் அழிக்கப் பட்டிருக்கின்றன. அருட் கொடைகளின் பாக்கியங்களையும் அழகிய நற்பயன்களையும் பெற்று விட்டனர். மேலும், ஹஜ்ஜுடைய கால நாட்களில் மினா சென்று, தங்களது நாட்டங்களில் வெற்றி பெற்று, பின்னர் அறபா சென்று, தீமைகளை மன்னித்து விட்டதாக அறிவிக்கப் பட்டார்கள். இன்னும், அல்லாஹ்வும் அவனது றஸூலும் கட்டளையிட்டபடி ஹஜ்ஜுக் கடமைகளை நிறைவேற்றி, தங்களது மாதாக்களின் வயிற்றிலிருந்து பிறந்த நாட்களில் இருந்தது போல வேதனையை விட்டு அச்சந்தீர்ந்தவர்களாகி விட்டார்கள்.

பின்னர், ஹஜ்ஜுக் கிரியைகளை நிறைவேற்றி முடிந்த பிறகு ஒருவரை ஜியாரத்துச் செய்ய வேணுமென்ற ஆசை அவர்களை அசைத்தது. அவர்களை ஜியாரத்துச் செய்வதால் சிறியாரும் பெரியாரும் கிருபை செய்யப்படுகிறார்கள். அவர்களை ஜியாரத்துச் செய்பவர் கண்ணியத்தையும் சிறப்பையும் அடைகிறார்,

எனவே, பாதுகாக்கப்பட்ட அச்சந்நிதானத்தை அவர்கள் அடைந்து, அந்தப் புண்ணிய ஸ்தலங்களை தரிசிப்பதன் மூலம் உயர்ந்த அந்தஸ்துகளைப் பெற்றுக் கொண்டனர். இன்னும், பாவங்களை விட்டுச் சுத்தமானவர்களில் நின்று முள்ளவர்களெனக் கணிக்கப் பெற்றனர். இன்னும் அவர்களது இருதயங்கள் குற்றங்களை விட்டுத்

தெளிவாகிவிட்டன, அவர்களது பிரார்த்தனை அங்கீகரிக்கப் படுகிறது.

பின்னர், அவர்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்ப வந்து சேர அவர்களுக்கு அல்லாஹுத் தஆலா சௌகரியம் கொடுத்து தங்கள் வாசஸ்தலங்களைத் திரும்ப அடையவும் தங்களது உற்றார் உறவினரைச் சந்திக்கவும் இலேசாக்கிவைத்தான். எனவே, நன்மைப் பயன்களை அடைவதனால் அவர்களுக்கு மங்களமும் வாழ்த்துதலுமுண்டாவதாக.

இந்த மேன்மையைச் சம்பாதித்துக் கொள்ளும் விஷயத்தில் பிந்தி இருந்து கொண்டவர்களே! அவர்களை அழகான சந்திப்பாகச் சந்தித்துக் கொள்ளுங்கள்! அழகான முறையில் அவர்களுக்கு ஸலாம் சொல்லிக் கொள்ளுங்கள்! புனிதமான அந்த ஸ்தலத்துக்குச் சென்ற காலம் அவர்களுக்குப் பக்கத்திலிருப்பதால் அவர்களுக்கு ஊழியமும் செய்யுங்கள். அல்லாஹுத் தஆலா உங்களுக்கு கிருபை செய்து, கேள்வி கணக்கு வாங்குவதை உங்களுக்குச் சுலபமாக்கவும் கூடும்.

உங்களுக்குப் பிழை பொறுக்க இறைவனிடம் பிரார்த்தனை செய்யுமாறு அவர்களைக் கேட்டுக் கொள்ளுங்கள். ஏனெனில், அவர்களது பிரார்த்தனை அங்கீகரிக்கப் படக்கூடியதாக இருக்கிறது.

"நாயனே! ஹாஜிகளுக்கும், ஹாஜிகள் எவருக்காகப்பாப மன்னிப்புக் கேட்கின்றனரோ அவர்களுக்கும் மன்னிப்புச் செய்வாயாக!" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிரார்த்தித்ததாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

ஹாஜியே! உனது ஹஜ்ஜை குற்றங்களைக் கொண்டு அழுக்காக்கி விடவேண்டாம். தீமையைச் சம்பாதிப்பதன் மூலம் உனது வாணாளை வீணாக்கி விடவேண்டாம் என்று உனக்கு நான் வஸிய்

யத்துச் செய்கிறேன். வணக்கத்திலும் தௌபாவிலும் முயற்சியைப் பலமாகச் செய்! அதுதான் வணக்கம் அங்கீகரிக்கப் பட்டதன் அடையாளம்.

உன்னை நீ காத்துக்கொள்! பின்னர், நீ ஹஜ்ஜுச் செய்வதற்கு முன்னர் இருந்தது போலவே இப்பொழுதும் இருப்பதையும், ஜியாரத்துக்கு முன்னர் நீ செய்ததையே இனியும் நீ செய்வதையும் விட்டு உன்னை நீ காத்துக் கொள்வாயாக! ஏனெனில், நிச்சயமாக அல்லாஹ் கடுமையாகப் பிடிப்பவன்; துரிதமாகக் கேள்வி கணக்கு வாங்குபவன்.

மரணத்துக்கு முன்னுள்ள ஜீவியம், நோய்க்கு முன்னுள்ள சௌக்கியம், தரித்திரத்துக்கு முன்னுள்ள சீமான்தனம், வயோதிகத்துக்கு முன்னுள்ள வாலிபம் ஆகிய நான்கு காரியங்களுக்கு முன் கிடைக்கிற நான்கு காரியங்களைக் கொள்ளை முதலாகக் கருதுங்கள்! ஏனெனில், வயோதிகம் வந்துள்ள சமயத்தில் வாலிபம் திரும்பாதோ என்று நீங்கள் கூறுமலிருப்பதற்காக. வாலிபம் திரும்பப் போவதில்லை.

உயர்வுள்ளவனது சமூகத்தில் இரத்தல் என்னும் கரங்களை "நாயனே! இரக்கமுள்ளவனே! எங்களுக்குப் பிழை பொறுத்துக் கிருபை செய்வாயாக! இன்னும் சங்கையான உனது வீட்டை ஹஜ்ஜுச் செய்யவும் உனது நபி அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்களது கப்றை ஜியாரத்துச் செய்யவும் எங்களுக்கு பாக்கியமளிப்பாயாக! இன்னும் கேள்விகணக்குக் கேட்காமலேயே எங்களைச் சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்வாயாக!" என்று சொன்னவர்களாக உயர்த்துங்கள்! மறுமையில் தனது பக்தர்களுக்கு மட்டிலும் விசேஷ அன்புள்ளவனை றப்பாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் தகும்.

أَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○
حٰمٓ تَنْزِيلُ الْكِتَابِ مِنَ اللّٰهِ الْعَزِيزِ الْعَلِيمِ ○ غَافِرِ الذَّنْبِ
وَقَابِلِ التَّوْبِ شَدِيدِ الْعِقَابِ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹ்வினிடத்தில் காவல் தேடுகிறேன்.

ஹாமீம் மிகைத்தவனுை, மிக அறிந்தவனுை, குற்றத்தை மன்னிப்பவனுை, இன்னும் தௌபாவை அங்கீகரிப்பவனுை வேதனை செய்வதில் மிகக்கடுமை யானவனுை அல்லாஹ்வில் நின்றுமிருக்கிறது இவ்வேத (கிரந்த)த்தை இறக்கி வைத்தல்.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللّٰهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ
بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

# الخطبة الأولى للجمعة الخامسة من صفر

بسم الله الرحمن الرحيم ○

الحمد لله الذي دلت كل ذرة على قدرته القديمة
وشهدت كل نملة بصنعته الحكيمة، أمر الشمس
فتطلع وتغيب ○ وأنبت في الأرض من كل زوج
بهيج تبصرة وذكرى لكل عبد منيب ○ نحمده سبحانه
وتعالى ما أحلمه كيف يعصيه الخلق وهو لا يقصر
في الترتيب ○ واشكره شكرا كيف يطلع على ذنوب
الخلق ويحلم وهو من حبل الوريد قريب ○ نشهد
أنه لا إله إلا هو وحده لا شريك له يسمع دعاء
الداع إذا دعاه ويجيب ○ ونشهد أن سيدنا محمدا
عبده ورسوله يشفع ذنوبنا وهو في حقنا طبيب ○

صلى الله وسلم على سيدنا محمد وآله وصحبه أجمعين ○

# يَا أَيُّهَا النَّاسُ ۝ اتَّقُوا اللهَ الْعَظِيمَ عَزَّ وَجَلَّ وَأَطِيعُوهُ أُوصِيكُمْ عِبَادَ اللهِ وَإِيَّايَ بِتَقْوَى اللهِ ۝

## ஸபர் மாதம்

# ஐந்தாவது ஜும்ஆ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்).

சர்வ புகழும் அல்லாஹ்வுக்கே தகும். அவனது பூர்வீகமான வல்லமைக்கு ஒவ்வொரு அணுவும் பணிந்திருக்கிறது. ஒவ்வொரு எறும்பும் அவனது யூகமுள்ள தொழிலைப் பிரத்தியக்ஷமாகப் பார்த்திருக்கிறது. சூரியனை ஏவினான், அது உதயமாகவும் அஸ்தமிப்பதுமாக இருக்கிறது. தன்னிடத்தில் மீளும்படியான அடியார் ஒவ்வொருவருக்கும் அகப்பார்வை ஏற்படுவதற்காக பூமியில் சகல விதமான இன்ப ஜோடிகளை முளைக்கச் செய்தான்.

அவனை நாம் புகழ்கிறோம். அவன் தூயவன், உயர்ந்தவன், எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது! சிருஷ்டிகள் அவனுக்கு எங்ஙனம் மாறு செய்கின்றன! ஆனால், அவனோ பயிற்சியளிப்பதில் குறைவு செய்வதில்லை,

அவனுக்கு நன்றி செலுத்துகிறோம். அவனே உயிர் நாடியைப் பார்க்கினும் அதிக சமீபத்திலிருந்து கொண்டு பொறுமையாக இருப்பதுடன் சிருஷ்டிகளது குற்றத்தை எங்ஙனம் தெரிந்து கொண்டிருக்கிறான்.

வணக்கத்துக் குரியவன் அவனைத் தவிர்த்து (வேறு ஒருவரும்) இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை இல்லை. பிரார்த்திப்பவனது பிரார்த்தனையைச் செவியேற்று பதில் கூறுகிறான் என்று நாம் சாக்ஷியங் கூறுகிறோம்.

எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவும் இருக்கிறார்கள் என்று நாம் சாக்ஷியங் கூறுகிறோம். நமது பாவங்களைக் குறித்து பரிந்து பேசுதல் என்னும் ஷபாஅத்துச் செய்வார்கள்; அவர்கள் நம்விஷயத்தில் வைத்தியராக இருக்கிறார்கள்.

أَمَّا بَعْدُ ஜனங்களே! உங்களிடம் ஒருமாதம் வருகிறது, வேறொரு மாதம் உங்களை விட்டுச் செல்கிறது, இது பிரயாணத்தின் அறிகுறி. அறிந்து கொள்ளுங்கள்! ஸபர் மாதம் முடிவடையும் தறுவாயிலிருக்கிறது; பிரயாணம் உங்களுக்கு முடுகிவிட்டது என்பதை அறிவிக்கிறது. கூடிய சீக்கிரத்தில் றபீஉல் அவ்வல் மாதம் உங்களுக்கு நிழலிடும். அல்லாஹுத் தஆலாவின் ஹபீபாகவும், பாபிகளை ரட்சிப்பவருமாகிய முஹம்மது (ஸல்) அவர்கள் இந்த மாதத்தில்தான் பிறந்தார்கள். எனவே, இறைவனுக்கு வழிப்பாடு செய்யும் விஷயத்தில் சோம்பி இருப்பதை விட்டு விடுங்கள்! தவறுகளிழைப்பதைச் சுருக்கிக் கொள்ளுங்கள்! எனவே எவர் தௌபாச் செய்து மீண்

டாரோ அவர் அழகிய மீளும் ஸ்தலத்தை ஜெயித்து விட்டார். எவர் மறதியாகி, நித்திரை செய்தாரோ அவர் கவலைப்பட்டவராகவும் வருத் தப்பட்டவராகவும் கியாமத்து நாளில் எழுப்பப்படுவார்.

இஸ்லாம் மதத்தின் பெருங்கடமைகளை நிறைவேற்று வதையும், நாவை நோக்குவதையும் பற்றிப் பிடித்துக் கொள் ளுங்கள்! நீங்கள் மொழிகிற சொல்லண்டையில் காவற்காரர் இல்லாமல் இல்லை. அற்பமான இவ்வுலக பேராசையை விட்டு விடுங்கள். சிருஷ்டிகளைச் சிருஷ்டித்தவன்பால் முகம் திரும்புங்கள்!

உங்கள் நபி கூறியது உங்கள் செவிகளைத் தட்டவில்லையா? அவர்கள் உங்களது நோய்க்குச் சிகிச்சை செய்பவர்கள். "இவ்வுலகில் பரதேசியைப் போலிரு!" என்று கூறி இருக்கிறார்கள். மறு உலகப் பிரயாணத்துக்காக கட்டுச் சாதத்தைத் சித்தஞ்செய்து கொள்ளுங்கள்.

"இவ்வுலகத்தின் வெள்ளாண்மையை எவர் தேடுகிறாரோ அவருக்கு அதிலிருந்து கொடுப்போம். ஆனால், மறுமையில் அவருக்கு எவ்விதப் பங்குமில்லை" என்று அல்லாஹுத் தஆலா திரு குர்ஆனில் கூறி இருப்பதை நீங்கள் செவியேற்கவில்லையா?

வாலிபர்களே! காலம் மாறி வருவதை நீங்கள் கவனிக்க வில்லையா? உங்கள் அன்பர்கள் ஒருவருக்குப் பின்னொருவராக மரிக் கின்றனர். உங்களுக்கும் கஷ்டங்களும் சங்கடங்களும் அலையலை யாக வருகின்றன. இக்காரியம் ஆச்சரியகரமானது என்பதை நீங்கள் பாடங்கற்றுக் கொள்ளமாட்டீர்களா?

வயோதிகர்களே! கருப்புக்குப்பின் வெள்ளை வந்திருப்பதை நீங்கள் கவனிக்கவில்லையா? மரணகாலம் நெருங்கிவிட்டது, தவறுங் காலம் சமீபித்துவிட்டதென்பதை உங்களுக்கு அறிவிக்கக்கூடிய

வஸ்து உங்களிடம் வந்திருக்கிறது. பரதேசியே! பிரயாணத்துக்குச் சித்தமாகிக்கொள் என்பதைக் கூறாமல் எந்த மயிரும் நரைப்பதில்லை. ஆனால், நீங்களோ மறதிகளில் விளையாடிக்கொண்டிருக்கிறீர்கள். தீமைகளைச் சம்பாதிப்பதில் முனைந்திருக்கிறீர்கள். இது ஆச்சரியகரமானகாரியமே.

மரணத்துப் பின்னருள்ள நிலையைச் சிந்தித்துப் பாருங்கள்! நண்பர்கள் உங்களைக் கப்ரில் அடக்கி விட்டு உங்களைப்பிரிந்து, "உனது றப்பு யார்? உனது மதம் எது?" என்று வினவியவர்களாக கரிய நீல நிறமுள்ள இரண்டு மலக்குகள் உங்களிடம் வரும்போது உங்கள் நிலை என்னாகும் என்பதை உய்த்துணர்ந்து பாருங்கள்! இவர்களது உருவம் பயங்கரமாக இருக்கும்.

எனவே, பாவங்களுக்கு தௌபாச்செய்தவர்களாக இருக்கிற நிலைமையில் மரித்தவர்கள் வருத்தங்களைவிட்டு விடுதலைபெற்று, புதுமாப்பிள்ளை நித்திரை செய்வதுபோல நித்திரை செய்வார்கள். பிரார்த்தனைகளை அங்கீகரித்து நிறைவேற்றுபவனான தயாளனல்லாமல் வேறு யாரும் அவர்களை எழுப்பமாட்டார்கள்.

ஆனால், தீமைகளைச் செய்தவனாக இருக்கிறநிலைமையில் மரிப்பவர்கள் கேள்விகள் கேட்கும்போது பிரமிப்படைந்து, துக்கம், கவலை விசனங்களுள்ளவர்களைப் போலாகி விடுவார்கள்.

அப்புறம், எக்காளம் ஊதப்பட்டு, கப்ரிலுள்ளவர்கள் எழுப்பப்படும்போது கேள்வி கணக்கு வாங்குபவனான மெய்யரசனான அல்லாஹுத் தஆலாவின் சமூகத்தில் ஆஜராவார்கள். அந்த நாளின் கஷ்டம் மிகக் கடுமையானது. பயங்கரமானது.

அப்பொழுது ஆ! வாலிபமே! என்று எத்தனையோ வாலிபர்கள் கூக்குரலிடுவார்கள்! மானக்கேடே! என்று எத்தனையோ

ஸ்திரீகள் அலறுவார்கள். அந்தோ! என்று எத்தனையோ சுந்தரர் களும் குலச் சொல்வாளரும் அபயக் கூச்சலிடுவார்கள். ஆ! வயோதிகமே என்று எத்தனையோ வயோதிகர்கள் ஏக்கங்கொள் வார்கள். இந்த நிலைமைகளை மறந்து விடாமல் இருப்பதும், இழி தொழில்களை விட்டு விடுவதும், சாம்பற் கட்டியாக பூமி ஆகிவிடக் கூடிய தினத்தை ஞாபகப்படுத்திக்கொள்வதும் புத்தியுள்ளவர்களுக்கு அவசியமாகும்.

மேலும், அந்த நாள் தூரத்திலிருக்கிறதென்றெண்ணிக் கொள்ளாதீர்கள். அதனைக் குறித்த சிறிய அடையாளங்களெல்லாம் வெளியாகிவிட்டன. மிகப்பெரிய "பிடி" ஒன்றைத் தவிர்த்து பாக்கி யுள்ள அறிகுறிகளெல்லாம் இனி எஞ்சி இருக்கவில்லை. அதுதான் ஒற்றைக் கண்ணனான தஜ்ஜாலின் பிடி. அவன் இதே நூற்றாண்டில் வெளி வந்து, உங்களைப் பிடித்துக்கொண்டு, தன்னை விசுவாசிக் கும்படி உங்களை வற்புறுத்தவும் கூடும்.

எனவே, அவனை விசுவாசிப்பவர் நரகம் புகுவர். அவனை நிராகரிப்பவர் சுவர்க்கம் புகுவர். எனவே, பிழைபொறுக்கத் தேடு பவர் எவரேனுமிருக்கிறார்களா? தௌபாச் செய்பவர் யாராவது இருக் கிறார்களா? புத்திசாலிகளிருக்கிறார்களா?

நாயனே! நாங்கள் குற்றவாளிகளான அடியார்கள். எங்கள் பாவங்களைக் கொண்டு எங்களைப் பிடிக்காதிருப்பாயாக! எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னிப்பாயாக! பிரார்த்தனைகளைச் செவி யேற்பவனே! பரந்த அன்புள்ள அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும்.

أَعُوذُ بِاللَّهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ۝
اَللّٰهُ الَّذِيْٓ اَنْزَلَ الْكِتٰبَ بِالْحَقِّ وَالْمِيْزَانَ وَمَا يُدْرِيْكَ
لَعَلَّ السَّاعَةَ قَرِيْبٌ ۝

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலா வினிடம் காவல் தேடுகிறேன்.

அல்லாஹ் தான் வேதத்தையும் நிறுவையையும் உண்மையைக்கொண்டு இறக்கினன். மேலும், உமக்குத்தெரியுமா? (கியாமத்து நாள் உண்டாவதற்குரிய) வேளை சமீபத்திலிருக்கக் கூடும்.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللّٰهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْاٰنِ الْعَظِيْمِ وَنَفَعَنَا وَاِيَّاكُمْ
بِالْاٰيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ اِنَّهٗ تَعَالٰى جَوَادٌ كَرِيْمٌ مَلِكٌ قَدِيْمٌ
بَرٌّ رَؤُفٌ رَّحِيْمٌ وَرَبٌّ حَلِيْمٌ ۝

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الْاُوْلٰى مِنْ شَهْرِ رَبِيْعِ الْاَوَّلِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ○

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ اَرْسَلَ فِيْ هٰذِهِ الدَّارِ النُّفُوْسَ الدَّاعِيَةَ○ وَهَدٰى بِهِمِ الْاُمَمَ الطَّاغِيَهْ○ فَسُبْحَانَهٗ مِنْ اِلٰهٍ خَلَقَ الْخَلْقَ لِيَعْبُدُوْهُ، مَا يُرِيْدُ مِنْهُمْ مِنْ رِزْقٍ وَمَا يُرِيْدُ اَنْ يُطْعِمُوْهُ وَاَرْسَلَ عَلَيْهِمْ رُسُلًا مُبَشِّرِيْنَ وَمُنْذِرِيْنَ رَهَّبُوْهُمْ مِنَ النَّارِ وَرَغَّبُوْهُمْ اِلَى الْجَنَّاتِ الْعَالِيَهْ○ اَحْمَدُهٗ حَمْدًا كَثِيْرًا وَّاَشْكُرُهٗ شُكْرًا جَمِيْلًا عَلٰى اَنِ اخْتَارَ مِنْ بَيْنِهِمْ سَيِّدَ وُلْدِ اٰدَمَ نَبِيَّنَا مُحَمَّدًا ذِي الْحُجَجِ السَّاطِعَهْ○ فَلَوْلَاهُ لَمَا خَلَقَ مَا سِوَاهُ وَلَمَا دَارَتِ الْاَفْلَاكُ الدَّآئِرَهْ، وَلَا طَارَتِ الطُّيُوْرُ الطَّآئِرَهْ، نَشْهَدُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ فَضَّلَ نَبِيَّنَا عَلٰى جَمِيْعِ الْاَنْبِيَآءِ وَالْمُرْسَلِيْنَ وَفَضَّلَ اُمَّتَهٗ عَلٰى سَآئِرِ الْاُمَمِ الْمَاضِيَةِ○ وَنَشْهَدُ اَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ مَا وَلَدَتِ امْرَاَةٌ مِثْلَهٗ

وَلَا تَلِدُ نَظِيرَهُ الْوَالِدَهْ ۝

صَلَّى اللهُ وَسَلَّمَ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَآلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ ۝

يَا أَيُّهَا النَّاسُ ۝ اِتَّقُوا اللهَ الْعَظِيمَ عَزَّ وَجَلَّ وَأَطِيعُوهُ

أُوصِيكُمْ عِبَادَ اللهِ وَإِيَّايَ بِتَقْوَى اللهِ ۝

## ரபீஉல் அவ்வல் மாதம்

## முதலாவது ஜும்ஆ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே தகும். (சன்மார்க்கத்தின் பக்கல்) அழைக்கும் ஆன்மாக்களை உலகமாகிய இவ்வீட்டில் அனுப்பி இருக்கிறான். வழிகெட்ட வர்க்கங்களை இவர்களைக் கொண்டு நேர்வழி

யிற் சேர்த்திருக்கிறுன். அவன் தூய நாயன், தன்னை வணங்குவதற்காக சிருஷ்டிகளை அவன் படைத்திருக்கிறுன். அவர்களிலிருந்து அவன் உணவைத்தேடுவதுமில்லை, அவனுக்கு உணவளிக்கவேண்டுமென அவன் நாடுவதுமில்லை.

இன்னும் எச்சரிக்கை செய்பவர்களும் நற்செய்தி கூறுபவர்களுமான றஸூல்மார்களை அவர்களுக்கு அவன் அனுப்பினுன். அந்த றஸூல்மார்கள் நரக நெருப்பை அவர்களுக்கு பயமூட்டி, உயர்வுள்ள சுவர்க்கங்களின் பால் அவர்களுக்கு அவேட்கையுமூட்டினுர்கள்.

அவனை அதிகமான புகழாகப் புகழ்கிறேம். அவர்களுக்கிடையிலிருந்து ஆதமுடைய மக்களின் தலைவரான எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களை தக்க ஆதாரங்களாக அனுப்பிய அவனுக்கு அழகிய நன்றியறிதலாக நன்றி செலுத்துகிறேம். அந்த நபியவர்களைச் சிருஷ்டிக்கவேண்டுமென்பதில்லாவிடில் அவர்களைத் தவிரவுள்ள மற்றைய சிருஷ்டிகள் சிருஷ்டிக்கப்பட்டுமிருக்காது. சுற்றிக்கொண்டிருக்கிற வானங்களும் சுற்றுது. பறக்கிற பறவைகள் பறக்கவுமாட்டா.

நிச்சயமாக அவனைத் தவிர்த்து வணக்கத்துக் குரியவன் (வேறு எவனும்) இல்லை; அவன் தனித்தவன்; அவனுக்கு இணை இல்லை என்று சாக்ஷியங் கூறுகிறேம். எல்லா நபிமார்களையும் முஸ்லிம்களையும்விட எங்களது நபியை மேன்மைப் படுத்தியதுடன், அந்த நபியவர்களது உம்மத்துமார்களை முற்காலத்திலிருந்த மற்றைய உம்மத்துகளைப்பார்க்கினும் அவன் மேன்மையாக்கி வைத்தான்.

இன்னும் எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவும் இருக்கிறுர்கள் என்று சாக்ஷியங்கூறுகிறேம். எந்த ஸ்திரீயும் அவரைப் போன்றவரைப் பிரசவிக்கவுமில்லை; அவருக்கு நிகரானவரை எந்த தந்தையும் பெறவில்லை.

أَمَّا بَعْدُ அல்லாஹ்வின் அடியார்களே! அவனது அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துங்கள்! நரகக் கிடங்கின் கரை மீது நீங்கள் இருந்தீர்கள். உங்களை அதனை விட்டு அவன் வெளிப்படுத்தி, உங்களுக்கு உயர்வான சுவர்க்கத்தை அனந்தர பாத்திய மாக்கினான். தனது நபியும் ஹபீபுமானவரது உம்மத்தில் உங்களை ஆக்கி, அதிகமான அன்புக்கும் தயைக்கும் உங்களைச் சொந்தப்படுத்தினான். எனவே, ஜனங்களுக்காக வெளிப் படுத்தப் பட்ட சிறந்த வர்க்கத்தாராக நீங்களாகி விட்டீர்கள். நன்மையை ஏவி தீயதை விலக்குகிறீர்கள்! கியாமத்து நாளில் ஜனங்களுக்கு நீங்கள் சாக்ஷிகளாகவும், உங்களுக்கு இந்த றஸூல் சாக்ஷியாகவும் இருப்பதற்காக நீங்கள் நடுவிலுள்ள உம்மத்தாக ஆகிவிட்டீர்கள். எனவே ஒன்றுக்கு பின் ஒன்றாகத் தொடர்ந்து கொண்டிருக்கிற அருட்கொடைகள் எவ்வளவு கிடைத்திருக்கின்றன.

ஒவ்வொரு மயிருக்கு ஒருநாவும், ஒவ்வொரு அங்கத்துக்கு ஒரு இருதயமும் இருந்தாலுங்கூட அவனுடைய சொல்ல வொண்ணா அருட்கொடைகளுக்கு அவனுக்கு நன்றி செலுத்தி முடித்துவிட நம்மால் இயலாது என்பதைப் பிரமாணமாகக் கூறுகிறேன்.

ரபீஉல் அவ்வல் மாதம் என்ற இந்த மாதம் உங்களுக்கு நிழலிடுகிறது. பொருத்தமுள்ள சொற்களில் மிகவும் சரியான சொற்படிக்கு மிகப் பூர்த்தியானவரும், ஷபாஅத்துச் செய்பவருமான ஹபீபானவர் இந்த மாதத்தில்தான் பிறந்தார்கள். எனவே, மனிதர்களுக்கு நாயகமான அவர்கள் மீது ஸலாத்தும் ஸலாமும் சொல்வதை அதிகமாக்கிக் கொள்ளுங்கள்!

ஹலால், ஹராம் ஆகியவைகளில் அவர்களுக்குக் கீழ்ப்படிவதைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்! எனவே, அவர்களுக்கு எவர் வழிப்படுகிறாரோ அவர் ஈடேற்ற மடைவார். அவர்களுக்கு மாறுசெய்து இச்சையைப் பின்பற்றுபவர் நரகத்தின் பால் வழி கெட்ட இதர உம்மத்துகளுடன் சென்று விட்டார்.

அல்லாஹ்வின் கட்டளையைக் கொண்டு வழிப்படப் படுவதற்காக அல்லாமல் எந்த றஸூலையும் நாம் அனுப்பவில்லை என்று அல்லாஹுத் தஆலா கூறி இருக்கிறான்,

மேலும், எவர் இந்த றஸூலைப் பின்பற்றுகிறாரோ அல்லாஹ் வுக்கு அவர் வழிப்பட்டு விட்டார் என்று அல்லாஹுத் தஆலா அருளி இருக்கிறான்.

அல்லாஹ்வை நீங்கள் நேசிக்கிறவர்களாக நீங்களிருப் பீர்களாயின், என்னை நீங்கள் நேசியுங்கள்! அல்லாஹ் உங்களை நேசிப்பான் என்று நீர் கூறுவீராக! என்று இறைவன் கூறியுள்ளான்.

அல்லாஹ்வுக்கும் றஸூலுக்கும் வழிப்படுகிறவர்கள், நபி மார்கள், ஸித்தீக்கீன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹானவர்களாகிய அல்லாஹுத் தஆலாவின் அருட்கோடையை யடைந்தவர்களுடன் இருப்பார்கள் என்றும் அல்லாஹுத் தஆலா தனது திருமறையில் கூறியுள்ளான்.

இவை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கீழ்ப்படி வதவசியம், அவர்களைப் பின் பற்றுவது கடமை என்பதை அறிவிக்கும்படியான ஆதாரங்களாகும். எனவே, உங்கள் நபியவர் களது ஷரீஅத்தைப் பின்பற்றுவதைக் கடைப்பிடித்து, அதில் சாய்ந்துள்ள உங்களது இச்சைகளையும் தன்மைகளையும் விட்டு விடுவீர்களாக! எனெனில், இச்சைக்கு வழிப்படுவதைத் தெரிந் தெடுத்துக்கொண்டு, தனது றப்புக்கும் றஸூலுக்கும் கீழ்ப்படிவதை விடுபவர்கள் மறுமையில் பேறு கெட்டவர்களுடன் எழுப்பப் படுவார்கள். எவர் நபியைப் பின்பற்றுகிறாரோ அவர் தனது நபியுடன் எழுப்பப்பட்டு உயர்வான தோழமையை அடைவார்.

பித்அத்துகளைக் கைகொள்வதை விட்டு உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்! காத்துக்கொள்ளுங்கள்!! அனுவசியமான பித் அத்தான செய்கையில் ஏராளமான காரியங்களைச் செய்வதைப் பார்க்கினும் ஸுன்னத்தான செய்கையில் அற்ப காரியத்தைச் செய் வது சிறந்தது.

இந்தக் காலத்தை அதாவது விஷமமும் குழப்பமுமுள்ள இக்காலத்தைக் குறித்து அல்லாஹுத் தஆலாவினிடம் தான் முறையிடவேண்டும். இவ்வுலகம் பாமரர்களால் நிரம்பிவிட்டது. உலமாக்களது மரணத்தினால் இவ்வுலகம் மரித்துவிட்டது. ஜனங்கள் மார்க்கச் சட்டநிபுணர்களாக தங்களிலுள்ள பாமரர்களை எடுத்துக் கொண்டனர். மார்க்கச் சட்டம் அறியாதவர்களை உலமாக்களாகக் கருதுகிறார்கள். வழி கெடுக்கும் தலைவர்களிலிருந்து ஜனங்கள் பத்வா தேடுகிறார்கள். ஆனால், அவர்கள் தாம் நேர்வழி பெற்றவர்களும் நேர்வழிகாட்டுபவர்களும் என்று நம்பிக்கையும் கொண்டிருக்கின்றனர். அவர்களும் ஆதார ஆதேயங்களில்லாமலே பத்வாவும் கொடுத்து, தாங்களும் வழிகெட்டு, ஏராளமான மற்றவர்களையும் நேரான பாதையை விட்டு வழி கெடுத்து விடுகிறார்கள்.

இருள் என்ற பாழ் கிணறுகளுக்குள்ளும், கடுமையான ஆபத்துகளுக்குள்ளும் ஜனங்கள் விழுவதை நீங்கள் பார்க்கிறீர்கள். பிரத்தியக்ஷமான பித்அத்துகளைப் பற்றிப் பிடித்துக்கொண்டு "எங்கள் மூதாதையர் இவைகளைச் செய்து கொண்டிருந்தனர். நாங்கள் எவ்வாறு இதனை விடமுடியும்?" என்று கூறுகிறார்கள். அவர்களது மூதாதையர் எதனையும் அறியாதவர்களாகவும் நேர்வழி பெறாதவர்களாகவும் இருந்தாலுமா இப்படிக் கூறுவார்கள்.

பித்அத்துகளை ஸுன்னத்துகளாக எண்ணிக்கொண்டு அவைகளை விடாமல் செய்து, ஸுன்னத்துகளை பித்அத்துகளெனக் கருதி அவைகளை கைவிட்டும் இருக்கிற ஜனங்களை நீங்கள் காண்கின்றீர்கள்.

இப்பொழுதோ வரப்போகும் கியாமத்து நாளின் அறிகுறிகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. ஒற்றைக் கண்ணனான தஜ்ஜால் என்பவன் வெளிப்பட்ட செய்தி சீக்கிரத்தில் உங்களுக்குத் திடீரெனவரும். தஜ்ஜால் வருவது கடுமையான சம்பவமாகும்.

ஆதலின், என் சகோதரர்களே! முழுமனதுடன் அல்லாஹுத் தஆலாவினிடம் "நாயனே! அவர்கள் செய்வதை நாங்கள் பொருந்திக் கொள்பவர்களாக இல்லை. அவர்களது குற்றங்களுக்காக

எங்களைப் பிடிக்காதிருப்பாயாக. இன்னும் எங்களை உயர்வுள்ள சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்வாயாக!" என்று கூறிக்கெஞ்சுங்கள்.

*மிகவும் உயர்வுள்ள, மறுமையான பக்தர்கள்பால் விசேஷ அன்புள்ளவனான அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் தகும்.*

أَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ○

إِنِّيْ ظَنَنْتُ أَنِّيْ مُلٰقٍ حِسَابِيَهْ ○ فَهُوَ فِيْ عِيْشَةٍ رَّاضِيَةٍ

فِيْ جَنَّةٍ عَالِيَةٍ قُطُوْفُهَا دَانِيَةٌ ○ كُلُوْا وَاشْرَبُوْا هَنِيْٓـًٔا

بِمَآ أَسْلَفْتُمْ فِي الْأَيَّامِ الْخَالِيَةِ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலாவினிடம் காவல் தேடுகிறேன்.

நிச்சயமாக நான் தனது கேள்விகணக்கைச் சந்திப்பவனாயிருக்கிறேன் என்று நிச்சயமாக நான் எண்ணிக் கொண்டேன். ஆனால், அவனே திருப்திகரமான வாழ்க்கையில் (அதாவது) உயர்தரமான சுவர்க்கத்தில் இருக்கிறான். அதன் கனிவர்க்கங்கள் நெருங்கியனவாயிருக்கின்றன. சென்ற காலங்களில் நீங்கள் செய்ததற்குப் பிரதியாக (இப்பொழுது) சந்தோஷமாக நீங்கள் புசியுங்கள்! இன்னும் அருந்துங்கள்!! (திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْاٰنِ الْعَظِيْمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ

بِالْاٰيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ إِنَّهُ تَعَالٰى جَوَادٌ كَرِيْمٌ مَلِكٌ قَدِيْمٌ

بَرٌّ رَؤُوْفٌ رَّحِيْمٌ وَرَبٌّ حَلِيْمٌ ○

# الخطبة الاولى للجمعة الثانية من شهر ربيع الاول

بسم الله الرحمن الرحيم ○

الحمد لله الذي بحكمته استقرت الارضون واستقلت
السموات ○ خلق خلقا لا يعلمه الا هو واسكنه
في الطبقات ○ فسبحانه وتعالى من ملك لما قال كن
ذلت له الارضون والسموات ○ نحمده على ان جعل
لنا الارض مسكنا ومدفنا منها خلقنا وفيها يعيدنا
ومنها يخرجنا وخلق لها اوتادا تسكنها وهي الجبال
الراسيات ○ ونشكره على ان قدر لعباده الموت
يصل كل الى جزاء ما اكتسبه ويعطى كل ذي حق
حقه فيدخل الابرار جنات تجري من تحتها الانهار
فيها نعم لا عين رأت ولا اذن سمعت ولا خطرت
في المدركات ○ ونشهد ان لا اله الا هو وحده لا
شريك له بعث علينا نبيا رؤفا رحيما سيد ولد ادم

وَاَشْرَفَ الْمَخْلُوْقَاتِ ۝ وَنَشْهَدُ اَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهُ
الَّذِيْ شَهِدَتْ بِرِسَالَتِهِ الْاَشْجَارُ وَسَلَّمَتْ عَلَيْهِ الْاَحْجَارُ
وَاَقَرَّ بِفَضْلِهٖ مَنْ فِي الْاَرْضِ وَمَنْ فِي السَّمٰوٰتِ ۝
صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ۝
يَاۤاَيُّهَا النَّاسُ ۝ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ
اُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ۝

## றபீஉல் அவ்வல் மாதம்

## இரண்டாவது ஜும்ஆ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே தகும். பூமிகள் அவனது யுக்தியினாலேயே நிலை நிற்கின்றன. வானங்கள் உறுதி பெற்றிருக்கின்றன. சிருஷ்டிகளை அவன் சிருஷ்டித்துப் பலவித தரங்களில்

அவைகளை குடியேற்றி யிருக்கிறான். அச்சிருஷ்டிகள் எத்தனை என்பதை அவனைத் தவிர வேறு யாரும் அறியமாட்டார்கள். அவன் தூயவன், உயர்ந்தவன், அரசன். "கு ஆகு" என்று கூறியவுடன் அவனுக்குப் பூமிகளும் வானங்களும் பணிந்து விட்டன.

நமக்குப் பூமியைக் குடியிருக்குமிடமாகவும், அடக்க ஸ்தலமாகவும் ஆக்கியதற்காக அவனைப் புகழ்கின்றோம். பூமியிலிருந்து தான் நம்மைச் சிருஷ்டித்தான். இதில்தான் நம்மை மீளச் செய்கின்றான். இன்னும் இதிலிருந்து தான் நம்மை (மறுபடியும்) வெளியேற்றுவான். மேலும், இதனை அசையாமலிருக்கச் செய்வதற்காகச் சில முளைகளை அதற்கெனச் சிருஷ்டித்தான். அவைகள் தான் உயரமுள்ள மலைகள்.

ஒவ்வொருவரும் தங்கள் சம்பாத்தியத்துக்குரிய நற்பயனை அடைவதற்காகவும், பாத்தியக்காரர்களுக்கு அவர்களது பாத்தியதை கொடுக்கப்படுவதற்காகவும் நல்லோர்கள் சுவர்க்கத்தில் பிரவேசிப்பதற்காகவும் தனது அடியார்களுக்கு மரணத்தை அவன் ஏற்படுத்தியதற்காக அவனுக்கு நன்றி செலுத்துகிறோம்; சுவர்க்கத்துக்குக் கீழில் அருவிகள் ஓடுகின்றன; அவைகளில் அநேக பாக்கியங்கள் இருக்கின்றன; அவைகளை எந்த நேத்திரமும் பார்த்ததில்லை; எந்தச் செவிப்புலனும் செவியேற்றதில்லை; எந்த உணர்வுகளிலும் அவைகளைக் குறித்த யூகங்களும் தோன்றியதில்லை.

அவனைத் தவிர்த்து வணக்கத்துக் குரியவன் (வேறு எவனும்) இல்லை என்று சாக்ஷியங் கூறுகிறோம். அவன் தனித்தவன், அவனுக்கு இணை (யாரும்) இல்லை. ஆதமுடைய மக்களின் நாயகமாகவும் சிருஷ்டிகள் யாவற்றினும் சிறந்தவராகவும் இருப்பவரை நமக்கு நபியாகவும் அபிமானியாகவும் கருணையாளராகவும் அனுப்பி இருக்கிறான்.

எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் றஸூலாகவும் இருக்கிறார்கள் என்று சாக்ஷியங் கூறுகிறோம். அவர்களது நபித்துவத்தைக் குறித்து விருக்ஷங்கள் சாக்ஷி

கூறியிருக்கின்றன, கற்கள் ஸலாம் சொல்லி இருக்கின்றன. அவர்களது மேன்மையை வானங்களிலுள்ளவர்களும் பூமியிலுள்ளவர்களும் ஒப்புக் கொண்டிருக்கின்றனர்.

أمّا بعد சகோதரர்களே! தோழர்களே!! இவ்வீட்டில் என்ன இந்த ஞாபகமின்மை! என்ன இந்த உரக்கம்!! இதுவோ கஷ்டங்களும் சங்கடங்களுமுள்ள வீடு. இதிலுள்ள எவரும் ஒருதலை வாசல் வழியாக வந்து மற்றொரு தலைவாசல் வழியாக வெளியேறுமல் இல்லை. இதில் எவரும் தனது சுதந்திரத்துடன் நிலைத்திருக்கவில்லை. தனது மேன்மையுடன் இதில் ஒருவரும் நிரந்தரமாயிருக்கவில்லை.

அழிந்து போன காரியங்களைக் கவனித்துப் பாருங்கள். உங்கள் மூதாதையர் எங்கே? உங்கள் மக்கள் எங்கே? உங்கள் உற்றார் எங்கே? உங்கள் உறவினர் எங்கே? உங்களிடம் தோழமை பூண்டவர்கள் எங்கே? உங்களுடன் சேர்ந்து இருந்தவர்கள் எங்கே? சென்ற காலங்களில் உங்களுடனிருந்தவர்கள் எங்கே? பிர்அவ்னும் ஹாமானும் எங்கே? ஷத்தாதும் நௌஷேருவானும் எங்கே? புக்து நஸ்ரும் அலக்ஜாந்தரும் எங்கே? லுக்மான் ஹக்கீமும் நபி ஸுலைமான் (அலை) அவர்களும் எங்கே?

இவர்களில் எவராவது மலக்குல் மவ்த்தை விலக்கி விட்டாரா? பலமும் அரசாங்கமும் இவர்களை விட்டு மரணத்தை தட்டி விட்டனவா? இவர்களிலிருந்து நிரந்தரமான நற்கிரியைகளைத் தவிர வேறு பெயரோ அடையாளமோ இப்பொழுது இல்லை.

நல்லோராயினும் தீயோராயினும் மலக்குல் மவ்த்து எவரையும் விடார் என்பதை என் ஆத்மா எவன் வசமிருக்கிறதோ அவன் மீது பிரமாணமாகக் கூறுகிறேன். ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்கள் ஆயிரம் வருஷம் ஜீவித்திருந்தார்கள். அப்புறம் உலகத்தை விட்டுப்

போய் விட்டார்கள். ஹஜ்றத் நூஹு (அலை) அவர்கள் ஆயிரம் வருஷங்களுக்கதிகமாகவே வாழ்ந்தார்கள். மரணம் அவர்களுக்கு வந்தபோது ஒரு க்ஷண நேரம் கூடப் பிந்தவில்லை.

இவ்வுலகில் ஒருவர் நிலைத்திருப்பதாக இருந்தால் நமது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மட்டிலும் தான் நிலைத்திருந்திருக்கலாம். இவ்வுலகிலுள்ள பசுமைகளையோ அல்லாஹுத் தஆலாவினிடமிருப்பதையோ ஆகிய இரண்டில் ஏதேனும் ஒன்றைத் தெரிந்தெடுத்துக் கொள்ளும்படி அவர்களுக்குத்தான் அல்லாஹுத் தஆலா உரிமை கொடுத்தான். எனவே, அவனிடத்தில் இருப்பதை அவர்கள் தெரிந்தெடுத்துக்கொண்டு, இவ்வுலகில் ஜீவிப்பதைப்பார்க்கிலும் மரணமடைவதைச் சிலாக்கியமாகக் கொண்டார்கள்.

ஹஜ்றத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் வந்து, "அல்லாஹ்வின் நபியே! சுவர்க்கங்கள் தங்களுக்காக அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன, நரகத்தின் வாசல்கள் அடைக்கப்பட்டிருக்கின்றன, ஹூறுல் ஈன் என்னும் அரம்பையர்கள் தங்களை வழிபார்க்கின்றனர்" என்றுகூறினார். அதற்கு நாயகம்(ஸல்) அவர்கள் "ஜிப்ரயீலே! எனக்குப்பின்னர் பாபம் செய்துள்ள என் உம்மத்தின் நிலை என்ன?" என்று வினவினார்கள். உடனே, அவர் அல்லாஹுத் தஆலாவினிடம் பறந்துசென்று திரும்ப வந்து "அவர்களில் தனது மரணத்துக்கு ஒரு மாத காலத்துக்கு முன்னதாக தௌபாச் செய்பவர்களுக்கு நான் பிழை பொறுப்பேன் என அல்லாஹுத் தஆலா கூறுகிறான்" என்று பதிலளித்தார்.

அப்பொழுது நாயகம் (ஸல்) அவர்கள் "ஜிப்ரயீலே! தனது ஜீவியம் இவ்வளவுதான் மிச்சமிருக்கிறது என்பதை அறிவது யார்?" என்றார்கள். உடனே ஹஜ்றத் ஜிப்ரயீல் (அலை) மறுபடியும் சென்று அப்புறம் வந்து "எட்டு நாட்களுக்கு முன்னதாக அவர்கள் தௌபாச் செய்து விட்டால் அவர்களை க்ஷமிப்பேன் என்று அல்லாஹுத் தஆலா கூறுகிறான்" என்றார். நாயகம் (ஸல்) அவர்கள்

அதனைப் பொருந்திக் கொள்ளவில்லை. எனவே, ஹஜ்றத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் மறுபடியும் சென்று திரும்ப வந்து "தொண்டைக் கும் வாய்க்குமாக உயிர் இருப்பதற்கு முன்னதாக அவர்கள் தௌபாச் செய்தாலும் நான் மன்னித்து விடுவேன்" என்று அல்லா ஹுத் தஆலா கூறுவதாக அறிவித்தார்கள்.

அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் சந்தோஷமடைந்து, தமது ஆன்மாவைக் கைப்பற்ற மலக்குல் மவ்த்துக்கு அனுமதியளித் தார்கள். அவர்களுக்குக் கடுமையானபோது மலக்குல் மவ்த்தை நோக்கி "மலக்குல் மவ்த்தே! மரணத்தின் பிரளயங்களை என் உம்மத் துக்கு இலேசாக்கிக் கொள். ஏனெனில், மரணத்திற்கு அனேக கஷ்டங்களிருக்கின்றன" என்று கூறினார்கள். அதற்கவர் "அல்லாஹ் வின் நபியே! சந்தோஷமாக இருங்கள்! தங்கள் உம்மத்தை நான் கஷ்டப்படுத்தமாட்டேன்" என்று கூறினார்.

அப்பொழுது நாயகம் (ஸல்) அவர்கள் சந்தோஷமடைந் தார்கள். உயர்வான அவர்களது ஆன்மா அர்ஷேமுஅல்லாவின் பால் பறந்து, ஹபீபானவர் தமது "றபீகே அஃலா"வுடன் சேர்ந்து கொண்டார்கள்.

இது றபீஉல் அவ்வல் மாதம் பதின்மூன்றும் தேதி திங்கட் கிழமை நிகழ்ந்தது என்று சரியான ரிவாயத்துகளில் கூறப்பட் டிருக்கின்றது. உடனே உலகம் இருண்டது; வானங்களும் பூமியும் அழுதன. பாபிகளுக்கு ஷபாஅத்துச் செய்பவர்களது பிரயாணத்தால் ஏற்பட்ட கஷ்டமே! முஸிபத்தே! இந்த முஸீபத்துகள் பகல் வேளைகளின் மீது போடப்பட்டால் அவைகள் அவைகளைச் சகிக்க முடியாமல் இருண்டு விடுமே!

சகோதரர்களே! நான் யார்! நீங்கள் யாவர்! மரணத்தின் கஷ்டங்கள் உங்களுக்குக் கடுமையாகி வியாகூலங்கள் உங்களைச் சூழ்ந்து கொண்டால் உங்கள் நிலை என்னகும்? எனவே புத்தியுள்ளோர் விழித்

துக்கொள்வார்களாக! தங்கள் சம்பாத்தியமான தவறுகளுக்கு தௌபாச் செய்வார்களாக!

பூமியினுடையவும், வானங்களினுடையவும் அரசாங்கத்தைக் கையில் வைத்திருப்பவனே! நாயனே! நாங்களோ பாவிகளான உனது அடியார்கள். எங்கள் குற்றங்களுக்காக எங்களை வேதனை செய்யாதிருப்பாயாக. உனது ஹபீபுடன் உயர்தரமான பூங்காவனங்களில் எங்களைப் பிரவேசிக்கச் செய்வாயாக!

உயர்வுள்ள சாந்தமுள்ள அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும்

أَعُوذُ بِاللهِ السَّمِيعِ الْعَلِيمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○
وَالَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ فِي رَوْضَاتِ الْجَنَّاتِ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலாவினிடம் காவல் தேடுகிறேன்.

மேலும் விசுவாசங்கொண்டு (சன்மார்க்கத்துக்கு) இணக்கமானவைகளைப் புரிந்தார்களே அவர்கள் சுவர்க்கங்களின் சோலைகளில் இருப்பார்கள்.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ
بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

# اَلْخُطْبَةُ الْأُوْلَى لِلْجُمُعَةِ الثَّالِثَةِ مِنْ شَهْرِ رَبِيْعِ الْأَوَّلِ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الْقَدِيْرِ الْأَكْبَرِ ○ اَلْمَالِكِ الْحَكِيْمِ الَّذِيْ خَلَقَ
كُلَّ شَيْءٍ وَقَدَّرَ ○ وَخَلَقَ الْأَرْضَ وَالسَّمٰوَاتِ وَمَا بَيْنَهُمَا
وَبِحِكْمَتِهٖ دَبَّرَ ○ اَحْمَدُهٗ عَلٰى اَنْ قَسَّمَ الْمَخْلُوْقَاتِ عَلٰى
طَبَقَاتٍ وَّجَعَلَ اَفْضَلَهَا الْبَشَرَ ○ وَاَشْكُرُهٗ عَلٰى اَنْ
كَرَّمَهُمْ بِشَرِيْفِ الْخِطَابِ وَسَهَّلَ لَهُمْ طَرِيْقَ الصَّوَابِ
وَيَسَّرَ ○ اَشْهَدُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
لَا دَافِعَ لِمَآ اَرَادَ وَلَا مَانِعَ لِمَا شَآءَ مِنْ نَّفْعٍ اَوْ ضَرَرٍ ○
وَاَشْهَدُ اَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ سَيِّدُ
الْمَخْلُوْقَاتِ مِنْ مَّلَكٍ وَّجِنٍّ وَّبَشَرٍ ○ صَلَّى اللهُ عَلَيْهِ
وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ مَآ اَضَآءَتِ الشَّمْسُ وَنَوَّرَ الْقَمَرُ ○

صَلَّى اللهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ○

يَاأَيُّهَا النَّاسُ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ أُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ

## ரபீஉல் அவ்வல் மாதம்

## மூன்ருவது ஜும்ஆ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே தகும். அவன் தத்துவமுள்ளவன். மிகப்பெரியவன். எஜமான். விவேகி. சகலவஸ்துவையும் சிருஷ்டித்துஅமைத்தான். பூமியையும் வானங்களையும், இவைகளுக்கு இடையிலுள்ளவைகளையும் சிருஷ்டித்து, தன்து விவேகத்தால் நிர்வகிக்கிருன்.

சிருஷ்டிகளைப் பலதரங்களாக வகுத்து, அவைகளில் மனிதனை சிறந்தவனாக ஆக்கியதற்காக அவனைப்புகழ்கின்ருேம். இன்னும், மேலான சம்பாஷணை மூலம் அவர்களைக்கண்ணியப்படுத்தி, நேர்மையான பாதையை அவர்களுக்குச் சுலபமாக்கி இலேசாக்கிய அவனுக்கு நன்றிசெலுத்துகிருேம்.

வணக்கத்துக்குரியவன் அவனைத்தவிர்த்து (வேறு யாரும்) இல்லை என்று சாக்ஷியங் கூறுகிறேன். அவன் தனித்தவன். அவனுக்கு இணை இல்லை. அவன் நாடியதைத் தடுப்பவரில்லை. அவன்எண்ணிய நன்மை தீமையை விலக்குபவரில்லை.

எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவும் இருக்கிறார்கள்; மலக்கு, ஜின், மனிதர் ஆகிய சிருஷ்டிகளுக்குத் தலைவராகவுமிருக்கிறார்கள் என்று சாக்ஷியங்கூறுகிறேன். சூரியன் பிரகாசித்துக் கொண்டும், சந்திரன் ஒளி வீசிக்கொண்டு மிருக்குங்காலமெல்லாம் அவர்களுக்கும் அவர்களது கிளையார் தோழர்கள் யாவருக்கும் அல்லாஹுத் தஆலா ஸலாத் என்னும் கருணை புரிவானாக.

أَمَّا بَعْدُ மிஸ்கீனே! தனது கிரியைகளால் பீடிக்கப் பட்டிருப்பவனே! அஜாக்கிரதை என்ற தூக்கத்திலிருந்து எழுந்து உபதேசம் பெற்றுக்கொள்! அல்லாஹுத் தஆலா உன்மீது கடமையாக்கி ஏவி இருக்கிறவைகளை எடுத்து நட! உன்னை விலக்கித் தடுத்திருக்கிறதை விட்டு விலகிக் கொள்! சென்று போன முன்னோர்களிலிருந்து நீ பாடங் கற்றுக் கொள்வதுடன், நன்கு யோசித்துக் கொள்!

தனது படுக்கையிலிருந்து கொண்டே சுகபோகமாக இருந்த எத்தனை பாக்கியவான்களுக்குத் திடீரெனமரணம் வந்து மண்ணுக்கும் புழுதிக்கும் அடியில் அவர்களைக் குடியிருக்கும்படி செய்து விட்டது? தந்தையர்களும் தனையர்களுமெங்கே? புத்திரரும் பௌத்திரருமெங்கே! கும்பல்கள் எங்கே! சிநேகிதர்களும் நண்பர்களும் எங்கே? சிறியவர்களும் பெரியவர்களுமான சோதரர்களும் தோழர்களும் எங்கே? மரணவஸ்தைகளைக் குறித்துச் சிந்தித்துப் பார்! எவர் மரிக்கிறாரோ அவரை மட்டிலும் குறித்த கியாமத்து அவருக்கு ஏற்பட்டு விடுகிறது, அதற்குப் பிறகு பெரிய கியாமத்து இருக்கிறது.

கப்ரில் உனக்கு நிகழக் கூடிய கப்று நெருக்குவதையும், தனித்திருப்பதையும், முன்கர் நக்கீர்களது கேள்வியையும் குறித்து கவலை கொள்! "நான்தான் தனிமையின் வீடு! நான் தான் இருண்ட வீடு! நான் தான் எளிமைத்தனத்தின் வீடு! நான் தான் பரதேச வீடு! நான் குடியிருக்கும் ஸ்தலம், நான் வாசஸ்தலம், நான் அடக்கப் படும் ஸ்தலம் என்று கப்று அழைத்துக் கூருத நாள் இல்லை. பிழை பொறுக்கத்தேடக் கூடியவர் பிழை பொறுக்கத் தேடுகிருரா? அகப்பார்வை யுள்ளவர் கூர்ந்து பார்க்கிருரா!

இன்பங்களை இடித்துப் போடக் கூடியதும் கூட்டங் களைக் குலைத்து விடக் கூடியதுமான மரணம் உனக்கு வந்து, நீ கை சேதங்களிலாகி, உனது உருவம் பேதகமடைந்து, மொழிகள் பூட்டு விட்டு, உன் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து, பார்ப்பதற்கு விகார மாகி, அழகிய உனது உடல் மாறுதலானுல், உன் நிலைமை எவ்வாறி ருக்கும்? பின்னர், உனக்கு இஷ்டர்களாக இருந்த யாவரும் நெருக்க மான அறைக்கு உன்னை எடுத்துக் கொண்டு அவசரம் அவசரமாகச் சென்று, உன்மீது மண்ணைப் போடுவார்கள். அப்பொழுது தனித்த வனுக, கைசேதப்பட்டவனுக, ஒற்றையாக, பிரமித்தவனுக, உனக்குத் தவறிப் போனவைகளையும், நீ செய்தவைகளையும் குறித்து அழுத வனுக நீ இருப்பாய்!

இந்நிலைமைகளையும் கொடிய இப்பயங்கரங்களையும் புத்தி யுள்ளவர் பாடங்கற்றுக் கொள்ளமாட்டாரா? அவைகளுக்காவன செய்யமாட்டாரா? மிகப் பெரியவனுன வல்லமையுள்ளவனுன அல்லா ஹுத் தஆலாவினிடமிருந்து இவ்வுலகம் உனக்குச் சதம் என ஒப்பந்த மிருக்கிறதா?

இல்லை! இல்லை! அல்லாஹ்வின் மீது பிரமாணமாகச் சொல்லு கிறேன்: உயிர் ஊதப்பட்ட எந்த ஜீவனும் கைப் பற்றப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டு கப்ரில் ஆக்கப்படாமலில்லை; அதற்குரிய தவணை காலம் வந்து விட்டால் ஒருக்ஷணம் முந்தவுமாட்டாது; பிந்தவு மாட்டாது. தான் செய்த காரியங்களைக் கொண்டு பிடிக்கப்பட்ட

தாகவும் கைசேதப்படுவதாகவும் பிரமிப்பதாகவுமே இருக்கும். இந்த உலகம் நிலையற்றது; பிரயாணத்துக்குரிய இல்லம்; பிரயாணம் என்ற இறக்கையின் மீதிலல்லாமல் இங்கு எவரும் வரவில்லை என்பதை நீ அறியவில்லையா? ஒவ்வொரு ஜீவனும் மரணத்தை ருசிப்பதாகவே இருக்கிறது. ஆனால், மிகப் பெரியவனான சிருஷ்டிக் கர்த்தனைத் தவிர்த்து மற்றெல்லா வஸ்துவுக்கும் மரணம் நிச்சயமாகவுண்டு.

இவ்வுலகில் ஒருவர் நிரந்தரமாக இருக்க முடியுமானால் ஜின்களுக்கும் மனிதர்களுக்கும் நாயகமான நமது நபி (ஸல்) அவர்கள் ஜீவித்திருந்திருப்பார்கள்.

இவ்வுலக ஜீவியமானது வருத்தம் ஏமாற்றம் ஆகியவைகளுக்குரிய சாமானேயல்லாமல் வேறில்லை என்பதை நீ அறியாயோ? பர்ஜுக்குப் பிறகு மரித்தவர்கள் எழுப்பப்படும் நாளில் உனக்கு நிகழுவது என்ன என்பதை நீ கேள்விப்பட்டதில்லையா? சிறிய பெரிய யாவற்றையும் குறித்து கணக்கு வாங்கப்படும் நாள் அது. அவை யாவும் பட்டோலையில் எழுதப்பட்டிருக்கின்றன. எனவே, பார்வை பறிக்கப்பட்டு, சந்திரன் ஒளி மழுங்கி, சந்திரனும் சூரியனும் ஒன்று சேர்க்கப்படும்போது, விரண்டோடும் ஸ்தலம் எங்கே என்று அந்நாளில் மனிதன் கூறுவான். அந்நேரத்தில் மனிதன்—தான் முற்படுத்தியதையும் பிற்படுத்தியதையும்—அறிவிக்கப்படுவான்.

ஏ மறதியாளனே! உனக்கு என்ன? இக்கஷ்டங்கள் கூடிய சீக்கிரத்தில் உனக்கு நிகழும். இவை மிகக் கடுமையாகவும் மிகக் கசப்பாகவு மிருக்கும். இதனைச் சகித்துக் கொள்ள உன்னாலியலுமா? நீ கல்லைப்பார்க்கினும் கன்னெஞ்சமுள்ளவனாகி விட்டனையா?

கல்லோ தனது றப்பின் மீது கொண்டுள்ள பயத்தினால் பிளந்து, அதிலிருந்து அருவிகள் ஒலிக்கின்றன. அதன் உடலம் மெலிந்து, தழும்பு விழுகிறது. ஆனால், நீயோ அறிபவன். அதுவோ அறியாது. நீயோ செவியேற்பாய். அதுவோ செவியேற்காது. உனது இருதயமோ

மெலிவதுமில்லை, தழும்பேறுவது மில்லையே. உன் செவியில் செவிடிருக்கிறதோ? அல்லது உன் பார்வையில் குருடிருக்கிறதோ?

நாயனே! இவ்வுலகில் நல்லோர் தீயோர் யாவருக்கும் சமமாகக் கிருபை செய்பவனே! சக்திகளைப் படைத்தோனே! எங்களுக்குக் கிருபைசெய்து, எங்களை மன்னித்து, பெரிய திடுக்கத்தை விட்டு எங்களைக் காப்பாயாக! அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும்.

أَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ۝
كَلَّا لَا وَزَرَ ۝ إِلٰى رَبِّكَ يَوْمَئِذِ ۣالْمُسْتَقَرُّ ۝ يُنَبَّؤُا الْإِنْسَانُ
يَوْمَئِذٍ ۢبِمَا قَدَّمَ وَأَخَّرَ ۝

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலாவினிடம் காவல் தேடுகிறேன்.

அவ்வாறில்லை, தப்பித்துக் கொள்வதில்லை, உனது றப்பினிடத்திலேயே அந்நாளில் தங்குமிடமிருக்கிறது. மனிதன் முற்படுத்தியதும் பிற்படுத்தியதும் அந்நாளில் அறிவிக்கப்படுவான்.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللّٰهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْاٰنِ الْعَظِيْمِ وَنَفَعَنَا وَاِيَّاكُمْ
بِالْاٰيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ اِنَّهُ تَعَالٰى جَوَادٌ كَرِيْمٌ مَلِكٌ قَدِيْمٌ
بَرٌّ رَؤُوْفٌ رَّحِيْمٌ وَرَبٌّ حَلِيْمٌ ۝

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الرَّابِعَةِ بِشَهْرِ رَبِيْعِ الْاَوَّلِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الْكَبِيْرِ الْوَهَّابِ ○ اَلْغَفُوْرِ الْعَظِيْمِ التَّوَّابِ ○
اَشْهَدُ اَنَّهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ الْمَالِكُ الْاُمُوْرِ الْاُمَمِ وَالرِّقَابِ ○
وَاَشْهَدُ اَنَّ سَيِّدَنَا وَمَوْلَانَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهُ
الَّذِيْ اُوْتِيَ الْحِكْمَةَ وَفَصْلَ الْخِطَابِ ○ صَلَّى اللّٰهُ عَلَيْهِ
وَعَلٰى اٰلِهٖ وَاَصْحَابِهٖ وَمَنْ تَبِعَهُمْ اِلٰى يَوْمِ الْحِسَابِ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ○

يَآ اَيُّهَا النَّاسُ ○ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ
اُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ○

# ரபீஉல் அவ்வல் மாதம்

## நான்காவது ஜும்ஆ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்).

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே தகும். (அவன்) மிகப் பெரியவன்; நன் கொடையளிப்பவன்; பாபமன்னிப்புச் செய்பவன்; வலுப்பமானவன்; தௌபாவை ஒப்புக்கொள்பவன்.

அவனைத் தவிர்த்து வணக்கத்துக் குரியவன் (வேறு எவனும்) இல்லை என்று சாக்ஷயங் கூறுகிறேன், உம்மத்துகளுக்கும் ஜனங்களுக்கும் எஜமானாகிய எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவு மிருக்கிறார்கள். அவர்கள் விவேகத்தையும் நன்மை தீமையைப் பிரிக்கும்படி சொற்றிறனும் கொடுக்கப்பட்டவர்கள். அவர்களுக்கும் அவர்களது கிளையார், தோழர்கள், இவர்களைப் பின்பற்றியவர் யாவருக்கும் கேள்வி கணக்குக் குரிய நாள் வரையில் அல்லாஹுத் தஆலா ஸலாத் என்னும் கருணையை அருள்வானாக!

أَمَّا بَعْدُ ஜனங்களே! ஒவ்வொரு க்ஷணத்திலும் நேரத்திலும் அல்லாஹுத் தஆலாவைப் பயப்படுங்கள்! ஒவ்வொரு

விநாடியிலும் நிமிஷத்திலும் அவனை அஞ்சுங்கள்! அல்லாஹுத் தஆலா பிடிப்பதில் மிகக்கடியவன், வேதனை செய்வதில் மிகக் கொடியவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள்! அவனது கிருபை விசாலமாக இருப்பதைக் கருதி ஏமாந்து விடாதீர்கள்! மாறு செய்வோர் செய்வதை அல்லாஹுத் தஆலா கவனிக்காமலிருக்கிறான் என நீங்கள் எண்ணிக்கொள்ளாதீர்கள்! ஏனெனில், கண்கள் திறக்கிற நாளுக்கென அவர்களை அவன் பிற்படுத்தி வைத்திருக்கிறான். கேள்வி கணக்கு வாங்குவதில் மிகத் துரிதமானவன்.

அசட்டை என்ற தூக்கத்தை விட்டெழுங்கள்! இன்பங்களில் மூழ்கியிருப்பதை விட்டு விடுங்கள்! ஏனெனில், உங்களுக்குப் பின்னால் கேள்வியும் எழுத்து மிருக்கின்றன. எந்நேரமும் அல்லாஹுத் தஆலாவினிடம் மன்னிப்புக் கேளுங்கள்! நம்மில் கீழ்த்தரமான கிரியைகள் மலிந்து விட்டன.

வட்டி, விபசாரம், எரிச்சல், பொறாமை, துவேஷம், படர் கூறல், கோள் சொல்லல், விலக்கப்பட்டதைப் புசித்தல், ஆண் புணர்ச்சி, இவைகளில் மிகக் கேவலமானதான புறஞ் சொல்லல் ஆகியவைகளெல்லாம் பரவி விட்டன. வயோதிகரும் வாலிபரும் கூட எல்லோரும் இவைகளைச் செய்யத் தொடங்கி விட்டனர்.

உங்களில் சிலரை(க் குறித்து)ப் புறங் கூறாதீர்கள்! உங்களில் ஒருவர் தனது சகோதரனது மாமிசத்தை செத்தவனாக அவனிருக்கையில் புசிக்க விரும்புவானா? ஆகவே, அதனை நீங்கள் வெறுத்து விட்டீர்கள் என்று அல்லாஹுத் தஆலா கூறியிருப்பதை நீங்கள் கேள்விப் படவில்லையா?

"வட்டியில் நின்றுமுள்ள ஒரு திர்ஹத்தை மனிதன் புசிப்பதானது முப்பத்து மூன்று முறை விபசாரம் செய்வதைப் பார்க்கினும் கடுமையானது. இவ்விபசாரங்களில் மிகத்தாழ்ந்தது தன்னைப்பெற்ற தாயுடன் விபசாரம் செய்வதாகும். இன்னும் வட்டியில் மிகக் கடுமை

யான வட்டி முஸ்லிமின் கௌரவபங்கமே'' என்பதாக உங்களது நபியவர்கள் தெரிவித்திருப்பது உங்கள் செவிகளில் ஏற வில்லையா?

புறங் கூறலைப் பொருந்திக் கொண்டிருப்பதும் புறங் கூறுவதற்கொப்பாகும். புறங் கூறலைக் காதிலேற்றுக்கொண்டு மௌனமாக இருப்பவன் அதில் கூட்டுச் சேர்ந்தவனுக் கொப்பாவான் என்பதை நீங்கள் தெரிந்திருக்கிறீர்களா? சவத்தைப் போலிருக்கிற இக்காலத்தையும், இதிலுள்ளோர் நாய்களைப் பேலிருப்பதையும் குறித்து அல்லாஹுத் தஆலாவினிடம் தான் முறையிட வேண்டியதாக இருக்கிறது. எனவே, நீ நாயாக இருப்பின், அவர்களுடன் தின்ன முடியும்; அவ்வாறில்லையேல், அந்நாய்கள் உன்னைப் பட்சித்து விடும்.

அவர்களிலுள்ள அமீர்கள் ஐவாய் மிருகங்களாக இருக்கிறார்கள்; அவர்களது மந்திரிமார்களோ ஓநாய்களாக இருக்கிறார்கள். இவ்வுலகம் வெகு துரிதமாக ஒழிந்து போகும். கடுமையான மாறுதலுள்ளது என்பதை அவர்கள் தெரிந்து கொண்டே அதில் மருண்டிருக்கிறார்கள். எத்தனை பேரை அது கொன்று விட்டது? எத்தனை பேரை அது அழித்து விட்டது? எத்தனை மேன்மக்களை அது நாசமாக்கி இருக்கிறது? எத்தனை புத்திசாலிகளைக் கெடுத்திருக்கிறது?

எத்தனை அறுதிமானங்களை முறித்திருக்கிறது? எத்தனை மேன்மைகளைத் தொலைத்திருக்கிறது? எத்தனை கவலைகளையும் வருத்தங்களையும் புதிதாக உண்டாக்கி இருக்கிறது?

அவர்களது உலமாக்கள் தங்களது வெளி வீட்டைக் கட்டுவதிலேயே கவனம் செலுத்துகின்றனர். ஆனால், அவர்களது அகங்கள் கெட்டுப் போயிருக்கின்றன. அவர்கள் நன்மையை ஏவுகிறார்களில்லை; தீமையை அவர்கள் விலக்குகிறார்களுமில்லை. ஆனால், அவர்கள் வேதத்தை ஓதிக் கொண்டு தானிருக்கிறார்கள்.

அவர்கள் மண்ணுக்கடியில் அடக்கஞ் செய்யப்பட்டு, அன்பர்களும் இஷ்டர்களும் அவர்களை விட்டுத் திரும்பிச் சென்று, தங்

களுக்கு அல்லாஹுத் தஆலா ஏவிய நன்மைசெய்வதற்கோ, வேதனை செய்வதற்கோ மாறு செய்யாதவர்களான, கடுகடுத்த பலாட்டியமுள்ள மலக்குகள் அவர்களிடம் பிரசன்னமானால், மிகைத்தவனை அல்லாஹுத் தஆலாவினிடம் அவர்கள் யாது புகல் கூறுவார்கள்? தங்களிலிருந்து நிகழ்ந்ததற்காக அப்பொழுது கைசேதப்பட்டு, தங்கள் வயதை வீணாக்கி விட்டதைக் குறித்து கவலை கொள்வார்கள். அப்பொழுது அவர்கள் கூறும் புகல்கள் அங்கீகரிக்கப்படமாட்டா; அவர்களின் பிரார்த்தனைகள் நிறைவேற்றப்பட மாட்டா.

இதற்குப் பிறகு விசாரணை புரியப்படுவதும், கேள்வி கணக்குக் கேட்கப்படுவதுமாகிய நாள் இருக்கிறது. அந்த நாளில் ஒவ்வொரு ஜீவனும் ஆஜர்படுத்தப்படும். அந்த ஜீவனும் அதனை இழுத்து வருகிற மலக்கும் இருப்பார், சாக்ஷிகளுமிருக்கும். கிரியைகள் எழுதப்பட்ட புத்தகங்களுமிருக்கும். அந்நாளில் கிரியைகள் நிறுத்துப் பார்க்கப்படும். அந்நாளில் மானக்கேடான செய்கைகள் வெளியாகும். வயோதிகனும் வாலிபனும் ஆகிய ஒவ்வொருவரும் அன்று விசாரணை புரியப்படுவார்.

என் சகோதரர்களே! அல்லாஹுத் தஆலாவை அஞ்சுங்கள்! அஞ்சுங்கள்!! இந்த மகாப் பயங்கரங்கள் உங்களுக்கு நிச்சயமாக வரும்; ஆனால் நீங்களோ இப்பொழுது அஜாக்கிறதையாக இருக்கிறீர்கள்; இன்ப சாகரத்தில் மூழ்கிக்கிடக்கிறீர்கள்.

நீங்கள் யாவரும் அல்லாஹுத் தஆலாவினிடத்தில் தௌபாச் செய்யுங்கள்! காலையிலும் மாலையிலும் அவனிடம் பிழை பொறுக்கத் தேடுங்கள்! அல்லாஹுத் தஆலா உங்களுக்குக் கிருபை செய்து, உங்களை அதிர்ஷ்டசாலிகளாக்கி, கேள்வி கணக்குக் கேட்பதிலுள்ள கடுமையை உங்களுக்குத் தளர்த்தக் கூடும்.

தௌபாச் செய்து மீண்டவர்களில் என்னையும் உங்களையும் அல்லாஹுத் தஆலா ஆக்குவானாக! இன்னும் என்னையும் உங்களையும் கேள்வி கணக்கு இல்லாமல் சுவர்க்கம் புகச் செய்வானாக!

மீளும் தலத்தில் மாறுதலிலுள்ள தீமையை விட்டு என்னையும் உங்களையும் காப்பாற்றுவானாக !

எல்லாப் புகழும் சாந்தமுள்ளவனான றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே தகும்.

أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○
حٰمٓ تَنْزِيلُ الْكِتَابِ مِنَ اللهِ الْعَزِيزِ الْعَلِيمِ ○ غَافِرِ
الذَّنْبِ وَقَابِلِ التَّوْبِ شَدِيدِ الْعِقَابِ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹ்வினிடத்தில் காவல் தேடுகிறேன்.

ஹாமீம். வேதனை செய்வதில் கடுமையானவனான, தௌபாவை அங்கீகரிப்பவனான, இன்னும் பிழையைப் பொறுப்பவனான, மிக அறிந்தவனான, மிகைத்தவனான அல்லாஹ்வில் நின்று மிருக்கிறது இவ் வேதத்தை இறக்கி வைத்தல்.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ
بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

# الخطبة الأولى للجمعة الخامسة من شهر ربيع الأول

بسم الله الرحمن الرحيم ○

الحمد لله الذي أجرى بحكمته مقادير الأمور ○ و
دبر السموات والأرضين على مر الدهور ○ أحمده
حمدا كثيرا وأشكره شكرا خطيرا في العشايا و
البكور ○ أشهد أنه لا إله إلا هو وحده لا شريك
له وهو عدل في قضائه لا يجور ○ وأشهد أن سيدنا
محمدا عبده ورسوله شفيع العصاة يوم النشور ○
صلى الله عليه وعلى آله وصحبه ما أضاء
النهار وأظلم الديجور ○

صلى الله وسلم على سيدنا محمد وآله وصحبه أجمعين ○

يا أيها الناس اتقوا الله العظيم عز وجل وأطيعوه
أوصيكم عباد الله وإياي بتقوى الله ○

## ரபீஉல் அவ்வல் மாதம்

# ஐந்தாவது ஜும்ஆ

بسم الله الرحمن الرحيم

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடை யோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்.)

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே தகும். தனது விவேகத்தினால் சகல காரியங்களின் அமைப்புகளை நடத்தி வைத்தான்; காலம் கடப்பதன் பேரில் பூமிகளையும் வானங்களையும் நிர்வகித்தான்.

அந்தியிலும் சந்தியிலும் அதிகமான நன்றி யறிதலைச் செலுத்தி அவனை அதிகம் அதிகமாகவே புகழ்கின்றேன்.

வணக்கத்துக் குரியவன் அவனைத் தவிர்த்து (வேறு யாரும்) இல்லை என்று சாக்ஷியங் கூறுகிறேன். அவன் தனித்தவன் அவனுக்கு இணை இல்லை, அவன் தனது அநுக்கிரகங்களில் நீதிவான். அநீதி செய்யமாட்டான். இன்னும், எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவும் இருக்கிறார்கள் என்று சாக்ஷியங் கூறுகிறேன். உயிர்ப்பித்தெழுப்பும் நாளில் பாவிகளுக்குப் பரிந்து பேசுபவர்கள். அவர்களுக்கும் அவர்களது கிளையார் தோழர்கள் ஆகியவர்களுக்கும் பகல் வெளிச்சமாகவும், இரவு இருண்டுமிருக்குங் காலமெல்லாம் அல்லாஹுத் தஆலா ஸலாத் என்னும் கருணையை அருள்வானாக!

أَمَّا بَعْدُ சகோதரர்களே! தோழர்களே!! அல்லா

ஹுத் தஆலாவின் சிருஷ்டியில் சிந்தை செலுத்தி, அவனது திருஷ்டாந்தங்களை நோட்டமிட்டுப் பாருங்கள்! வானங்களையும் பூமியையும் சிருஷ்டித் திருப்பதிலும், இரவும் பகலும் மாறி மாறி வந்து கொண்டிருப்பதிலும் நுண்ணறிவும் உணர்வு முள்ளவர்களுக்கு நிச்சயமாகப் பல திருஷ்டாந்தங்களிருக்கின்றன. காலம் கழிவதன் வேகத்தையும், காலங்களின் அழிவையும் கவனித்துப் பாருங்கள்! உங்களது பாவங்கள் அதிகப்படாமலும், உங்களது வயதில் குறை வேற்படாமலும் ஒரு க்ஷணம் கூடக் கழிவதில்லையே!

இவ்வுலகம் உங்களுக்காகத்தான் படைக்கப்பட்டது, ஆனால் நீங்களோ மறுமைக்காக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறீர்கள். அவனது முகத்தைத் தவிர்த்து மற்றைய யாவும் அழிந்துபோய் விடக் கூடியனவே! அவனுக்குத்தான் அரசுரிமை இருக்கிறது. அவனிடமே தான் எல்லாக் காரியங்களும் மீட்டப்படுகின்றன.

உங்கள் தந்தையர்கள் எங்கே! உங்கள் முன்னோர்களெங்கே? உங்கள் தனயர்கள் எங்கே? உங்கள் பின்னையோர்கள் எங்கே? உங்கள் உற்றார் எங்கே? உறவினர் எங்கே? உங்கள் சகாக்க ளெங்கே! சமஸ்தர்கள் எங்கே! கணக்கர்க ளெங்கே? கட்டிடக்காரர்க ளெங்கே? பணக்காரர்க ளெங்கே? மாளிகைக்காரர்க ளெங்கே?

இன்பங்களை இடிப்பவரும் கூட்டங்களைக் குலைப்பவருமான மலக்குல் மவ்த் என்பவர் இவர்களை இவ்வுலகத்தைய விசாலத்தி லிருந்து கப்றின் நெருக்கத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

காலஞ்செல்வதும் மாதங்கடருவதும் இவர்களை அழித்து விட்டன. இவர்களது பெயர் நாமத்தைத் தவிர இவர்களிலிருந்து வேறொருன்றும் இருக்கவில்லை. இவர்களைக் குறித்த கதைகள் நாவு களில் மட்டும் நடக்கின்றன.

ஏ மிஸ்கீனே! தனது செய்கையால் பீடிக்கப்பட்டிருப்பவனே!! உன்மீது வந்து கொண்டிருக்கிற திடுக்கங்களையும் காலக்கஷ்டங்களையும் குறித்து நீ பயப்படாதிருக்கிறாயே! உனக்கென்ன வந்தது? தெய்வ வழிப்பாட்டில் சோம்பலையும், தீமைகளைச் செய்வதையும் குறித்த கைசேதமே! ஜீவியத்துக்குப் பிறகு மரணம் இருக்கிறதென்பதை நீ ஒப்புக்கொள்ளவில்லையா? நீ பரதேசியைப் போலவோ அல்லது வழிப்போக்கனைப் போலவோ தானிருக்கின்றனையே!

கப்ரில் உனக்கு நடைபெறக்கூடியவைகள் உனது செவியைத் தட்டவில்லையா? உற்றார் உன்னை அடக்கி, உறவினவர் உன்னைக் கப்ரிலாக்கி, ஒற்றையாகவும், மருண்டவனாகவும் இருக்கும்போது திரும்பிச் செல்ல நீ நாடுவாய். ஆனால், அதனை நீ அடையமாட்டாய்! நீயோ நிர்ப்பந்திக்கப்பட்டவனாக இருப்பாய்.

கப்று நெருக்குவதை நீ ஞாபகித்துக்கொள்! அது மிகக் கடுமையான ஆபத்து. பெருங் கஷ்டம். உனது விலா எலும்புகள் இங்கு மங்கும் மாறிப்போகும். உன் அவயவங்கள் ஒடிந்துவிடும். நீயோ அடக்கப்பட்டவனாகவும் ஒடிக்கப்பட்டவனாகவுமிருப்பாய்.

கப்று தான் மறுமையிலுள்ள தங்குமிடங்களில் முதலாவதான தங்குமிடம். இதில் எவர் ஈடேற்றம் பெற்று விடுகிறாரோ அதற்குப் பின்னுவிருப்பது இதனைப்பார்க்கினும் அவருக்குச் சுலபமாகவே இருக்கும். இதில் எவர் அழிந்து விடுகிறாரோ அவருக்கு அப்புறமுள்ளது இதினும் மிகக் கடுமையாகவே இருக்கும். அதாவது சுவர்க்கத்துச் சோலைகளில் ஒரு சோலையாக இருக்கும். அல்லது கஷ்டங்களும் தீமைகளுமுள்ள நரகக் குழிகளில் ஒரு குழியாக இருக்கும்.

அதற்குப் பிறகு ஒருநாள் வரும். அதன் கஷ்டமோ மகத்தானதாகவும் அதன் திடுக்கமோ பலமானதாகவுமிருக்கும். அதுதான் உயிர்ப்பித் தெழுப்பி ஒன்று சேர்க்கும் நாள்! கேள்வி கணக்குக்

கேட்டு விசாரணை புரியும் நாள்! ஒவ்வொருவரும் தங்கள் பாத்தியதை யைக் கோரிக் கணக்கிடும் நாள்! கப்ரிலுள்ளவர்கள் எழுப்பப்படும் நாள்.

சிருஷ்டிகள் யாவரும் அணியணியாக நின்று சேர்க்கப்பட்டு, பூமி தூள்தூளாகத் தூளாக்கப்பட்டு, உனது றப்பும் சாரி சாரியாக மலக்குகளும் வந்து, வாலை நீட்டக்கூடியதும் தீமையுள்ளதுமான நரகம் கொண்டுவரப்படும்போது, அச்சமயத்தில் ஒவ்வொரு வர்க்கத் தாரையும் நிற்கக் காண்பாய்! பயங்கரத்தின் மிகுதியால் போதை யுள்ளவர்களாக அவர்களை நீ பார்ப்பாய்! ஆனால், உண்மையில் அவர்கள் போதையுள்ளவர்களல்லர். அல்லாஹுத் தஆலாவினது வேதனைதான் அவர்களைப் பிரமிப்பில் வீழ்த்தி வைத்திருக்கிறது.

கியாமத்து நாளில் பொது ஷபாஅத்துச் செய்ய எவருக்கு அல்லாஹுத் தஆலா அனுக்கிரக மளித்திருக்கிறானோ அவரைத் தவிர்த்து மற்றெல்லா ஜீவன்களும் "நப்ஸீ!" "நப்ஸீ!!" என்றே அந்நாளில் கூக்குரலிடுவார்கள்.

ஏ மறதியாளனே! வாதஞ் செய்வதை விட்டு விடு! உன்மன இச்சையைப் பின்பற்றாதே!! பாவங்களையும் பழிகளையும் தவிர்த்துக் கொள்!!!

எவர் தனது றப்பை பயந்து, நற்கிரியைகளில் தன் நப்ஸை எதிர்த்துப் போராடினாரோ அவர் ஹூறுல் ஈன்களும் மாளிகைகளு முள்ள சுவர்க்கத்தை அடைவார். எக்காலமும் அழியாததும், நிரந்தர மும் சந்தோஷமுமுள்ளதுமான பாக்கியத்தை அவர் அடைவார்.

நாயனே! அல்லாஹ்வே! இம்மையில் யாவருக்கும் சமமாகக் கிருபைசெய்வோனே! நன்றி செலுத்துவதை ஏற்றுக்கொள்வோனே! எங்களை மன்னிப்பாயாக! எங்கள் குற்றங்களை அலட்சியம் செய் வாயாக! எங்களை க்ஷமிப்பாயாக! எழுப்பப்படும் நாளிலுள்ள மிகப் பெரிய திடுக்கத்தை விட்டு எங்களைக் காப்பாயாக!

சாந்தமுள்ள, உயர்வுள்ள அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும்.

أَعُوذُ بِاللَّهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ۝
تَبَارَكَ الَّذِي بِيَدِهِ الْمُلْكُ وَهُوَ عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيرٌ ۝١
الَّذِي خَلَقَ الْمَوْتَ وَالْحَيَاةَ لِيَبْلُوَكُمْ أَيُّكُمْ أَحْسَنُ
عَمَلًا ۚ وَهُوَ الْعَزِيزُ الْغَفُورُ ۝٢

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலாவினிடம் காவல் தேடுகிறேன்.

எவனது கையில் அரசுரிமை இருக்கிறதோ அவன் முபாரக்காகிவிட்டான். மேலும், அவன் ஒவ்வொரு வஸ்துவின் மீதும் பேராற்றலுள்ளவன். உங்களில் எவர் கிரியையில் அழகானவர் என்று உங்களைச் சோதிப்பதற்காக மரணத்தையும் ஜீவியத்தையும் படைத்தவன். இன்னும் அவன்தான் மிகைத்தவன்; மிக மன்னிப்பவன். (திரு குர்ஆன்)

بَارَكَ اللَّهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَىٰ جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ
بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ۝

மூன்று மாதங்களுக்குரிய முதல் குத்பாக்கள் முற்றுப் பெற்றன.

# الخطبة الثانية لجمع المحرم وصفر وشهر ربيع الاول

بسم الله الرحمن الرحيم ○

الحمد لله على كل حال ○ على ان ربانا باحسن الاحوال
وانعم علينا بنعم لا تعد ولا تحصى على الاتصال ○
وخلق لنا ما في الارض جميعا ودوّد لنا الكواكب كل
في فلك يسبحون كالسابح في الماء السيال ○ اشهد انه
لا اله الا هو وحده لا شريك له ولا ضد له ولا مثال ○
واشهد ان سيدنا محمدا عبده ورسوله سيد
النساء والرجال ○ صلى الله عليه وعلى اله وصحبه
ما دامت الايام والليال ○ اما بعد ايها الناس اجتهدوا
في الاعمال الصالحة ○ ونقوا قلوبكم وابدانكم
من الافعال المهلكة ○ فطوبى لمن تاب مما مضى
في السنين الماضية ○ واستعد لتحصيل القربى في
السنين الاتية ○ وعليكم بكثرة الصلوة والسلام

عَلٰى سَيِّدِ الْاَنَامِ ۝ فَاِنَّ مَنْ صَلّٰى عَلَيْهِ عَشْرًا صَلَّى اللّٰهُ
عَلَيْهِ عَشْرًا وَّحَطَّ عَنْهُ مِنَ الْخَطِيْئَاتِ عَشْرًا وَّرَفَعَ لَهُ مِنَ الدَّرَجَاتِ
عَشْرًا وَّكَتَبَ لَهُ مِنَ الْحَسَنَاتِ عَشْرًا وَّاَحَلَّهُ دَارَ السَّلَامِ ۝

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا وَمَوْلَانَا مُحَمَّدٍ صَاحِبِ الْخُلُقِ الْعَظِيْمِ
وَالْاِحْسَانِ الْعَمِيْمِ، وَعَلٰى جَمِيْعِ الْاَنْبِيَاءِ وَالْمُرْسَلِيْنَ وَالْمَلٰئِكَةِ
الْمُقَرَّبِيْنَ، وَصَلِّ عَلٰى جَمِيْعِ عِبَادِكَ الصَّالِحِيْنَ لَاسِيَّمَا
عَلَى الْمُتَوَّجِ بِتَاجِ الْعِزِّ وَالْكَرَامَةِ، اَلْفَائِزِ بِاَوَّلِيَّةِ الْخِلَافَةِ
وَالْاِمَامَةِ، رَفِيْقِ خَاتَمِ الْاَنْبِيَاءِ فِي الْغَارِ ۝ اَلْمُشَرَّفِ
بِخِدْمَتِهٖ وَصُحْبَتِهٖ اٰنَاءَ اللَّيْلِ وَاَطْرَافَ النَّهَارِ ۝ قُدْوَةِ
اَرْبَابِ التَّحْقِيْقِ ۝ سَيِّدِنَا عَبْدِ اللّٰهِ بْنِ اَبِيْ قُحَافَةَ اَبِيْ
بَكْرِنِ الصِّدِّيْقِ ۝ رَضِيَ اللّٰهُ عَنْهُ، وَعَلٰى صَاحِبِ الْعِزِّ وَ
الْاِحْتِسَابِ ۝ مُزَيِّنِ الْمِنْبَرِ وَالْمِحْرَابِ ۝ سَيِّدِنَا عُمَرَ بْنِ
الْخَطَّابِ ۝ رَضِيَ اللّٰهُ عَنْهُ، وَعَلٰى كَامِلِ الْحَيَاءِ وَالْعِرْفَانِ
جَامِعِ الْاٰيَاتِ الْقُرْاٰنِ ۝ سَيِّدِنَا عُثْمَانَ بْنِ عَفَّانَ ۝

رَضِيَ اللهُ عَنْهُ، وَعَلَى أَسَدِ اللهِ الْغَالِبِ ۝ ذِي الْمَعَالِي
وَالْمَنَاقِبِ ۝ سَيِّدِنَا عَلِيِّ بْنِ أَبِي طَالِبٍ ۝ رَضِيَ اللهُ عَنْهُ
وَعَلَى السِّبْطَيْنِ النَّيِّرَيْنِ ۝ اَلْكَوْكَبَيْنِ الْأَزْهَرَيْنِ ۝
سَيِّدِنَا الْحَسَنِ وَسَيِّدِنَا الْحُسَيْنِ ۝ رَضِيَ اللهُ عَنْهُمَا
وَعَلَى الْعَمَّيْنِ الْمُكَرَّمَيْنِ بَيْنَ النَّاسِ ۝ سَيِّدِنَا حَمْزَةَ
وَسَيِّدِنَا الْعَبَّاسِ ۝ رَضِيَ اللهُ عَنْهُمَا، وَعَلَى بِضْعَةِ
رَسُولِ اللهِ سَيِّدَتِنَا فَاطِمَةَ الزَّهْرَاءِ رَضِيَ اللهُ عَنْهَا وَعَلَى
سَائِرِ بَنَاتِهِ الطَّاهِرَاتِ، وَأَزْوَاجِهِ الْمُطَهَّرَاتِ، وَسَائِرِ الصَّحَابَةِ
وَالتَّابِعِينَ إِلَى يَوْمِ الدِّينِ ۝ اَللّٰهُمَّ انْصُرْ مَنْ نَصَرَ دِينَ
سَيِّدِنَا مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَاخْذُلْ مَنْ خَذَلَ
دِينَ سَيِّدِنَا مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَاجْعَلْنَا
مِمَّنْ لَزِمَ مِلَّتَهُ، وَاتَّبَعَ سُنَّتَهُ، وَأَطَاعَ شَرِيعَتَهُ وَارْزُقْنَا
شَفَاعَتَهُ ۝ اَللّٰهُمَّ اغْفِرْ لَنَا وَلِوَالِدِينَا وَلِمَشَائِخِنَا وَ
لِأَحْبَابِنَا وَلِأَصْحَابِنَا وَلِمَنْ لَهُ حَقٌّ عَلَيْنَا وَلِجَمِيعِ

الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ يَا
بَدِيْعَ الْأَرْضِ وَالسَّمٰوَاتِ وَرَفِيْعَ الدَّرَجَاتِ، اَللّٰهُمَّ
سَامِحْ عَنْ خَطَايَا جَامِعِ هٰذِهِ الْخُطَبِ الْمُذَكِّرَةِ وَارْزُقْهُ
خَيْرَ الدُّنْيَا وَالْآخِرَةِ، وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ○

أَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ○
إِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ وَإِيْتَاءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى
عَنِ الْفَحْشَاءِ وَالْمُنْكَرِ، اُذْكُرُوا اللّٰهَ الْعَظِيْمَ يَذْكُرْكُمْ
وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ تَعَالٰى أَعْلٰى وَأَوْلٰى
وَأَعَزُّ وَأَجَلُّ وَأَتَمُّ وَأَهَمُّ وَأَقْوٰى وَأَكْبَرُ ○

# முஹர்ரம், ஸபர், றபீஉல் அவ்வல் ஆக மூன்று மாதங்களுக்கும் பொதுவான

# இரண்டாம் குத்பா

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

நம்மை மிக அழகான நிலைமைகளில் போஷித்து, எண்ணவும் வரையறுக்கவும் முடியாத அளவில் தொடர்ச்சியாக நமக்கு அருட்கொடைகளை அளித்து, பூமியிலுள்ள யாவற்றையும் நமக்காகவே சிருஷ்டித்து, கிரகங்களை நமக்காகச் சுற்ற வைத்திருக்கிறதற்காக எல்லா நிலைமையிலும் அல்லாஹுத் தஆலாவுக்கே சர்வ புகழும் தகும். ஓடுகிற ஜலத்தில் நீந்துபவனைப்போல் வானத்தில் யாவும் நீந்துகின்றன.

வணக்கத்துக் குரியவன் அவனைத் தவிர்த்து (வேறு யாரும்) இல்லை என்று நான் சாக்ஷி கூறுகிறேன்; அவன் தனித்தவன், அவனுக்கு இணையில்லை, அவனுக்கு மூரணனவனுமில்லை, அவனுக்கு ஒப்பானவனுமில்லை.

எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவுமிருக்கிறார்கள் என்று சாக்ஷியங் கூறுகிறேன். ஸ்திரீ புருஷர் இருபாலருக்கும் நாயகமானவர்கள்; பகலும் இரவும் இருக்குங் காலமெல்லாம் அவர்களுக்கும், அவர்களுடைய கிளையாருக்கும் தோழர்களுக்கும் அல்லாஹுத் தஆலா ஸலாத் என்னும் கருணையை அருள்வானாக!

أَمَّا بَعْدُ ஜனங்களே! சன்மார்க்கத்துக்கு இணக்கமான கிரியைகளில் நீங்கள் முயல்வீர்களாக! அழிவைத்தரும் செய்கைகளை விட்டு உங்கள் இருதயங்களையும் உடல்களையும் சுத்தப்படுத்துவீர்களாக! சென்று போன வருஷங்களில் நிகழ்ந்தனவற்றுக்காக தௌபாச் செய்து, இனி வருகிற வருஷங்களில் முடுகுதலை அடைவதற்காகத் தயாராகிவிட்டவர்களுக்கே சோபனம்! சோபனம்!!

மனிதர்களுக்கு நாயகராக இருப்பவர் மீது ஸலாத்தும் ஸலாமும் சொல்வதைக் கடைப்பிடித்துக்கொள்ளுங்கள்!! ஏனெனில், அவர்கள் மீது ஒருமுறை எவர் ஸலவாத்துச் சொல்லுகிறாரோ அவர் மீது அல்லாஹுத் தஆலா பத்துமுறை கிருபைசெய்து, அவரை விட்டு பத்துப் பாவங்களை அழித்து, பத்துப் பதவிகளில் அவரை உயர்த்துகிறான்; இன்னும் பத்து நன்மைகளை அவருக்கு எழுதி, தாருஸ்ஸலாம் என்னும் சுவர்க்கப் பூங்காவிற்குள் அவரைப் பிரவேசிக்கச் செய்கிறான்,

மகத்தான நற்குணங்களும் பரந்த உபகாரமுள்ள எங்கள் நாயகர் எங்கள் எஜமானர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் ஏனைய நபிமார்கள், முர்ஸல்கள், முகர்ரபான மலக்குகள் யாவர் மீதும் நாயனே! ஸலாத் என்னும் கருணையை அருள்வாயாக!

சன்மார்க்கத்துக்கு இணக்கமான உனது அடியார்கள் யாவருக்கும், சிறப்பாக கண்ணியம் மதிப்பு என்ற கிரீடம் தாங்குபவரும், கிலாபத் பதவிக்கும், இமாமத்துப் பதவிக்கும் முதன்மை பெற்றவரும், 'தௌர்' மலைப் பொதும்பில் காத்தமுல் அன்பியாவுக்கு கூடவே தோழராக இருந்தவரும் இராக்காலங்களிலும், பகற்பொழுதுகளிலும் அவர்களுக்குத் தோழமை பூண்டு ஊழியம் செய்யும் சிறப்பைப் பெற்றவரும், உண்மைப் படுத்துவோருக்குத் தலைவராக இருப்பவருமான எங்கள் தலைவரும் அபூகுஹாபாவின் மகனார் அப்துல்லா என்ற இயற் பெயருள்ளவருமான அபூபக்கர் ஸித்தீக் (றலியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கும்,

கண்ணியமும் பெருமையும் தங்கியவரும், மின்பரையும் மிஹ்ராபையும் அலங்கரித்தவரும், கத்தாபு என்பவரின் மகனருமான எங்கள் தலைவர் உமறு (றலியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கும்,

வெட்கம், ஞானம் ஆகியவைகள் நிரம்பியவரும் திரு குர்ஆன் ஆயத்துகளை ஒன்று சேர்த்தவரும், அப்பான் என்பவரது மகனருமான எங்கள் தலைவர் உதுமான் (றலியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கும்,

அல்லாஹ்வின் மிகைப்புள்ள அரியேறும், உயர்வும் பெருமைகளும் உள்ளவரும், அபூதாலிப் என்பவரின் மகனருமான எங்கள் தலைவர் அலீ (றலியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கும்,

பிரகாசிக்கும் சூரியர்கள், இலங்கும் நக்ஷத்திரங்கள் போன்ற இருபேரர்களான எங்கள் தலைவர்கள் ஹஸன், ஹுஸைன் (றலியல் லாஹு அன்ஹுமா) ஆகியவர்களுக்கும், ஜனங்களில் மதிப்புக்குரிய சிறிய தந்தையர்களும் எங்கள் தலைவர்களுமான ஹம்ஜா, அப்பாஸ் (றலியல்லாஹு அன்ஹுமா) ஆகியவர்களுக்கும்,

அல்லாஹுத் தஆலாவின் றஸூல் (ஸல்) அவர்களது ஈரல் குலைத் துண்டான எங்கள் நாயகி பாத்திமத்துஸ் ஸஹ்ராஇ (றலியல் லாஹு அன்ஹா) அவர்களுக்கும்,

நாயகம் (ஸல்) அவர்களது பரிசுத்தவதிகளான ஏனைய புதல்வி களுக்கும், பரிசுத்தவான்களான நம் பிராட்டிமார்களுக்கும், ஏனைய ஸஹாபிகள், தாபியீன்களுக்கும் கியாமத்து நாள்வரை நாயனே! ஸலாத் என்னும் கருணையை அருள்வாயாக!

நாயனே! எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களது சன்மார்க்கத்துக்கு உதவுபவருக்கு உதவிசெய்வாயாக! எங்கள் நாயகம் (ஸல்) அவர்களது சன்மார்க்கத்துக்குத் தோல்வியளிக்க முயல் பவரைத் தோற்கடிப்பாயாக! அவர்களது மார்க்கத்தைப் பற்றிக் கொண்டு, அவர்களது ஸுன்னத்தைப் பின்பற்றி அவர்களது ஷரீஅத்துக்குக் கீழ்ப்படிந்தவர்களில் எங்களை ஆக்குவதுடன், அவர்களது ஷபாஅத்தை எங்களுக்குத் தந்தருள்வாயாக!

நாயனே! எங்களுக்கும், எங்கள் பெற்றோர்களுக்கும், எங்கள் குருமார்களுக்கும், எங்கள் அன்பர்களுக்கும், தோழர்களுக்கும்,

நாங்கள் கடமைப்பட்ட இதரர்களுக்கும், மூமின் முஸ்லிம்களில் ஸ்திரீ புருஷர் யாவருக்கும் பிழைபொறுப்பாயாக! பூமியையும் வானங்களையும் முன்மாதிரியில்லாமல் சிருஷ்டித்து அந்தஸ்துகளை உயர்த்துபவனே!

நாயனே! உபதேசமாகிய இந்த குத்பாக்களைத் திரட்டியவருக்கு மன்னிப்பளித்து, இம்மை மறுமையிரண்டிலுமுள்ள நல்லதை அவருக்களிப்பாயாக! அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப்புகழும் தகும்.

أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○
إِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَىٰ وَيَنْهَىٰ
عَنِ الْفَحْشَاءِ وَالْمُنْكَرِ، اُذْكُرُوا اللهَ الْعَظِيمَ يَذْكُرْكُمْ
وَادْعُوهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللهِ تَعَالَىٰ أَعْلَىٰ وَأَوْلَىٰ
وَأَعَزُّ وَأَجَلُّ وَأَتَمُّ وَأَهَمُّ وَأَقْوَىٰ وَأَكْبَرُ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலாவினிடத்தில் காவல் தேடுகிறேன்.

**நிச்சயமாக அல்லாஹ் நீதியையும் உபகாரத்தையும் (செய்யும்படியும்), பந்துக்களுக்குக் கொடுக்கும்படியும் உங்களை ஏவி, மானக்கேடானவைகளையும் வெறுக்கத் தக்கவைகளையும் விட்டு விலக்குகிறான்.**

மகத்தான அல்லாஹுத் தஆலாவை ஞாபகியுங்கள்! உங்களை அவன் ஞாபகிப்பான், அவனை பிரார்த்தியுங்கள்! உங்களுக்கு நிறைவேற்றுவான், அல்லாஹுத் தஆலாவை ஞாபகிப்பது மிக உயர்ந்தது, மிக மேலானது, மிக அருமையானது, மிக கம்பீரமானது, மிக பரிபூரணமானது, மிக முக்கியமானது, மிகப்பலமானது, மிகப்பெரியது.

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الْاُوْلٰى مِنْ شَهْرِ رَبِيْعِ الْاٰخِرِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ يُجَدِّدُ الْاَيَّامَ وَيَجِيْئُ بِالشَّهْرِ بَعْدَ الشَّهْرِ لِيَنْتَبِهَ كُلٌّ مِنْ نَوْمِ الْغَفْلَةِ وَيُهَيِّئَ اَسْبَابَ السَّفَرِ ۝ خَلَقَ مَا لَا يَقْدِرُ اَحَدٌ عَلٰى خَلْقِهٖ مِنَ الْحَجَرِ وَالشَّجَرِ ۝ وَصَنَعَ مَا لَا يَصْنَعُهٗ اَحَدٌ مِنَ الْمَدَرِ وَالثَّمَرِ ۝ خَلَقَنَا مِنْ نَفْسٍ وَّاحِدَةٍ وَّخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهَا الْاُنْثٰى وَالذَّكَرَ فَسُبْحَانَهٗ مِنْ اِلٰهٍ دَآئِمٍ صَاحِبِ الْقُوٰى وَالْقَدَرِ ۝ كَيْفَ اَحْمَدُهٗ وَكَيْفَ لَا اَحْمَدُهٗ جَعَلَنَا مِنْ اُمَّةِ سَيِّدِ الْاَنْبِيَآءِ الَّذِيْ نَطَقَ بِرِسَالَتِهِ الضَّبُّ وَخَاطَبَهُ الظَّبْيُ بِاَفْصَحِ كَلَامٍ وَّبَكٰى لِفِرَاقِهِ الْجِذْعُ وَسَلَّمَ عَلَيْهِ الْحَجَرُ ۝ نَشْهَدُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَلَا ضِدَّ لَهٗ وَلَا نِدَّ لَهٗ وَلَوْ كَانَ لَمَا دَارَ الْفَلَكُ وَلَا الطَّآئِرُ تَطِيْرُ ۝ وَنَشْهَدُ اَنَّ

سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ الَّذِي بُعِثَ رَحْمَةً لِّلْعَالَمِينَ خَوَّفَ الْمُنَافِقِينَ مِنَ النَّارِ وَبِالْجَنَّةِ لِأَهْلِ الْإِسْلَامِ بَشَّرَ ۝ صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ مَا دَارَ الْفَلَكُ الْمُدَوَّرُ

صَلَّى اللهُ وَسَلَّمَ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَآلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ ۝

يَا أَيُّهَا النَّاسُ ۝ اِتَّقُوا اللهَ الْعَظِيمَ عَزَّ وَجَلَّ وَأَطِيعُوهُ أُوصِيكُمْ عِبَادَ اللهِ وَإِيَّايَ بِتَقْوَى اللهِ ۝

## ரபீஉல் ஆகிர் மாதம்

## முதலாவது ஜுமுஆ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்).

எல்லாப் புகழும் அல்லாஹுவுக்கே தகும். அவன் நாட்களைப் புதுப்பிக்கிறான், இன்னும் அஜாக்கிரதை என்ற நித்திரையிலிருந்து எழுந்திருப்பதற்காகவும், மறு உலக யாத்திரைக்குரிய

சாமக் கிரியைகளைத் தயார் செய்துகொள்வதற்காகவும் ஒரு மாதத்துக்குப் பிறகு மற்றொரு மாதம் வரும்படியாகச் செய்திருக்கிறான். அவனது சிருஷ்டியில் ஒருவருக்கும் இயலாத விருக்ஷம், கல் ஆகியவைகளைச் சிருஷ்டித்திருக்கிறான். ஒருவரும் செய்ய முடியாததான பணர்களையும் கனிகளையும் செய்தான்.

ஒரேஒரு நப்ஸில் அதாவது ஜீவனிலிருந்து நம்மைச் சிருஷ்டித்து, அதிலிருந்து அதன்ஜோடியையும் சிருஷ்டித்து, அதிலிருந்து பெண்ணையும் ஆணையும் பரவச்செய்தான். அவன்தூயவன், நிரந்தரமானவன், சக்தியும் வல்லமையுமுள்ளவன். அவனை எவ்வாறு நான் புகழ்வேன்? அவனை நான் புகழாமலிருப்பது எவ்விதம்? ஏனெனில் நபிமார்களுக்கு நாயகராக இருப்பவரது உம்மத்தில்நம்மை ஏற்படுத்தியிருக்கிறான். இவர்கள் நபி யென்பதைக் குறித்து உடும்பு பேசியிருக்கிறது, இவர்களுடன் தெளிவான பாஷையில் மான் சம்பாஷணை செய்திருக்கிறது. இவர்களது பிரிவுக்காக மரக் கட்டை அழுதிருக்கிறது, இவர்களுக்கு கல் ஸலாம் சொல்லியிருக்கிறது.

அவனைத் தவிர்த்து வணக்கத்துக்குரியவன் (வேறு யாரும்) இல்லை என்று நாம் சாக்ஷியங் கூறுகிறோம். அவன் தனித்தவன், அவனுக்கு இணையில்லை. அவனுக்கு முரண்பட்டவனுமில்லை. அவனுக்கு நிகரானவனுமில்லை, அவ்வாறிருந்திருப்பின் வானம் சுற்றவுமாட்டாது; பறவை பறக்கவுமாட்டாது.

எங்கள் நாயகர் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவும் இருக்கிறார்கள் என்று நாம் சாக்ஷியங்கூறுகிறோம். இவர்கள் அகிலத்தாருக்கு கருணையாக அனுப்பப்பட்டார்கள். முனாபிக்குகள் என்னும் கள்ள விசுவாசிகளை நரகத்தை விட்டு பயந்து கொள்ளுமாறு எச்சரிக்கை செய்து, சுவர்க்கத்தைக்கொண்டு மூமின்களுக்கு நற்செய்தி நவின்றார்கள். வானம் சுற்றி வந்துகொண்டிருக்குங்காலமெல்லாம் இவர்களுக்கும், இவர்களது இளையார் தோழர்

களுக்கும் அல்லாஹுத் தஆலா ஸலாத் என்னும் கருணையை அருள்வானாக!

أَمَّا بَعْدُ சபையோர்களே! றபீஉல் அவ்வல் மாதம் சென்று, றபீஉல் ஆகிர் மாதம் வந்து விட்டது. இது பிரயாணத்துக்கும் பயணத்துக்குமுரிய அறிகுறிகளல்லாமல் வேறில்லை. நேரிய அறிவும், நேரான புத்தியும் உள்ளவர்களே! இதுவோ படிப்பினையைக் கொள்வதற்கும், நன்கு கவனித்துப் பாடங்கற்றுக் கொள்வதற்குமுரிய சமயங்கள்.

இந்த உலகம் அழிவும் பிரயாணமுமுள்ள வீடு. 'இவ்வுலகில் பரதேசியைப்போல் அல்லது வழிப்போக்கனைப்போல் இரு' என்ற சப்தம் உனது செவிப்புலனைத் தட்டவில்லையா? இந்த உலகம் கஷ்டமும், சங்கடங்களும் துன்பங்களும், துயரங்களுமுள்ள வீடு; ஏமாற்றமும் சதியும் கவலைகளுமுள்ள வீடு என்பதை நீ செவி யேற்கவில்லையா? இது ஒருவாசலில் நுழைந்த எவரும் பிரயாணத்தை உறுதி செய்து கொள்ளாமல் இல்லை,

உனது ஆரம்பத்தை நினைத்து, இனி உனக்கு நடக்கப் போவதைக் கவனித்துச் சிந்தித்துக்கொள்! அசங்கிதமான இந்திரியத் துளியாக நீ இருந்தனை, அப்புறம் உனது றப்பு உன்னை உதிரக்கட்டியாக்கினான், பின்னர் உன்னை தசைக்கட்டியாக்கி அவன் நாடியதுபோல உன்னை சிருஷ்டியில் சமைத்து அமைத்தான்.

முன்னர் நிகழ்ந்ததையும் இனி நிகழப் போவதையும் ஒரு புத்தகத்தில் எழுதினான். எனவே, அமைப்பில் இல்லாத எதுவும் நிகழாது, எழுதும்படியான இருமலக்குகளையும், நீ மாலையிலிருந்தாலும் காலையில் துயிலெழுந்தாலும் அல்லாஹுத் தஆலாவினது

கட்டளைப்படி உன்னை பாதுகாக்க உனக்கு முன்னாலும் உனக்குப் பின்னாலும் எந்த நேரமுமிருக்கிறவர்களையும் உனக்கு ஏற்படுத்தி யுள்ளான்.

நேரான பாதையையும் வழி கேடானதையும் உனக்கு விபரித்து, ஈடேற்றத்துக்குரிய பாதையில் உன்னை சேர்ப்பித்து, நரகத்தின் வழியை விட்டு உன்னை விடுவித்தான்.

மிஸ்கீனே! மறுஉலகப் பேறுகளை அடையும் விஷயத்தில் ஏழையா யிருப்பவனே!! சம்பாதித்தவைகளுக்கு நீ பிணை நிற்கின்றனை, நீ எது செய்தாலும் விரிக்கப்பட்டுள்ள கடுதாசியல் எழுதப் படுகிறது, சிறியதோ பெரியதோ எல்லாம் அதில் பதியப்படுகின்றன. எஜமானனுக்கு மாறுசெய்து, எடுப்பாக வுள்ளதை விடுப்பாயோ? மனிதன் வீணாக விடப்படுவான் என எண்ணிக் கொள்கிறானே? ஒரு போதும் இல்லை, அல்லாஹ்வின் மீது பிரமாணமாகக் கூறுகிறேன், இதுகாலம் இருந்தது முதற்கொண்டு இருந்து வருகிறது, ஆனால் கியாமத்து நாள்வரை இருக்க மாட்டாது.

கியாமத்து நாளின் விசேஷங்களில் புத்தியைச் செலுத்த மாட்டாயா? நிச்சயமாகவருகிற ஆபத்து என்ன என்பது உனக்குத் தெரியுமா? அது மிகக் கஷ்டமானதாகவும் மிகக் கசப்பானதாகவு மிருக்கும்.

யோசித்துப்பார்! சிருஷ்டிகள் வரிசை வரிசையாகச் சேகரிக்கப் பட்டு, பூமி நல்லவிதமாக இடித்துப் பொடிக்கப்பட்டு, எக்காளம் ஊதப்பட்டு, மகா தத்துவமுள்ள அரசன் முன் கப்றுகளிலுள்ளவர்கள் நிறுத்தப்பட்டு, நீ பலவிதமான கைசேதங்களில் விழுவாயாயின், அவைகளை சகித்துக் கொள்ள உன்னால் முடியுமா? உனதுறப்பு உன்னை விசாரணை செய்தால்,— மேலும், விசாரணை புரியப்பட்டவர் வேதனையே செய்யப்படுவார்—புத்திசாலிகளது முன்னிலையில் நீ தோல்வி யடைந்து விடுவாய்!

மஹ்ஷர் என்னும் மைதானம் பொது ஜனங்கள், விசேஷமானவர்கள் ஆகிய யாவராலும் கூடப்பட்டிருக்கும். அப்பொழுது "நான் மண்ணாக இருந்திருந்தேனா? நான் தூசாக இருந்தேனா?" என்று நீ கூறுவாய். இதனை பொறுத்துக் கொள்ளமுடியுமா? அல்லாஹுத் தஆலா நரக நெருப்பைப் படைத்திருக்கின்றான், அதற்குப் பாவிகளைக் குறித்துக் கூச்சலிடுவதும் இரைச்சலிடுவதுமிருக்கிறது.

ஒன்றோடொன்று நெருங்கியுள்ள பல படித்தரங்கள் அதற்கிருக்கின்றன. ஒன்றுக்கொன்று நேர்பாடாகவுள்ள இருள்களும் அதிலிருக்கின்றன. மாளிகைபோன்ற நெருப்புப் பொறியை அது கக்கும். அவை மஞ்சள் நிறமுள்ள ஒட்டகைகளைப் போலிருக்கும். நரகில் அவர்கள் முகங்குப்புற வீழ்த்தப்பட்டவர்களாக இழுக்கப்படுவார்கள். "நரகத்தின் இன்பத்தை நுகருங்கள்" என்று அவர்களுக்குச் சொல்லப்படும்.

எனவே, பாபம் செய்யும் விஷயத்தில் என்ன இந்தத் துணிச்சல்? என்ன இந்த அசட்டை? பாபியே! இந்த நிலைமைகள் உனக்கு வரும். இந்தத் திடுக்கங்கள் உனக்கு நிகழும். உனக்கென்ன விடுதலைச் சீட்டுகளிருக்கின்றனவா? அல்லது சுவர்க்கத்தில் புகுதுவாய் என்பதற்கு உறுதியான அறிவு உனக்கிருக்கிறதா? அதற்குக் கீழே அருவிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. பாவங்களை வெறுத்துத் தள்ளி, விலக்கல்களை விடுத்து, பாவமா புண்ணியமா என்ற சந்தேகத்துக்கு இடமானவைகளையும் தவிர்த்து விலகிக் கொண்டவர்களுக்குத்தான் அது ஏற்பட்டது.

அல்லாஹுத் தஆலா உங்களையும் என்னையும் அவனது நபியவர்களது ஸுன்னத்தைக் கடைப்பிடித்து, அவர்களது மார்க்கத்தில் மரித்து, நன்மையை ஏவி தீயதை விலக்கியவர்களின் கூட்டத்திலாக்குவானாக! உங்களையும் என்னையும் நரகவேதனையை விட்டுக் காப்பானாக! எல்லாப் புகழும் அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே தகும்.

اَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ○
وَلَقَدْ يَسَّرْنَا الْقُرْاٰنَ لِلذِّكْرِ فَهَلْ مِنْ مُّدَّكِرٍ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லஹுத் தஆலா வினிடத்தில் காவல் தேடுகிறேன்.

மேலும், ஞாபகப் படுத்திக் கொள்வதற்காக (திரு) குர்ஆனை நாம் இலேசாக்கி இருக்கிறோம்; ஞாபகப் படுத்திக் கொள்வோருண்டா?

(திரு குர்ஆன்)

بَارَكَ اللّٰهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْاٰنِ الْعَظِيْمِ وَنَفَعَنَا وَاِيَّاكُمْ بِالْاٰيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ اِنَّهٗ تَعَالٰى جَوَادٌ كَرِيْمٌ مَلِكٌ قَدِيْمٌ بَرٌّ رَءُوْفٌ رَّحِيْمٌ وَرَبٌّ حَلِيْمٌ ○

## اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الثَّانِيَةِ مِنْ شَهْرِ رَبِيعِ الْاٰخِرِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ خَلَقَ الْخَلْقَ مِنْ نَّفْسٍ وَّاحِدَةٍ وَّبَثَّ مِنْهَا النِّسَآءَ وَالرِّجَالَ ○ لَامَلْجَأَ وَلَا مَنْجَا مِنْهُ اِلَّا اِلَيْهِ وَبِهِ الْوَالُ ○ نَحْمَدُهُ عَلٰى اَنْ كَمَّلَنَا خَلْقًا وَّفَضَّلَنَا عَلٰى سَآئِرِ الْمَخْلُوْقَاتِ وَهُوَ الْمُنْعِمُ الْمِفْضَالُ ○ وَنَشْكُرُهُ عَلٰى اَنْ فَضَّلَ اَرْبَابَ الطَّاعَةِ عَلٰى اَرْبَابِ الْبَطَالَاتِ وَهُوَ ذُوالْكَرَمِ وَالْجَلَالِ ○ وَنَشْهَدُ اَنَّهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَهُوَ الْكَبِيْرُ الْمُتَعَالُ ○ وَنَشْهَدُ اَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ الَّذِيْ بَيَّنَ لَنَا الْحَرَامَ وَاَوْضَعَ لَنَا الْحَلَالَ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ؛

يَآاَيُّهَا النَّاسُ ○ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ اُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ○

## ரபீஉல் ஆகிர் மாதம்

# இரண்டாவது ஜுமுஆ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடை யோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே தகும். ஒரு ஜீவனிலிருந்து சிருஷ்டிகளைச் சிருஷ்டித்து, அதிலிருந்து ஆண்களையும் பெண்களையும் பரவச்செய்தான், அவனிடத்திலேயும் அவனைக்கொண்டுமேயல்லாமல் ஒதுங்குமிடமோ ஈடேற்றமோ இல்லை. சிருஷ்டியில் நம்மை நிறப்ப மாக்கி, ஏனைய சிருஷ்டிகளைப் பார்க்கினும் நம்மை மேன்மையாக்கி வைத்ததற்காக அவனை நாம் புகழுகிறோம். அவன்தான் வெகுமதி யளிப்பவன்; மேன்மையளிப்பவன்.

தவறுனவைகளைச் செய்பவர்களைப் பார்க்கினும் வழிப்பாடு களைச் செய்பவர்களை மேன்மையாக்கி வைத்ததற்காக அவனுக்கு நாம் நன்றி செலுத்துகிறோம். அவன்தான் தயையும் மேன்மையு முள்ளவன்,

அவனைத்தவிர்த்து வணக்கத்துக் குரியவன் (வேறுயாரும்) இல்லை என்று நாம் சாக்ஷியங்கூறுகிறோம். அவன் தனித்தவன், அவனுக்கு இணையில்லை. அவன்தான் பெரியவன், உயர்ந்தவன். எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவுமிருக்கிறார்களென்று நான் சாக்ஷியங்கூறுகிறேன். நமக்கு

ஹறாம் என்னும் விலக்கப்பட்ட காரியங்கள் யாவை என விபரித்துக் கூறியதுடன் நமக்கு ஹலால் என்னும் அனுமதிக்கப்பட்ட காரியங்கள் யாவை என்பதையும் தெளிவாக்கினார்கள்.

أَمَّا بَعْدُ அறிந்துகொள்ளுங்கள்! இவ்வுலகம் நித்தியமல்ல; அநித்தியமானதே. வழி கெட்டவர்களைத் தவிர வேறு யாரும் இதனால் ஏமாற்ற மடைய மாட்டார்கள். உங்கள் தந்தையர்களெங்கே? உங்கள் மூதாதையர்களெங்கே? உங்கள் சம அந்தஸ்துக் காரர்களெங்கே? உங்கள் வயதுக்காரர்களெங்கே? ஏகச் சக்கரவர்த்திகளாக இருந்தவர்களெங்கே? தனவந்தர்களெங்கே? அவர்களது அரசுரிமை அவர்களுக்குப் பிரயோஜனம் கொடுத்ததா? அல்லது அவர்களது அரசாங்கம் அவர்களை நிலைக்கச் செய்ததா? அவர்களது அந்தஸ்து அவர்களை ஜீவிக்கச் செய்ததா? பெருமையும் பொருளும் அவர்களுக்கு உதவினவா? இல்லை; ஒருபோதுமில்லை,

அல்லாஹுத் தஆலாவின் மீது பிரமாணமாகக் கூறுகிறேன், அவர்களது அந்தியம் அவர்களுக்கு வந்து விட்டால், ஒரு க்ஷணங்கூட அவர்கள் பிற்படுத்தப் படமாட்டார்கள், ஸால் ஜாப்பு சொல்லிக் கொள்ளத் தாமதப் படுத்தப் படவுமாட்டார்கள்.

ஸ்திரீகளின் மீது காம இச்சைகள், புதல்வர்கள், வெள்ளி தங்கங்களின் குவியல்கள், அடையாள மிடப்பட்ட அசுவம், கால் நடைகள், வெள்ளாண்மை ஆகியவைகள்பால் பிரியங்கொள்வது மனிதருக்கு அழகாக்கப்பட்டிருக்கிறது; இவை இவ்வற்ப ஜீவியத்துக்குரிய சாமான்கள்; ஆனால், அல்லாஹ் வினிடத்தில் நல்ல மீளும் ஸ்தலமிருக்கிறது.

தோழர்களே! உங்களுக்கு நிகழுகின்ற பயங்கரங்களுக்கு நீங்கள் ஆயத்தமாகிக் கொள்ளுங்கள்! சகல பாவங்களையும் விட்டு தௌபாச் செய்யுங்கள்! பிழைகளைப் பொறுப்பவனான அல்லாஹுத் தஆலாவினிடம் பிழை பொறுக்கத் தேடுங்கள்! அவனது கருணை

விசாலமாக இருக்கிறது எனக் கருதி ஏமாற்ற மடைந்து விடாதீர்கள். அவன் பிடியில் கடுமையானவன்; வதை செய்வதிலுல் மிகக்கடுமை யானவன்.

புறங்கூறல், கோள் சொல்லல், பொறாமை, துவேஷம், கோபித்துக் கொள்ளல், பிணக்கு, பின்னின்று குற்றங்குறை கூறல் முதலிய அழித்து நாசப்படுத்தக் கூடியகாரியங்களை விட்டு உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்! ஏனெனில் இவைகளைச் சம்பாதித்துக் கொள்ளுவோர் வழிகேடென்ற பள்ளத்தில் விழுந்து விடுவார்.

அதிகமாக ஸுவால் செய்தல், வீணானவைகள், சண்டை, பிறர் காணச்செய்தல், முதலைவீணாக்கல் ஆகியவைகளைவிட்டு உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்! ஒவ்வொரு அணுவைக் குறித்தும் நீங்கள் விசாரிக்கப் படுவீர்கள். ஒவ்வொரு தன்மையைக் குறித்தும் "நீங்கள் கண்டிக்கப்படுவீர்கள் என்பதை அறிவீர்களா? கடுமையான கேள்விகள் உங்களுக்கு நடக்கும். அல்லாஹ்வின் அடியார்களே!! அல்லாஹுத் தஆலாவை அஞ்சுங்கள்! அஞ்சுங்கள்! அசட்டையி லிருந்து துயிலெழுங்கள்!! அறிவிலிகளது தோழமையை விட்டு நீங்குங்கள்!!!

கட்டுத் திட்டமில்லாமல் நீங்கள் விடப்படுவீர்கள். நாளையத் தினம் நீங்கள் வினவப்பட மாட்டீர்கள் என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். இவ்வாறு விடப்படுவது நடவாத காரியம்.

ஸுன்னத்தை நிறைவேற்றுவதைக்கடைப்பிடித்து பித்அத்து களைச் செய்வதில் உங்களைப் பேணுவீர்களாக! ஏனெனில், சகல பித்அத்துகளும் வழிகேடானவைகளே; மறதியாளர்கள் தான் இவை களைச் செய்வார்கள்,

ஸுன்னத்தான காரியத்தைக் கொஞ்சம் செய்வது பித் அத்துகளில் அதிகம் செய்வதைப் பார்க்கினும் மேல் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்! ஸுன்னத்தான காரியம் வெற்றி, முக்தி ஆகியவைபால் இட்டுச் செல்லும், பித்அத்துகளோ அவைகளை

செய்பவர்களை கீழிலும் கீழான தரத்தில் தள்ளிவிடும். ஈமான் என்ற பிரகாசத்தைப் போக்கிவிடும்.

சன்மார்க்கத்துக்கு இணக்கமான காரியங்களைக் கொண்டு சிறப்படைந்தவர்களில் நம் எல்லோரையும் அல்லாஹுத் தஆலா ஆக்கி, வழிகேட்டின் பாதைகளையும் நாச வழிகளையும் விட்டு நம் எல்லோரையும் ஈடேற்றமாக்கி வைப்பானாக.

அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப்புகழும் தகும்.

أَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○
إِنَّ أَصْحَابَ الْجَنَّةِ الْيَوْمَ فِي شُغُلٍ فَاكِهُونَ ○
هُمْ وَأَزْوَاجُهُمْ فِي ظِلَالٍ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலா வினிடம் காவல் தேடுகிறேன்.

நிச்சயமாக சுவர்க்கவாதிகள் இன்றையதினம் ஒரு அலுவலில் கனியருந்தியவர்களாக இருக்கிறார்கள்; அவர்களும் அவர்களது ஜோடிகளும் நிழலிலிருக்கிறார்கள்.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللّٰهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْاٰنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ بِالْاٰيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالٰى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الثَّالِثَةِ مِنْ شَهْرِ رَبِيْعِ الْاٰخِرِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ خَلَقَ الْاِنْسَانَ وَعَلَّمَهُ الْبَيَانَ ○
نَحْمَدُهٗ عَلٰى اَنْ اَرْسَلَ اِلَيْنَا رُسُلًا مُّبَلِّغِيْنَ مُبَشِّرِيْنَ
وَمُنْذِرِيْنَ مِنَ النِّيْرَانِ ○ وَهَدَانَا اِلٰى سَوَاۤءِ الطَّرِيْقِ
وَرَزَقَنَا الْاِيْمَانَ ○ وَنَشْكُرُهٗ عَلٰى اَنْ جَعَلَنَا مِنْ اُمَّةِ
سَيِّدِ اَصْفِيَاۤئِهٖ وَرَاْسِ اَوْلِيَاۤئِهٖ مُحَمَّدِ نِ الْمَبْعُوْثِ اِلٰى
كَاۤفَّةِ الْخَلْقِ مِنَ الْاِنْسِ وَالْجَانِ ○ اَشْهَدُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا
هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ وَ
رَسُوْلُهٗ صَاحِبُ الْحِكْمَةِ وَالْفُرْقَانِ ○ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَعَلٰى
اٰلِهٖ وَصَحْبِهٖ مَادَارَ النَّيِّرَانِ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ○

يَاۤ اَيُّهَا النَّاسُ ○ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ
اُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ○

## றபீஉல் ஆகிர் மாதம்

# மூன்ருவது ஜும்ஆ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்.)

எல்லாப் புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும். அவன் மனிதனைச் சிருஷ்டித்து விளக்கத்தை அவனுக்குக் கற்பித்தான். நம்மிடம் சன்மார்க்கத்தை அறிவிப்பவர்களாகவும் நற்செய்தி நவில்பவர்களாகவும், நரகத்தைக் குறித்து எச்சரிக்கை செய்பவர்களாகவும், றஸூல்மார்களை அனுப்பி, நேரான பாதையில் நம்மை சேர்த்து, ஈமானை நமக்கருளியதற்காக அவனை நாம் புகழ்கின்ருேம்.

அகத்தூய்மை யடைந்தவர்களுக்கு நாயகராகவும், தனது ஒலிமார்களுக்குத் தலைவராகவும், மனு, ஜின் ஆகிய எல்லா சிருஷ்டிகளின்பால் நபியாக அனுப்பப்பட்ட வராகவுமிருக்கிற முஹம்மது (ஸல்) அவர்களது உம்மத்தில் நம்மையும் சேர்த்ததற்காக அவனுக்கு நாம் நன்றி செலுத்துகிருேம்.

வணக்கத்துக் குரியவன் அவனைத் தவிர்த்து (வேறு யாரும்) இல்லை என்று நான் சாக்ஷியங் கூறுகிறேன். அவன் தனித்தவன்; அவனுக்கு இணையில்லை. எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவும் இருக்கிருர்கள் என்று சாக்ஷி

யங் கூறுகிறேன். அவர்கள் புர்க்கான் என்னும் வேதத்தையும் விவேகத்தையுமுள்ளவர்கள். சந்திரனும் சூரியனும் சுற்றி வரும் காலமெல்லாம் அவர்களுக்கும் அவர்களது கிளையாருக்கும் தோழர்களுக்கும் அல்லாஹுத் தஆலா ஸலாத் தென்னும் கருணையை யளிப்பானாக!

أَمَّا بَعْدُ தோழர்களே! அல்லாஹுத் தஆலாவை ஒருமைப் படுத்துங்கள்! அவனுக்கு எவ்வஸ்துவையும் இணையாக்காதீர்கள். சன்மார்க்கத்தை கலப்பற்றதாக அவனுக்கே ஆக்கிய நிலைமையில் அவனை வணங்குங்கள்! ஏனெனில், தவ்ஹீது தான் ஈமான் என்னும் தெய்வ விசுவாசத்துக்குத் தலை. தொழுகை, நோன்பு, ஜக்காத்து, றஹ்மானின் ஆலயத்தை ஹஜ்ஜுச் செய்தல் ஆகிய இஸ்லாம் மதத்தின் பெருங்கடமைகளையும், உங்கள் மீது இறைவன் கடமையாக்கிய இதர விதிகளையும் நிறைவேற்றுவதையும் இரகசியத்திலும் பகிரங்கத்திலும் உங்களை விலக்கி உங்களை தடுத்திருக்கிறவைகளைத் தவிர்த்துக் கொள்வதையும் கடைப்பிடியுங்கள்!

பிறர் மெய்க்கச் செய்தல், பிரஸ்தாபத்துக்காகச் செய்தல் ஆகியவைகளை விட்டு உங்கள் வணக்கங்களை நீங்கள் வீணாக்கி விடுவதை விட்டு உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்! இவைகளுக்கிடங் கொடுத்தவர் நஷ்டத்தில் வீழ்ந்து விடுவார்.

சொல்லிக் காட்டுவதாலும் நோவினை செய்வதாலும் உங்கள் தருமங்களை அழித்து விடாதீர்கள்! இவைகளை செய்தவருடைய தருமம் பறக்கும் தூசியாகி விடும். அவருக்கு மறுமைப் பேறு கிடைக்காது.

“மூன்று பேர்களை அல்லாஹுத் தஆலா கியாமத்து நாளில் பார்க்கவுமாட்டான். அவர்களை சுத்தப்படுத்தவுமாட்டான். அவர்

களுக்கு நோவினை செய்யும்படியான வேதனை இருக்கிறது'' என்று மனித வர்க்கத்தின் நாயகர் (ஸல்) அவர்கள் கூறி, ''இம்மூவகைக் கூட்டத்தாரில் பாதம் மறைய உடுத்துபவர்களையும், பொய் சத்தியம் செய்து தன் பொருளைச் செலவிடுபவர், செய்த உபகாரத்தைச் சொல்லிக் காண்பிப்பவர் ஆகியவர்களையும் சேர்த்துக் கணித்தார்கள்'' என்று ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

அறிந்து கொள்ளுங்கள்! விலக்கப்பட்டவைகளைச் செய்வது இறைவனைக் கோபப்படுத்தி ஷைத்தானைச் சந்தோஷிக்கச் செய்கிறது. அழகையும், திறமையையும் ஈமானின் ஒளியையும் போக்கி விடுகிறது.

மனு, ஜின் ஆகிய இருவர்க்கங்களையும் சேர்ந்தவர்களே! எத்தனை காலத்துக்கு இந்த அசட்டை? எத்தனை காலத்துக்கு இக் கன்னெஞ்சம்? எத்தனை காலத்துக்கு பாபங்களில் முனைந்திருப்பது? வேதனை உங்களுக்கு இல்லையென உரிமை சீட்டிருக்கிறதா? உங்களுக்கு நன்மைப் பயன்கிடைக்குமென உறுதியான அறிவிருக்கிறதா? அல்லாஹுத் தஆலா உங்களைப் பிடிக்கவுமாட்டான், கேள்வி கணக்குக் கேட்கவுமாட்டான் என நீங்கள் எண்ணி இருக்கிறீர்களா? நரகத்தை விட்டு நீங்கள் ஈடேற்றமடைந்து விடுவீர்கள் என உங்களுக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறதா?

பின்னை, பாவங்களில் இவ்வளவு துணிச்சல் எதற்கு? அழிச்சாட்டியத்தில் உங்களுக்கு இவ்வளவு கடப்பு எதற்காக? மரணத்துக்குப் பிறகு உங்களுக்கு நிகழ இருக்கிற மகாப்பயங்கரங்களையும் கஷ்டங்களையும் சிந்தித்துப்பாருங்கள்! உங்கள் உற்றார் உங்களை அடக்கி விட்டுத் திரும்ப வந்து, உங்கள் சகவயதினர் உங்களிடம் விடை பெற்றுக்கொண்டு, உதவியாளரோ ஆதரவுக்காரர்களோ இல்லாமல் நீங்கள் தனித்து, சகல மூலைகளிலிருந்து இருள் வந்து உங்களை சூழ்ந்துகொண்டு, உங்களது விலா எலும்புகள் இப்பக்கமும் அப்பக்கமுமாக மாறி வந்து விடக்கூடிய விதமாக உங்களை கப்ரு

பலமாக நெருக்கி, முன்கர் நக்கீர் என்ற இரு மலக்குகள் உங்களிடம் தோன்றி, உங்கள் மார்க்கத்தையும், உங்கள் றப்பையும், மனிதர்களுக்கும் ஜின்களுக்கும் நாயகரான உங்கள் நபியையும் குறித்து உங்களை அவர்கள் விசாரணை புரியும்போது அவ்விருவருக்கும் நீங்கள் என்ன பதில் கூறுவீர்கள் என்று கவனித்துப்பாருங்கள்!

அவர்களுக்கு நீங்கள் கூறும் விடையைக் குறித்துச் சிந்தித்துப்பாருங்கள்! நேர்மையான முறையில் நீங்கள் பதில் கூறிவிடுவீர்களாயின், நன்மைப் டயன்களது அந்தஸ்துகளையும் சுவர்க்கத்து ஜன்னல்களைத் திறந்து விடுவதையும் நீங்கள் வெற்றி கொள்வீர்கள்.

அவ்விசாரணைக்குப் பதில் கூறும் விஷயத்தில் நீங்கள் ஐயங் கொள்வீர்களாயின், அபாயத்திலும் நஷ்டத்திலும் நீங்கள் வீழ்ந்து விடுவீர்கள். இதற்குப் பின்னால் ஒரு நாள் இருக்கிறது. அந்நாளில் கப்றுகளுக்குள்ள நீங்கள் எல்லோரும் எழுப்பப்பட்டு, மஹ்ஷர் மைதானத்திலுள்ள கஷ்டங்களில் சோதிக்கப்படுவீர்கள். அவ்வமயம் காபிர்கள் "நமக்கு வந்த கேடே! எங்களது நித்திரையிலிருந்து எங்களை எழுப்பியதுயார்?" என்று கூறுவார்கள். "றஹ்மான் வாக்களித்தது இதுவே" இந்த நாளில் பட்டோலைகள் வினியோகிக்கப்பட்டு, அவைகள் விரிக்கப்படும். சகல பக்கங்களிலிருந்தும் நரகம் சூழ்ந்து கொள்ளும். பாபிகளிலிருந்து ஒரு கூட்டத்தார் அதன்பால் அனுப்பப்படுவர்.

எனவே, சகோதரர்களே! உணர்ச்சி பெறுங்கள்! அல்லாஹூத் தஆலாவினிடத்தில் நீங்கள்யாவரும் தௌபாச் செய்து, எல்லா இடத்திலும் காலத்திலும் அவனிடம் பிழை பொறுக்கத் தேடுங்கள்! அல்லாஹூத் தஆலா உங்களது பாவங்களை மன்னித்து, உங்களது தீய செய்கைகளைக் குறித்து உங்களிடம் பராமுகமாக இருந்து, நரகத்தின் படித்தரங்களை விட்டு உங்களை விடுவிக்கக்கூடும்.

எனவே, மனப்பூர்வமாகவும், உண்மை புணர்ச்சியுடனும் "நாயனே! கிருபையாளனே! இவ்வுலகில் நல்லோர் பொல்லார் யா

வருக்கும் சமமாகக் கிருபை செய்வோனே!! எங்களது பாவங்களை எங்களுக்கு மன்னித்து, எங்கள் குறைகளை எங்களுக்கு மறைத்து, உறுதியுள்ளோருடன் எங்களை உனது சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்வாயாக!

சர்வ புகழும் அகிலத்தாரைப் போஷிப்பவனான அல்லாஹுத் தஆலாவுக்கே தகும்.

أَعُوذُ بِاللّٰهِ السَّمِيعِ الْعَلِيمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ۝
وَإِذَا سَأَلَكَ عِبَادِي عَنِّي فَإِنِّي قَرِيبٌ ۖ أُجِيبُ
دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ ۝

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு, மிக அறிந்தவனான மிகச் செவியேற்பவனான அல்லாஹுத் தஆலாவினிடம் காவல் தேடுகிறேன்.

**மேலும், எனது அடியார்கள் என்னைக் குறித்து உம்மிடம் வினவும் போது "நிச்சயமாக நான் மிகச் சமீபத்திலிருக்கிறேன்" (என்று நீர் கூறுவீராக)! என்பால் பிரார்த்திப்பவரின் பிரார்த்தனையை என்னை அவர் பிரார்த்திக்கும்போது நிறைவேற்றுவேன்,**

(திரு குர்ஆன்)

بَارَكَ اللّٰهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ
بَرٌّ رَءُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ۝

# الخطبة الأولى للجمعة الرابعة من شهر ربيع الآخر

بسم الله الرحمن الرحيم ○

الحمد لله الذي رفع السماء بغير عماد ○ وقوى أطراف الأرض بالجبال والأوتاد ○ نحمده حمدا كثيرا على أن بسط لعباده المهاد ○ ونشكره شكرا جميلا على أن زين البساط بالأحجار والأشجار نفعا للعباد ○ ونشهد أنه لا إله إلا هو وحده لا شريك له قسم الأرض على أقاليم وفي كل إقليم كثر البلاد ○ ونشهد أن سيدنا محمدا عبده ورسوله سيد أهل الأمجاد

صلى الله وسلم على سيدنا محمد وآله وصحبه أجمعين ○

يا أيها الناس ○ اتقوا الله العظيم عز وجل وأطيعوه

أوصيكم عباد الله وإياي بتقوى الله ○

## றபீஉல் ஆகிர் மாதம்

# நான்காவது ஜும்ஆ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்).

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே தகும். அவன் தூண்களின்றியே வானத்தை உயர்த்தி இருக்கிறான். பூமியின் கோணங்களை மலைகளைக் கொண்டும் முளைகளைக் கொண்டும் பூமியைப் பலப்படுத்தினான்.

தன்னுடைய அடியார்களுக்கு தொட்டிலை விரித்ததற்காக அவனை நாம் மிகுதமாகப் புகழ்கின்றோம். அடியார்களுக்குப் பிரயோஜனமேற்படுத்துவதற்காகக் கற்களையும் விருக்ஷங்களையுங் கொண்டு அழகாக்கியதற்காக அழகிய நன்றியறிதலைச் செலுத்துகிறோம்.

வணக்கத்துக் குரியவன் அவனைத் தவிர்த்து (வேறு யாரும்) இல்லை என்று சாக்ஷியங் கூறுகிறோம். அவன் தனித்தவன். அவனுக்கு இணையில்லை. பூமியை பல கண்டங்களாகப் பிரித்தான். அக்கண்டங்கள் ஒவ்வொன்றிலும் அநேக தேசங்களிருக்கின்றன.

எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவும், பெரியோர்களின் நாயகராகவும் இருக்கிறார்கள் என்று சாக்ஷியங் கூறுகிறோம்.

أَمَّا بَعْدُ ஜனங்களே! உங்களுக்கு அல்லாஹுத் தஆலா புத்திர பௌத்திர பாக்கியங்களை அளித்திருப்பதுபோல உங்களுக்கு அவன் அளித்துள்ள பாக்கியங்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள்! எஜமானன் மீதுள்ள இஷ்கென்ற பேரின்பக் காதல் என்னும் நெருப்பைக் கொண்டு இருதயங்களைக் கரிப்பீர்களாக! சகல நிலைமையிலும் சம வயதினருக்கு ஒத்து நடக்காதீர்கள். ஏனெனில், அவ்வாறு செய்வதில் பிரயோஜனமில்லை. அல்லாஹுத் தஆலாவுக்கும் அவனது தூதருக்கும் கீழ்ப்படிந்து சரியான பாதையில் செல்வீர்களாக!

முஸ்லிம்களை ஏளனஞ் செய்தல், மூமின்களைத் தொந்தரை செய்தல் ஆகிய காரியங்களைத் தவிர்த்துக் கொள்ளும் விஷயத்தில் தீவர முயற்சி எடுத்துக் கொள்வீர்களாக!

"விசுவாசங் கொண்டவர்களே! ஒரு கூட்டம் இன்னொரு கூட்டத்தை ஏளனம் செய்யவேண்டாம், அவர்களைப் பார்க்கினும் இவர்கள் மேலானவர்களாக இருக்கக் கூடும். இன்னும் ஸ்திரீகள், மற்றைய ஸ்திரீகளை (ஏளனம் செய்யக்கூடாது), அவர்களைப் பார்க்கினும் இவர்கள் மேலானவர்களாக இருக்கக்கூடும்" என்று அல்லாஹுத் தஆலா கூறி இருக்கிறான்.

விசுவாசியின் மீது அவனை கௌரபங்கம் செய்வது ஹறாமாக இருக்கிறது. அவனை நெருப்பில் கரிப்பது ஹறாம். அவனது மாமிசத்தைப் புசிப்பதும் அவனைக் குறித்துப் புறங்கூறுவதும் ஹறாம். அவனது முகத்திலறைவதும் ஹறாம். அறிந்து கொள்ளுங்கள்! "ஒரு மூமினை ஆடவனையோ அல்லது ஸ்திரீயையோ ஒருவர் ஏளனம் செய்தால் அல்லது புறங்கூறினால், அல்லது நோவினை செய்தால் கியாமத்து நாளில் அவருடன் போராடுவார்" என்பதை அறிந்து கொள்ளுங்கள்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

கியாமத்து நாள் என்பது என்ன என்று தெரியுமா? பெரியதும் சிறியதும், அற்பமானதும், மேலானதுமாகிய யாவையும் குறித்துக் கணக்கு வாங்கி, கண்டிக்கப்படும் நாள் அது. அடியார்களது பாத்திய தைகள் அன்றையதினத்தில் நிறைவேற்றப்படும். உங்கள் வழக் காளிகள் உங்களை சூழ்ந்துகொண்டால், உங்களது உறவினர் உங்கள் மீது "வழக்குத்" தொடுத்தால் உங்கள் நிலை என்னாகும் என்பதை எண்ணி பாருங்கள்!

என்னைக் குறித்துப் புறங்கூறினர், என்னை ஏளனம் செய்தார், என்னைப் பார்த்துச் சிரித்தார், எனக்கு விரோதமாகப் பிரார்த்தித்தார், சிநேகித உரிமைகளில் குறைவு செய்தார், என்பன போன்ற வழக்குகளைக் கூறுபவர்களெல்லாம் அன்றிருப்பர். அல்லா ஹுத் தஆலாவின் அடியார்களே! அல்லாஹுத் தஆலாவை அஞ்சுங்கள்! அஞ்சுங்கள்!! விஷமிகளில் நீங்கள் சேர்ந்து விடாதீர்கள்.

முன்னர் சென்றுபோன தந்தையர்களையும் மூதாதையர்களை யும் எண்ணி பாருங்கள்! அல்லாஹுத் தஆலாவின் ஏவல் விலக்கல் களை எடுத்து நடக்கும் விஷயத்தில் பழிப்பவர்களது பழிப்புக்கு அவர்கள் பயப்படாமலிருந்தனர்; நித்தியனான அரசனின் வழிப்பாடு விஷயத்தில் முயற்சித்துக் கொண்டு மிருந்தனர்.

அவர்களுக்குப் பிற்பாடு அவர்கள் ஸ்தானத்தில் நீங்கள் வந்தீர்கள். ஆனால், தொழுகையை பழுதாக்கி விட்டீர்கள். இச்சை களை பின்பற்றுகிறீர்கள். உங்களுக்கும் உங்கள் பகைவனான ஷைத்தா னுக்கு மிடையில் நேரக்கட்டுப் பாட்டை இணைத்துக் கொண்டீர்கள்.

எனவே, மறதி என்ற தூக்கத்தை விட்டெழுந்து, அகத் தைச் சுத்தப்படுத்துவதையும் தூய்மை படுத்துவதையும் நிரந்தர மாகக் கவனித்துக்கொள்ளுங்கள். அடியார்கள் யாவருடனும் சகோ தரத்துவத்தை ஏற்படுத்துவீர்களாக! திரு குர்ஆனை ஓதுதல், வழீபா ஓதுதல், திக்றுகள் முதலிய விஷயங்களை நிரந்தரமாக நிறை வேற்றுவீர்களாக! ஏனெனில் அல்லாஹுத் தஆலாவைதிக்று செய்த லானது சகல நோய்களுக்குச் சஞ்சீவியாகவும், சகல கெடுதல்களையும் விட்டுச் சுத்தப்படுத்துவதாகவு மிருக்கிறது.

நாயனே! இவ்வுலகில் நல்லார் பொல்லார் யாவருக்கும் சமமாகக் கிருபை செய்பவனே! மறுமையில் நல்லடியார்கள்பால் விசேஷ அன்புள்ளவனே! இரக்கமுள்ளோனே! உபகாரியே! அடியார்களின் சிருஷ்டிக் கர்த்தாவே! தேசங்களை நிர்வகிப்பவனே! எங்களுக்குப் பிழை பொறுப்பாயாக! எங்களை க்ஷமிப்பாயாக! எங்கள் குறைகளை மறைப்பாயாக!! நாடப்படுகிறதிலுள்ள நல்லதை எங்களுக்குக் கொடுப்பாயாக! எல்லாப் புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும்.

أَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○
أَلَمْ تَرَ كَيْفَ فَعَلَ رَبُّكَ بِعَادٍ ۝ إِرَمَ ذَاتِ الْعِمَادِ ۝ الَّتِي لَمْ
يُخْلَقْ مِثْلُهَا فِي الْبِلَادِ ○

மிகவும் செவியேற்பவனாகிய, மிகவும் அறிபவனாகிய அல்லாஹுத் தஆலாவினிடத்தில், எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டுக் காவல் தேடுகிறேன்.

ஆது இரம் தூண்களுள்ள கூட்டத்தாருக்கு உமது றப்பு எவ்வாறு செய்தான் என்பதை நீர் காணவில்லையா? தேசங்களில் அக்கூட்டத்தைப்போல் சிருஷ்டிக்கவில்லை.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللّٰهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْاٰنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْاٰيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ
بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

# الخطبة الأولى للجمعة الخامسة من شهر ربيع الآخر

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ لَيْسَ كَمِثْلِهٖ شَيْءٌ فِي الْقُدْرَةِ، وَلَا شَرِيْكَ لَهٗ فِيْ عَجَآئِبِ الصُّنْعَةِ، خَلَقَ الْوَابِلَ وَالطَّلَّ ○ خَلَقَ الْاِنْسَانَ وَخَصَّهٗ بِمَزِيْدِ الْاِمْتِنَانِ وَجَعَلَ النَّحْلَ وَالْبَقَّ وَالْقُمَّلَ ○ فَسُبْحَانَهٗ وَتَعَالٰى مِنْ اِلٰهٍ لَّا تُدْرَكُ عَجَآئِبُ قُدْرَتِهٖ وَلَا تُحَاطُ بِلَطَآئِفِ صُنْعَتِهٖ خَلَقَ الْاِنْسَانَ مِنْ عَجَلٍ ○ وَزَيَّنَ السَّمَآءَ بِمَصَابِيْحَ وَخَلَقَ لِنَفْعِ الْخَلَآئِقِ الشَّمْسَ وَالْقَمَرَ وَالْمِرِّيْخَ وَالزُّحَلَ ○ اَشْهَدُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَهُوَ الْعَلِيُّ الْاَجَلُّ ○ وَنَشْهَدُ اَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ صَاحِبُ الْقُرْاٰنِ وَالْقَوْلِ الْفَيْصَلِ ○ صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلٰۤى اٰلِهٖ وَصَحْبِهٖ مَادَارَ الْكَوْكَبُ وَاَفَلَ ○

صَلَّى اللهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ؕ

يَا أَيُّهَا النَّاسُ اتَّقُوا اللهَ الْعَظِيمَ عَزَّ وَجَلَّ وَأَطِيعُوهُ
أُوصِيكُمْ عِبَادَ اللهِ وَإِيَّايَ بِتَقْوَى اللهِ

## றபீஉல் ஆகிர் மாதம்

# ஐந்தாவது ஜுமுஆ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

எல்லாப் புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும். தத்துவத்தில் அவனை போன்றதைப்போல் எவ்வஸ்துவுமில்லை. அவனது ஆச்சரியகரமான செய்கைகளில் அவனுக்கு இணையானவர் எவரும் இல்லை. பெரு மழையையும் தூறலையும் சிருஷ்டித்தவன். மனிதனைச் சிருஷ்டித்து, அவனுக்கு அதிகமான வெகுமதியைக் கொண்டு சொந்தப்படுத்தினான். தேன் குழவியையும், கொசுவையும், உண்ணியையும் சிருஷ்டித்தவன்.

அவன் தூயவன், வேறு நாயனிருப்பதை விட்டு அவன் உயர்ந்தவன். அவனது தத்துவங்களிலுள்ள ஆச்சரியங்களைப் பரிபூரணமாக அறிந்துகொள்ள முடியாது. அவனது தொழிலிலுள்ள

நுட்பங்களை முற்று முணர முடியாது. களி மண்ணினால் மனிதனைச் சிருஷ்டித்தான், வானத்தை விளக்குகளால் அலங்கரித்தான், சிருஷ்டிகளின் நன்மைக்கென சூரியனையும், சந்திரனையும், செவ்வாயையும், சனியையும் சிருஷ்டித்தான்.

அவனைத் தவிர்த்து வணக்கத்துக் குரியவன் வேறு யாருமில்லை என்று சாக்ஷியங் கூறுகிறோம். அவன் தனித்தவன், அவனுக்கு யாரும் இணையில்லை. அவன் தான் உயர்ந்தவன், வல்லோன். எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும், தூதராகவும், திரு குர்ஆனாகவும், நன்மை தீமையைப் பிரிக்கும் சொல் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் என்று சாக்ஷியங் கூறுகிறோம். நக்ஷத்திரங்கள் சுற்றிக்கொண்டும் அஸ்தமித்துக்கொண்டும் இருக்குங் காலமெல்லாம் அவர்களுக்கும் அவர்களது கிளையார் தோழர்களுக்கும் அல்லாஹுத் தஆலா ஸலாத் என்னும் கருணை புரிவானாக.

أمّا بعد மிஸ்கீனே! தனது செய்கைக்காக பிணையேற்றிருப்பவனே! உனது எஜமான் உன்னைப் போஷித்துப் பரிபக்குவப்படுத்தினான். நீ கற்பத்தினுள் சிசுவாக ஒன்றுக்கும் இயலாமலிருந்தபோது உனக்கு உணவளித்தான். அப்புறம் இன்மையிலிருந்து உண்மையின்பால் உன்னை வெளிப்படுத்தி, உனக்கு உணவு கொடுக்கப் பொறுப் பேற்றிருக்கிறான். கிருபை செய்தல், வளர்த்தல் ஆகியவைகளைத் தனது கடமையாக ஏற்படுத்தியுள்ளான்.

இவ்வாறிருக்க, அற்பமாகிய இவ்வுலகத்தை நீ தேடி, கீழ்த்தரமான இப்பொருள்களை சம்பாதிப்பதில் உனது வயதினை நீ செலவு செய்வதும், அவன் மீது பொறுப்பை ஒப்புவித்து நிம்மதி

யாக இல்லாதிருப்பதும் எதற்காக? "மேலும், பூமியிலுள்ள எந்தப் பிராணிக்கும்அதற்குரிய உணவு அல்லாஹ்வின் மீது இல்லாமலில்லை. இன்னும், அது தரிபடுகிற தானத்தையும் அது ஒப்புவிக்கப்படுகிற தானத்தையும் அவன் அறிகிறான். யாவும் தெளிவான கிரந்தத்தி லிருக்கிறது" என்று தனது வேதத்தில் அவன் கூறி இருப்பதன் மூலம் அல்லாஹுத் தஆலா வாக்களித்திருப்பதை நீ நம்பமாட்டாயா?

அவன் பொய்யுரைக்கிறான் அல்லது அவன் கூறி இருப் பதில் சந்தேகமும் கெடுதலும் இருக்கின்றன என்று நீ கருதுகிறாயா?

தன்னை வணங்கவேண்டும் என்பதற்காகவே யல்லாமல் அவன் மனிதனையும் ஜின்னையும் படைக்கவில்லை. இவர்களிலிருந்து அவன் உணவை நாடவுமில்லை. இவர்கள் தனக்கு உணவளிக்க வேண்டுமென அவன் கோரவுமில்லை. எனவே! சிருஷ்டிகளை மறக் கடித்து அறியாதவர்களாகி விட்டதுதான் என்னே!

நீ அவனுக்கு மாறு செய்துங்கூட உனக்கு உணவைத் தடுக் காமல், உனக்கு அவன் உபகாரம் செய்திருப்பதை நீ அறியாயோ? உன்னை அவன் பிடித்து, தண்டித்தால் உனக்காகப் பிணையேற்றுக் கொள்பவர் எவர்? அவன் பாலிலேயே திரும்புவாய். எனவே, அல்லா ஹுத் தஆலாவுக்கு பயபக்தி செலுத்துவதையும், மாறு செய்வதைத் தவிர்த்துக் கொள்வதையும், தொழுகையை விடாமல் நிறைவேற்று வதையும் உனக்கு நான் வஸிய்யத்துச் செய்கிறேன்.

எவர் தக்வா என்னும் பயபக்தியாளராகி தொழுகையையும் விடாமல் நிறைவேற்றுகிறாரோ அவர் பெரும் பாக்கியத்தை யடைந்து பரிபூரணமானவராகிவிடுகிறார். தொழுகையை அதற் குரிய நேரங்களில் தொழுகாமல் பிற்படுத்தாதீர்கள். "உன்னுடன்

சேர்ந்து நித்திரை செய்பவர் யார்?" என இப்லீஸிடம் வினவப் பட்டதற்கு, அவன் "போதை யருந்துபவன்" என்றும், "உன்னி டத்தில் அதிக மதிப்புள்ள மனிதர் எவர்" என்று வினவியதற்கு "அபூபக்கரையும் உமரையும் திட்டுபவர்" என்றும் "அவனுக்குப் பிரியமானவர் யார்?" என்று வினவியதற்கு, "புலவர்" என்றும், "அவனுக்குத் தூதர் யார்?" என்று வினவியதற்கு, "சூனியக் காரர்" என்றும், "அவனது கண்ணுக்குக் குளிர்ச்சியானவர் யார்?" என்று வினவியதற்கு, "விவாக விலக்குச் செய்வதாகப் பிரமாணம் செய்பவர்—அவர் உண்மையையே கூறினுலுஞ் சரியே?" என்றும், "அவனது நண்பர் யார்?" என்று வினவியதற்கு, "தொழுகையை நிறைவேற்ருதவர்" என்றும், "அவனுடன் சம இருப்பு இருப்பவர் யார்?" என்று வினவியதற்கு "தொழுகை யைப் பிற்படுத்தி, உலகக் காரியங்களில் ஈடுபட்டவர்" என்றும் பதில் கூறினன்.

ஜும்ஆவுக்கு வருவதையும் இமாம் ஜமாஅத்தாகத் தொழு வதையும் கடைப்பிடியுங்கள்! ஏனெனில், கூட்டத்தை விட்டு எவர் தனித்து விடுகிருரோ வழிகேட்டில் அவர் தனித்துச் சருகிவிடுவார். ஸுன்னத்தைக் கடைப்பிடித்து, பித்அத்துகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள், எவர் பித்அத்துகளை உண்டு பண்ணுகிருரோ அவரும் வழி தவறி, மற்றவர்களையும் வழிதவறச் செய்து விடுகிருர்.

சன்மார்க்க விஷயத்தில் எதையும் புதிதாக உண்டு பண்ணு வதை விட்டு உங்களை காத்துக்கொள்ளுங்கள்! சன்மார்க்கத்திலில்லா ததை அதில் புதிதாக உற்பத்தி செய்வோரது நற்கிரியைகளின் நன்மைப்பயன் அழிக்கப் பட்டுவிடும்.

சர்வ புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும்.

أَعُوْذُ بِاللهِ السَّمِيْعِ الْعَلِيْمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ○
وَالسَّمَاءِ ذَاتِ الرَّجْعِ وَالْأَرْضِ ذَاتِ الصَّدْعِ إِنَّهُ لَقَوْلٌ
فَصْلٌ وَّمَا هُوَ بِالْهَزْلِ ○ بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ فِي الْكَلَامِ
الْأَكْمَلِ ○ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ بِالْآيَاتِ وَالذِّكْرِ الْأَفْضَلِ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலா வினிடத்தில் காவல் தேடுகிறேன்.

திரும்பச் செல்லுகிற வானத்தின் மீதும், பிளவுள்ள பூமியின் மீதும் பிரமாணமாக நிச்சயமாக அது முடிவான சொல்; மேலும், அது வீணனதல்ல.

(திரு குர்ஆன்)

நமக்கும் உங்களுக்கும் பரிபூரணமான வாக்கியத்தில் அல்லாஹுத் தஆலா பரக்கத்துச் செய்து, மிகச் சிறந்த ஞாபக மூட்டியினுலும், ஆயத்துகளாலும் நமக்கும் உங்களுக்கும் பிரயோஜனம் செய்வானாக.

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيْمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيْمٌ مَلِكٌ قَدِيْمٌ
بَرٌّ رَؤُوْفٌ رَّحِيْمٌ وَرَبٌّ حَلِيْمٌ ○

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الْاُوْلٰى مِنْ جُمَادَى الْاُوْلٰى

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ بَسَطَ بِسَاطَ الْاَرْضِ وَاَدَارَ الْفَلَكَ ○ نَفْعًا لِلْمَخْلُوْقَاتِ مِنْ اِنْسٍ وَّجِنٍّ وَمَلَكٍ ○ فَسُبْحَانَهُ مِنْ اِلٰهٍ عَلِيْمٍ بِمَا فِيْ بُطُوْنِ الْاُمَّهَاتِ، خَبِيْرٍ بِمَا فِيْ جَوْفِ الطَّبَقَاتِ، حَكِيْمٍ بِصُنْعِهِ مُدَبِّرٍ فِيْ مُلْكِهِ مِنَ الْاَرْضِ اِلَى الْفَلَكِ ○ نَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا هُوَ قَائِلِيْنَ اَنْتَ رَبُّنَا لَا شَرِيْكَ لَكَ ○ وَنَشْهَدُ اَنَّ سَيِّدَنَا وَمَوْلَانَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهُ الَّذِيْ نُوْدِيَ فِي الْاَزَلِ كَرَّمَكَ اللّٰهُ وَبَجَّلَكَ ○ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَعَلٰى اٰلِهٖ مَا طَارَ الطَّآئِرُ وَسَارَ السَّآئِرُ وَدَارَ الدَّآئِرُ فِي الْاَرْضِ وَالْفَلَكِ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ○

يَا اَيُّهَا النَّاسُ ○ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ اُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ○

## ஜமாதுல் அவ்வல் மாதம்

# முதலாவது ஜும்ஆ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்).**

எல்லாப் புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும். மனு, ஜின், மலக்குகளாகிய சிருஷ்டிகளின் நன்மைக்காக பூமி, என்னும் விரிப்பை அவன் விரித்து வானத்தைச் சுற்ற வைத்தான். தாய்மார்களது வயிறுகளினுள்ளிருப்பதைக் குறித்து மிக அறிந்த நாயனாகிய அவன் தூயவன். படித்தரங்களுக்குள்ளிருப்பதை மிக உணர்ந்தவன்; தன் செய்கையில் மிக விவேக முள்ளவன்; பூமி வானம் ஆகியவற்றை தனது அரசாங்கத்தில் நிர்வாகம் செய்பவன்.

அவனைத் தவிர்த்து வணக்கத்துக் குரியவன் (வேறு யாரும்) இல்லை, நீ தான் எங்களைப் போஷிப்பவன், உனக்கு யாரும் இணையில்லை என்று கூறியவர்களாக சாக்ஷியங்கூறுகிறோம். எங்களது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள். அல்லாஹுத் தஆலா உம்மைச் சங்கையாக்கி வைத்துக் கண்ணியப்படுத்தினான் என்று அநாதி காலத்திலேயே அவர்கள் அழைத்துக் கூறப்பட்டார்கள். பூமியிலும் வானத்திலும் சுற்றுவது சுற்றிக்கொண்டும், செல்வது சென்று கொண்டும், பறப்பது பறந்து கொண்டு மிருக்கும் காலமெல்லாம் அவர்களுக்கும் அவர்களது கிளையார் தோழர்களுக்கும் அல்லாஹுத் தஆலா ஸலாத் என்னும் கருணை புரிவானாக!

أَمَّا بَعْدُ மனிதனே! உன்னை சிருஷ்டித்து, உன்னை சரியாக்கி, அவன் நாடிய உருவத்தில் உன்னை ஒன்று கூட்டிய தயாளனாகிய உனது றப்பை விட்டு உன்னை மருட்டிவிட்டது எது? குதிக்கும்படியான இந்திரியத் துளியினால் உன்னை சிருஷ்டித்து, பின்னர் முறையே உன்னை இரத்தக் கட்டியாகவும், தசைக் கட்டியாகவும், எலும்பும் இறைச்சியாகவும் சிருஷ்டித்து உன்னை உருவாக்கினான்.

தனது அழகு சவுந்திரியத்தில் ஏமாற்றமடைந்தவனே! தனது பொருளையும் திறமையையும் கொண்டு இறுமாப்புக் கொள்பவனே! இதுதான் உனது அசல். அதனை ஞாபகப் படுத்திக்கொள்! இதுதான் உனது ஆரம்பம். உன்னை அறியாமலாக்கிவிட்டது எது? தனது தத்துவம் பகிரங்கமாகி நேர்வழி பெற்றவருக்கும், அழிந்துபோனவருக்கும் தனது கொடை பொதுவாக இருக்கிறவனான எஜமானனுக்கு நீ மாறு செய்கிறாய். உன்னை சிருஷ்டித்தவனுக்கு நீ விரோதம் செய்கிறாய். அவனது விவேகம் அருமையானது; அவனது கருணை பெரும் பாவிகளுக்கும் நேரான பாதையில் நடந்தவருக்கும் பொதுவானது.

உன்னை அவன் இன்மையிலிருந்து உண்மையின்பால் கொண்டு வந்து இருக்கிறான். அவன் தயையும் இரக்கமுமுள்ளவன். சோதனையுள்ள இவ்வுலகில் பாவம் செய்பவரை விட்டு கீழ்ப்படிபவரையும், கன்னெஞ்சர்களை விட்டு காரிய சித்தியடைபவரையும் பகிரங்கமாகத் தெரிந்துகொள்வதற்காகவும், பிரகாசம் சூழ்ந்து கொண்டவர்களுக்கும் இருள் மூடிக்கொண்டவர்களுக்கு மிடையில் பகிரங்கமாக வித்தியாசப் படுத்தவும் உன்னை விட்டு வைத்திருக்கிறான்.

தன்னை வணங்குவதற்காகவே யல்லாமல் மனிதனையும் ஜின்னையும் அவன் சிருஷ்டிக்கவில்லை. அவர்களிலிருந்து உணவையோ, அவனுக்கு அவர்கள் உணவளிக்க வேண்டுமென்பதையோ அவன் நாடவில்லை. வானத்தால் வணக்கப்பட்டிருக்கிற யாவருக்கும் அவன் தான் அன்னமளிப்பவன்.

ஏ மறதியாளனே! மலக்குல் மவ்த் என்பவர் உனது ஆன்மாவை கைப்பற்றி, உனக்குப் பிரியமாக இருப்பவர்களும் இந்த ஜீவியத்தில் உனக்குச் சம வயதினருமாக இருப்பவர்களும் உன்னை அடக்கம் செய்யவும் கபனிடவும் தீவரமாகி உன்னை கப்ரில் ஆக்கி விட்டால், உனக்குப் பிறகுள்ள நிலைமைகளை நீ நினைத்துப் பார்! அன்னியமும் ஏழ்மையும் மருகுதலின்மையுமுள்ள வீட்டில் நீ பிரவேசித்தவுடன் மலக்கு வந்து உன்னை அமரச் செய்து உனது றப்பையும், மார்க்கத்தையும், றஸுலையும் விசாரணை புரிவார். நேரான பதிலை அவருக்கு நீ அளித்தால் உனக்குச் சோபனம் தான். நீ பதில் கூற வகையறியாமல் இருந்தால் பலமாக உன்னை பிடித்து, வதைப்பார்.

பின்னர், கியாமத்து நாளில் உன்னை அல்லாஹுத் தஆலா உயிர்ப்பித்தெழுப்பி தனது சமுகத்தில் ஆஜராகச் செய்து, உனது பாவங்களைக் குறித்து விசாரித்து கணக்கு வாங்குவான். உனது குறைகளை உனக்கு எடுத்துக் காட்டி உன்னை கண்டிப்பான்.

அல்லாஹுத் தஆலாவின் அடியார்களே! அவனை பயப்படுங்கள்! அஞ்சுங்கள்!! கணக்கு ஒப்புவிக்கும் நாள் மிகக் கடுமையானது. அதன் கடுமைகளை விட்டுத் தப்பித்துக் கொண்டவர் சுவர்க்கத்தில் பிரவேசிப்பார். அதில் அகப்பபட்டுக் கொண்டவர் நரகத்தின் பாதாளத்துக்குச் செல்வார்.

ஏ மிஸ்கீனே! உனது நிலை ஆச்சரியமாக இருக்கிறது. மரணம் உண்டு என ஒப்புக்கொள்கிறாய். இந்த ஜீவியம் நீங்கி விடுமென்பதை உறுதி கொள்கிறாய். ஆனால், மறுமைக்காக நீ கட்டுச் சாதம் தயார் செய்து கொள்கிறாயில்லை. மறதி என்ற தூக்கத்தை விட்டு எழுந்திருக்கிறாயில்லை. உனக்கு வந்த மறதிதான் என்னே!

உனது எஜமானனுக்கு மாறு செய்வதில் சென்றுபோன நாட்களைக் கடத்தி விட்டாய். இனியேனும் வருகிற புதிய நாட்களை யாவது நீ வீணாக்கி விடாமலிருப்பது அவசியம். நீ செய்தவைகளைக் குறித்து அல்லாஹுத் தஆலாவினிடம் தௌபாச் செய்து, எது உனக்கு நன்மையாக இருக்கிறதோ அதில் கீழ்ப்படிவாயாக!

அல்லாஹுத் தஆலா எங்களையும் உங்களையும் பாபமன்னிக்கப்பட்டு, குறைகள் மறைக்கப்பட்டவர்களிலாக்கி, நேரான பாதையைத் தெரிந்தெடுத்து நடந்தவர்களது கூட்டத்தில் சேர்ப்பானாக. எல்லாப் புகழும் பிழை பொறுப்பவனான அல்லாஹுத் தஆலாவுக்கே தகும்.

أَعُوذُ بِاللهِ السَّمِيعِ الْعَلِيمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○
يَا أَيُّهَا الْإِنْسَانُ مَا غَرَّكَ بِرَبِّكَ الْكَرِيمِ الَّذِي خَلَقَكَ
فَسَوَّاكَ فَعَدَلَكَ ○ فِي أَيِّ صُورَةٍ مَا شَاءَ رَكَّبَكَ ○

மிக அறிந்தவனான, மிகச் செவியேற்பவனான அல்லாஹ்வினிடத்தில், எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டுக் காவல் தேடுகிறேன்.

மனிதனே! உன்னை சிருஷ்டித்து, உன்னைச் சரியாக்கி உன்னை திருத்தியவனான தயாளனாகிய உனது றப்பை விட்டு உன்னை ஏமாற்றி விட்டது எது? எந்த வடிவத்தில் அவன் நாடினானோ உன்னை வைத்திருக்கிறான்.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ
بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

# الخطبة الاولى للجمعة الثانية من جمادى الاولى

بسم الله الرحمن الرحيم ۝

الحمد لله الذي شرف من بين خلقه بني آدم وزينهم
بحلي الكمال ۝ وبعث منهم رسلا وانبياء واجتبى
منهم الاولياء والاصفياء وخصهم بمزيد الافضال ۝
احمده حمدا كثيرا واشكره شكرا كبيرا في لمحات
الايام والليال ۝ واشهد ان لا اله الا هو وحده
لا شريك له ولا ند له وهو ذو الكرم والجلال ۝ و
اشهد ان سيدنا محمدا عبده ورسوله صاحب العز
والاقبال ۝ صلى الله عليه وعلى آله وصحبه
خير صحب وخير آل ۝

صلى الله وسلم على سيدنا محمد وآله وصحبه اجمعين

يَاأَيُّهَا النَّاسُ ۝ اِتَّقُوا اللهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ
اُوْصِيْكُمْ عِبَادَ اللهِ وَاِيَّايَ بِتَقْوَى اللهِ ۝

## ஜமாதுல் அவ்வல் மாதம்

## இரண்டாவது ஜும்ஆ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடை யோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்).

எல்லாப் புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும். தன் சிருஷ்டிகளில் ஆதமுடைய மக்களை சிறப்பித்து, கமால் என்னும் ஆபரணத்தைக் கொண்டு அவர்களை அலங்கரித்தவன். அவர்களில் றஸூல்மார்களையும் நபிமார்களையும் எழுப்பப் பண்ணியவன். இன்னும், அவர்களில் ஒலிமார்களையும் அஸ்பியாக்களையும் தெரிந்தெடுத்து, அதிகமான அநுக்கிரகங்களைக் கொண்டு அவர்களை சொந்தப்படுத்தியவன்.

மிகுதமான புகழாக அவனை புகழ்ந்து பகல் இரவுகளிலுள்ள க்ஷணங்களில் பெரும் நன்யறிதலை அவனுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

அவனைத் தவிர்த்து வணக்கத்துக்குரியவன் (வேறு யாரும்) இல்லை என்று நான் சாக்ஷியங்கூறுகிறேன். அவன் தனித்தவன். அவனுக்கு இணையில்லை. அவனுக்குச் சமமானவனில்லை. அவன் வல்லமையும் தயையுமுள்ளவன்.

இன்னும் எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாரும், திருத்தூதராகவும் இருக்கிறார்கள். கண்ணியமும் தகையுமுள்ளவர்கள் என்று சாக்ஷியங்கூறுகிறேன். அவர்களுக்கும், தோழர்களில் சிறந்தவர்களாகவுள்ள அவர்களது தோழர்களுக்கும், கிளையார்களில் சிறந்தவர்களான கிளையார்களுக்கும் அல்லாஹுத் தஆலா ஸலாத் என்னும் கருணை புரிவானாக!

أَمَّا بَعْدُ ஜனங்களே! அல்லாஹுத் தஆலாவுக்கு பயபக்தி செலுத்தி, இறந்த காலங்களில் நீங்கள் செய்ததை விட்டு விட்டு, இனி வருங்காலத்தில் நீங்கள் கேள்வி கணக்குக் கேட்கப்படுவதற்கு முன்னதாக உங்களை நீங்களே கேள்வி கணக்குக் கேட்டுக் கொள்ளுங்கள். அல்லாஹுத் தஆலா உங்களுக்குக் கிருபை செய்து, அஸ்ஹாபுஷ்ஷிமால் என்ற வர்க்கத்தை விட்டு உங்களை விடுவிப்பான்.

அல்லாஹுத் தஆலா உங்களது புற உருவத்தையோ, உங்களது பொருளையோ பார்க்கமாட்டான். அவனிடத்தில் கவனிக்கப்படுவதெல்லாம் நற்கிரியைகள் தாம். பொருள்களைச் சம்பாதிக்கும் விஷயத்தில் பேணுதலாக இருந்துக்கொள்ளுங்கள். அடியானது கால்கள் இருந்த இடத்தை விட்டு எடுத்து வைக்கப்படுவதற்குள்ளாக அவனது வயதை எதில் செலவு செய்தான், அவனது பொருளை எங்கிருந்து சம்பாதித்தான், ஹறாமிலா அல்லது ஹலாலிலா அதனை செலவு செய்தான் என்பதைக் குறித்து அவன் விசாரிக்கப்படுவான்.

ஹலாலாக இருப்பதற்கும் ஹறுமாக இருப்பதற்குமிடையில் பாகுபாடு செய்யாமல் ஒருவர் பணத்தையும் அழகையும் சேகரித்தால் அழகும் பொருளும் அவருக்குப் பிரயோஜனம் செய்யாது.

சன்மார்க்கத்துக்கு விலக்கலான வகையில் ஒருவர் ஒரு கவாளம் புசித்தால் நாற்பது நாட்களது தொழுகை அங்கீகரிக்கப்படமாட்டாது. அவரும் வேதனையிலகப்பட்டுக் கொள்வார் என்று மனிதர்களது தலைவரான நாயகம் (ஸல்) அவர்கள் கூறி இருப்பதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

பொறுமை, துவேஷம், கோபம், பேராசை, வழிகேட்டை உண்டுபண்ணக்கூடிய ஏனையகொடிய தீமைகள் ஆகியவைகளை விட்டு இருதயத்தைத் தூய்மை செய்வதைக் கடைப்பிடியுங்கள். ஸ்தூலத்தில் ஒரு தசைக்கட்டி இருக்கிறது. அது இணக்கமாக இருந்தால் ஸ்தூலம்முழுவதும் இணக்கமாக இருக்கும். அது கெட்டுப்போனால் ஸ்தூலம் முழுவதும் கெட்டும் போகும். அவரில் நின்றுமுள்ள செய்கைகள் கெடுதலாகிவிடும் என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

புறங்கூறல், கோள் சொல்லல், திட்டுதல், தூஷணஞ் செய்தல், சச்சரவு செய்தல், பிறர் மெய்க்கச் செய்தல், சண்டை போடல் முதலிய விலங்குகளையும் தீமைகளை வருவிக்கக் கூடிய நாசகரமான இதரகாரியங்கள் யாவையும் விட்டு நாவை காத்துக் கொள்வதும் உங்களுக்கு அவசியமாக இருக்கிறது.

எவர் தனது இரு தாடிகளுக் கிடையிலுள்ளதையும், தன் இரு கால்களுக் கிடையிலுள்ளதையும் அதாவது நாவையும் வெட்க ஸ்தலத்தையும் காத்துக் கொள்கிறாரோ அவர் சுவர்க்கத்தில் பிரவேசிப்பார். வேதனையை விட்டு விடுதலையடைவார். அதிகமாக வினவுவதையும், பொருளை வீணாக்குவதையும், வதந்திகளை கேட்பதில் புத்தியை ஈடுபடுத்துவதையும் விட்டு உங்களைக் காத்துக் கொள்

ளுங்கள் ! காத்துக்கொள்ளுங்கள் !! இவைகளைக் குறித்த விளக்கங்கள் ஸஹீஹான ஹதீது ஷரீபில் வந்திருக்கின்றன.

சிருஷ்டிகளது கர்த்தாவினிடம் காலையிலும் மாலையிலும் மீளுவதையும் தௌபாச் செய்வதையும் அவசியமாக நிறைவேற்றுங்கள்! பளு இலேசாக்கப்பட்டு அதிகமான இஸ்திஃபார்களும் எழுதப்பட்ட பட்டோலையுள்ளவருக்கே சோபனம்! ஒவ்வொரு காலையிலும், மாலையிலும், சகல நிலைமையிலும் அல்லாஹுத் தஆலாவை ஜபிப்பதை இடைவிடாமல் நிறைவேற்றுவீர்களாக! ஏனெனின், அவனை ஜபிப்பது சகல விதமான நோய்களுக்கும் அருமருந்தாகவும் வியாதிகளுக்கும் அவஸ்தைகளுக்கும் சஞ்சீவியாகவும் இருக்கிறது.

மேலும், அது ஷைத்தானை தடுக்கும் பலமான கோட்டையாகவுமிருக்கிறது. ஸ்திரீ புருஷர்களது இருதயங்களில் ஷைத்தான் தனது துதிக்கையைப் போடுகிறான். அவர்கள் இறைவனை மறந்திருந்தால் அவர்களில் வஸ்வஸாவை உண்டு பண்ணுகிறான். அவர்கள் அல்லாஹுத் தஆலாவை ஜபித்து ஞாபகித்துக் கொள்வார்களாயின், அவன் பின் வாங்கிக்கொண்டு, பிற்காலத்தைய தீங்குடன் திரும்பி விடுகிறான்.

கடுமையான வியாதியை விட்டுக் காப்பாற்றுபவனான, தேவைகளை நிறைவேற்றுபவனான அல்லாஹுத் தஆலாவை, அதிகமாகப் பிரார்த்தியுங்கள்! ஏனெனில், பிரார்த்தனை தான் வணக்கங்களுக்கு ஆணிவேர். வழிப்பாடுகைகளுக்குத் தலை. இதுதான் அபாயகரமான வழிகேடுகளை விட்டு விடுவிப்பது.

எனவே, "நாயனே! கிருபையாளனே! இம்மையில் யாவருக்கும் சமமாகக் கிருபை செய்பவனே! பெரியோனே! உயர்ந்தோனே!! எங்களது பாவங்களை மன்னிப்புச் செய்து, எங்கள் குற்றங்களை மறைத்து, உண்மையுரைப்பதற்கும், மன தூய்மைக்கும் எங்களுக்கு நல்லுதவி செய்வாயாக!" என்று மனப்பூர்வமாக பிரார்த்தனை புரியுங்கள்!

அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும். அவனது றஸூல் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும், அவர்களது கிளையார், தோழர்கள் யாவருக்கும் ஸலாத் என்னும் கருணையும் ஸலாம் என்னும் ஈடேற்றமுமுண்டாவதாக.

أَعُوذُ بِاللَّهِ السَّمِيعِ الْعَلِيمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○ إِنَّ أَصْحَابَ الْجَنَّةِ الْيَوْمَ فِي شُغُلٍ فَاكِهُونَ ○ هُمْ وَأَزْوَاجُهُمْ فِي ظِلَالٍ ○

செவியேற்பவனும், மிக அறிந்தவனுமான அல்லாஹுத் தஆலாவினிடம், எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டுக் காவல் தேடுகிறேன்.

இன்றையதினம் சுவர்க்கவாதிகள் ஒரு அலுவலில் பேசிக் கொண்டிருப்பார்கள்; அவர்களும் அவர்களது ஜோடிகளும் நிழலிருப்பார்கள்.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللَّهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

---

# اَلْخُطْبَةُ الْأُوْلٰى لِلْجُمُعَةِ الثَّالِثَةِ مِنْ جُمَادَى الْأُوْلٰى

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ ظَهَرَتْ حِكْمَتُهُ الْبَالِغَةُ فِيْ كُلِّ مَوْجُوْدٍ ○ وَخَضَعَ لَهُ كُلُّ شَيْئٍ حَتَّى الْوُحُوْشُ وَالطُّيُوْرُ وَالدُّوْدُ ○ نَحْمَدُهُ عَلٰى اٰنَّهُ يَرْزُقُ بِغَيْرِ الْأَسْبَابِ الطِّفْلَ الْمَوْلُوْدَ ○ وَنَشْكُرُهُ عَلٰى اٰنَّهُ أَلْقٰى مَحَبَّتَهُ فِيْ قُلُوْبِ الْاٰبَاءِ وَالْجُدُوْدِ ○ وَنَشْهَدُ أَنْ لَّا اِلٰهَ اِلَّا هُوَ الْمَلِكُ الْمَعْبُوْدُ ○ وَنَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ صَاحِبُ الْحَوْضِ الْمَوْرُوْدِ وَالْمَقَامِ الْمَحْمُوْدِ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ أَجْمَعِيْنَ ○

يَآ أَيُّهَا النَّاسُ ○ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَأَطِيْعُوْهُ أُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَإِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ○

## ஜமாதுல் அவ்வல் மாதம்

# மூன்ருவது ஜும்ஆ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்).

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே தகும். சகல மெய் பொருள்களிலும் அவனது பரிபூரணமான யுக்தி வெளியாகி இருக்கிறது. காட்டில் வாழும் பிராணிகளும், பறவைகளும், புழுக்களும் உள்பட அவனுக்குச் சகலமும் கீழ்ப்படிந்திருக்கின்றன.

காரணமில்லாமல் குழந்தைக்கும் சிசுவுக்கும் அவன் உணவளிப்பதைக் குறித்து அவனைப்போற்றிப் புகழ்கின்ருேம். தந்தையர்கள், மூதாதையர்களது இருதயங்களில் பிரியத்தை ஏற்படுத்தியதைக் குறித்து அவனுக்கு நன்றி செலுத்துகிருேம்.

வணக்கத்துக்குரியவன் அவனைத் தவிர்த்து (வேறு யாரும்) இல்லை என்று சாக்ஷியங்கூறுகிருேம். அவன் அரசன்; வணங்கப்படுபவன். எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவும்மிருக்கிருர்கள். ஹுளலெ மல்றுதும் மக்காமுல் மஹ்மூதுமுள்ளவர் என்று சாக்ஷியங்கூறுகிருேம்.

أَمَّا بَعْدُ! அல்லாஹ்வின் அடியார்களே! கியாமத்து நாளைப் பயப்படுங்கள். அதில் நிகழும் நிலைமைகளை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். ஏனெனின், அது ஒருநாள். அதனுடைய வருத்தம் மிக மகத்தானது; அதன் கவலைகள் மிக அதிகம்; அதன் அதிர்ச்சி மிகக் கடுமையானது.

இராசிகளுள்ள வானத்தின் மீது பிரமாணமாக, இன்னும் வாக்களிக்கப்பட்ட நாளின் மீது பிரமாணமாக, இன்னும் ஜும்ஆவுடையவும் அறபாவுடையவும் நாட்களின் மீது பிரமாணமாக என்று திருக் குர்ஆனில் கூறி அந்த நாளைப் படிப்பினையாகக் கொள்ள வேண்டும் என அந்த நாளைக் கூறிப் பிரமாணம் செய்திருக்கிறான்.

"மீக்காயில் (அலை) அவர்கள் சிரிப்பதை நான் பார்த்ததில்லையே" என்று (ஹஜ்றத்) ஜிப்ராயீல் (அலை) அவர்களை நாயகம் (ஸல்) அவர்கள் வினவினார்கள். அதற்கு, ஜிப்ராயீல் (அலை) அவர்கள் "விறகுகளுள்ள நரகம் சிருஷ்டிக்கப்பட்ட காலந்தொடுத்து அவர் சிரித்ததில்லை" என்று பதில் கூறினார்கள் என ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது.

மலக்குகள் அல்லாஹுத் தஆலாவினிடம் எவ்வளவோ நெருங்கி இருந்தும் அவர்கள் பயப்படுகிறார்கள், எனவே, அவனது வல்லபத்தைக் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள்! துரத்தப்பட்ட ஷைத்தானைப்போல் நீங்களாகுவதை விட்டு நீங்கள் காவல்தேடுங்கள்! அல்லாஹுத் தஆலா அமரர்களைச் சிருஷ்டித்திருக்கிறான், அவர்கள் எத்தனை பேர் என்பதை அவனைத் தவிர்த்து வேறு எவரும் கணிக்க முடியாது, கியாமத்து நாள்வரை நின்றவண்ணமாகவே வணங்குபவர்

களும், ருக்கூஉவிலேயே இருந்து வணங்குபவர்களும், ஸுஜூதிலேயே இருந்து வணங்குபவர்களும் அவர்களிலிருக்கிறார்கள். அன்பாளனாகிய சிருஷ்டிக்கர்த்தன் மீதுள்ள பயத்தால் அவர்களது புஜங்களிலுள்ள தசை உப்பி இருக்கும். அவர்களது உடலங்கள் மயிர்க்கூச்செரிந்து கொண்டிருக்கும்.

விறகுகளுள்ள நரகத்தை அவன் சிருஷ்டித்திருக்கிறான்; அதற்கு இறைச்சலும் சப்தமுமிருக்கின்றன; இது பாபிகளுக்கெனச் சித்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதில் அவர்கள் தங்கி இருப்பார்கள், காபிர்களுக்கு நிரந்தரமான முறையில் அது சித்தம் செய்யப்பட்டிருக்கிறது.

நரகத்துக்கு நடுவில் ஒரு பாலம் போடப்பட்டிருக்கிறது, அது மயிரைப் பார்க்கினும் நுட்பமானது, வாளைப்பார்க்கினும் கூர்மையானது, ஜனங்கள் அந்தப்பாலத்தின் வழியாகச் செல்லும்படி கட்டளையிடப்படுவார்கள், அவர்கள் தங்களது பாபமூட்டைகளை முதுகுகளில் போட்டுக்கொண்டு, தங்கள் கால்கள் சருகிவிடுமோ என்ற பயத்துடன் செல்வார்கள், சிலர் மின்வெட்டி மறைவதைப்போல் அவ்வளவு வேகமாக அதில் செல்வர், சிலர் வேகமாய் ஓடுகிற குதிரையைப் போல் வேகமாகச் செல்வர், சிலர் தாமதமாக நடக்கும் எறும்பு ஊர்வதுபோல் மெதுவாகச் செல்வர், இவ்விதமாகச் சென்று சுவர்க்கத்தில் பிரவேசித்து, அதில் அவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள்.

சிலருக்கு அதனை கடக்க இயலாது, நடுவில் விழுந்து காணமற் போனவர்களைப் போல் நரகத்திலாகிவிடுவார்கள், அவர்களது தோல்களையும், உடலங்களையும் நரக நெருப்பு கரிக்கும், இன்னும் நெருப்புப் பாதரக்ஷைகளை அவர்களணிவார்கள், அதனால் அவர்களது

கால்கள்முதல் கன்னம்வரை எலும்புகளெல்லாம் பூட்டு விட்டுப் போகும், அதில் அவர்களுக்கு நிரந்தரமான தாமதமுண்டு. அவர்கள் வெளியேறவுமாட்டார்கள் பிறரால் வெளியேற்றப்படவுமாட்டார்கள். பிராணிகளாகவோ, புழுக்களாகவோ இருந்தோமா என்று அவர்கள் மேலெண்ணங் கொள்வார்கள்,

சகோதரர்களே! தோழர்களே!! உபகாரமென்ற விரிப்பை அல்லாஹுத் தஆலா உங்களுக்கு விரித்து, தயை என்ற படுக்கையையும் அளித்துள்ளான். நாட்டம், கருத்து ஆகியவைகளையும் உங்களுக்கு நன்கொடை யளித்து, நீங்கள் கர்பத்தில் சிசுக்களாக இருந்தபோது உங்களுக்கு உணவு மளித்தான்.

அருவருப்பான இந்திரியத் துளியாக நீங்களிருந்தீர்கள். அப்பால் உங்களை உதிரக் கட்டியாகவும், பின்னர் தசைக் கட்டியாகவும், பிறகு எலும்புகளாகவும் ஆக்கினான். அப்புறம் அவைகளுக்கு இறைச்சியை உடுத்தி, வரையறுக்க முடியாத அளவுக்கு வெகுமதிகளை கொடுத்தான். எனவே, அவனது கொடைகளுக்காக அவனுக்கு நன்றி செலுத்தி, அவனது அநுக்கிரகங்களுக்காக அவனை புகழுங்கள்!

வாக்களிக்கப்பட்ட நாளில் இனிமேல் நிகழக்கூடிய பயங்கரங்களைக் குறித்து சிந்தித்துப் பார்த்து, "நாயனே! இவ்வையகத்தில் யாவருக்கும் சமமாகக் கிருபை செய்வோனே! அன்புள்ளோனே! எங்களது கிரியைகளின் பட்டோலைகள் எங்கள் பாவங்களால் கருப்பாகி விட்டன. ஆதலின், எங்களை மன்னித்து, க்ஷமித்து, பிள்ளைகளும் பெற்றோர்களும் உதவமுடியாத நாளில் எங்களுக்கு அருள் புரிவாயாக!" என்று கூறியவர்களாக வணங்கப்படுவனான அவ்வரசனது சமூகத்தின் பக்கல் உங்களது கரங்களை உயர்த்துங்கள்!

எல்லாப்புகழும் அகிலத்தாரின் றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே தகும்.

أَعُوذُ بِاللهِ السَّمِيعِ الْعَلِيمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ۝ إِنَّ بَطْشَ رَبِّكَ لَشَدِيدٌ ۝ إِنَّهُ هُوَ يُبْدِئُ وَيُعِيدُ ۝ وَهُوَ الْغَفُورُ الْوَدُودُ ۝

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு செவியேற்பவனை மிக அறிந்தவனை அல்லாஹ்விடத்தில் காவல்தேடுகிறேன்.

நிச்சியமாக உனது றப்பின் பிடி மிகப் பலமானது; நிச்சியமாக அவன் தான் ஆரம்பிக்கிறன், இன்னும் மீட்டுகிறன். மேலும், அவன் மிக மன்னிப்பவன்; மிக அன்பாளன்.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ۝

# اَلْخُطْبَةُ الْأُولَى لِلْجُمُعَةِ الرَّابِعَةِ مِنْ جُمَادَى الْأُولَى

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الْوَلِيِّ الْحَمِيْدِ ○ اَلَّذِيْ بَدَئَ الْخَلْقَ مِنْ غَيْرِ مُعِيْنٍ وَّنَصِيْرٍ ۝ وَدَبَّرَ الْخَلْقَ مِنْ غَيْرِ عَوْنٍ وَّظَهِيْرٍ ۝ وَهُوَ الْمُبْدِئُ الْمُعِيْدُ ○ اَشْهَدُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَلَا نَظِيْرَ لَهٗ وَلَا مَثِيْلَ لَهٗ وَهُوَ الْوَاحِدُ الْوَحِيْدُ وَاَشْهَدُ اَنَّ سَيِّدَنَا وَمَوْلَانَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ صَاحِبُ الْمُعْجِزَاتِ الْبَاهِرَةِ وَالْاٰيَاتِ الطَّاهِرَةِ وَالْفُرْقَانِ الْمَجِيْدِ ○ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَمَنْ تَبِعَهُمْ اِلٰى يَوْمِ التَّوَابِ الْمَزِيْدِ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ۝

يَآ اَيُّهَا النَّاسُ ○ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ ۝ اُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ○

## ஜமாதுல் அவ்வல் மாதம்

## நான்காவது ஜும்ஆ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்).

எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே தகும். சிநேகன், புகழ்பவன், அவன் உபகாரியோ உதவிக்காரனோ இல்லாமல் (தானாகவே) சிருஷ்டிக்க ஆரம்பித்தான், ஆதருவுக்காரனோ ஒத்தாசைக்காரனோ இல்லாமல் சிருஷ்டிகளைப்பற்றி ஆராய்ந்தான். அவன்தான் ஆரம்பிப்பவன், மீட்டுபவன்.

அவனைத்தவிர்த்து வணக்கத்துக் குரியவன் (வேறுயாரும்) இல்லை என்று சாக்ஷியங் கூறுகிறேன். அவனுக்கு இணையில்லை, அவனுக்கு நிகரில்லை, அவனுக்கு ஒப்பானவனில்லை, அவன் ஒருவன், தனித்தவன். எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் திருத்தூதராகவும் இருக்கிறார்கள். தெளிவான அற்புதங்களையும், பகிரங்கமான திருஷ்டாந்தங்களையும், புர்கானுல் மஜீத் என்னும் வேதத்தையும் உடையவர்கள் என்று சாக்ஷியங் கூறுகிறேன். நன்மைப்பயனும் அதற்கதிகமாகவும் கூலி கொடுக்கப்படுகிற நாள்வரை அவர்களுக்கும், அவர்களது கிளையார்கள் தோழர்கள், இவர்களைப் பின்பற்றியவர்கள் யாவருக்கும் அல்லாஹுத் தஆலா ஸலாத் என்னும் கருணைபுரிவானாக!

أَمَّا بَعْدُ சபையோர்களே! அற்பமாகிய இவ்வுலகத்தைய ஜீவியம் விளையாட்டும், வீணும், அலங்காரமும், ஒருவர்க்கொருவர் பெருமை பேசிக்கொள்வதும், பொருள்கள், மக்கள், பௌத்திரர், பேரர்கள் இவர்களிலுள்ள பெருக்கமும்தான்.

ஸ்திரீ இச்சைகள், புதல்வர்கள், வெள்ளிதங்கக் குவியல்களை குவித்தல், அடையாளமிடப்பட்ட அசுவங்கள், கால்நடைகள், வெள்ளாண்மைகள், தேவையில்லாததும் பிரயோஜனமற்றதுமான சம்பாத்தியம் ஆகியவைகளில் பிரியங்கொள்வது ஜனங்களுக்கு அலங்காரமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

இவைகளில் இறுமாந்து விடாதிருக்குமாறு உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்! காத்துக்கொள்ளுங்கள்! அவ்வாறு இறுமாந்து விடுவீர்களாயின் மிகத்தூரமான வழிகேட்டில் நீங்கள் வீழ்ந்து விடுவீர்கள்.

இந்த உலகுக்கு நிலையுமில்லை, இதன் அலங்காரத்துக்கு மதிப்புமில்லை என்பதை நீங்கள் அறியவில்லையா? இது என்ன மறதி? இவ்வுலகம் ஏமாற்றக்கூடியது, சதி செய்யக்கூடியது என்பதை நீங்களறியவில்லையா? எத்தனை பேரை இது கொன்றுவிட்டது? எத்தனை பெரியோரை இது அழித்துவிட்டது? இது என்ன அசட்டை?

சுவர்க்கத்தில் பிரவேசிப்பீர்களென உங்களுக்கு உறுதியான அறிவிருக்கிறதா? அல்லது கொடிய வேதனையை விட்டு விடுவிக்கப்பட்டதற்கு உங்களிடம் உரிமைச் சீட்டிருக்கிறதா? உங்களுக்கு இடப்புறத்திலும் வலப்புறத்திலும் எழுதிவைப்பவரும் சாக்ஷியுமான மலக்கு உங்களுக்கு நியமிக்கப் பட்டிருக்கிறார் என்பதை நீங்களறியவில்லையா? எந்தச் செய்கையை நீங்கள் செய்தீர்களானாலும், எந்த வார்த்தையை நீங்கள் மொழிந்தீர்களானாலும் அதற்குப் பக்கத்தில் காவலாளி இல்லாமலில்லை,

அச்சுறுத்தப் பட்டநாள் உங்களுக்கு வரும் என்பது உங்களது கேள்விப் புலனை தட்டவில்லையா? அச்சுறுத்தப்படுகிற நாள் எது என்பது உங்களுக்குத் தெரியுமா? அது ஒருநாள். அதன்விசாரம் மிகக் கடுமையானது. நரகம் அன்று ஆஜார் செய்யப்படும். அதற்கு எழுபதாயிரம் மூக்குக் கயிறுகளிருக்கின்றன, ஒவ்வொரு கயிற்றையும் எழுபதாயிரம் மலக்குகள் பிடித்திழுத்துக் கொண்டு வருவார்கள்.

அதனை சகல மூலைகளிலிருந்து உங்களுக்கு மிகச் சமீபமாகச் சுற்றிக்கொண்டு வரப்படும். அப்பொழுது ஜனங்களை போதையுள்ள வர்களாகக் காண்பீர்கள், அவர்கள் உண்மையில் போதையுள்ளவர்களாக இல்லை, எனினும், அல்லாஹுத் தஆலாவினது வேதனை மிகக் கடுமையானது, மிக அற்பமானதும் பெரியதுமான ஒவ்வொன்றையும் குறித்து அன்று கணக்குப் பார்க்கப்படும், நல்லோரும் பொல்லாரும் அன்று விசாரணை புரியப்படுவார்,

அது ஒரு நாள், அதில் நபிமார்களும் கூட மெய் சிலிர்த்திருப்பார்கள். பயபக்தியுள்ளவர்கள், அகந்தெளிந்தவர்களது கால்களும் கூட அன்றையதினத்தில் சருகிவிடும். ஒவ்வொரு ஜீவனும் நப்ஸீ, நப்ஸீ, என்று சப்தமிட்டுக் கொண்டிருப்பார். பால் கொடுக்கும் ஸ்திரீகள் தங்கள் குழந்தைகளையும் சிசுவையும் மறந்து விடுவார்கள்.

அல்லாஹுத் தஆலாவின் அடியார்களே! அல்லாஹ்வை, அஞ்சுங்கள்! அஞ்சுங்கள்!! அவனுக்குப் பயபக்தி செலுத்துங்கள்! அவன் உயிர் நாடியைப் பார்க்கினும் உங்களுக்கு மிகச் சமீபத்திலிருக்கிறன். அல்லாஹ்வின் கயிற்றை நீங்கள் யாவரும் பலமாகப்

பிடித்துக் கொள்ளுங்கள்! நீங்கள் பிரிந்து விடாதீர்கள். கூட்டத்தை விட்டு எவர்கள் தனி யாகிறார்களோ அவர்கள் மிகத் தூரமான பள்ளத்தில் தனித்து விடுவார்கள். தொழுகைகளையும், ஜுமுஆ வுக்கும், ஜமாஅத்துக்கும் வருவதையும் நீங்கள் பேணி நிறை வேற்றுங்கள்!

அழித்து நாசமாக்கக் கூடியவைகளை விட்டு விலகிக்கொள் ளுங்கள்! நீண்ட வயதை வீணாக்கி விடாதீர்கள். இவ்வுலகத்தைக் கொண்டு மருளுவதையும், அந்தியத்தை மறப்பதையும் விட்டு உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்! பின்னரும் உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்! எவர் அழிச்சாட்டியம் செய்து அந்தியத்தைப் பார்க் கினும் அற்பமாகிய இவ்வாழ்வைத் தெரிந்தெடுத்துக் கொண்டாரோ அவருக்குக் கடுமையான உஷ்ணமும், கடுங்குளிருமுள்ள நரகை யல்லாமல் வேறு ஒதுங்கு மிடமில்லை.

ஒவ்வொரு க்ஷணத்திலும் விநாடியிலும் அல்லாஹுத் தஆலாவினிடம் பிழை பொறுக்கத்தேடுவீர்களாக! இதற்கு அதிக மாகவும் அவனிடம் கோருவீர்களாக!

"நாயனே! இம்மையில் யாவருக்கும் கிருபை செய்வோனே! தலைமைத்தன முள்ளோனே! கிருபையாளனே! புகழப்பட்டோனே!! எங்களுக்குப் பிழை பொறுத்து, எங்களை விட்டு எங்கள் பாவங்களை அழித்து, அச்சுறுத்தப்பட்ட நாளில் எங்கள் தவறுகளைப் புறக்கணிப் பாயாக!" என்று மனப்பூர்வமாக வாய் நிறம்பப் பிரார்த்திப்பீர் களாக!

அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும்,

أَعُوذُ بِاللهِ السَّمِيعِ الْعَلِيمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○ لَقَدْ خَلَقْنَا الْإِنْسَانَ وَنَعْلَمُ مَا تُوَسْوِسُ بِهٖ نَفْسُهٗ وَنَحْنُ أَقْرَبُ إِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيدِ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு செவியேற்பவனை மிக அறிந்தவனை அல்லாஹுத் தஆலா வினிடம் காவல் தேடுகிறேன்

**மனிதனை நாம் சிருஷ்டித்திருக்கிறோம். இன்னும் அவனது அகம் அவனுக்கு உண்டு பண்ணுகிற ஊசாட்டத்தை நாம் அறிவோம். மேலும், உயிர் நாடியைப் பார்க்கினும் அவனுக்கு நாம் மிகச் சமீபத்திலிருக்கிறோம்.**

(திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْاٰنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ بِالْاٰيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهٗ تَعَالٰى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ بَرٌّ رَؤُفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الْخَامِسَةِ مِنْ جُمَادَى الْاُوْلٰى

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ خَالِقِ الْمَلٰٓئِكَةِ وَالْاِنْسِ وَالْجِنَّهْ ○ عَالِمٍ بِمَا فِى الْاَرْحَامِ مِنَ الْاَجِنَّهْ ○ اَحْمَدُهٗ عَلٰى مَآ اَفَاضَ عَلَيْنَا مِنْ بِحَارِ اللُّطْفِ وَالْمِنَّهْ ○ وَاَشْكُرُهٗ عَلٰى مَاكَرَّمَنَا عَلٰى جَمِيْعِ مَخْلُوْقَاتِهٖ حَتَّى الْمَلٰٓئِكَةِ وَالْجِنَّهْ ○ اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ شَهَادَةً تَكُوْنُ لَنَا مِنَ النَّارِ جُنَّهْ ○ وَاَشْهَدُ اَنَّ سَيِّدَنَا وَمَوْلَانَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ صَاحِبُ الْاٰيَاتِ وَالسُّنَّهْ ○ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَعَلٰٓى اٰلِهٖ وَصَحْبِهٖ وَمَنْ تَبِعَهُمْ صَلٰوةً تَجْعَلُ النُّفُوْسَ مُطْمَئِنَّهْ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ○

يَآاَيُّهَا النَّاسُ ○ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ

اُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ○

## ஜமாதுல் அவ்வல் மாதம்

# ஐந்தாவது ஜும்ஆ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

எல்லாப் புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும். மனிதனையும் ஜின்னையும் மலக்குகளையும் சிருஷ்டித்தவன். கர்ப்பங்களிலுள்ள சிசுக்களிலிருப்பதை அறிந்தவன். அன்பு, தயை ஆகிய சமுத்திரங்களிலிருந்து அவனது வரிசைகள் நமக்கு ஒலித்ததற்காக அவனை புகழ்ந்து, மலக்குகளில் ஜின்களுள்பட தனது சிருஷ்டிப் பொருள்கள் யாவற்றிலும் நம்மை சிறப்புறச் செய்ததற்காக அவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

வணக்கத்துக் குரியவன் அவனைத் தவிர்த்து (வேறு யாரும்) இல்லை. அவன் தனித்தவன், அவனுக்கு இணையில்லை என்று நரகத்தை விட்டு நம்மைக்காக்கும் கேடயமாக இருக்கக்கூடிய சாக்ஷியமாக நான் சாக்ஷியங்கூறுகிறேன். எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் திருத் தூதராகவும் இருக்கிறார்கள். ஆயத்துக்களும் ஸுன்னத்து முள்ளவர்கள் என்று நான் சாக்ஷியங்கூறுகிறேன்.

அவர்களுக்கும் அவர்களது கிளையாருக்கும் தோழர்களுக்கும் இவர்களை பின்பற்றியவர்களுக்கும் அல்லாஹுத் தஆலா அகங்

களைச் சாந்தியுள்ளவைகளாக ஆக்கும்படியான ஸலாத் என்னும் கருணையை அருள்வானாக!

أَمَّا بَعْدُ! சபையோர்களே!! அல்லாஹுத் தஆலாவை அஞ்சவேண்டிய அளவுக்கு அஞ்சுவீர்களாக! தௌபாச் செய்தவர்களில் அல்லாமல் நீங்கள் மரணமடைய வேண்டாம். ஒவ்வொரு நேரத்திலும் க்ஷணத்திலும் அல்லாஹுத் தஆலாவினிடம் பிழை பொறுக்கத்தேடுவீர்களாக! இன்னும் காலையிலும் மாலையிலும் அவனைப் பிரார்த்தியுங்கள்! பிரார்த்தனைதான் வணக்கத்துக்கு மூளையாக இருக்கிறது.

அடியான் ஒருபாவத்தைச் செய்வானாயின் அவயவங்களில் சிறந்ததும், தலையாயதும், முதலாவதாகச் சிருஷ்டிக்கப் பட்டதுமான தசைக்கட்டி கருத்து விடுகிறது. அதில் கரும்புள்ளி ஏற்பட்டு விடுகிறது. அவன் தௌபாச் செய்தால் அந்தத் தௌபாவை அல்லாஹுத் தஆலா அங்கீகரித்து, அக்கரும்புள்ளியை அகற்றிவிடுகிறான் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

தவறு செய்வதில் பிடிவாதமாக அவனிருந்து, ஒரு தீமைக்குப் பிறகு மற்றொரு தீமை என அவன் தீமையையே சம்பாதித்துக் கொண்டிருந்தால் அவனது இருதயத்தின் கருப்பு அதிகமாகிக் கொண்டே வந்து அதனை சுற்றிலும் இருள் சூழ்ந்து கொள்ளும். அப்பொழுது அல்லாஹுத் தஆலா அவனது இருதயத்தின் மீதும், செவிப்புலன் மீதும், பார்வைப்புலன் மீதும் முத்திரையிட்டு விடுகிறான். தீய மரணம் அவனுக்குச் சம்பவிக்குமென அஞ்சப்படுகிறது.

எனவே, அடியார்களே! அல்லாஹுத் தஆலாவை அஞ்சுங்கள்! அஞ்சுங்கள்!! உங்கள் இருதயங்களைக் காத்துக் கொண்டு, நீங்கள் கணக்குப் பார்த்துக் கொள்ளுங்கள்! காம இச்சைக்கு வழிப்

பட்டு உங்களது வாணுட்களை நீங்கள் வீணுக்கிக் கொள்வதை விட்டு உங்களை தடுத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் மரணத்துக்குரிய தவணை வந்து, நற்கிரியைகள் பற்றற்றுப்போய், தாகத்துக்குமேல் தாகமேற்பட்டு, பிடியும், சக்தியுமுள்ள மலக்குகள் உங்களிடம் வந்து, மயக்கத்துக்கு மேல் மயக்கத்தைக் கொடுத்து, உங்களது ஆன்மாக்களை கைப்பற்றினல் உங்கள் நிலை என்னுகும்? அப்பொழுது நீங்கள் கைசேதப்படுவீர்கள், கைசேதம் உங்களுக்குப் பிரயோஜனப் படாது, நீங்கள் கெஞ்சுவீர்கள், மீளுதல் உங்களுக்கு நன்மை பயக்காது,

இவைகளுக்குப் பின்னல் கப்ரில் உங்களுக்குக் கடுமையான பயங்களும், அநேகக் கஷ்டங்களும், வெறுப்பும் திடுக்கங்களுள்ளதும் இருக்கின்றன. அடர்ந்த இருள்களும் ஒன்றுக்குப் பிறகு ஒன்ருகச் சோதனைகளும் உங்களை சூழ்ந்து கொண்டால் உங்களது நிலை எவ்வாறிருக்கும்?

கப்று உங்களை பலமாக நெருக்கும். அதனல் உங்களது விலா எலும்புகள் மாறிவிடும், ஆன்மாக்களும் கூட அதனல் பயப்படும், அவைகளுக்கு விபத்துக்கள் பூரணமாக ஏற்படும்,

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது புதல்வியான ஸெய்யிதா ஜைனபு (றலி) அவர்கள் வபாத்தானபோது அவரை கபனிட்டு நல்லடக்கம் செய்ய நாயகம் (ஸல்) அவர்களும் வந்திருந்தார்கள். இக்காரியங்கள் முடிந்து அங்கு மண்ணைப் போட்டபோது நாயகம் (ஸல்) அவர்களது நிறம் பேதகமடைந்து, பரபரப்படைந்ததன்குறி அவர்கள் முகத்தில் காணப்பட்டது. இதனை குறித்து ஸஹாபிகள் விசாரித்ததற்கு 'நான் அவருக்காகவும் அவரது பலஹீனத்துக்காகவும் இரங்கினேன், அவரை கப்று பலமாக நெருக்கிற்று. அதனல் அவர் கூக்குர

விட்டார், மனு, ஜின் ஆகிய இரு வர்க்கத்தாரை தவிர்த்து மற்றைய சிருஷ்டிகள் யாவும் அவரது சப்தத்தைச் செவியேற்றன. நெருக்குவதை அவருக்கு இலேசாக்குமாறு அல்லாஹுத் தஆலாவினிடம் நான் பிரார்த்தித்தேன்" என்று நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

சகோதரர்களே! இந்தக் கஷ்டத்தை எண்ணி பாருங்கள், உயர்வான முஃஜிஸாக்களும் திருஷ்டாந்தங்களுமுள்ள நாயகம் (ஸல்) அவர்களது அருமைப் புதல்வியின் நிலை இது. ஜனங்களே! நானும் நீங்களும்யார்? இதற்கப்புறம் கப்ரில் கொடிய வேதனையும், தொடர்ந்த நெருக்கடியும், இருளுக்குமேல் இருளும் இருக்கின்றன, எனவே, ஸுன்னத்துக்கு இயைந்த நற்கிரியைகளை அதிகமாகச் செய்வதன் மூலமும், தீய செய்கைகளையும் பழிக்கத்தக்க பித்அத்துக்களையும் செய்யாமல் தவிர்த்துக் கொள்வதன் மூலமும் உங்களது கப்றுகளை வெளிச்சமாக்குவீர்களாக.

"நாயனே! இம்மையில் நல்லார் பொல்லார் யாவருக்கும் சமமாகக் கிருபை செய்வோனே! கேட்காமலிருக்கும் போதே கொடை கொடுப்பவனே! எங்களுக்குப் பிழை பொறுப்பாயாக! எங்களை க்ஷமிப்பாயாக! இவ்வையகத்தின் இடுக்கண்களையும், மறுமையின் கஷ்டங்களையும், பர்ஜகே குப்ராவில் அதாவது கப்ரில் கியாமத்து நாள்வரை நிகழுகின்ற விரும்பத்தகாதவைகளையும் விட்டு எங்களை காப்பாயாக! எங்களது கிரியைகளில் சன்மார்க்கத்துக்கு இணக்கமானவைகளை எங்களுக்குரிய தங்கரியமாக ஆக்குவாயாக!" என்று இருகைகளையும் ஏந்தி இறைவனிடம் பிரார்த்திப்பீர்களாக.

எல்லாப் புகழும் அகிலத்தாரை போஷித்துப் பரிபக்குவப் படுத்துவோனாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே தகும்.

أَعُوذُ بِاللهِ السَّمِيعِ الْعَلِيمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○
قُتِلَ الْإِنسَانُ مَا أَكْفَرَهُ ○ مِنْ أَيِّ شَيْءٍ خَلَقَهُ ○ مِن
نُّطْفَةٍ خَلَقَهُ فَقَدَّرَهُ ○ ثُمَّ السَّبِيلَ يَسَّرَهُ ○ ثُمَّ أَمَاتَهُ
فَأَقْبَرَهُ ○ ثُمَّ إِذَا شَاءَ أَنشَرَهُ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு மிக செவியேற்பவனை மிக அறிந்தவனை அல்லாஹுத் தஆலா வினிடம் காவல் தேடுகிறேன்.

மனிதன் வெட்டப் படுவானாக, அவனை நிராகரிக்கச் செய்தது எது? எவ்வஸ்துவிலிருந்து அவனைச் சிருஷ்டித்திருக்கிறான்? இந்திரியத்திலிருந்து அவனைச் சிருஷ்டித்து, அப்பால் அவனை அமைத்தான். பின்னர், அப்பாதையை அவனுக்குச் சுலபமாக்கினான், பின்னர், அவனை மரிக்கச் செய்து, அப்பால் அவனைக் கப்ரிலாக்கினான், பின்னர், அவன் நாடும் போது அவனை எழுப்புவான்

(திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ
بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

# الخطبة الاولى للجمعة الاولى من جمادى الآخرة

بسم الله الرحمن الرحيم ○

الحمد لله جليل الصفات رفيع الذات كبير الشان ○ الذي خلق الخلق على اصناف شتى وجعل اشرفها الانسان ○ فسبحانه من اله عجزت العقول عن ادراك كنهه وتحيرت النفوس في درك سره كل يوم هو في شان ○ اشهد انه لا اله الا هو وحده لا شريك له تفرد بتدبير الخلق عودا وبدءا من غير انصار واعوان ○ واشهد ان سيدنا ومولانا محمدا عبده ورسوله صاحب الآيات والفرقان ○ صلى الله عليه وعلى آله وصحبه ومن سلك سبيلهم ما دار القمران ○

صلى الله وسلم على سيدنا محمد وآله وصحبه اجمعين ○

يا ايها الناس ○ اتقوا الله العظيم عز وجل واطيعوه اوصيكم عباد الله واياي بتقوى الله ○

## ஜமாதுல் ஆகிர் மாதம்

# முதலாவது ஜும்ஆ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

எல்லாப்புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும். அவனது ஸிபத்துகளென்னும் தன்மைகள் மகத்துவமுள்ளவை. அவனது தாத்து என்னும் தன்மை மிக உயர்வுள்ளது. அவனது அந்தஸ்து மிகப் பெரியது. சிருஷ்டிகளை அநேக வகைகளாகச் சிருஷ்டித்தான். இவைகளில் மனிதனை மிகச் சிறப்புள்ளதாக ஆக்கினான். தூயநாயன், அவனது குன்ஹு என்னும் சுயம்பை அறிய அறிவுகள் மாட்டாங்கியாகி விட்டன. அவனது இரகசியத்தை யுணருவதில் நப்ஸுகள் திகைப் படைந்திருக்கின்றன. ஒவ்வொரு நாளும் அவன் ஒரு நிலையிலிருக்கிறான்.

அவனைத் தவிர்த்து வணக்கத்துக் குரியவன் (வேறுயாரும்) இல்லை, அவன் தனித்தவன். அவனுக்கு இணை இல்லை. சிருஷ்டிகளை நிர்வகிப்பதில், ஆரம்பமாக சிருஷ்டிப்பதிலும், அவர்களை உயிர்ப்பித்து திரும்ப மீட்டுவதிலும் உதவிக்காரர்களோ ஒத்தாசைக்காரர்களோ இல்லாமல் தனித்தவன் என்று சாக்ஷியங் கூறுகிறேன்,

எங்கள் நாயகம், எங்கள் எஜமானர் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் திருத் தூதராகவும் திருஷ்டாந்

தங்களும் புர்க்கான் என்னும் வேதமும் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் என்று சாக்ஷியங் கூறுகிறேன். இரு சந்திரர்களும் சுற்றி வருங்காலமெல்லாம் அவர்களுக்கும், அவர்களது கிளையாருக்கும், தோழர்களுக்கும், இவர்களது பாதையில் நடந்தவர்களுக்கும் அல்லாஹுத் தஆலா ஸலாத்என்னும் கருணை புரிவானாக!

أَمَّا بَعْدُ சகோதரர்களே! தோழர்களே!! மனு, ஜின் ஆகியவர்களில் இங்கு விஜயம் செய்துள்ள கூட்டத்தாரே!! அல்லாஹுத் தஆலாவினது திருஷ்டாந்தங்களையும், அவனது மகத்துவத்தையும் கவனித்துப் பாருங்கள்! அல்லாஹுத் தஆலாவின் ஸிபத்துகளென்னும் தன்மைகளிலும் அவனது தத்துவத்திலும் சிந்தித்துப் பாருங்கள்! அல்லாஹுத் தஆலாவில் நீங்கள் சிந்தனை செய்ய வேண்டாம். இவ்விதமாகத்தான் நபிமார்களின் கடைசியான காத்தமுல் அன்பியா (அலை) அவர்கள் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

அவனது சிருஷ்டியிலும், ஸிபாத்துகளென்னும் தன்மைகளிலும் ஆராய்பவர்களுக்கு அறிவு ஊற்றுக்கள் வெளியாகும். கிருபை கடாக்ஷம் என்ற சாகரங்கள் அவர் மீது ஒலிக்கும். அவனது தாத்து எனும் குன்ஹியின் இரகசியங்களாகிய சமுத்திரத்தில் பிரவேசிக்க நாடுபவர் அழிச்சாட்டியத்தில் மூழ்கி விடுவார். உங்களது ஆரம்பத்தையும் அசலையும் கவனியுங்கள்! அசங்கிதமான துளியிலிருந்து உங்களை எவ்வாறு சிருஷ்டித்திருக்கிறான்? ஒரு முறைக்கு மேல் பல முறைகளில் உங்களது கோலங்களை அவன் மாற்றி இறுதியாக உஜூது அதாவது உண்மை என்ற பரிவட்டத்தை உடுத்தியிருக்கிறான். மேலும் அவன் தான் விவேகமுள்ளவன்; கேட்காமலிருக்கும் போதே கிருபை செய்பவன்,

நீங்கள் ஒருவருக்கொருவர் அறிந்து கொள்வதற்காக உங்களை ஆண்களாகவும் பெண்களாகவும் சிருஷ்டித்து, உங்களை பல கோத்

திரங்களாகவும் வம்சத்தாராகவும் ஆக்கி இருக்கிறான். "அல்லாஹுத் தஆலாவினிடத்தில் உங்களில் மிகச் சங்கையானவர் உங்களில் மிகப் பயபக்தியுள்ளவரே". பூமியின் மீதுள்ள யாவும் அழிந்து போகக் கூடியதே. உங்களது றப்பின் அநுக்கிரகங்களில் எதனை நீங்கள் பொய்ப்பிக்கமுடியும்?

நிச்சயமாக வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்திருப்பதிலும், இரவும் பகலும் மாறி மாறி வருவதிலும் புத்தியும் உறுதியுமுள்ளவர்களுக்கு திருஷ்டாந்தங்களிருக்கின்றன. எனவே, அதிகமாக அவனை நீங்கள் ஜபிக்க வேண்டும். இரகசியத்திலும் பரகசியத்திலும் பெரிய நன்றியறிதலை சமர்ப்பிக்க வேண்டும். ஏனெனில் "என்னை நீங்கள் ஞாபகியுங்கள்! உங்களை நான் ஞாபகிக்கிறேன், இன்னும், எனக்கு நன்றி செலுத்துங்கள். மேலும், எனக்கு மாறு செய்யாதீர்கள்; என்றும், எனக்கு நீங்கள் நன்றி செலுத்துவீர்களாயின், உங்களுக்கு நான் அதிகப்படுத்துவேன் என்றும் அல்லாஹுத் தஆலா திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறான்.

"எவர் என்னை தனது மனதுக்குள் நினைக்கிறாரோ என் மனதுக்குள் அவரை நான் நினைப்பேன். இன்னும் எவர் என்னை கூட்டத்தில் ஞாபகிக்கிறாரோ அவரை அக்கூட்டத்தைப் பார்க்கினும் மேலான கூட்டத்தில் நான் நினைப்பேன்" என்று அல்லாஹுத் தஆலா கூறியதாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள் என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. மேலான அக்கூட்டம் தான் அவனது அமரர்கள்.

ஜபிப்பதில் சகல வியாதிகளுக்கு குணமிருக்கிறது. ஷைத்தானுடைய வஸ்வஸா என்னும் ஊசாட்டங்களை விட்டுக் காப்பான மிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள்! எனவே, தனது

றப்பை ஜபிக்கிறவர்களை விட்டு அவர்களது விரோதியான ஷைத்தான் விரண்டோடுகிறான். தனது றப்பை மறக்கிறவர்கள் பால் ஷைத்தான் அழிச்சாட்டியத்தைக் கொண்டு நெருங்குகிறான்,

ஆகவே, திரு குர்ஆனை ஓதுவதையும், அல்லாஹுத் தஆலாவின் ஹபீபாகிய நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து ஓதுவதையும் அதிகப் படுத்திக் கொள்ளுங்கள்! எனவே, நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஒருவர் ஒரு முறை ஸலவாத்துச் சொன்னால் அவர் மீது அல்லாஹுத் தஆலா பத்துமுறை ஸலவாத்துச் சொல்லுகிறான். ஒருவர் பத்து முறை ஸலவாத்துச் சொன்னால் அவர்மீது அல்லாஹுத் தஆலா நூறு முறை ஸலவாத்துச் சொல்லுகிறான். ஒருவர் நூறு முறை ஸலவாத்துச் சொன்னால் அவர் மீது அல்லாஹுத் தஆலா ஆயிரம் முறை ஸலவாத்துச் சொல்கிறான். ஒருவர் ஆயிரம் முறை ஸலவாத்துச் சொன்னால் அவர் மீது அல்லாஹுத் தஆலா ஒரு லக்ஷம் முறை ஸலவாத்துச் சொல்கிறான். ஒருவர் ஒரு லக்ஷம் முறை ஸலவாத்துச் சொன்னால், அல்லாஹுத் தஆலா அவருக்கு உரிமைச் சீட்டெழுதி, நரகத்தை விட்டு அவரை உரிமை விட்டு விடுகிறான்;

தவிர, வானம் பிளந்த, நக்ஷத்திரங்கள் உதிர்ந்து, சந்திரனும் சூரியனும் பிரகாச மில்லாமலாகும் தினத்தை நினைவு கூருங்கள். ஜவாய் மிருகங்களும் பறவைகளும், இதர பிராணிகளும் உயிர்ப்பித்தெழுப்பப் பட்டு, ஒரு மண்ணில் சிருஷ்டிகள் யாவும் ஒன்று சேர்க்கப்பட்டு, சப்தங்கள் யாவும் அல்லாஹுத் தஆலாவுக்கு அடங்கி விடும். ஒவ்வொரு உம்மத்தும் முழங்காலில் குந்தியவர்களாகவும், பேறு கெடுதல், அபஜய மடைதலாகியவைகளால் பயந்தவர்களாகவும் காணப்படுவார்கள்.

அல்லாஹுத் தஆலாவின் சமுகத்தை அண்டியவர்களான முகர்ரபுகள் தங்களைக் குறித்து "நப்ஸீ, நப்ஸீ! என்னையல்லாதவரை நான் தேடவில்லை" என்று, அவன் பாலுள்ள பயத்தால் கூறுவார்கள். தரையும் திட்டுகளும் அந்நாளில் நொறுக்கப்படும். மேகத்தின் நிழலில் றப்பின் (கட்டளை) வரும். மனிதனையும் ஜின்னையும் சுற்றிலும் மலக்குகள் அணிவகுத்து நிற்பார்கள். அவர்களை சுற்றிலும் நரகம் வளைத்துக் கொள்ளும்.

"மனு, ஜின் கூட்டங்களே! வானங்களினுடையவும் பூமியினுடையவும் கோணங்களை விட்டு நீங்கள் வெளியேறிச் செல்ல இயலுமாயின், நீங்கள் வெளியேறிச் சென்று விடுங்கள்! மிகைப்பைக் கொண்டல்லாமல் நீங்கள் வெளியேறிச் செல்லமுடியாது. உங்களது. றப்பின் அநுக்கிரகங்ளில் எதை நீங்கள் பொய்ப்பிக்கிறீர்கள்?

என் சகோதரர்களே! அல்லாஹுத் தஆலாவை பயந்து கொள்ளுங்கள்! பயந்து கொள்ளுங்கள்!! இந்த நாள் போன்றதற்காக நீங்கள் தயாராகிக் கொள்ளுங்கள்! தூக்கத்தை விட்டு விழித்துக் கொள்ளுங்கள்! இவ்வுலகில் எவர் தூங்கி விடுகிறாரோ அவர் கைசேதத்தையும் நஷ்டத்தையு மல்லாமல் வேறெதையும் பெற்றுக் கொள்ள மாட்டார்.

"நாயனே! கிருபையாளனே! இவ்வுலகில் நல்லார், தீயார் யாவருக்கும் சமமாகக் கிருபை செய்வோனே! எங்களுக்கு மன்னிப்புச் செய்து, எங்களுக்கிரங்கி நரகை விட்டு எங்களைக் காப்பாயாக! சன்மார்க்கத்துக்கு இணக்கமானவர்களுடன் எங்களை சுவர்க்கத்து மாளிகைகளில் பிரவேசிக்கச்செய்வாயாக!" என்று முழு மனதுடன், பக்தி வினயமாகக் கேளுங்கள்!

எல்லாப் புகழும் அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே தகும்.

أَعُوذُ بِاللّٰهِ السَّمِيعِ الْعَلِيمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○ وَلِمَنْ خَافَ مَقَامَ رَبِّهِ جَنَّتَانِ ○ فَبِأَيِّ آلَاءِ رَبِّكُمَا تُكَذِّبَانِ ○

மிகவும் அறிந்தவனை மிகச் செவியேற்பவனை அல்லாஹுத் தஆலாவினிடம் எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டுக் காவல் தேடுகிறேன்.

மேலும், தனது றப்பின் நிலையைப் பயந்தவருக்கு இரண்டு சுவர்க்கங்களிருக்கின்றன; ஆகவே, உங்களது றப்பின் அநுக்கிரகங்களில் எதை நீங்கள் பொய்ப்பிக்கிறீர்கள்?

(திரு குர்ஆன்)

بَارَكَ اللّٰهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

# اَلْخُطْبَةُ الْأُولٰى لِلْجُمُعَةِ الثَّانِيَةِ مِنْ جُمَادَى الْآخِرَةِ

## بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الْعَلِيِّ الرَّبِّ الْحَكِيْمِ ○ غَافِرِ الذَّنْبِ قَابِلِ التَّوْبِ
شَدِيْدِ الْعِقَابِ الْأَلِيْمِ ○ اَلَّذِيْ بَعَثَ لِهِدَايَةِ خَلْقِهٖ رُسُلًا
وَّأَنْبِيَاءَ وَخَصَّهُمْ بِمَزِيْدِ التَّكْرِيْمِ ○ وَجَعَلَ الْعُلَمَاءَ وَالْفُقَهَاءَ
وَرَثَةً لَّهُمْ لَمْ يُوَرِّثُوْا دِيْنَارًا وَّلَا دِرْهَمًا وَّإِنَّمَا وَرَّثُوْا طُرُقَ
التَّعَلُّمِ وَالتَّعْلِيْمِ ○ فَسُبْحَانَهٗ مِنْ إِلٰهٍ لَّمْ يُعَذِّبْ أُمَّةً مِّنَ
الْأُمَمِ إِلَّا بَعْدَ أَنْ أَرْسَلَ عَلَيْهِمْ مَّنْ يَّهْدِيْهِمْ وَيُعَلِّمُهُمُ
الْكُتُبَ وَالْحِكْمَةَ وَالسَّبِيْلَ الْقَوِيْمَ ○ وَلَمْ يَأْخُذْ عِبَادَهٗ عَلٰى
غَفْلَةٍ بَلْ رَّفَعَ عَنْهُمُ الْخَطَاءَ وَالنِّسْيَانَ وَهُوَ بِهِمْ رَؤُفٌ
رَّحِيْمٌ ○ أَشْهَدُ أَنَّهٗ لَا إِلٰهَ إِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَ
أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ صَاحِبُ الْخُلُقِ الْعَظِيْمِ ○
صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَعَلٰى آلِهٖ وَصَحْبِهِ الَّذِيْنَ هُمْ كَالسَّفِيْنَةِ
وَالنُّجُوْمِ مَنْ تَمَسَّكَ بِهِمْ اسْتَحَقَّ الثَّوَابَ الْمُقِيْمَ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ۝

يَا اَيُّهَا النَّاسُ ۝ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ
اُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ۝

## ஜமாதுல் ஆகிர் மாதம்

# இரண்டாவது ஜுமுஆ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்).

எல்லாப் புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும். அவன் மிக உயர்ந்தவன், போஷித்துப் பரிபக்குவப் படுத்துபவன். விவேக முள்ளவன், பாபத்தை மன்னிப்பவன், தௌபாவை அங்கீகரிப்பவன், வேதனை செய்வதில் கடுமையானவன். நோவினை செய்பவன், தனது சிருஷ்டிகளுக்கு நேர்வழி காட்டுவதற்காக றஸூல்மார்களையும் நபிமார்களையும் அனுப்பினான். அவர்களை விசேஷ சங்கைக்குச் சொந்தப் படுத்தினான். உலமாக்களையும் மார்க்கச் சட்டங்களை

யுணர்ந்த புக்கஹாக்களையும் அவர்களுக்கு அனந்தரக்காரர்களாக ஆக்கினான். அவர்கள் தங்க வெள்ளி நாணயங்களை, அனந்தரப் பொருளாக விடவில்லை. அவர்கள் அனந்தரமாக விட்டதெல்லாம் கற்றல், கற்பித்தல் ஆகிய வழிகளையே.

எந்த உம்மத்துக்கும் நேர்வழி காட்டிகளை அனுப்பி, அவர்களுக்கு வேதத்தையும் விவேகத்தையும், நேரான பாதையையும் கற்பித்த பிறகே அல்லாமல் அவர்களை வேதனை செய்யாத நாயன் தூயவன். தன் அடியார்கள் அஜாக்கிரதையாக இருக்கும்போது அவர்களை அவன் தண்டனையில் பிடிப்பதில்லை. அவர்களது சிறிய தவறுகளையும் மறதிகளையும் அவர்கள்மீது குற்றஞ் சாட்டாமல் நீக்கி இருக்கிறான். அவன் அவர்கள் மேல் இரக்கமும் கருணையு முள்ளவன்.

வணக்கத்துக் குரியவன் அவனைத் தவிர்த்து (வேறுயாரும்) இல்லை என்று நான் சாக்ஷியங் கூறுகிறேன். அவன் தனித்தவன். அவனுக்கு இணையில்லை. எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவு மிருக்கிறார்கள். மகத்தான நற்குணங்களுள்ளவர்கள் என்று சாக்ஷியங் கூறுகிறேன். அவர்களுக்கும் அவர்களது கிளையாருக்கும் தோழர்களுக்கும் அல்லாஹுத் தஆலா ஸலாத் என்னும் கருணையை அருள்வானாக! இவர்கள் கப்பலையும் நக்ஷத்திரங்களையும் போலிருக்கிறார்கள். இவர்களை ஊன்றுதல் பிடித்துக் கொண்டவர்கள் நிரந்தரமான நற்பயனுக் குரியவர்களாகி விடுகிறார்கள்.

أَمَّا بَعْدُ ஜனங்களே! அசட்டை என்ற தூக்கத்தை விட்டெழுந்திருங்கள்! ஜாக்கிரதை யடையவும் எழுந்திருக்கவும் முயலுங்கள்! பாக்கியமுள்ள வீட்டில் பிரவேசிப்பீர்கள். அல்லாஹுத் தஆலாவுக்கும், றஸூலுக்கும், உங்களிலுள்ள அதிகாரி

களுக்கும் வழிப்படுங்கள்! ஒரு விஷயத்தில் நீங்கள் ஒருவருக்கொருவர் பிணங்கிக் கொள்வீர்களாயின், அவ்விருவரின் பால் அதனை மீட்டுங்கள்! நோயுள்ள உங்களது சொந்த அபிப்பிராயத்தை நம்பாதீர்கள். சீன தேசத்திலிருந்த போதினும் சரியே, கல்வியைத் தேடிக் கற்றுக் கொள்ளுங்கள்! ஏனெனில், கல்வியைத் தேடிக் கற்றுக் கொள்ளுதல் முஸ்லிம் ஆண் பெண் ஒவ்வொருவருக்கும் கடமையாகும். இவ்விதமாகத் தான் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக குற்றமற்றதும் அழகானதுமான ஆதாரத்துடன் ரிவாயத்துச் செய்யப்படுகிறது.

உங்கள் மக்களுக்கு ஒழுக்கங் கற்பியுங்கள்! உங்கள் மனைவியருக்கும், உங்கள் கூட்டத்தாருக்கும் அவர்களுக்கு நன்மையை நல்குவதையும் தீமையை செய்வதையும் நோவினை செய்யும்படியான வேதனையில் ஈடுபடச் செய்வதின்னது என்பதையும் கற்றுக் கொடுங்கள்.

உங்களது மக்களுக்கு ஷரீஅத்தைப் பின்பற்றி நடக்கும்படியும் குறிப்பாக இஸ்லாத்தின் தூணாகிய தொழுகையை நிறைவேற்றுமாறும் கட்டளையிடுங்கள்! அவர்கள் ஏழு வயதினராகும் போது தொழுகையை நிறைவேற்றுமாறு ஏவுங்கள்! அவர்கள் பத்து வயதினை அடைந்த போது அவர்களை அடித்து ஏவுங்கள்! இவ்விதமாகத் தான் பெரும் கண்ணியமும் திருஷ்டாந்தங்களுமுள்ள நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ருஜூவாகி இருக்கிறது.

நன்மையை ஏவி தீயதை விலக்குவதைக் கடைப்பிடியுங்கள்! நன்மையை ஏவி தீயதை விலக்குவதை விட்டவர்கள் அல்லாஹுத்தஆலாவினது கட்டளையை மீறியவர்களாகவும் பாவிகளாகவுமிருக்கிறார்கள், மார்க்க விஷயங்களில் முகத்தாட்சண்யம் பாராட்டுவதையும், மதத்திலில்லாத ஒன்றைப் புதிதாக உற்பத்தி செய்வதையும்

விட்டு உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்! ஏனெனில், நூதனமான உண்டு பண்ணுகிற பித்அத்துக்கள் யாவும் வழிகேடானவைகளே. வழிகேடுகள் யாவும் நரகத்தின் ஆழத்தில் அவைகளை செய்பவர்களை இட்டுச் செல்லும்.

மூமின்களிலுள்ள இரு கூட்டத்தார் சண்டை போட்டுக் கொள்வார்களாயின் அவ்விருவருக்குமிடையில் சமாதானம் செய்து வையுங்கள்! அவ்விருவரில் ஒரு கூட்டம் மற்றொரு கூட்டத்துக்கு விரோதமாக அக்கிரமித்தால் நேரான வழிக்குக் கட்டுப்படும் வரை அக்கிரமக் கூட்டத்தாரை எதிர்த்து நீங்களும் சண்டை போடுங்கள்.

ஆனால், நீங்கள் ஒருவருக்கொருவர் கோபித்துக் கொள்ளாதீர்கள். ஒருவருக் கொருவர் பொறாமை கொள்ளாதீர்கள், ஒருவருக் கொருவர் உயர் வெனக்கூறி மனஸ்தாபப் பட்டுக் கொள்ளாதீர்கள், முதுகுக்குப்பின் குறை கூறாதீர்கள், அல்லாஹுத் தஆலாவின் அடியார்களே! உண்மை நாவுடனும் நேரிய மனத்துடனும் சகோதரர்களாக ஆகுங்கள்!

உங்களுக்கிடையில் ஸலாம் சொல்லிக் கொள்ளுங்கள்! இது உங்களுக்கிடையில் அபிமானத்தை அதிகப் படுத்தும், உணவளியுங்கள்! இரத்தக் கலப்புள்ள பந்துக்களை அரவணையுங்கள்! ஜனங்கள் தூங்கிக்கொண்டிருக்கும்போது இராக்காலங்களில் தொழுங்கள்! ஏனெனில், இரவில் தொழுகையை நிறைவேற்றுவது சன்மார்க்கத்துக்கு இணக்கமான பெரியோர்களது பழக்கமும், வெற்றி யடைவோரின் வழியுமாம். இரக்கமுள்ளவனான றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கு இது திருப்தியையும் அளிக்கிறது.

பூமியில் நீங்கள் விஷமம் செய்வதையும், இரத்தக் கலப்புள்ள பந்துக்களை தள்ளுவதையும் விட்டு உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்!

"பந்துக்களைப் பிரித்து விடுபவர்கள் இருக்கும் ஜன சமூகத்தில் றஹ்மத்தென்னும் கருணை இறங்காது" என மனித வர்க்கத்தின் தலைவரான நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹதீதில் வந்திருக்கிறது.

பந்துக்களில் ஒருவர் ஒரு உபகாரம் செய்தால் அதற்குப் பிரதியாக உபகாரம் செய்வது பந்துக்களை ஆதரித்ததாக ஏற்படாது. பந்துவாக இருப்பவர் தன்னை விட்டுப் பிரிந்தாலும் அவரைப் பிரிய விடாமல் இழுத்துப் பிடித்து, அவர்களை திருத்தவும் செம்மை செய்யவும் ஈடுபடுபவர்தான் பந்துக்களை அரவணைப்பவர் என்பதை அறிந்து கொள்ளுங்கள்!

நீங்கள் கேள்வி கணக்குக் கேட்கப் படுவதற்கு முன்னதாகவே உங்களை நீங்களே கேள்வி கணக்குக் கேட்டுக் கொள்ளுங்கள்! உங்களுக்குத் தவறிப்போன நன்மைகளைக் குறித்து தனிமையான இடங்களில் கைசேதப் படுவதுடன், உங்களால் நிகழ்ந்த தீமைகளுக்காக பச்சாத்தாபப் படுங்கள்! அல்லாஹுத் தஆலா உங்களுக்குக் கிருபை செய்து, அவனது மகத்தான அர்ஷின் நிழலை யல்லாமல் வேறு நிழல் இல்லாத நாளில் உங்களுக்கு நிழலளிக்கப் போதும்.

உங்களது றப்பை உள்ளச்சத்துடனும் இரகசியமாகவும் பிரார்த்தித்து, ஒவ்வொரு விநாடியிலும் நிமிஷத்திலும் அவனிடம் பிழை பொறுக்கத் தேடுங்கள்! உங்களது குற்றங்களை அல்லாஹுத் தஆலா மன்னித்து, கோபிக்க செய்யும் படியான வேதனையை விட்டு உங்களை ஈடேற்றவும் கூடும்.

நாயனே! இவ்வுலகில் யாவருக்கும் சமமாகக் கிருபை செய்வோனே!! மறுமையில் பக்தர்களுக்கு மட்டிலும் விசேஷமாகக் கிருபை செய்வோனே!! நிச்சயமாக நீ மன்னிப்பவன். கண்ணியவான்; மன்னிப்பதை நேசிக்கிறாய். ஆதலின், கண்ணியவானே! எங்களை மன்னிப்பாயாக!" என்று மனப்பூர்வமாகப் பிரார்த்தியுங்கள்.

உயர்வுள்ள மகத்துவ முள்ள அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும்.

أَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ○

لَقَدْ جَاءَكُمْ رَسُولٌ مِّنْ أَنْفُسِكُمْ عَزِيزٌ عَلَيْهِ مَا عَنِتُّمْ حَرِيصٌ عَلَيْكُمْ بِالْمُؤْمِنِينَ رَءُوفٌ رَّحِيمٌ ○ فَإِنْ تَوَلَّوْا فَقُلْ حَسْبِيَ اللّٰهُ لَا إِلٰهَ إِلَّا هُوَ عَلَيْهِ تَوَكَّلْتُ وَهُوَ رَبُّ الْعَرْشِ الْعَظِيمِ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலா வினிடத்தில் காவல் தேடுகிறேன்.

உங்கள் இனத்திலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் திட்டமாக வந்திருக்கிறார். நீங்கள் வருத்தமாகுதல் அவருக்குச் சலிப்பாக இருக்கிறது. உங்கள் பால் பேராசையுள்ளவர்; மூமின்களுக்குப் பக்ஷமுள்ளவர்; அன்புள்ளவர், ஆதலின், அவர்கள் பின் வாங்கி விடுவார்களாயின், 'எனக்கு அல்லாஹ் போதுமானவன்; அவனைத் தவிர்த்து வணக்கத்துக் குரியவன் (வேறு யாரும்) இல்லை, அவன் மீது பொறுப்புக் கொடுத்திருக்கிறேன் மேலும், அவன் மகத்தான அர்ஷுக்கு றப்பு' என்று கூறுவீராக.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللّٰهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْاٰنِ الْعَظِيْمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ بِالْاٰيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ إِنَّهُ تَعَالٰى جَوَادٌ كَرِيْمٌ مَلِكٌ قَدِيْمٌ بَرٌّ رَؤُوْفٌ رَّحِيْمٌ وَرَبٌّ حَلِيْمٌ ○

# اَلْخُطْبَةُ الْاُولٰى لِلْجُمُعَةِ الثَّالِثَةِ مِنْ جُمَادَى الْاٰخِرَةِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ○ خَالِقِ كُلِّ مَكَانٍ وَّمَكِيْنٍ ○ مُدَبِّرِ السَّمٰوَاتِ وَالْاَرَضِيْنَ ○ اَحْمَدُهٗ حَمْدًا كَثِيْرًا كَحَمْدِ الشَّاكِرِيْنَ ○ وَاَشْكُرُهٗ شُكْرًا كَثِيْرًا فِيْ كُلِّ حِيْنٍ ○ اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَلَا نَظِيْرَ لَهٗ وَلَا مُعِيْنَ ○ وَاَشْهَدُ اَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ سَيِّدُ الْاَوَّلِيْنَ وَ الْاٰخِرِيْنَ ○ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَعَلٰٓى اٰلِهٖ وَصَحْبِهٖ وَمَنْ تَبِعَهُمْ اِلٰى يَوْمِ الدِّيْنِ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ○

يَآ اَيُّهَا النَّاسُ ○ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ اُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ○

## ஜமாதுல் ஆகிர் மாதம்

# மூன்ருவது ஜும்ஆ

بسم الله الرحمن الرحيم

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்.)

அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே சகல புகழும் தகும். இடத்தையும் இடத்திலிருப்பதையும் சிருஷ்டித்தவன். வானங்களையும் பூமிகளையும் நிர்வகிப்பவன். நன்றியறிதலுள்ளவர்கள் புகழ்வதைப் போல் அவனை ஏராளமாகப் புகழ்கின்றேன். ஒவ்வொரு க்ஷணத்திலும் அவனுக்கு ஏராளமாக நன்றி செலுத்துகிறேன்.

வணக்கத்துக் குரியவன் அவனைத் தவிர்த்து (வேறு யாரும்) இல்லை என்று நான் சாக்ஷியங் கூறுகிறேன். அவன் தனித்தவன், இணையற்றவன். துணையற்றவன். நிகரற்றவன் எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் திருத்தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாக்ஷியங் கூறுகிறேன். அவர்கள் முன்னோர்களுக்கும் பின்னோர்களுக்கும் தலைவர். அவர்களுக்கும், அவர்களது கிளையாருக்கும், தோழர்களுக்கும், இவர்களைப் பின்பற்றுவோர்களுக்கும் கடை நாள்வரை அல்லாஹுத் தஆலா ஸலாத் என்னும் கருணையை அருள்வானாக!

## أَمَّا بَعْدُ இங்கு விஜயம் செய்த கூட்டத்தாரே!

அல்லாஹுத் தஆலாவுக்கு பயபக்தி செலுத்த வேண்டிய அளவுக்கு பயபக்தி செலுத்துங்கள்! முஸ்லிம்களில் இல்லாமல் நீங்கள் மரிக்க வேண்டாம். மறு உலகப் பேறுக்காக இவ்வுலகிலேயே கட்டமுதைக் கட்டி கொள்ளுங்கள்! கட்டமுதில் மேலானது தக்வா என்னும் பயபக்திதான்! மேலும், அல்லாஹுத் தஆலா பயபக்தி யுள்ளவர் களுடனிருக்கிறான்.

தவிர, எவர் அல்லாஹுத் தஆலாவுக்குப் பயபக்தி செலுத்து கிறாரோ அவருக்கு ஒரு போக்கை அவன் ஏற்படுத்தி, அவர் அறியாத விதத்தில் அவருக்கு உணவளித்து, வெற்றிக் கொண்டோரில் அவர்களை ஆக்குகிறான்.

பெரியதும் சிறியதுமாகிய ஷிர்க்கை விட்டு உங்களைத் தடுத்துக் கொள்ளுங்கள்! அல்லாஹுத் தஆலாவுக்கு அவனது தாத்திலோ அல்லது ஸிபாத்திலோ அதாவது குணங்களிலோ அல்லது குன் ஹிலோ இணைவைப்பவரது கிரியைகள் அழிந்து விடுகின்றன. அல்லா மலும் அழிந்து போகுபவர்களில் அவருமாகி விடுகிறார்.

அல்லாஹுத் தஆலாவுக்கு அவனளித்த நன்கொடை களுக்காக நன்றி செலுத்துங்கள்! அவனது அநுக்கிரகங்களுக்காக அவனைப் புகழுங்கள்! தவிர, எவரேனும் நன்றி மறந்தால் நிச்சயமாக அல்லாஹுத் தஆலா அகிலத்தாரின் பால் தேவையில்லாதவன். மனிதன் தான் சம்பாதித் திருப்பதை ஞாபகம் செய்து, பார்ப்பவர் களுக்கென நரகம் வெளிப்படுத்தப் படும் தினத்தை அதாவது அகிலத் தாரின் றப்பினிடத்தில் ஜனங்கள் நிற்கும் நாளை நினைத்துக் கொள்ளுங்கள்!

அது ஒரு நாள். அதில் சிருஷ்டிகள் அம்பலப் படுத்தப்படு வார்கள். மறைப்பவர்களது மறைப்புக்களெல்லாம் அன்று வெளிப் படுத்தப்படும். ஒவ்வொரு செயலும் சொல்லும் குறித்து வினவப் பட்டு, விசாரிக்கப்படுவான். அன்றைய தினத்தில் ஆடவன் தனது மனைவியுடனும், சகோதரன் தனது சகோதரனுடனும், மகன் பெற்றோர் களுடனும், பெற்றோர்கள் தங்கள் மக்களுடனும் வழக்குச் செய் வார்கள். அன்று பாத்தியஸ்தர்களுக்கு பாத்தியம் கொடுக்கப்படும். பாத்திய மிருப்பதாகக் கோருவோர் ஒவ்வொருவருக்கும் அவர் அரு கதை நிறைவேற்றப்படும். "அறிந்துகொள்! அக்கிரமஸ்தர்கள் மீது அல்லாஹ்வின் கோபம் உண்டாவதாக" என்று அந்நாளில் சப்தமிடுபவர் சப்தமிடுவார்.

எனவே, அல்லாஹுத் தஆலாவை அஞ்சுங்கள்! அஞ்சுங்கள்! அல்லாஹ்வின் அடியார்களே! அவனுக்குப் பயபக்தி செலுத்துங்கள்! உண்மையாளர்களுடன் நீங்களாகி விடுங்கள்! அவனிடத்திலேயே பிழை பொறுக்கத் தேடுங்கள்! பொருள்களையும் பிள்ளைகளையும் கொண்டு உங்களுக்கு உதவுவான்.

ஐங்காலத் தொழுகைகளை ஜமாஅத்தாகத் தொழுவதைக் கடைப் பிடியுங்கள்! இவைகளைப் பேணி நிறைவேற்றியவருக்கு கியாமத்து நாளில் ஒரு பிரகாசமும், ஒரு ஆதாரமும் ஏற்படும். இவைகளைப் பேணி நிறைவேற்ருதவர் பிர்ஔன், ஹாமான், காறூன், உபய்யுப்னுகலப், ஷைத்தான்களின் தலைவர்கள் ஆகியோருடன் உயிர்ப்பித் தெழுப்பப் படுவார்கள்.

உங்களது மாதத்தில் நோன்பு நோறுங்கள்! உங்கள் பொருள்களுக்குள்ள ஜக்காத் வரியைக் கொடுத்து நிறைவேற்றுங்கள்! திரு கஃபா ஹஜ்ஜுச் செய்யப்படாமல் போகும் நாள் வருவதற்கு முன்னதாகவே ஹஜ்ஜுச் செய்து கொள்ளுங்கள்! அல்லாஹுத்

தஆலா உங்களுக்கு ஏவியதை நிறைவேற்றி, அவன் உங்களுக்கு விலக்கியதை விட்டு விலகிக் கொள்ளுங்கள்! மேலும், மறந்தவர்களில் நின்றும் ஆகி விடாதீர்கள்.

சகல காரியங்களிலும் அல்லாஹுத் தஆலாவின் மீது தவக்கல் வையுங்கள்! அதாவது அவனிடம் பொறுப்புக் கொடுங்கள்! காலங்களிலேற்படுகிற கஷ்டங்களைச் சகித்துக் கொள்ளுங்கள். ஏனெனில், அல்லாஹுத் தஆலா முத்தவக்கில்களை அதாவது அவனிடத்தில் பொறுப்புக் கொடுப்பவர்களை நேசிக்கிறான்.

தவிர, இவ்வுலகைக் குறித்த கவலைகளை உங்களுக்கு இலேசாக்கிக் கொள்ளுங்கள். ஒருவரது கவலைகளில் இவ்வுலகம் தான் பிரதானமாக இருக்குமாயின் பழிக்கத் தக்க வேதனைக்கு அவர் அருகதையுள்ளவராகி விடுகிறார்.

மேலும், பூமியிலுள்ள பிராணியில் நின்றும் (எதுவும்) அதற்குரிய உணவு அல்லாஹ்வின் மீது பொறுப்பில்லாமல் இல்லை, மேலும், அதன் தங்கு மிடத்தையும், அது ஒப்புவிக்கப்படுகிற இடத்தையும் அறிகிறான், யாவும் தெளிவான புத்தகத்தில் இருக்கிறது'' என்று அல்லாஹுத் தஆலா கூறி இருப்பதை நீங்கள் செவியேற்கவில்லையா?

களங்கமற்ற மனத்தினராகக் கண்ணீரும் கம்பலையுமாக "சங்கையும் வல்லமையு முள்ளவனே! கிருபை செய்வோர்களுக்கெல்லாம் அதிகக் கிருபையுள்ளோனே! நாங்களோ பாபம் என்ற சமுத்திரங்களில் மூழ்கியவர்களாக இருக்கிறோம், அவைகளை விட்டு எங்களை வெளியேற்றி, நபிமார்கள், ஸித்தீக்குகள், ஷஹீதுகள், நல்லோர்கள் ஆகியவர்களுடன் உனது சுவர்க்கத்தில் எங்களைப் பிரவேசிக்கச் செய்வாயாக! எங்களை க்ஷமிப்பாயாக! எங்கள் தவறுகளை

எங்களை விட்டு மறைப்பாயாக! எங்கள் தேவைகளை எங்களுக்கு நிறைவேற்றுவாயாக! எங்கள் விருப்பங்களை எங்களுக் களிப்பாயாக! நிச்சயமாக நீ தான் பிரார்த்திப்பவர்களுக்கு அவரவர் தராதரப்படி நிறைவேற்றுபவன்" என்று பிரார்த்தியுங்கள்!

அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும்.

أَعُوذُ بِاللّٰهِ السَّمِيعِ الْعَلِيمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○
يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللّٰهَ وَكُونُوا مَعَ الصَّادِقِينَ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு மிக அறிந்தவனை, மிகச் செவியேற்பவனை அல்லாஹுத் தஆலாவினிடம் காவல் தேடுகிறேன்.

விசுவாசங் கொண்டவர்களே! அல்லாஹ்வை அஞ்சுங்கள்! இன்னும் உண்மையாளர்களுடன் ஆகுங்கள்!

(திரு குர்ஆன்)

بَارَكَ اللّٰهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ
بَرٌّ رَؤُفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الرَّابِعَةِ مِنْ جُمَادَى الْاٰخِرَةِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ عَجَزَتْ عَنْ اِدْرَاكِ كُنْهِهِ الْعُقُوْلُ وَالْاَوْهَامُ وَتَحَيَّرَتْ فِيْ دَرْكِ سِرِّهِ الْمَدَارِكُ وَالْاَفْهَامُ ○ جَلَّتْ قُدْرَتُهٗ وَعَظُمَتْ سَطْوَتُهٗ يُقَلِّبُ اللَّيَالِيَ وَالْاَيَّامَ ○ وَيُنَزِّلُ الْغَيْثَ وَيَعْلَمُ مَا فِي الْاَرْحَامِ ○ فَسُبْحَانَهٗ مِنْ اِلٰهٍ تَفَرَّدَ بِخَلْقِ الْخَلْقِ وَحُسْنِ الْاِنْتِظَامِ ○ اَشْهَدُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ فِي النَّظْمِ وَالْاِحْكَامِ ○ وَاَشْهَدُ اَنَّ سَيِّدَنَا وَمَوْلَانَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ صَاحِبُ الشَّفَاعَةِ وَالْمَقَامِ ○ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَعَلٰٓى اٰلِهٖ وَسَلَّمَ اِلٰى يَوْمِ الْقِيَامِ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ○

يٰٓاَيُّهَا النَّاسُ ○ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ اُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ○

## ஜமாதுல் ஆகிர் மாதம்

# நான்காவது ஜும்ஆ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்).

எல்லாப்புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும். அவனது குன்ஹு என்னும் சுயாம்புவை முற்றும் உணரும் விஷயத்தில் அறிவுகளும் ஹேஷ்யங்களும்கூட முடியாமலாகி விட்டன. அவனது இரகசியத்தை விளங்கிக்கொள்ளும் விஷயத்தில் உணர்வும் விளக்கங்களும் கூடத் திகைப்படைந்து விட்டன. அவனது தத்துவம் பெரிது. அவனது பராக்கிரமம் மகத்தானது, இரவுகளையும் பகல்களையும் புரட்டுகிறான். அவன் மழையை இறக்குகிறான். கர்ப்பங்களிலுள்ளதை அவன் அறிகிறான்.

சிருஷ்டிகளைச் சிருஷ்டிக்கும் விஷயத்திலும் அழகிய முறையில் நிர்வகிப்பதிலும் தனித்தவனான அந்த நாயன் மிகத் தூயவன்.

வணக்கத்துக் குரியவன் அவனைத் தவிர்த்து (வேறு யாரும்) இல்லை, அவன் தனித்தவன், கட்டளையிடுவதிலும் நிர்வகிப்பதிலும் அவனுக்கு இணை இல்லை என்று சாக்ஷியங் கூறுகிறேன். எங்கள் நாயகம் எங்கள் எஜமானர் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும், திருத் தூதராகவும், ஷபாஅத்தும் மக்காமுல் மஹ்

மூதும் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் என்று சாக்ஷியங் கூறுகிறேன். கியாமத்து நாள் வரை அல்லாஹுத் தஆலா அவர்களுக்கும் அவர்களது கிளையார் தோழர்களுக்கும் ஸலாத் என்னும் கருணை புரிவானாக!

أَمَّا بَعْدُ சகோதரர்களே! தோழர்களே!! அஜாக்கிரதையில் இந்த நீடிப்பு எத்தனை காலத்துக்கு? இச்சையை நிறைவேற்றிக் கொள்வதில் மூழ்கி இருப்பது எத்தனை காலத்துக்கு? ஹறாமென்னும் விலக்கலைச் சம்பாதிப்பதில் இந்தத் துணிச்சல் எத்தனை காலத்துக்கு?

இரவுகளும் பகல்களும் மாறுபாடடைவதை நீங்கள் படிப்பினையாகக் கொள்ள மாட்டீர்களா? சென்றுபோன சங்கைவான்களது ஜீவிய சரித்திரங்களை ஆராய மாட்டீர்களா? வணக்கம் புரியும் விஷயத்தில் முழு முயற்சியாக முயன்று கொண்டும், விஷமம், குற்றம், தீமை ஆகியவற்றை விட்டு விலகிக் கொண்டுமிருந்தனர். அல்லாஹுத் தஆலாவின் கட்டளை சம்பந்தமுள்ள காரியங்களில் பழிப்பவர்களது பழிப்பைப் பயப்படாமலும் நிரந்தரமான நித்தியனான அரசனின் கட்டளைகளை அசட்டை செய்யாமலும் இருந்து கொண்டிருந்தனர். ஷரீஅத்தைப் பின்பற்றுவதில் தங்கள் வாணட்களைக் கழித்ததுடன் பெரும் பழிக்கத்தக்க காரியங்களை விட்டுத் தங்கள் ஸ்தூலங்களையும் ஆன்மாக்களையும் சுத்தப் படுத்தினார்கள்.

விர்துகளையும் திக்றுகளையும் அதிகமாக ஓதுவதன் மூலமும், நபில்களையும் ஸுன்னத்துக்களையும் அதிகமாக நிறைவேற்றுவதன் மூலமும், மிக அறிந்தவனான மிகைத்தவனான அல்லாஹுத் தஆலாவின் சமுகத்தை அண்டினர். புறங் கூறல், கோள் சொல்லல், பொய்யுரைத்தல், வாய்ச் சண்டை பிடித்தல், பெரும் நாசகரமான இதர காரியங்களை விட்டு தங்கள் நாவைக் காத்துக் கொண்டனர்.

எரிச்சல், பொறாமை, பேராசை, தற்பெருமை, அகம்பாவம், மதிப்புப்பெருமை, பெரும் நாசகரமான இதர காரியங்களை நேசிப்பதை விட்டு தங்கள் மனங்களைத் தெளிவாக்கும் விஷயத்தில் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டனர். எனவே, உயர்தரமான அந்தஸ்துகளை அடைந்தனர், அதிக மேன்மைகளைப் பெற்று தாருஸ்ஸலாம் என்னும் சுவர்க்கத்துக்கு அருகதை யுள்ளவர்களாயினர். எனவே, அவர்களுக்கே சோபனம்! அவர்களைப் பின்பற்றியவர்களுக்கு நோவினையை விட்டு ஈடேற்றம் பெறுவதைக் குறித்த சுவிசேஷ முண்டாவதாக!

உங்களிலிருந்து எவ்வளவு ஆச்சரியம்? அவர்கள் பால் நீங்கள் சேர்ந்திருப்பதாகக் கூறுகிறீர்கள். ஆனால் அவர்கள் நேர்வழியில் நீங்கள் நடக்கிறீர்களில்லை. அவர்களில் உள்ளவர்கள் என நீங்கள் தாவாச்செய்கிறீர்கள். ஆனால், அவர்களது வழிகளை நீங்கள் பின்பற்று கிறீர்களில்லை. பகல்கள் இரவுகள் முழுவதிலும் அவர்களுக்கு மாறு செய்கிறீர்கள்.

"ஒருவரை அவரது கிரியைகள் தாமதமாக்குமாயின் அவரை அவரது வம்சம் துரிதமாக்காது" என எங்கள் நபி (ஸல்) அவர்கள் கூறி இருப்பதை நீங்கள் கேள்விப்படவில்லையா? உயந்த அந்தஸ்து களுள்ளவர்களைச் சேர்ந்தவர்களாக இருப்பவர்கள் என்று சொல்லிக் கொள்வது மட்டும் கைசேதமும் நோவினைகளுமுள்ள நாளில் பிரயோஜனம் செய்யாது என்பதை நீங்கள் அறியவில்லையா? அசட்டை என்ற தூக்கத்தை விட்டெழுங்கள்! கேள்வி கணக்குக் கேட்டு பழிவாங்கும் நாளைப் பயப்படுங்கள்!!

நீங்கள் தனித்திருக்கும் போதும் சேர்ந்திருக்கும் போதும் பாவங்களையும் குற்றங்களையும் விட்டு உங்களது றப்பினிடத்தில் பிழை பொறுக்கத் தேடுங்கள்!

"நாயனே! நீ தான் ஈடேற்ற மளிப்பவன். உன்னிலிருந்தே ஈடேற்றம் அளிப்பதிருக்கிறது. ஈடேற்றம் உன்பாலிலேயே மீளுகிறது. எங்கள் றப்பே! ஈடேற்றத்துடன் எங்களை ஜீவிக்கச் செய்வாயாக! ஈடேற்றத்தின் வீடாகிய தாருஸ் ஸலாமில் எங்களைப் பிரவேசிக்கச் செய்வாயாக! வல்லமையும் சங்கையு முள்ளவனே!" என்று மிக அறிந்தவனை மிகைத்தவன் பாலில் உங்களது கரங்களை ஏந்தியவர்களாகப் பிரார்த்தியுங்கள்!

சகல புகழும் அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே தகும்.

أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○

فَلَا تَحْسَبَنَّ اللهَ مُخْلِفَ وَعْدِهِ رُسُلَهُ إِنَّ اللهَ عَزِيزٌ ذُو انْتِقَامٍ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு மிக அறிந்தவனை மிகச்செவி யேற்பவனை அல்லாஹுத் தஆலாவினிடம் காவல் தேடுகிறேன்.

அல்லாஹ் தனது றஸூல்மார்களுக்கு அளித்துள்ள தனது வாக்குறுதிக்கு மாறு செய்பவன் என்று நீங்கள் எண்ணிக் கொள்ள வேண்டாம், நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவன்; பழி வாங்குபவன்

(திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ

بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ

بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الْخَامِسَةِ مِنْ جُمَادَى الْاٰخِرَةِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ رَافِعِ السَّمَآءِ بِغَيْرِ عِمَادٍ ○ بَاسِطِ الْاَرْضِ لِلْمِهَادِ ○ اَحْمَدُهٗ حَمْدًا كَثِيْرًا عَلٰى اَنْ زَيَّنَ السَّمٰوٰتِ بِمَصَابِيْحَ وَ جَعَلَهَا رُجُوْمًا لِلشَّيَاطِيْنِ وَذَرِيْعَةً لِاهْتِدَآءِ الْعِبَادِ ○ وَاَشْكُرُهٗ عَلٰى اَنْ جَعَلَ مَا عَلَى الْاَرْضِ زِيْنَةً لَّهَا وَسَكَّنَهَا بِالْجِبَالِ الْاَوْتَادِ ○ اَشْهَدُ اَنَّهٗ لَا اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَهُوَ الْكَرِيْمُ الْجَوَادُ ○ وَاَشْهَدُ اَنَّ سَيِّدَنَا وَمَوْلَانَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ سَيِّدُ كُلِّ حَاضِرٍ وَّبَادٍ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ○

يٰاَيُّهَا النَّاسُ ○ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ ○ اُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ○

## ஜமாதுல் ஆகிர் மாதம்

# ஐந்தாவது ஜும்ஆ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

எல்லாப்புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும். அவன் தூண்களில்லாமல் வானத்தை உயர்த்தி இருக்கிறான், பூமியை தொட்டிலாக விரித்திருக்கிறான், வானங்களை விளக்குகளைக் கொண்டு அழகாக்கி, ஷைத்தான்களுக்கு எரிகற்களாகவும் அடியார்களுக்கு வழி காட்டும் கருவியாகவும் அவைகளை ஆக்கியதற்காக அவனை மிகுதமாகப் புகழ்கின்றேன், பூமியின் மீது அலங்காரமாக இருப்பதற்காக முளைகளாகிய மலைகளைக் கொண்டு அதனை நிலைக்கச் செய்ததற்காக அவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

வணக்கத்துக் குரியவன் அல்லாஹ்வைத் தவிர்த்து (வேறு யாரும்) இல்லை, அவன் தனித்தவன். அவனுக்கு இணையில்லை, அவனே தயையுள்ளவன், இரக்க முள்ளவன் என்று நான் சாக்ஷியங் கூறுகிறேன். எங்களது நாயகம் எங்களது எஜமானர் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும், தூதராகவும், நகரவாசிகளுக்கும் கிராமவாசிகளுக்கும் தலைவராகவும் இருக்கிறார்கள் என்று சாக்ஷியங் கூறுகிறேன்.

أَمَّا بَعْدُ ஜனங்களே! காலங்கள் மாறுவதையும், நேரங்கள் கழிவதையும் சிந்தித்துப் பாருங்கள்! தந்தையர்களும், தனையர்களும், பௌத்திரர்களும் எங்கே? நண்பர்களும் அன்பர்களும் பாட்டன்களும் எங்கே? பிர்ஔனும் ஹாமானும் எங்கே? காறூனும் நம்றூதும் ஷத்தாதும் எங்கே? பள்ளத்தாக்கிலுள்ள பாறைகளைக் குடைந்தவர்கள் எங்கே? மூளைகளைக் கொண்டு அல்லாஹுத் தஆலாவின் நல்லடியார்களை வதை செய்தார்களே அந்தக் கூட்டத்தார் எங்கே? பட்டணங்களில் விஷமம் செய்து அழிச்சாட்டியங்களைப் புரிந்துக் கொண்டிருந்தவர்கள் எங்கே?

இரவுகளும் பகல்களும் மாறி மாறிச் சென்று கொண்டிருப்பது அவர்களை அழித்து விட்டது, பலமான ஏழு வானங்கள் சுற்றி வருவது அவர்களை நாசமாக்கி விட்டது, அவர்களைக் குறித்த கதைகளையும் செய்திகளையும் அல்லாமல் வேறெதையும் நீங்கள் காண்கின்றீர்களா? அவர்களது படைகளிலும் அடையாளங்களிலும் ஏதேனும் எஞ்சி இருக்கிறதா?

எனவே, அசட்டை என்ற சிறு தூக்கத்தை விட்டெழுந்து உங்களது சிறியதும் பெரியதுமான கியாமத்து ஏற்பட்டு, அடியார்கள் யாவரும் கேள்வி கணக்குக் கேட்கப்படுகிற தினத்தை அஞ்சுங்கள்! உங்களுக்கு முன்னுள்ளவர்கள் ஏமாற்றமடைந்து அழிந்து, மற்றவர்களையும் அழித்து, இறைவனது கிருபையை விட்டுத் தூரமாக அருகதையடைந்தது போல இந்த உலகமும் இதன் அலங்காரமும் நிலைத்திருக்குமென நினைத்து நீங்களும் ஏமாற்றமடைந்து விடாதீர்கள். இதில் நீங்கள் நிரந்தரமாக இருப்பீர்கள் என்று எண்ணுகிறீர்களா?

**“நிச்சயமாக நீர் மரிப்பவரே, இன்னும் நிச்சயமாக அவர்களும் மரிப்பவர்களே”** என்று உங்கள் நபிக்கு உங்கள் றப்பு கூறியது

உங்கள் செவிப் புலன்களைத் தட்ட வில்லையா? உங்களது றப்பு வழி பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை நீங்கள் அறியவில்லையா? அல்லாஹுத் தஆலாவினது ஏவல்களுக்கு அடிபணிவதையும், அவன் விலக்கியவைகளை விட்டு விலகிக் கொள்வதையும், அதிகமான திக்றுகளையும் விர்துகளையும் ஓதுவதைப் பற்றிக் கொள்வதையும் கடைப்பிடியுங்கள்!

எவரது நா அல்லாஹுத் தஆலாவை ஜபிப்பதிலேயே ஈடுபட்டிருக்கிறதோ அவர் கியாமத்து நாளில் உயர்ந்த அந்தஸ்துகளைப் பெறுவார். தினந்தோறும் அந்தியிலும் சந்தியிலும் அல்லாஹுத் தஆலாவை பிரார்த்தியுங்கள்! அது வணக்கத்துக்கு மூளையாக இருக்கிறது.

ஒவ்வொரு க்ஷணத்திலும் அவனிடம் பிழை பொறுக்கத் தேடுங்கள்! ஏனெனில், உங்கள் எஜமான் இரக்க முள்ளவன்! அன்பாளன், மன்னிப்பவன், தயையுள்ளவன், உங்களுக்கு நோய் வருவதற்கு முன்னதாக உங்கள் சவுக்கியத்தையும், உங்களுக்கு வயோதிகம் வருவதற்கு முன்னதாக உங்களுக்கிருக்கிற வாலிபப் பருவத்தையும், உங்களுக்குத் தரித்திரம் வருவதற்கு முன்னதாக உங்களுக்குக் கிடைத்திருக்கிற சீமான்தனத்தையும், உங்களுக்குச் சோதனை வருவதற்கு முன்னதாக உங்களுக் கிருக்கிற க்ஷேமத்தையும், உங்களுக்கு மரணம் வருவதற்கு முன்னதாக உங்களுக்கிருக்கிற ஜீவியத்தையும் நீங்கள் கொள்ளை முதலாகக் கொள்ளுங்கள்! ஏனெனில், நாங்கள் உலகத்துக்குத் திரும்பச் சொல்ல முடியுமா? அவ்வாறு திரும்பச் செல்ல முடியுமானால் இப்பொழுது நாங்கள் செய்ததைப் பார்க்கிலும் அழகான காரியங்களை நாங்கள் செய்வோமே என்று நீங்கள் சொல்லாமலிருப்பதற்காகவே. அவ்வாறு நீங்கள் கூறுவீர்களாயின், "முன்னர் நீங்கள் மாறு செய்து, விஷமிகளது கூட்டத்தில் நீங்களாகி இருந்தீர்கள், அப்படி இருக்க இப்பொழுதா?" என்று உங்களுக்குச் சொல்லப்படும்.

அல்லாஹுத் தஆலாவின் திருப்திகளைத் தேடும் விஷயத்தில் முயற்சி செய்ய வேண்டிய அளவுக்கு முயற்சி செய்யுங்கள்! ஏனெனில் எவனது நாவையும் கையையும் விட்டு மற்றைய முஸ்லிம்கள் ஈடேற்றம் பெற்றிருக்கிறார்களோ அவர் தான் சரியான முஸ்லிம்; அல்லாஹுத் தஆலா விலக்கியதை எவர் வெறுத்துத் தள்ளுகிறாரோ அவர் தான் சரியான முஹாஜிர்; எவர் தனது நப்ஸினிடம் போராட வேண்டிய அளவுக்குப் போராடுகிறாரோ அவர் தான் சரியான போர் வீராகிய முஜாஹிது.

பின்னின்று குறை கூறுவதையும், ஒருவருக்கொருவர் வெறுத்துக் கொள்வதையும், ஒருவருக்கொருவர் உயர்வாக மதித்தலையும், கோபித்துக் கொள்வதையும், பெருமையையும், பொருளை நேசித்தலையும், வழி கெட்டவர்களுக்குக் கீழ்ப்படிதலையும், சண்டை சச்சரவு செய்தலையும், சோம்பலையும், தவறுதலையும். மூரண்பாடு செய்வதையும் தவிர்த்துக் கொள்ளுங்கள்,

நப்ஸே அம்மாராவை அற்பமான கலப்புகளை விட்டுச் சுத்தப் படுத்துவதையும், பழிக்கத்தக்க தன்மைகளை நீக்குவதையும் கடைப் பிடியுங்கள். முழு மனதுடன் தனது றப்பின் பால் முன்னோக்கி, அவனது ஷரீஅத்துக்கு தனது நெஞ்சைக் கீழ்ப்படுத்தி, அடியார்களை அவன் விலக்கி இருப்பதை விடுத்தவர்களுக்கே மங்களம்!

ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புபவர்களுக்கு இது 'ஞாபக மூட்டி'யாக இருக்கிறது. உள்விளங்கிக் கொள்ள விரும்புவோருக்கு உள்விளக்கமாகவும் நேர் வழியில் நடப்பவர்களுக்கு வழி காட்டியாக வும் இருக்கிறது.

என்னையும் உங்களையும் ஏனைய எல்லா முஸ்லிம்களையும் மன்னிக்கும்படி அல்லாஹுத் தஆலாவினிடம் கேளுங்கள் என்று இதை உங்களுக்குக் கூறுகிறேன், மேலும், அல்லாஹு(த் தஆலா) வினிடம் என் காரியத்தை ஒப்புவிக்கிறேன். நிச்சயமாக அல்லாஹ், அடியார்களை உள் விளங்கியவன்.

எல்லாப்புகழும் அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே தகும்,

أَعُوْذُ بِاللهِ السَّمِيْعِ الْعَلِيْمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ۝
وَيَقُوْلُ الَّذِيْنَ كَفَرُوْا لَوْلَآ أُنْزِلَ عَلَيْهِ آيَةٌ مِّنْ رَّبِّهِ إِنَّمَآ
أَنْتَ مُنْذِرٌ وَّلِكُلِّ قَوْمٍ هَادٍ ۝

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு, மிக அறிந்தவனை மிகச் செவியேற்பவனை அல்லாஹுத் தஆலாவினிடம் காவல் தேடுகிறேன்.

அவருடைய றப்பினிடமிருந்து அவருக்கு ஒரு அற்புதம் அருளப் படலாகாதா என்று காபிரானவர்கள் கூறுகிறார்கள். நீர் (அச்சமூட்டி) எச்சரிக்கை செய்பவர் தான், மேலும், ஒவ்வொரு சமூகத்துக்கும் ஒரு வழி காட்டி இருக்கிறார்.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيْمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيْمٌ مَلِكٌ قَدِيْمٌ
بَرٌّ رَؤُوْفٌ رَّحِيْمٌ وَرَبٌّ حَلِيْمٌ ۝

---

# الخطبة الثانية لجمع جمادى الآخرة وما قبلها من الشهور جمادى الاولى وشهر ربيع الآخر

بسم الله الرحمن الرحيم ○

الحمد لله العلي الاكبر ○ لا راد لما قضاه ولا دافع لما قدر ○ احمده حمدا كثيرا واشكره شكرا كبيرا ونستعينه ونستغفره ونتوب اليه عما صدر ○ اشهد ان لا اله الا هو وحده صاحب القوى والقدر ○ واشهد ان سيدنا محمدا عبده ورسوله المبعوث الى كافة الخلق من الاسود والاحمر ○ صلى الله وسلم على سيدنا محمد وعلى اله وصحبه اجمعين

اما بعد ايها المؤمنون ○ اتقوا الله حق تقاته ولا تموتن الا وانتم مسلمون ○ واعتصموا بحبل الله جميعا ولا تفرقوا فمن شذ عن الجماعة شذ في السقر ○ وعليكم باتباع السنة واجتناب البدعة فان السنة تهدي الى الجنة والبدعة تهوي بصاحبها الى النار ذات الوقود

وَالشَّرَرِ ۝ وَعَلَيْكُمْ بِكَثْرَةِ الصَّلٰوةِ وَالسَّلَامِ عَلٰى سَيِّدِ

الْبَشَرِ ۝ لَا سِيَّمَا فِي اللَّيْلَةِ الزَّهْرَآءِ وَالْيَوْمِ الْاَزْهَرِ ۝ فَاِنَّ

صَلٰوتَكُمْ مَقْبُوْلَةٌ مَشْهُوْدَةٌ وَّشَافِعَةٌ لَّكُمْ يَوْمَ الْمَحْشَرِ ۝

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِهٖ وَاَصْحَابِهٖ

وَاَزْوَاجِهٖ وَاَتْبَاعِهٖ صَلٰوةً دَآئِمَةً بِدَوَامِ الشَّمْسِ وَالْقَمَرِ ۝

خُصُوْصًا مِّنْهُمْ عَلٰى اَوَّلِ الْخُلَفَآءِ بِالتَّحْقِيْقِ رَفِيْقِهٖ فِي الْغَارِ

بِالتَّصْدِيْقِ اَمِيْرِ الْمُؤْمِنِيْنَ اِمَامِ الْمُسْلِمِيْنَ سَيِّدِنَا اَبِيْ بَكْرِ

نِ الصِّدِّيْقِ رَضِيَ اللّٰهُ عَنْهُ الْاَكْبَرِ ۝ وَعَلٰى ثَانِي الْخُلَفَآءِ رَاْسِ

الْاَتْقِيَآءِ ۝ اَمِيْرِ الْمُؤْمِنِيْنَ اِمَامِ الْمُتَّقِيْنَ سَيِّدِنَا عُمَرَ فَازَ

بِالْحَظِّ الْاَوْفَرِ ۝ وَعَلٰى ثَالِثِ الْخُلَفَآءِ سَيِّدِ اَرْبَابِ الْحَيَآءِ

اَمِيْرِ الْمُؤْمِنِيْنَ اِمَامِ الْاَكْرَمِيْنَ سَيِّدِنَا عُثْمَانَ ذِي النُّوْرَيْنِ

الْاَنْوَرِ ۝ نَوَّرَ اللّٰهُ ضَرِيْحَهٗ بِالنُّوْرِ الْاَزْهَرِ ۝ وَعَلٰى رَابِعِ

الْخُلَفَآءِ اَسَدِ اللّٰهِ فِيْ مَعْرَكَةِ الْاَرَآءِ اَمِيْرِ الْمُؤْمِنِيْنَ اِمَامِ

الْاَشْجَعِيْنَ سَيِّدِنَا عَلِيِّ نِ الْحَيْدَرِ ۝ كَرَّمَ اللّٰهُ وَجْهَهٗ يَوْمَ

الْمَحْشَرِ ○ وَعَلَى الْإِمَامَيْنِ الْهُمَامَيْنِ السَّعِيدَيْنِ الشَّهِيدَيْنِ سَيِّدِنَا الْحَسَنِ وَسَيِّدِنَا الْحُسَيْنِ صَاحِبَيِ السِّيَادَةِ وَالْقَدْرِ الْأَبْهَرِ ○ رَضِيَ اللّٰهُ عَنْهُمَا يَوْمَ الْمَحْشَرِ ○ وَعَلَى بِضْعَةِ رَسُولِ اللّٰهِ سَيِّدَتِنَا فَاطِمَةَ الزَّهْرَاءِ رَضِيَ اللّٰهُ عَنْهَا وَأَرْضَاهَا بِاللُّطْفِ الْأَكْبَرِ ○ وَعَلَى عَمَّيْهِ الْمُكَرَّمَيْنِ الْمُطَهَّرَيْنِ مِنَ الدَّنَسِ وَالْأَرْجَاسِ سَيِّدِنَا حَمْزَةَ وَسَيِّدِنَا الْعَبَّاسِ رَضِيَ اللّٰهُ عَنْهُمَا وَخَصَّهُمَا بِالْفَضْلِ الْأَفْخَرِ ○ وَعَلَى سَائِرِ الصَّحَابَةِ وَالتَّابِعِينَ رِضْوَانُ اللّٰهِ عَلَيْهِمْ أَجْمَعِينَ ○ اَللّٰهُمَّ اغْفِرْ لِلْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ وَالْمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ الْأَحْيَاءِ مِنْهُمْ وَالْأَمْوَاتِ إِنَّكَ مُجِيبُ الدَّعَوَاتِ وَرَافِعُ الدَّرَجَاتِ إِنَّكَ أَنْتَ الْقَدِيرُ الْأَكْبَرُ ○ اَللّٰهُمَّ انْصُرْ مَنْ نَصَرَ دِينَ سَيِّدِنَا مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَاجْعَلْنَا مِنْهُمْ، وَاخْذُلْ مَنْ خَذَلَ دِينَ سَيِّدِنَا مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَلَا تَجْعَلْنَا مِنْهُمْ، وَنَجِّنَا مِنْ حَسَرَاتِ الْأَرْضِ الْأَكْبَرِ ○ اَللّٰهُمَّ اغْفِرْ لِجَامِعِ هٰذِهِ الْخُطَبِ

وَالنَّصَائِحِ ○ وَاحْفَظْهُ مِنْ شُرُوْرِ الْمَكَايِدِ وَالْقَبَائِحِ ○
وَارْزُقْهُ خَيْرًا عَظِيْمًا فِى الدُّنْيَا وَالْبَرْزَخِ وَالْمَحْشَرِ ○ وَالْحَمْدُ
لِلّٰهِ الْعَلِيِّ الْعَظِيْمِ ○

اَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ
اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى
وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ ○ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ
وَادْعُوْا يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ تَعَالٰى اَعْلٰى وَاَوْلٰى وَاَعَزُّ
وَاَجَلُّ وَاَهَمُّ وَاَقْوٰى وَاَكْبَرُ ○

## றபீஉல் ஆகிர், ஜமாதுல் அவ்வல், ஜமாதுல் ஆகிர் ஆகிய மூன்று மாதங்களுக்கு முரிய

# இரண்டாவது குத்பா

بسم الله الرحمن الرحيم

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்).

எல்லாப் புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும். அவன் மிக உயர்ந்தவன், மிகப்பெரியவன், அவன் கற்பித்ததை ரத்துச் செய்பவரில்லை. அவன் ஏற்படுத்தியதைத் தடுப்பவரில்லை, மிகுதமாக அவனைப் புகழ்கின்றேன். பெரிய நன்றியறிதலை அவனுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

நம்மிலிருந்து நிகழ்ந்ததை விட்டு அவனிடம் தௌபாச் செய்து, அவனிடம் மன்னிப்புக் கேட்டு, அவனிடத்திலேயே உதவி தேடுகிறோம்.

வணக்கத்துக் குரியவன் அவனைத் தவிர்த்து (வேறுயாரும்) இல்லை. அவன் தனித்தவன். சக்தியும் பலமுமுள்ளவன் என்று சாக்ஷியங் கூறுகிறேன். எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும், தூதராகவும், கருப்பு, சிவப்பு ஆகிய வர்ணங்களுள்ள சகல மானிடர்கள்பாலும் அனுப்பப்பட்டவர்கள் என்று சாக்ஷியங் கூறுகிறேன்.

أَمَّا بَعْدُ முமின்களே! அல்லாஹுத் தஆலாவைப் பயப்படவேண்டிய அளவுக்கு அவனைப் பயப்படுங்கள்! நீங்கள் முஸ்லிம்களாக இல்லாமல் மரிக்க வேண்டாம். மேலும், அல்லாஹ்வின் கயிற்றை நீங்கள் யாவரும் பலமாகப் பற்றிக் கொள்ளுங்கள்! ஆனால், நீங்கள் பிரிந்து விடாதீர்கள்.

கூட்டத்தை விட்டு எவர் தனிக்கிறாரோ அவர் நரகில் தனித்து விடுவார். ஸுன்னத்தைப் பின் பற்றுவதையும், பித்அத்தைத் தவிர்த்துக் கொள்வதையும் கடைப்பிடியுங்கள். ஏனெனில், ஸுன்னத்து சுவர்க்கத்தின்பால் சேர்க்கும். பித்அத்து விறகுகளும் தீங்குகளும் உள்ள நரகின்பால் பித்அத்துக்காரர்களைச் சேர்ப்பிக்கும்.

மேலும், மனிதர்களின் தலைவரானவர் மீது அதிகமாகவும் முக்கியமாக பிரகாசமுள்ள இரவுகளிலும் பகல்களிலும் ஸலாத்தையும் ஸலாமையும் ஓதுங்கள். ஏனெனில், ஸலவாத்து இறைவனிடம் அங்கீகரிக்கப் பட்டதாகவும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எடுத்துக் காட்டப் படுவதாகவும் கியாமத்து நாளில் உங்களுக்கு ஷபாஅத்துச் செய்வதாகவும் இருக்கிறது.

நாயனே! எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும், அவர்களது கிளையார் தோழர்களுக்கும், அவர்களது வாழ்க்கைத் துணை நல்லார்களுக்கும், அவர்களைப் பின் பற்றியவர்களுக்கும் சந்திரனும் சூரியனும் இருக்கும் காலமெல்லாம் இருக்கக் கூடியவாறு ஸலாத் என்னும் கருணையை அருள்வாயாக!

முக்கியமாக அவர்களில் கலீபாக்களில் முதலாமவரும், மலைப் பொதும்பில் அவர்களுக்கு வழித் துணைவராக இருந்தவரும், மூமின்களுக்குத் தலைவரும், முஸ்லிம்களுக்கு இமாமுமான எங்கள் நாயகம் அபூபக்கரிஸ் ஸித்தீக் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கும்,

கலீபாக்களில் இரண்டாமவரும், பயபக்தி யுள்ளோரின் தலைவரும், மூமின்களின் அமீறும், முத்தக்கீன்களுக்கு இமாமுமான எங்கள் நாயகம் உமர் (றலி) அவர்களுக்கும், இவர் ஏராளமான பேறுகளை அடைவாராக!

கலீபாக்களில் மூன்றுமவரும், வெட்க முள்ளவர்களின் தலைவரும், மூமின்களுக்கு அமீறும், சங்கைவான்களுக்கு இமாமுமான எங்கள் நாயகம் உதுமான் (றலி) அவர்களுக்கும், இவர் பிரகாச முள்ள இரு ஒளிகளை யுள்ளவர், இவரது கப்ரில்பிரகாசமான ஒளியை வீசச் செய்வானாக!

கலீபாக்களில் நான்காமவரும் முக்கியமான போராட்டங்களில் அல்லாஹுத் தஆலாவின் புலியாகவும், மூமின்களுக்கு அமீராகவும், சுத்த வீரர்களுக்கு இமாமாகவு முள்ள எங்கள் நாயகம் அலிய்யினில் ஹைதருக்கும், மரித்தவர்கள் உயிர்ப்பித் தெழுப்பப் படும் நாளில் இவரது முகத்தை அல்லாஹுத் தஆலா சங்கை யாக்கி வைப்பானாக!

இமாம்களாகவும் முக்கியமானவர்களாகவும் பாக்கியவான்களாகவும், உயிர்தியாகம் செய்தவர்களாவுமிருக்கிற எங்கள் நாயகர்கள் ஹஸன், ஹுஸைன் ஆகிய தலைமைத் தனமும் பகிரங்க மதிப்பும் உள்ள இருவருக்கும் - அல்லாஹுத் தஆலா இவ்விருவரையும் பொருந்திக் கொள்வானாக!

அல்லாஹுத் தஆலாவின் தூதருடைய சதைத் துண்டாகவும் எங்கள் தலைவியாகவுமுள்ள பாத்திமத்துஸ் ஸஹ்றாவு அவர்களுக்கும் அல்லாஹுத் தஆலா இவரைப் பொருந்திக்கொள்வதுடன் தனது பெரிய அன்பினால் திருப்திப் படுத்துவானாக!

கண்ணியவான்களாகவும், அசூயை அழுக்கு ஆகியவைகளை விட்டுச் சுத்தமானவர்களாகவும், நாயகம் (ஸல்) அவர்களது சிறிய தந்தைகளாகவும் இருக்கிற எங்கள் நாயகர்கள் ஹம்ஜா, அப்பாஸ்

ஆகியவர்களுக்கும் இவ்விருவரையும் அல்லாஹுத் தஆலா பொருந்திக் கொள்வதுடன் பெருமை கொள்ளத்தக்க மேன்மை களுக்கு இவர்களைச் சொந்தப் படுத்துவானாக!

ஏனைய ஸஹாபிகள் என்னும் தோழர்களுக்கும், தாபிஈன்கள் என்னும் இவர்களைப் பின்பற்றியவர்களுக்கும் ஸலாத் என்னும் கருணையை அருள்வானாக! (றளியல்லாஹு அன்ஹும் அஜ்மஈன்)

நாயனே! மூமின் முஸ்லிம்களான, ஸ்திரீ புருஷர்களுக்கும் இவர்களில் மரித்தவர்களுக்கும் ஜீவித்திருப்பவர்களுக்கும் பிழை பொறுப்பாயாக! நீ பிரார்த்தனைகளை நிறைவேற்றுபவன், அந்தஸ்து களை உயர்த்துபவன். நீதான் மிகப் பெரிய தத்துவமுள்ளவன்.

நாயனே! எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களின் மதத்துக்கு உதவி செய்தவர்களுக்கு உதவி புரிவதுடன், அவர்களில் எங்களையும் சேர்ப்பாயாக! எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர் களது மதத்துக்கு உதவி செய்யாதவர்களுக்கு உதவி செய்யாமலிருப் பதுடன் அவர்களில் எங்களைச் சேர்க்காதிருப்பாயாக! இன்னும் கியாமத்து நாளின் கைசேதங்களை விட்டு எங்களைக் காப்பாயாக!

நாயனே! இந்த உபதேசங்களையும் நற்போதனைகளையும் தொகுத்தவருக்கு மன்னிப்புச் செய்து, பொருத்தக் கேடானவைகள், பழிக்கத் தக்கவைகளது தீங்குகளை விட்டு அவரைக் காத்து, இவ்வுலகிலும், இடையிட்ட உலகிலும், கியாமத்து நாளிலும் அவருக்கு மகத்தான நன்மையை அளிப்பாயாக!

மகத்துவமுள்ள உயர்வுள்ள அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப்புகழும் தகும்.

أَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ
إِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبٰى
وَيَنْهٰى عَنِ الْفَحْشَاءِ وَالْمُنْكَرِ ۝ اُذْكُرُوا اللهَ يَذْكُرْكُمْ
وَادْعُوْا يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللهِ تَعَالٰى أَعْلٰى وَأَوْلٰى وَأَعَزُّ
وَأَجَلُّ وَأَهَمُّ وَأَقْوٰى وَأَكْبَرُ ۝

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலா வினிடம் காவல் தேடுகிறேன்.

நிச்சயமாக அல்லாஹ் நீதி, உபகாரம். பந்துக்களுக்குக் கொடுத்தல், ஆகியவைகளை உங்களுக்கு ஏவுகிறான். மானக் கேடானவைகளையும் வெறுக்கத்தக்கவைகளையும் விட்டு விலக்குகிறான்.

*அல்லாஹுத் தஆலாவை நீங்கள் நினையுங்கள்! உங்களை அவன் நினைப்பான். அவனை நீங்கள் பிரார்த்தியுங்கள்! உங்களுக்கு அவன் நிறைவேற்றுவான். மேலும், அல்லாஹுத் தஆலாவை ஞாபகிப்பது மிக உயர்ந்தது, மிக மேலானது, மிக அருமையானது, மிகப்பெரியது, மிகப் பலமானது, மிகச் சிறந்தது.*

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الْاُوْلٰى مِنْ رَجَبٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ بَسَطَ بِسَاطَ الْفَضْلِ فَخَلَقَ الْاَنْهَارَ ○ وَخَلَقَ مَا فِيْهِ مَنَافِعُ وَمَصَالِحُ لِعِبَادِهٖ مِنَ الْاَحْجَارِ وَالْاَشْجَارِ ○ هُوَ الَّذِيْ دَارَ بِحُكْمِهِ الدَّوَّارُ ○ وَالطَّيْرُ بِصَنْعَتِهٖ طَارَ ○ فَنَحْمَدُهٗ عَلٰى هٰذِهِ النِّعَمِ الْجَلِيْلَةِ السَّائِلَةِ عَلَيْنَا فِي اللَّيْلِ وَالنَّهَارِ ○ وَنَشْهَدُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ شَهَادَةً تُدْخِلُ بِهَا دَارَ الْقَرَارِ ○ وَنَشْهَدُ اَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهُ النَّبِيُّ الْمُخْتَارُ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ○

يَآ اَيُّهَا النَّاسُ ○ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ ○ اُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ○

## றஜபு மாதம்

# முதலாவது ஜும்ஆ

## بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)**

எல்லாப் புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும். மேன்மை என்ற விரிப்பை அவன் விரித்து, அருவிகளைச் சிருஷ்டித்தான். இன்னும் தனது அடியார்களுக்காக கற்களிலும் விருக்ஷங்களிலும் சாதகமானவைகளும் பிரயோஜனங்களும் இருக்கும்படி சிருஷ்டித்தான். அவன் தான் தனது கட்டளையைக் கொண்டு சுற்றக் கூடியதை அதாவது வானத்தைச் சுற்றும்படிச் செய்தான். பறவை அவனது செயல்படி பறக்கிறது.

எனவே, இரவிலும் பகலிலும் நம் மீது ஒலித்துக் கொண்டிருக்கிற அவனுடைய இந்த அருட்கொடைக்காக அவனை நாம் புகழ்ந்து, வணக்கத்துக்குரியவன் அவனைத் தவிர்த்து (வேறும் யாரும்) இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணையில்லை என்ற சாக்ஷியத்தின் மூலம் நிரந்தர உலகில் பிரவேசிக்கத்தக்க விதமாக சாக்ஷியங்கூறுகிறோம். எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவும் தெரிந்தெடுக்கப்பட்ட நபியாகவும் இருக்கிறார்கள் என்றும் சாக்ஷியங் கூறுகிறோம்.

أَمَّا بَعْدُ சகோதரர்களே! அன்பர்களே!! அடக்கி ஆள்பவனான அரசன் அளிக்கும் வேதனையை நாம் அஞ்சாமல் நாம் சோம்பி இருப்பதற்கும் நாம் செய்யும் செய்கைக்கும் கைசேதமே! கடந்த பகல்கள் சென்றுவிட்டன. சென்ற இரவுகள் கழிந்து விட்டன. நமது பாபங்களின் காரணமாக வழிப்பாடுகளை விட்டு நாம் சோம்பி இருந்து விட்டோம். மாறான காரியங்களில் நாம் முனைந்து விட்டோம்.

ருக்கூஉ செய்யும்படியான நல்லடியார்களும், மாதாக்களிடம் அமுதருந்தும் குழந்தைகளும், மேய்ந்து திரியும் பிராணிகளும் இல்லாதிருக்கும் பக்ஷத்தில் அடக்குபவனான அரசனான நமது றப்பு நம்மை முனிந்திருப்பான். முளாறு நஜ்ஜார் கோத்திரங்களின் தலைவர் இல்லாதிருக்கும் பக்ஷத்தில் நரகக் குழியை விட்டு நாம் வெளியேறி இருக்கமாட்டோம்.

இதுவோ முபாரக்கான மாதம். இதன் பெயரும் முபாரக் கானது, இதன் சிறப்புப் பெயரும் முபாரக்கானது. இம்மாதத்திலே நம்மீது பிரகாசங்கள் ஒலிக்கப்படுகின்றன. ஏனெனில், றமலான் மாதமானது அல்லாஹுத் தஆலாவினது மாதம். அந்த மாதத் துக்கு மற்றைய மாதங்களைப் பார்க்கினும் இருக்கிற சிறப்பானது அவனுக்கு மற்றவைகளைப் பார்க்கினும் இருக்கிற சிறப்பைப் போலிருக்கிறது. ஷஃபான் மாதம் நமது நபியவர்களது மாதம். அந்த மாதத்துக்கு மற்றைய மாதங்களைப் பார்க்கினும் இருக்கிற மேன்மையானது நமது நபியவர்களுக்கு மற்றவர்களைப் பார்க்கினும் இருக்கிற மேன்மையைப் போலிருக்கிறது. றஜபு மாதம் இந்த உம்மத்துக்களுக்குரிய மாதம். இந்த மாதத்துக்கு மற்றைய மாதங் களைப் பார்க்கினும் இருக்கிற மேன்மையானது இந்த உம்மத்துக் களுக்கு மற்றைய பெரிய நபிமார்களது உம்மத்துக்களைப் பார்க்கினும் இருக்கிற மேன்மையைப்போலிருக்கிறது.

குடியிருக்கவும் கூட வீடில்லாத பரதேசியே! துக்கமுள்ளவனே! துயரமுள்ளவனே!! நீ செய்த காரியங்களுக்காக அல்லாஹுத் தஆலாவினிடம் தௌபாச் செய்! உனக்குத் தவறிப்போனதைக் குறித்துக் கைசேதப்படு! வணக்கத்தில் முயற்சி செய். வழிகேட்டைக் குறைத்துக்கொள்! அல்லாஹுத் தஆலா உனக்கு அருள் புரிந்து, நீ செய்ததைக் கவனிக்காமல் விட்டு விடக்கூடும். ஏனெனில், அவன் பொறுமையுள்ளவன்; மிகப் பிழை பொறுப்பவன்.

வாளைக் கொண்டு அடித்துக் கொள்வதும், விருந்தாளிக்கு உணவளிப்பதும், கோடை காலத்தில் நோன்பு வைப்பதும் இரவிலும் பகல் வேளைகளிலும் திருக் குர்ஆனை ஓதுவதும் உனக்கு அவசியமாகும்.

இவ்வுலகம் அழிந்து போகக்கூடிய வீடு, இதற்கு நிலை இல்லை, இது நிரந்தரமானதல்ல என்பதை நீ அறியவில்லையா? உலகில் நீ ஒரு பரதேசியைப்போலிரு! அல்லது வழிப் போக்கனைப் போலிரு! ஏனெனில், இவ்வுலகம் சதி செய்யக்கூடியது, துரோகம் செய்யக்கூடியது. அதனை நம்ப முடியாது.

சென்ற வருஷத்தில் உன்னுடனிருந்தவர்கள் எங்கே? பண்டைக்காலங்களில் பூபதிகளாக இருந்தவர்களெல்லாம் எங்கே? காலஞ் செல்வதும், சுற்றுவதாகிய வானத்தின் சுழலும் அவர்களை அழித்துவிட்டது. அவர்களது மரணத்துக்குரிய தவணை வந்த பொழுது அவர்கள் ஒருக்ஷண நேரமாவது பிந்தவுமில்லை; காலத்தில் ஒரு அற்ப நேரமாவது முந்தவுமில்லை.

எனவே, மேலெண்ணத்தைக் குறைத்துக் கொள்! தீர்ப்பான சொல்லாகிய திரு மறையிலுள்ளபடி செய்! நரகத்தின் வேதனையை விட்டுக் காக்கக்கூடியதைத் தேடிக்கொள்! ஆஜராக

வேண்டிய நாள் நெருங்கிவிட்டது. அந்த நாளில் "ஐயோ, வேதனையே!" என்ற சப்தங்கள் கிளம்பும். அந்நாளில் பாவங்களின் பட்டோலைகள் விரிக்கப்படும். பாபம் செய்தோர் நாணமுறுவர், அந்நாளில் மனிதன் தன் சகோதரனையும் தாயையும் தந்தையையும் மனைவியையும் மக்களையும் விட்டு விரண்டோடுவான். ஒவ்வொரு மனிதனுக்கு அந்நாளில் ஒரு நிலை இருக்கும். அந்நிலை மற்றவர்களைக் கவனிக்கவிடாது.

அந்நாளில் மனிதர்களுக்கிடையில் வம்சங்களைப் பற்றிய பிரஸ்தாபமிருக்காது. அதனைக் குறித்து ஒருவரை ஒருவர் விசாரிக்கவுமாட்டார்கள்.

—எனவே, எவரது நிறுவை பளுவாக இருக்கிறதோ அவர்கள் தாம் வெற்றி பெற்றவர்கள். மேலும், எவரது நிறுவை இலேசாக இருக்கிறதோ அவர்கள் தாம் நஷ்டமடைந்தவர்கள், நரகில் நிரந்தரமாக இருப்பவர்கள்—அந்நாளில் முற்பகலில் சூரியன் வெட்ட வெளிச்சமாக வெளியாகுவது போல் தீய செய்கைகள் வெளியாகும்.

நாயனே! கிருபை செய்பவனே!! கேட்காமலிருக்கும் போதே கிருபை செய்பவனே!! எங்களது பாவங்களை எங்களுக்கு மன்னிப்பாயாக, எங்களது தவறுகளை எங்களுக்குப் புறக்கணிப்பாயாக, நீதான் க்ஷமிப்பவன்; பிழை பொறுப்பவன்.

போஷித்துப் பரிபக்குவப் படுத்துவோனாகிய க்ஷமிப்பவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் தகும்.

أَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○
قُلْ إِنَّمَا أَنَا مُنْذِرٌ وَمَا مِنْ إِلٰهٍ إِلَّا اللّٰهُ الْوَاحِدُ الْقَهَّارُ ○
رَبُّ السَّمٰوَاتِ وَالْأَرْضِ وَمَا بَيْنَهُمَا الْعَزِيزُ الْغَفَّارُ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹ்விடம் காவல் தேடுகிறேன்.

"நான் (அச்சமூட்டி) எச்சரிக்கை செய்பவன் தான்; மேலும், ஒருவனாகிய அடக்கியாள்பவனான அல்லாஹ்வைத் தவிர்த்து வணக்கத்துக் குரியவன் (வேறு ஒருவரும்) இல்லை; வானங்களுக்கும் பூமிக்கும், இவைகளுக் கிடையிலுள்ளதற்கும் றப்பானவன்; மிகைத்தவன்; பிழை பொறுப்பவன்" என்று கூறுவீராக!

(திரு குர்ஆன்)

بَارَكَ اللّٰهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْاٰنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْاٰيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالٰى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ
بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الثَّانِيَةِ مِنْ رَجَبَ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الْوَاحِدِ الْاَحَدِ ○ اَلْوَاهِبِ الْوَالِي الصَّمَدِ ○ نَحْمَدُهُ عَلٰى اَنْ خَلَقَ الْخَلْقَ وَدَبَّرَهُ مِنْ غَيْرِ مُعِيْنٍ وَمَدَدٍ ○ وَنَشْكُرُهُ عَلٰى اَنْ جَعَلَنَا مِنْ اَشْرَفِ مَخْلُوْقَاتِهٖ وَاَفَاضَ عَلَيْنَا نِعَمًا لَا تُحْصٰى وَلَا تُعَدُّ ○ اَشْهَدُ اَنَّهٗ لَا اِلٰهَ اِلَّا هُوَ لَمْ يَلِدْ وَلَمْ يُوْلَدْ ○ وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ ○ وَاَشْهَدُ اَنَّ سَيِّدَنَا وَمَوْلَانَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهُ الْمَبْعُوْثُ اِلٰى كَآفَّةِ الْخَلْقِ مِنَ الْاَحْمَرِ وَالْاَبْيَضِ وَالْاَسْوَدِ ○ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ اِلَى الْاَبَدِ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ○

يٰۤاَيُّهَا النَّاسُ ○ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ اُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ○

## றஜபு மாதம்

# இரண்டாவது ஜும்ஆ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

எல்லாப்புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும், அவன் ஒருவன், ஏகன், நன்கொடையளிப்பவன், காரியஸ்தன், தேவையற்றவன், சிருஷ்டிகளை அவன் சிருஷ்டித்து, உதவியாளனோ ஒத்தாசைக்காரனோ இல்லாமல் அவைகளுக்கு வேண்டியதை நிர்ணயித்ததற்காக அவனை நாம் புகழ்கிறோம். மேலும், அவனது சிருஷ்டிகளில் மிகச் சிறந்ததாக நம்மை ஆக்கி, எண்ணி முடிக்கவோ கணிக்கவோ முடியா அளவு அருட்கொடைகளை நம் மீது வர்ஷித்ததற்காக அவனுக்கு நன்றி செலுத்துவீர்களாக! சிறப்பான நாட்களையும் புனிதமான வேளைகளையும் நேர்வழியைக்கொண்டு நீங்கள் நலம் பெறுவதற்காக உங்களுக்கு அவன் ஏற்படுத்திய அவனது அநுக்கிரகங்களுக்காக அவனைப் புகழ்வீர்களாக!

أَمَّا بَعْدُ காலத்தைப் பன்னிரண்டு மாதங்களாகப் பிரித்திருக்கிறான். அவைகளில் நான்கு சங்கையானவைகள். இந் நான்கில் துல்காஅதா, துல்ஹஜ்ஜா, முஹர்ரம் ஆகிய மூன்றும்

தொடர்ந்திருக்கின்றன. றஜபு மாத்திரம் தனித்திருக்கிறது. இவைகளில் சன்மார்க்கத்துக்கு இணக்கமானவைகளைப் புரிந்தவர்களுக்கு அதிகமான நற்கூலியையும், அழகிய உதவியையும் அளிப்பதாக வாக்களித்திருக்கிறான்.

எனவே, சங்கையான இந்த மாதங்களை நீங்கள் வீணாக்காமலிருப்பதுடன், கெட்ட காரியங்களைச் செய்து இம்மாதங்களில் உங்களுக்கே நீங்கள் தீங்கிழைத்துக் கொள்ளா திருப்பதும் உங்களுக்கவசியமாகும். ஆகவே, இவைகளில் தங்களைப் பாதுகாத்துக் கொண்டவர்கள் தாம் நேர்வழி பெற்றவர்கள்.

மேலும், சிறிய கியாமத்து ஏற்பட்டு, ஜீவிய காலத்தவணையும் உதவியும் முடிவு பெறும் நாளையும் உங்களுக்கு அடக்க ஸ்தலத்திலும் சயன ஸ்தலத்திலும் நிகழ்கிற பயங்கரங்களையும் கடுமைகளையும் நினைத்துப் பாருங்கள்! இதற்கப்புறம் பெரியதாகிய எடுத்துக் காட்டும் நாள் இருக்கிறது. அந்நாளில் பணமோ தந்தையோ தனயனோ பிரயோஜனம் செய்வது முடியாது. அதில் மனிதன் தனது சகோதரனையும் தாயையும், தந்தையையும், மனைவியையும், மக்களையும் விட்டு விரண்டோடுவான். அந்நாளில் காரியம் மிகக் கடுமையாக இருக்கும் அந்நாளில் நமக்கு மன்றாடுபவரான, தலைமைத்தனமுள்ளவரான காத்தமுல் அன்பியாவைத் தவிர்த்து மற்றைய நபிமார்களும், முர்ஸல்களும், முகர்ரபாகிய நெருங்கிய மலக்குகளும் கூட 'நப்ஸீ, நப்ஸீ!' என்று தங்களைக் குறித்துக் கூறுவதைக் காண்பீர்கள்.

மறதியாளரே! மறதி என்ற நித்திரையை விட்டெழுமின்! அடங்காமல் மீறி நடந்து முனிவுக்காளானவர்களது பாதையில் நடவாதிருங்கள்! தனது றப்புக்கு வழிப்படாமல் மீறி நடப்பவர் நாசமாகி விடுவார், மற்றவரையும் நாசமாக்கி விடுவார்; தானும் வழி கெட்டு

மற்றவரையும் வழி கெடுத்து விடுவார் ; தானும் கெட்டுப் பிறரையும் கெடுத்து விடுவார்.

நாசகரமான தன்மைகளும் பழிக்கத்தக்க காரியங்களுமான தற்பெருமை, கோபம், அகம்பாவம், உலோபத்தன்மை, பொறாமை முதலியவைகளை விட்டு உங்களைச் சுத்தப் படுத்திக் கொள்ளுங்கள்.

எவர் தனது அகத்தை நப்ஸானிய்யத்தான நோய்களை விட்டுச் சுத்தப்படுத்திக் கொள்கிறாரோ அவர் மீது அல்லாஹுத் தஆலாவின் பிரகாசங்கள் என்ற தென்றல் வீசும்; நாடப்படுவதும் தேடப்படுவதுமான காரியத்தின் உச்சத்தை அவர் அடைந்து விடுவார்.

"இருதயம் ஒரு தசைக்கட்டி ; அது இணக்கமாகி விட்டால் எல்லா அவயவங்களும் இணக்கமாகி விடும்; அது கெட்டுப் போனால் எல்லாம் கெட்டுப் போகும்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி இருப்பதாகச் சரியான ஆதாரத்துடன் ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது.

உங்களை நீங்களே புனிதப் படுத்திக் கொள்ளாதீர்கள்; மிகவும் பயபக்தியுள்ளவர் யார் ? நேர்வழி பெற்றவர் யார் ? மதிப்புக் குரியவர் யார் ? என்பதை உங்கள் றப்பு மிகவும் அறிந்திருக்கிறான். அல்லாஹுத் தஆலாவினது கிருபையும் பொறுமையும் விசாலமாக இருப்பதைக் கண்டு மருண்டு விடாதீர்கள். எவர் இவைகளைக் கண்டு மருண்டு, பாவங்களைச் செய்வதில் துணிந்து விடுகிறாரோ அவர் மிகவும் தூரமான பாதாளத்துக்குச் சென்று விடுவார்.

'விருதாவாக நீங்கள் சிருஷ்டிக்கப்பட்டு, வீணாக நீங்கள் ஆக்கப்பட்டிருக்கிறீர்கள், அல்லது நீங்கள் மரிக்க மாட்டீர்கள், கடைசி

வரை உங்களுக்கு நிரந்தரமும் நிலையுமிருக்கிறது என்று நீங்கள் எண்ணிக் கொள்ளவேண்டாம்,

அவ்வாறில்லை, அல்லாஹுத் தஆலாவின் மீது பிரமாணமாகக் கூறுகிறேன்: ஜீவன் ஊதப்பட்ட எந்த ஜீவனுக்கும் அதற்குரிய ஜீவிய கால தவணை நிர்ணயம் செய்யப்படாமல் இல்லை. அதற்குரிய தவணை வந்து விட்டால் ஒரு சாமம் கூட முந்தவு மாட்டார்கள், ஒரு க்ஷணம் கூடப் பிந்தவு மாட்டார்கள், ஏனெனில்; மலக்குல் மவ்த்து வழி பார்த்துக் கொண்டிருக்கிறார். மலக்குல் மவ்த்தானவர் முகங்களைப் பார்க்காத நாள் இல்லை. எவருடைய தவணை வந்து விடுகிறதோ அவருடைய ஆன்மாவை அவர் கைப்பற்றி அவரைப் பிரித்து ஒதுக்கி விடுகிறார்.

எனவே, தனது மறுமைக்காகக் கட்டுச் சாதத்தை இம்மையிலேயே திட்டஞ்செய்து, தனது அந்தியத்தின் நன்மையை நாடி, காலையில் எழுந்திருந்தால் இனி மாலைவரை தனது உயிர் இருக்காதென்றும் இருண்ட இரவு வந்து விட்டால் இனி விடியும் வரை தனது உயிர் இருக்காதென்றும் எண்ணி, தனது சென்ற வயதில் தன்னிலிருந்து நிகழ்ந்த தீமைகளுக்கும், தவறுகளுக்கும் பச்சாத்தாபப் பட்டவருக்கே சோபனம்!

நாயனே! கிருபையாளனே! இவ்வவனியில் எல்லாருக்கும் சமமாகக் கிருபை செய்வோனே! ஒருவனே! ஏகனே! எங்களது தவறுகள் யாவையும் எங்களுக்கு மன்னித்து, எங்களை விட்டு எங்கள் பாவங்களை அகற்றி, ஜலத்தையும் குளிர்ந்த பனிக் கட்டியையுங் கொண்டு வெள்ளைத்துணி சுத்தமாகுவதுபோல், உனது கிருபையால் எங்களது ஸ்தூலங்களையும் இருதயங்களையும் சுத்தப்படுத்துவாயாக! மறுமையில் பக்தர்களுக்கு விசேஷ அன்பு பாலிப் பவனுகிய, றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும்.

أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○

لَا أُقْسِمُ بِهٰذَا الْبَلَدِ ○ وَأَنْتَ حِلٌّ بِهٰذَا الْبَلَدِ ○ وَوَالِدٍ
وَمَا وَلَدَ ○ لَقَدْ خَلَقْنَا الْإِنْسَانَ فِي كَبَدٍ ○ أَيَحْسَبُ أَنْ
لَنْ يَقْدِرَ عَلَيْهِ أَحَدٌ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலா வினிடத்தில் காவல் தேடுகிறேன்.

இந்தப் பட்டணத்தைக் கொண்டு நான் பிரமாணம் செய்கிறேன். மேலும், நீர் இந்தப் பட்டணத்தில் அனுமதிக்கப் பட்டவராக இருக்கிறீர். பெற்ரோர் மீதும் பிறந்தவர் மீதும் பிரமாணம் செய்கிறேன். திட்டமாக மனிதனை கஷ்டத்திலேயே சிருஷ்டித்திருக்கிறோம். அவன் மீது ஒருவருக்கும் ஆதிக்கமே ஏற்படாது என்று அவன் நினைக்கிறானா ?

(திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ
بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الثَّالِثَةِ مِنْ رَجَبَ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ خَلَقَ السَّبْعَ الشِّدَادَ وَجَعَلَهَا سُقُوْفًا
مَحْفُوْظَه ○ وَزَيَّنَهَا بِالشَّمْسِ وَالْقَمَرِ وَالنُّجُوْمِ وَالْبُرُوْجِ
الْمَشْهُوْرَه ○ فَسُبْحَانَهٗ مِنْ اِلٰهٍ عَجَزَتِ الْاَلْسِنَةُ عَنْ مَدْحِهٖ
وَثَنَائِهٖ وَتَحَيَّرَتِ الْمَدَارِكُ فِيْ اِدْرَاكِ حَقَائِقِ الْاُمُوْرِ
الْمَقْدُوْرَه ○ خَلَقَ سَبْعَ اَرَضِيْنَ وَجَعَلَهَا فُرُشًا مَبْسُوْطَه
وَقَوَّاهَا بِالْجِبَالِ الرَّاسِيَاتِ الْمَضْبُوْطَه ○ اَحْمَدُهٗ حَمْدًا
كَثِيْرًا وَاَشْكُرُهٗ شُكْرًا جَمِيْلًا عَلٰى مِنَنِهٖ وَنَعْمَائِهِ الْمَبْثُوْثَه ○
وَاَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ كُلُّ الْاَشْيَاءِ
تَحْتَ قُدْرَتِهٖ مَقْهُوْرَه ○ وَاَشْهَدُ اَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ
وَرَسُوْلُهٗ صَاحِبُ الْاٰيَاتِ وَالْمُعْجِزَاتِ الْمَرْصُوْصَه ○ صَلَّى
اللّٰهُ عَلَيْهِ وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ صَلٰوةً دَائِمَةً كَامِلَةً مَوْفُوْرَه ○

صَلَّى اللهُ وَسَلَّمَ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَآلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ ۝

يَا أَيُّهَا النَّاسُ ۝ اِتَّقُوا اللهَ الْعَظِيمَ عَزَّ وَجَلَّ وَأَطِيعُوهُ
أُوصِيكُمْ عِبَادَ اللهِ وَإِيَّايَ بِتَقْوَى اللهِ ۝

## ரஜபு மாதம்

## மூன்றாவது ஜும்ஆ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் தகும். அவன் பலமான ஏழு வானங்களைச் சிருஷ்டித்து, பத்திரமான ஏழு விதானங்களாக ஆக்கி இருக்கிறான். அவைகளை சந்திரன், சூரியன், நக்ஷத்திரங்கள், பிரபலமான ராசிகள் முதலியவைகளைக் கொண்டு அலங்கரித்திருக்கிறான். அவன் தூய நாயன். அவனைப் போற்றிப் புகழ நாவுகளால் இயலாது. காரியங்களின் அகமியங்களை யுணர்ந்து கொள்வதில் உணர்வுகளும் கூட திகைப்படைந்து விட்டன. ஏழு பூமிகளை சிருஷ்டித்து, அவைகளை விரிக்கப்பட்ட விரிப்புகளாக ஆக்கி இருக்கிறான்.

இன்னும் பலமான சிகரங்களுள்ள மலைகளைக் கொண்டு அவைகளை ஸ்திரப்படுத்தினுன்.

அவனை நான் அதிகமாகப் புகழ்ந்து, அவனது உபகாரங்களுக்காகவும், பரந்த அவனது அருட்கொடைகளுக்காகவும் நன்றி செலுத்துகிறேன். அவனைத் தவிர்த்து வணக்கத்துக் குரியவன் (வேறு யாரும்) இல்லை. அவன் தனித்தவன், அவனுக்கு இணை இல்லை, சகல வஸ்துவும் அவனது வல்லமையின் கீழ் அடக்கிவைக்கப்பட்டிருக்கின்றன என்று சாக்ஷியங் கூறுகிறேன். எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவும், திருஷ்டாந்தங்களும் அற்புதங்களு முள்ளவர்களாகவும் இருக்கிருர்கள் என்று சாக்ஷியங் கூறுகிறேன். அல்லாஹுத் தஆலா அவர்களுக்கும், அவர்களது கிளையார் தோழர்களுக்கும் பரிபூரணமான நிரந்தரமான, வியாபகமான கருணையாக ஸலாத் என்னும் கருணையை அருள்வாருக!

أَمَّا بَعْدُ ஜனங்களே! அல்லாஹுத் தஆலாவைப் பயப்பட வேண்டிய அளவுக்குப் பயப்படுங்கள்! தக்வா தான் ஷபாஅத்துச் செய்வதாகவும், அங்கீகரிக்கப்பட்ட ஷபாஅத்தாகவுமிருக்கிறது. அல்லாஹுத் தஆலாவின் பிடியைக் குறித்து ஜாக்கிரதையாக இருங்கள்! அவனது பிடி பலமானதாகவும் நிர்ணயிக்கப்பட்டதாகவு மிருக்கிறது. இன்னும் நரக நெருப்பு ஒரு பேரீத்தங் கொட்டையில் ஒரு சிறிய துண்டின் அளவிருந்த போதினும் சரியே அதனைப் பயந்து கொள்ளுங்கள்!

அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹுத் தஆலா உயிர்களையும் ஜீவன்களையும் தன்னை வணங்குவதற்காக அல்லாமல் சிருஷ்டிக்க வில்லை, அவைகள் நன்றி செலுத்துவன வாகவும், அவைகளது நன்றி அங்கீகரிக்கப் பட்டதாகவும் இருப்பதற்காகவே சிருஷ்டித்துள்ளான். அவைகள் ஜீவித்திருப்பதற்கு எண்ணப்பட்ட நாட்களை

அவைகளுக்கு நன்கொடையாக அளித்து, இரு கணவாய்களிலும் அவைகளுக்கு வழி காட்டி, இரு பாதைகளையும் அவைகளுக்குக் கற்பித்திருக்கிறான். எனவே, அவைகள் முக்தியுடைந்தனவாகவோ அல்லது தூரத்தப்பட்டனவாகவோ இருக்கின்றன.

நிர்ணயிக்கப்பட்ட பகல்களும் இரவுகளும் வேகமாக மாறிக் கொண்டிருப்பதைப் பாடம் கற்றுக்கொள்ள மாட்டீர்களா? பரத்தப் பட்டுள்ள சிருஷ்டிகள் அழிந்து கொண்டிருப்பதை நீங்கள் பார்க்க மாட்டீர்களா? இவ்வுலகில் உங்களுக்கு நிரந்தர மிருக்கிறதா? அல்லது நிர்ணயிக்கப்பட்டுள்ள அல்லாஹுத் தஆலாவின் அக்கினியை விட்டு உங்களுக்கு அபய மிருக்கிறதா?

அல்லாஹுத் தஆலாவின் றஹ்மத் தென்னும் கருணை விசால மாக இருப்பதைக் கண்டு நீங்கள் மருளுகிறீர்களா? கப்றில் உங்களுக்கு நிகழுவதையும் மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்படும் நாளில் நிகழுகிற பயங்கரங்களையும் அதிருப்திகரமானவைகளையும் குறித்து நீங்கள் சிந்திக்கிறீர்களில்லை. மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்படும் மைதானில் உங்களை ஒன்று சேர்த்து, உங்களது றப்பு தனது மிகப் பெரியதான அர்ஷுடன் வரும்போது உங்களது நிலை என்னாகும்?

பழிக்கத்தக்க கிரியைகளைக் குறித்து உங்களைக் கேள்வி கணக்குக் கேட்பான். நீதி என்ற தராசு உங்களுக்கு ஏற்படுத்தப்படும். அப்பொழுது நீங்கள் எள்ளளவும் அநீதி செய்யப்படமாட்டீர்கள். உங்களது கிரியைகள் எழுதப்பட்ட புத்தகங்கள் உங்களுக்குக் கொடுக் கப்படும், அதில் நீங்கள் எதையும் குறைக்க முடியாது, எனவே, குற்றமுள்ள யாவரும் நடுங்குவர்; எழுபது நபிமார்களது நற்கிரியைகளை அவர்கள் கொண்டு வந்தாலும் அவர்கள் அபஜயம் அடைபவர்கள், நிர்ப்பாக்கியவான்கள் என்றே அவர்கள் எண்ணுவார்கள்.

அந்த நாளுடைய கொடுமைகளில் நின்றும் விடுதலை யடைந்து, பிழை பொறுக்கப்பட்டவர்களில் எழுதப்பட்ட ஆன் மாவுக்கே சோபனம்!

மறதியாளர்களே! ஜாக்கிரதை யாகுங்கள். அறிவுள்ளவர் களே நீங்கள் ஞாபகித்துக் கொள்ளுங்கள். நன்றியறிதலாகவுள்ள தௌபாவாக அல்லாஹுத் தஆலாவினிடம் தௌபாச் செய்யுங்கள். நீங்கள் பழிக்கப்பட்டவர்களாகவும் கோபிக்கப்பட்டவர்களாகவும் ஆகாதிருப்பதற்காக நீங்கள் கேள்வி கணக்குக் கேட்கப்படுவதற்கு முன் உங்களையே நீங்கள் கேள்வி கணக்குக் கேட்டுக், கொள்ளுங்கள்!

உயர்தரமான ஸுன்னத்துக்களைக் கடைப் பிடித்து, பழிக் கத்த இகழத்தக்க பித்அத்துகளைத் தவிர்த்துக் கொள்வதையும் கடைப்பிடியுங்கள். ஏனெனில், பித்அத்துகள்யாவும், வழிகேடுகள் யாவும் கியாமத்து நாளில் விசாரணை செய்யப்படும்.

ஒருவர் ஒரு அழகிய வழியை ஏற்படுத்தினுல் அதனை ஏற் படுத்தியதன் நன்மைப் பயனும், அதன் பிரகாரம் செய்தவர்களது நன்மைப் பயனும் கியாமத்து நாள்வரை அவருக்குக் கிடைக்கும். ஒருவர் ஒரு கெட்ட வழியை ஏற்படுத்தினுல் அதனை ஏற்படுத்திய தினுடையவும், அதன் படி நடந்தவர்களுடையவும், தீமைப் பயன் கியாமத்து நாள்வரை அவருக்குக் கிடைக்கும். முடிவில்லாத நன்மைப் பயனுள்ளதும், பிரயோஜனங்கள் நின்று போகாததுமான நிரந்தர மான தர்மங்களைச் செய்யுங்கள், ஏனெனில், மனிதன் மரித்து விட்டால் மேற்கூறப் பட்டுள்ள தர்மங்களை யல்லாமல் மற்றைய அவரது கிரியைகள் யாவும் அறுந்து விடும். இவை மட்டும் இறை வனுல் ஏற்றுக் கொள்ளப் பட்டதாகவும் விரிக்கப் பட்டதாகவும் இருந்து வரும்.

தனது இம்மையிலேயே தனது மறுமைக்காக, தனது ஜீவியத்திலேயே தனது மரணத்துக்காக, தனது சௌக்கியத்திலேயே தனது நோய்க்காக, தனது வாலிபத்திலேயே தனது வயோதிகத்துக் காக, கட்டமுறைதச் செய்து உயர்தரமான மாளிகைகளில் பிரவேசிக்கச் செய்யப் பட்டவர்களுக்கே சோபனம்!

*அல்லாஹுத் தஆலா நம்மையும் உங்களையும் தௌபாச் செய்து மீண்டவர்களிலாக்குவானாக! நமக்கும் உங்களுக்கும் பழிக்கத்தக்க கிரியைகளை மன்னிப்பானாக! எல்லாப்புகழும் றப்பாகிய றஹீமாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே தகும்!*

أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○

كَلَّا إِنَّهَا تَذْكِرَةٌ فَمَنْ شَاءَ ذَكَرَهُ ○ فِي صُحُفٍ مُكَرَّمَةٍ

مَرْفُوعَةٍ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலாவினிடம் காவல் தேடுகிறேன்.

அவ்வாறில்லை, நிச்சயமாக அது ஞாபகமூட்டியே, ஆகவே, எவர் விரும்புகிறாரோ அவர் அதனை ஞாபகித்துக் கொள்ளட்டும், 'உயர்த்தியான சங்கையாக்கப்பட்ட புத்தகங்களில் (எழுதப்பட்டிருக்கிறது).

(திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ

بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ

بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

---

## الجمعة الاولى للجمعة الرابعة من رجب يذكر فيها المعراج

بسم الله الرحمن الرحيم ○

الحمد لله الذي ارسل الينا النبي المختار المصطفى ○ و
نزل علينا الفرقان لنخشى ○ سبحان الذي اسرى بعبده
ليلا من المسجد الحرام الى المسجد الاقصى ○ واوصله الى
العرش المعلى ○ نحمده على هذه النعم التي لا تعد ولا
تحصى ○ ونشكره على ما فضل عبده باسرائه ليلة المعراج فكان قاب
قوسين او ادنى ○ ونشهد انه لا اله الا هو وحده لا
شريك له له الاسماء الحسنى ○ ونشهد ان سيدنا محمدا
عبده ورسوله الذي تشرف برؤية ربه وقد رأى من
ايات ربه الكبرى ○

صلى الله وسلم على سيدنا محمد وآله وصحبه اجمعين ○

يَا أَيُّهَا النَّاسُ ○ اتَّقُوا اللهَ الْعَظِيمَ عَزَّ وَجَلَّ وَأَطِيعُوهُ
أُوصِيكُمْ عِبَادَ اللهِ وَإِيَّايَ بِتَقْوَى اللهِ ○

## றஜபு மாதம்

## நான்காவது ஜும்ஆ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடை யோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

எல்லாப் புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும். அவன் நம்மிடம் தெளித்து வடித்துத் தெரிந்தெடுக்கப்பட்ட நபியை அனுப்பி, நாம் அஞ்சுவதற்காக நமக்கு புர்க்கான் என்னும் வேதத்தை அருளினான்.

மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து மஸ்ஜிது அக்ஸா வரை தனது அடியாரை இரவில் அழைத்துச் சென்றானே அவன் தூயவன்.

எண்ணவொண்ணாததும் வரையறையில்லாததுமான இந்த அருட்கொடைகளுக்காக அவனைப் புகழ்கிறோம். தனது அடியாரை மிஃராஜுடைய இரவில் அழைத்துச் சென்று சிறப்பித்த

தற்காக அவனுக்கு நன்றி செலுத்துகிறோம். எனவே, இரண்டு வில்லுக்குள்ள வித்தியாசத்துக்கு அல்லது அதற்கும் நெருக்கமாகவே நெருங்கி விட்டார்கள்.

அவனைத் தவிர்த்து வணக்கத்துக் குரியவன் (வேறுயாரும்) இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை இல்லை. அவனுக்கு அழகிய திருநாமங்களிருக்கின்றன என்று சாக்ஷியங்கூறுகிறேன்.

எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவும் இருக்கிறார்கள் என்று சாக்ஷியங் கூறுகிறோம். அவர்கள் தங்களது றப்பைப் பார்ப்பதன் மூலம் சிறப்புப் பெற்றிருக்கிறார்கள். தங்களது றப்பின் பெரியதான திருஷ்டாந்தங்களைப் பார்த்திருக்கிறார்கள்.

أَمَّا بَعْدُ சகோதரர்களே! நண்பர்களே!!. உங்களுக்கு ஆசையூட்டி, கீழான படித்தரங்களை விட்டு உங்களுக்கு எச்சரிக்கை செய்து அச்சமூட்டி இருக்கிறேன். சங்கையான றஜபுமாதம் முடிவடையும் தறுவாயிலிருக்கிற தென்பதை உங்களுக்குக் கூறி இருக்கிறேன். அறிந்துகொள்! அது நெருங்கிவிட்டது. இன்னமும் அதில் கொஞ்சம்தான் எஞ்சி இருக்கிறது. நற்கிரியைகளைச் செய்து, தான் செய்த பொல்லாத செய்கைகளுக்காக அழுவதன் மூலம் அதனை வழியனுப்பி, மரணத்தின் தவணை நெருங்குவதைப் பார்த்து, அவாவை விடுபவர் உங்களிலிருக்கிறாரா?

அழிச்சாட்டியத்தை அகற்றி, நன்றியான செய்கையையும் தக்வா என்னும் பயபக்தியையும் தன்னில் சேகரித்துக் கொள்பவர் உங்களிலிருக்கிறாரா? தனது றப்பின் சமூகத்தில் பிழை பொறுக்கத் தேடி, தான் சம்பாதித்த பாவங்களுக்காக பச்சாத்தாபப்பட்டு, மிக

உயர்வுள்ள, மாகா உயர்வுள்ளவனுக்குக் கீழ்ப்படிபவன் உங்களிலிருக்கிறுரா ?

தனது எஜமானின் ஊழியத்தில் பணிந்து, முன்னர் நடைபெற்றதை விட்டு விட்டவர் உங்களிலிருக்கிறுரா? அறிந்து கொள்ளுங்கள்! இந்த மாதத்தின் இருபத்தேழாவது இரவு உங்களுக்கு நிழலிடும். அது புனிதமான இரவு. அதில் தான் அல்லாஹுத் தஆலா உயர்வுள்ள வானங்களின் பால் தனது அடியாரை அழைத்துச் சென்றுன். பண்டைக்காலத்து நபிமார்களும், முகர்ரபான மலக்குகளும் அவரைச் சந்தித்தனர். அவர்களுக்கு மஸ்ஜிதுல் அக்ஸாவில் அவ்வடியார் இமாமத்துச் செய்தார். அவர்களுக்குத் தெளிவான கட்டளைகள் அருளப்பட்டன. தங்களது றப்பை நேத்திரக் கண்ணுல் பார்க்கும் பாக்கியம் கிடைத்தது, இது சொர்ப்பனத்தைப் போன்றதல்ல.

ஆகவே, அவ்விரவுக்குள்ள மேன்மை எவ்வளவு? அவ்விரவில் நித்திரை செய்யாமல் விழித்திருந்து வணங்கி, அதன் பகலில் நோன்பிருப்பவருக்கு அவரது பாவங்கள் அழிக்கப்பட்டு, அவரது தீமைகள் மன்னிக்கப்பட்டு, உயர்வான அந்தஸ்துகளை அடைவார்.

எனவே, தனது சௌக்கியத்திலேயே தனது நோய்க்கும், தனது ஜீவித்திலேயே தனது மரணத்துக்கும், தனது வாலிபத்திலேயே தனது வயோதிகத்துக்கும், தனது இம்மையிலேயே தன் மறுமைக்கும் வேண்டிய தங்கரிப்பைச் சேர்த்துக் கொண்டவருக்கே சோபனம்! வானங்களிலுள்ளதும் பூமியிலுள்ளதும் அல்லாஹுத் தஆலாவுக்கே சொந்தம். தங்களது கிரியைகளைக் கொண்டு பாவம் செய்தவர்களை அவன் நிச்சயமாகத் தண்டிப்பான். நன்மைகளைக் கொண்டு நல்லது செய்தவர்களுக்குச் சன்மானம் அளிப்பான்,

தாருல்பக்கா என்னும் நித்திய உலகுக்காக, தாருல்பனு என்னும் இவ்வனித்திய உலகில் துறவு பூண்டு, சன்மார்க்கத்துக்கு ஆகாத முறையில் சம்பாதிப்பதை விடுத்து, பாவங்களைத் துறந்து,

தனது அகத்தை எதிர்த்துப் போராடிச் சுத்தமானவனுக்கே சோபனம்! ஏனெனில், மனிதனுக்கு அவன் முயன்றதையல்லாமல் வேறு பாக்கியமில்லை. மேலும், அவனது முயற்சியின் பயன் கூடிய சீக்கிரத்தில் காண்பிக்கப்படுவான்.

தன் அகத்தை இச்சைகளை விட்டு முறித்து, நன்மைகளைச் சேகரிப்பதில் பழக்கி, இச்சையை விடுத்து றமலான் மாதத்தில் நோன்பு நோற்கத் தயாரானவருக்கே சோபனம்!

பொய், கோள், புறம் ஆகியவைகளைத் தள்ளி, கோபத்தையும், முஸ்லிம்கள் பால் கெட்ட எண்ணத்தையும், மூமின்களுக்கு அல்லாஹுத் தஆலா அளித்துள்ளதைக் கண்டு பொறாமை கொள்வதையும் விட்டுத் தன் அகத்தைச் சுத்தப்படுத்தி, தனது றப்பின் பிடியைப் பயந்தவர்களுக்கே மங்களம்! ஏனெனில், அல்லாஹுத் தஆலா பிடிப்பதில் கடுமையானவன்; பலத்திலும் கடியவன்,

மரிப்பதற்கு முன்னதாகவே மரித்து, தவறிப் போவதற்கு முன்னதாகவே தவறி, நித்திரை செய்வதற்கு முன்னதாகவே நித்திரை செய்து, பாவங்களைச் சம்பாதிப்பதில் மூழ்ந்து, தனது றப்பால் கை விடப்பட்டுத் தள்ளப்பட்டவனுக்கே கேட்டுக்குமேல் கேடுண்டாகும், இவன் தான் நிர்ப்பாக்கியன். தனது மாதாவின் வயிற்றிலேயே நிர்ப்பாக்கியனாகி, அழிச் சாட்டியஞ் செய்தவன்,

நிர்ப்பாக்கியமாகிவிட்டார்களே அவர்கள் நரகிலிருப்பார்கள். அவர்களுக்கு அங்கு நெருப்பு இரைச்சல் போட்டுக் கொண்டிருக்கும், அங்கு எப்போழுதும் நிரந்தரமாக இருப்பார்கள். நற்பாக்கிய முள்ளவர்கள் சுவர்க்கத்திலிருப்பார்கள். ஆசனங்களில் அமர்ந்து சாய்ந்து கொண்டு, எப்பொழுதும் நிரந்தரமாகப் பாக்கியங்களை அனுபவித்துக் கொண்டுமிருப்பார்கள்.

நாயனே! தெரிந்தெடுக்கப்பட்ட நபி அவர்களை எங்களுக் கனுப்பி, மஸ்ஜிதுல் ஹறாமிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு இரவில் அழைத்துச் சென்றவனே! எங்களுக்கு உதவி புரிந்தவர்களுக்கு நீ உதவி புரியுமாறும், எங்களுக்கு உதவிபுரியாமல் மறுத்தவர்களுக்கு

நீயும் உதவி மறுத்து, எங்களது எல்லாப் பாவங்களையும் எங்களுக்கு மன்னித்து, எங்களுக்கு ஷபாஅத்துச் செய்பவரான முஜ்தபா (ஸல்) அவர்களுக்கண்டையில் நாங்கள் மரிக்கும்வரை உனது பட்டணத்தில் வாசஞ் செய்வதை எங்களுக்குச் சுலபமாக்கி வைப்பதையும், பாக்கிய வுலகாகிய சுவர்க்கத்தில் எங்களைப் பிரவேசிக்கச் செய்வதையும் கீழ் தரமான பாதாளங்களை விட்டு எங்களை விடுவிப்பதையும் உன்னிடம் நாங்கள் கேட்கின்றோம்,

பக்தர்களுக்கு மட்டிலும் மறுமையில் அன்பு பரிபாலிப் பவனும் றப்புமாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும்.

أَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○

وَالنَّجْمِ إِذَا هَوٰى ○ مَا ضَلَّ صَاحِبُكُمْ وَمَا غَوٰى ○ وَمَا يَنْطِقُ عَنِ الْهَوٰى ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலா வினிடம் காவல் தேடுகிறேன்.

நக்ஷத்திரத்தின் மீது—அது பாடை சாயும் போது—பிரமாணமாக, உங்களது தோழர் வழி கெட்டு விடவு மில்லை அழிச்சாட்டியம் செய்யவு மில்லை. மேலும், (சுய) இச்சையின்பேரில் அவர் பேசமாட்டார். (திரு குர்ஆன்)

بَارَكَ اللّٰهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْاٰنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ بِالْاٰيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالٰى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الْخَامِسَةِ مِنْ رَجَبَ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ وَلِيِّ التَّوْفِيْقِ وَالْهِدَايَهْ ○ اَلَّذِيْ بَعَثَ عَلَيْنَا لِهِدَايَتِنَا رُسُلًا وَّاَنْبِيَآءَ وَاَوْلِيَآءَ وَعُلَمَآءَ ذَوِي الْفِطَانَةِ وَالدِّرَايَهْ ○ اَحْمَدُهٗ حَمْدًا كَثِيْرًا عَلٰٓى اَنْ بَيَّنَ لَنَا الْاَحْكَامَ وَاَوْضَحَ لَنَا الْحَلَالَ وَالْحَرَامَ وَحَفِظَنَا مِنَ الْغَوَايَهْ ○ وَاَشْكُرُهٗ شُكْرًا كَبِيْرًا عَلٰٓى اَنْ مَنَّ عَلَيْنَا بِتَضَاعُفِ الْحَسَنَاتِ فِي الْاَزْمِنَةِ الْمُتَبَرِّكَاتِ وَجَعَلَهَا لَنَا حِمَايَهْ ○ اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ فِي الْبِدَايَةِ وَالنِّهَايَهْ ○ وَاَشْهَدُ اَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهُ الْمَبْعُوْثُ بِشَرَفِ السِّعَايَهْ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ○

يٰٓاَيُّهَا النَّاسُ ○ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ ○ اُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ○

## றஜபு மாதம்

# ஐந்தாவது ஜுமுஆ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

எல்லாப் புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும். நேர்வழி பெறுவதற்கும், நல்லுதவி புரிவதற்கும் உரியவன், நமக்கு நேர்வழி காட்டுவதற்காக நபிமார்களையும் றஸூல்மார்களையும் ஒலிமார்களையும் ஆலிம்களையும் அறிவிற் சிறந்தோர்களையும் நம்மிடம் அனுப்பினன்.

எங்களுக்கு வேதக் கட்டளைகளை விபரித்து, மதத்தில் அனுமதிக்கப் பட்டதையும் நமக்குத் தெளிவாக்கி, வழி தவறுவதை விட்டு நம்மைக் காத்ததற்காக அவனைப் புகழ்கின்றேன். புனிதமான காலங்களில் செய்யப்படுகிற நற்கிரியைகளுக்குப் பன்மடங்கு அதிக நன்மைப் பயன்களை யளித்து நமக்குக் கேட்காமலிருக்கும் போதே அதனை அளித்ததற்காகவும், அவைகளை நமக்குக் கார்மானமாக ஆக்கியதற்காகவும் அவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

வணக்கத்துக் குரியவன் அவனைத் தவிர்த்து (வேறு யாரும்) இல்லை, அவன் தனித்தவன், ஆரம்பத்திலும் சரி, முடிவிலும் சரி அவனுக்கு இணை இல்லை, எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவும் சிறந்த முயற்சியைக் கொண்டு அனுப்பப் பட்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

أَمَّا بَعْدُ அறிவும் விளக்கமுமுள்ளவர்களே! காலத்தின் மாறுபாட்டையும், காலச் சக்கரத்தின் சுழல் மாறுவதையும் கவனியுங்கள். ஒரு நிமிஷம் கழிந்தாலும் உங்கள் வயதில் ஒரு நிமிஷம் குறைந்து விடுகிறது. உங்களது மரண வேளை நெருங்கிக் கொண்டுமிருக்கிறது. எனவே, குற்றச் செய்கைகளில் இவ்வளவுக்கு முனைந்திருப்பது எதற்காக?

உங்களுக்கு மரணம் சம்பவித்து, தவறிப்போகுதல் என்ற நகாரா உங்களுக்கு அடிக்கப்பட்டு, மரண உபதேசமும் செய்யும்போது ஏற்படுவதை நினைவு கூருங்கள்! உங்களது அன்பர்கள் உங்களை நல்லடக்கம் செய்வதிலும், உங்கள் தோழர்கள் உங்களைக் கபன் செய்வதிலும்—உங்களுக்கும் அவர்களுக்குமிடையில் எவ்வித உறவோ சலுகையோ இல்லாத விதமாக—அவர்கள் தீவிரமாகும் நேரத்தை எண்ணிப் பாருங்கள்!

உங்களது கப்றுவரையில் உங்கள் பொருள்கள், புத்திரர்கள், கிரியைகள் ஆகிய மூன்றும் உங்களுடன் செல்லும். ஆனால், அவைகளில் முதல் இரண்டும் உங்களை விட்டுத் திரும்பி விடும். மூன்றுவது மட்டிலும் உங்களுக்குப் பக்கத்தில் உங்கள் கொடியை ஊன்றிக்கொண்டிருக்கும். மூன்றுவதாகிய உங்களது கிரியைகள் நல்லவைகளாக இருந்தால் உங்களுக்கே சோபனம்! ஆனால், அவை தீயனவாக இருந்தால் அசங்கிதமான இடத்தில் நீங்கள் விழுந்து விடுவீர்கள்.

உங்களது றப்பையும், மதத்தையும், நபியையும் குறித்து முன்கர், நக்கீர் என்ற இரு மலக்குகள் உங்களிடம் வந்து வினவினால், அவர்களுக்கு நீங்கள் என்ன பதிலுரைப்பீர்கள் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள்! நீங்கள் சரியான பதில் கூறினால் அது உங்களுக்கு நல்லதாகிவிடும். உங்களது நா தடுமாறிவிட்டால் நீங்கள் நாசம் என்ற படுகுழியில் வீழ்ந்து விடுவீர்கள்.

உங்களது விலா எலும்புகள் சிதறிப் போகும்படியான விதத்தில் உங்களை கப்று நெருக்கி, உங்கள் கப்றுகளும் உங்களுக்கு இருள் மயமாகி கைசேதத்திலும் பச்சாத்தாபத்திலும் நீங்களானால் உங்களுக்கு எப்படி இருக்குமென்பதை உய்த்துணர்ந்து பாருங்கள்!

சுவர்க்கத்துப் பூங்காவனங்களில் ஒன்றாகவோ அல்லது கொள்ளிக்கட்டைகளும் நெருப்புப் பொறிகளுமுள்ள நரகக் குழிகளில் ஒன்றாகவோ கப்று இருக்கும். எவரது கிரியைகள் சன்மார்க்கத்துக்கு இணக்கமானவைகளாக இருக்கின்றனவோ அவருக்கு சுவர்க்கத்து வாசல்கள் அங்குத் திறக்கப்படும். எவரது கிரியைகள் தீயனவாக இருக்கின்றனவோ அவர்கள் வேதனையிலும் துன்பத்திலும் வீழ்ந்து விடுவர். அவர்களை சர்ப்பங்களும் தேள்களும் சூழ்ந்து கொள்ளும். பல படித்தரங்களுள்ள நரகத்தின் வாசல்கள் அவர்களுக்குத் திறந்து விடப்படும். அவர்கள் பரிபூரணமாக நசுக்கப்படுவார்கள். பூரணமாக நொறுக்கப்பட்டு விடுவார்கள். அப்பொழுது அவர்கள் கைசேதப்படுவார்கள். ஆனால், அக்கைசேதம் அவர்களுக்குப் பிரயோஜனப்படாது. அவர்கள் தௌபாச் செய்வார்கள். அந்தத் தௌபா நன்மை செய்யாது.

" கப்றானது மறு உலகத்தின் மன்ஜில்களாகிய தங்குமிடங்களில் முதலாவது மன்ஜில், அதில் வெற்றி பெற்றவருக்கு அதற்கப்புறமுள்ளது மிக இலேசாக இருக்கும். அதில் தோல்வி யடைந்தவர் நிர்ப்பாக்கியத்தில் வீழ்ந்து விடுவார். அதற்கப்புறம் ஒருநாளிருக்கிறது. அதன் பயங்கரமோ மிகக் கடுமையாக இருக்கும். அதனைக் குறித்த விசனமோ மிக நீண்டதாக இருக்கும். அங்கு பந்தத்துவமோ சகோதரத்துவமோ, நேச உடன்பாடோ பிரயோஜனப்படாது. அந்த நாளில் மனிதன் தனது சகோதரன், தாய், தந்தை, மனைவி, மக்கள், தனக்கும் மற்றவர்களுக்கு மிடையிலிருந்த அன்பு, சலுகை ஆகிய யாவையும் விட்டு விரண்டோடுவான் " என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை அஞ்சுங்கள்! பயப்படுங்கள்! பயபக்தி செலுத்துங்கள்! நேர்மையான சொல்லைச் சொல்லுங்கள்! உங்களது கிரியைகளை அவன் சன்மார்க்கத்துக்கு இணக்கமானதாகத் திருத்துவான். உங்களது பாவங்களை உங்களுக்கு மன்னிப்பான். இனயத் என்னும் அநுக்கிரக சாகரத்தை உங்கள் மீது வருஷிப்பான்.

தொழுகை, ஹஜ்ஜு, ஜக்காத்து, றமலான்மாத நோன்பு ஆகிய இஸ்லாம் மதத்தின் அர்கான்களாகிய தூண்களை நிறைவேற்றுவதைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்! ஆகவே, எவர் அவைகளை வீணாக்குகிறாரோ அவரது பாக்கியத்தை அவர் வீணாக்கியவராகிறார். அவருக்குக் கார்மானமும் இல்லாமலாகி விடும்.

சன்மார்க்கத்தில் வெறுக்கப்பட்ட காரியங்களைத் தவிர்த்துக் கொள்ளுவதும், வழிப்பாடுகளில் முயல்வதும் முக்கியமாகக் கண்ணியமும் சிறப்புமுள்ள இக்காலங்களில் அதிகமாக முயலுவதும் உங்களுக்கவசியம். மேலும், பறக்கத்தான மாதங்களையும் சிறப்பும் கண்ணியமுமுள்ள நாட்களையும் உங்களுக்கு அல்லாஹுத் தஆலா ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறான். எனவே, அன்றைய தினங்களில் அல்லாஹுத் தஆலா சங்கைபாக்கி வைத்தவைகளுக்குப் பங்கம் செய்யாதீர்கள். அவைகளில் உங்களுக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பங்களைத் தவற விட்டு விடாதீர்கள். இந்தச் சந்தர்ப்பங்களைக் கொள்ளை முதல்களாகக் கருதுங்கள்! இக்காலங்கள் உங்களை விட்டுப் பிரிந்த பிறகு நீங்கள் அப்புறம் தவறிப் போனதை நினைத்துக் கவலை கொள்ளக் கூடும்.

மேலும், "நாயனே! கிருபையுள்ளவனே! இவ் வையகத்தில் யாவருக்கும் சமமாகக் கிருபை செய்பவனே! தனது கோபத்தைப் பார்க்கிலும் தனது கிருபை மிகைத்தவனே! வியாபகமான அனுக்கிரகமும் உபகாரமுமுள்ளவனே! எங்களுக்கு

மன்னிப்புச் செய்வாயாக. எங்களுக்குக் கிருபை செய்வாயாக! எங்களுக்கு நரகத்தை விட்டுக்காக்கும் கேடயமாகவும் காவலாகவும் இருக்கக் கூடிய நற்கிரியைகளைப் புரிய நல்லுதவி புரிவாயாக?'' என்று முழுமனதுடன் பிரார்த்தனை புரியுங்கள்!

எல்லாப் புகழும் அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே தகும்.

أَعُوذُ بِاللّٰهِ السَّمِيعِ الْعَلِيمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○

قُلْ يَا عِبَادِيَ الَّذِينَ أَسْرَفُوا عَلَى أَنفُسِهِمْ لَا تَقْنَطُوا مِن رَّحْمَةِ اللّٰهِ إِنَّ اللّٰهَ يَغْفِرُ الذُّنُوبَ جَمِيعًا إِنَّهُ هُوَ الْغَفُورُ الرَّحِيمُ ○

மிகவும் செவியேற்பவனான, மிகவும் அறிந்தவனான அல்லாஹுத் தஆலாவினிடம் எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டுக் காவல் தேடுகிறேன்.

"தங்கள் நப்ஸுகளுக்கு விரோதமாக அநியாயஞ் செய்து கொண்ட எனது அடியார்களே! அல்லாஹ்வின் அருள் கிடைக்காதெனை நம்பிக்கை இழக்காதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் பாவங்கள் அத்தனையையும் மன்னிப்பான். நிச்சயமாக அவன்தான் பிழை பொறுப்பவன்; அன்பினன்" என்று (நபியே) நீர் கூறுவீராக!

(திரு குர்ஆன்)

بَارَكَ اللّٰهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

---

# اَلْجُمُعَةُ الْأُولَى لِلْجُمُعَةِ الْأُولَى مِنْ شَعْبَانَ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ خَالِقِ الْإِنْسِ وَالْجَانِّ ○ اَلْحَلِيْمِ الْغَفُوْرِ لِأَهْلِ الْعِصْيَانِ ○ نَحْمَدُهُ حَمْدًا كَثِيْرًا عَلٰى أَنْ أَوْصَلَ إِلَيْنَا شَهْرَ شَعْبَانَ ○ وَنَشْكُرُهُ شُكْرًا جَمِيْلًا عَلٰى أَنْ بَشَّرَنَا بِقُرْبِ رَمَضَانَ ○ أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا هُوَ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ خَلَقَ الْخَلْقَ وَعَلَّمَهُ الْبَيَانَ ○ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ شَهَادَةً نَدْخُلُ بِهَا الْجِنَانَ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَآلِهِ وَصَحْبِهِ أَجْمَعِيْنَ ○

يَا أَيُّهَا النَّاسُ ○ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَأَطِيْعُوْهُ ○ أُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَإِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ○

# ஷஅபான் மாதம்

## முதலாவது ஜுமுஆ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

### (அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

எல்லாப் புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும். அவன் மனிதரையும் ஜின்னையும் சிருஷ்டித்தவன். விவேகமுள்ளவன். பாபிகளுக்குப் பிழை பொறுப்பவன். நமக்கு ஷஅபான் மாதத்தைச் சேர்ப்பித்தற்காக அவனை மிகுதமாகப் புகழ்கிறோம். றமலான் மாதம் சமீபித்துவிட்டதென்பதைக் குறித்து நமக்கு நற்செய்தி கூறியதற்காக அவனுக்கு அழகிய முறையில் நன்றி செலுத்துகிறோம்.

வணக்கத்துக் குரியவன் அவனைத் தவிர்த்து (வேறு யாரும்) இல்லை, அவன் தனித்தவன். அவனுக்கு இணையில்லை. சிருஷ்டிகளைச் சிருஷ்டித்து, பிரசங்கித்தலை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தான் என்று சாக்ஷியங் கூறுகிறோம். எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவும் இருக்கிறார்கள் என்று எங்களைச் சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்யக் கூடியவிதமான சாக்ஷியமாக சாக்ஷியங் கூறுகிறோம்.

أَمَّا بَعْدُ சகோதரர்களே! தோழர்களே! சென்ற காலங்கள் சென்று விட்டன. கழிந்த இரவுகள் கழிந்து விட்டன.

ஆனால், நீங்கள் மறதிகளில் மூழ்கியவர்களாகவும், பாவங்களில் அழுக்காகிக் கொண்டவர்களாகவும் இருக்கிறீர்கள். நஷ்டமும் கைசேதமும் தான் என்னே!

ஆனாலும், அறிந்து கொள்ளுங்கள், அல்லாஹுத் தபாரக்க வதஆலாவினது ஹபீபென்னும் அன்பரான நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நேசித்த புனிதமான ஷஅபான் என்னும் மாதம் உங்களுக்கு வந்து விட்டது. நரகவாதிகளுக்கு அதில் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. குறைகள் மறைக்கப்படுகின்றன. அது ஒரு மாதம். அதன் சிறப்போ மகத்தானது. அதன் பெருமையோ அபரிமிதமானது. றமலான் மாதத்தின் வருகையைக் குறித்து அது நற்செய்தி கூறுகிறது. அது தர்மம் செய்தல், பாபமன்னிப்புச் செய்தல், கைராத்துகளை அதிகப்படுத்துதல், திருக்குர்ஆனை ஓதுதல் ஆகியவைகளுள்ள மாதம்.

"றஜபு மாதமோ எனது உம்மத்துக்களுக்குரிய மாதம்; மற்றைய மாதங்களைப் பார்க்கினும் அதற்குள்ள விசேஷ மேன்மை மற்றைய உம்மத்துக்களைப் பார்க்கினும் எனது உம்மத்துக்கு இருக்கிற மேன்மையைப்போலிருக்கிறது. றமலான் மாதமோ அல்லாஹுத் தஆலாவினது மாதம்; மற்றைய மாதங்களைப் பார்க்கினும் அம்மாதத்துக்கு இருக்கிற மேன்மையானது மற்றவர்களைப் பார்க்கினும் அல்லாஹுத் தஆலாவுக்கு இருக்கிற மேன்மையைப் போலிருக்கிறது. ஷஅபான் மாதமோ எனது மாதம்; மற்றைய மாதங்களைப் பார்க்கினும் அம்மாதத்துக்குள்ள மேன்மையானது என்னைத் தவிரவுள்ள மலக்கு, மனிதன், ஜின் ஆகியவர்களைப் பார்க்கினும் எனக்கிருக்கிற மேன்மையைப்" போலிருக்கிறது என்று நபிகள் கோன் (ஸல்) அவர்கள் நவின்றதாக ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது.

ஏ! அந்நியனே!! ஏழையே! வருத்தப்படுபவனே! கவலையுள்ளவனே!! சிறப்பாகிய இம்மாதத்தைக் கொள்ளை முதலாகக் கொள்வாயாக! பாவங்களை விட்டு மீள்வாயாக! எத்தனை

பாபிகளது தௌபா அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது? றமலான் மாத நோன்புகளை நோற்க உன் மனத்தை பணக்கச் செய்!

இந்த உலகம் அநித்தியம். இதற்கு நிலை இல்லை என்பதை நீ அறியாயோ? இந்த உலகுக்கு நிலை இருப்பதாக நீ எண்ணுவையாயின், அது பெரிய அசதியேயாகும். இதற்கு அழிவிருக்கிறது என்று நீ எண்ணுவையாயின், பாவங்கள் செய்யும் விஷயத்தில் உனக்குத் துணிச்சல் எதற்காக? நரகத்தை விட்டு ஈடேற்றம் பெற்றிருப்பதாக உனக்கு உரிமைச் சீட்டு கிடைத்திருக்கிறதா? சென்ற வருஷத்தில் இந்த மாதத்தைப்போன்ற மாதத்தில் உன்னுடன் இருந்தவர்கள் எங்கே? சென்ற வருஷத்தில் உன்னுடன் தோழமை பூண்டு உன்னுடன் விற்றிருந்தவர்கள் எங்கே?

காலத்தின் சுழல் அவர்களை அழித்துவிட்டது. ஏ! மிஸ்கீனே! உன்னைக் குறித்து மிக ஆச்சரியமாக இருக்கிறது. இவ்வுலகத்தின் மாறுபாட்டை நீ பிரத்தியக்ஷமாகப் பார்த்துக் கொண்டு அதனைப் படிப்பினையாகக் கொள்கிறாயில்லை. இவ்வுலகம் வீழ்ச்சியடைவதை நேரில் காண்கின்றனை! ஆனால், உனது பேராசையைக் குறைத்துக் கொள்கிறாயில்லை.

உனது இருதயத்தின் மீது மூடி போடப்பட்டிருக்கிறதா? அல்லது உனது நேத்திரத்தில் குருடு இருக்கிறதா? அல்லது உனது செவிப்புலன்களில் வடு இருக்கிறதா? ஆகவே, மேலெண்ணத்தைத் குறைத்துக்கொள்! மரணத் தவணைக்குத் தயாராகிக்கொள்! உயர்வும் வல்லமையுமுள்ளவனுக்கும், பரிபூரணமான நபிக்கும் கீழ்ப்படி! "கௌலேபைஸல்" என்ற திருக் குர்ஆனில் உள்ளபடி கிரியைகளைப் புரி! நரகவேதனையை விட்டுக் காப்பாற்றும்படி இறைவனைக் கெஞ்சு! இறைவனது சமூகத்தில் பிரசன்னமாக வேண்டிய நாள் நெருங்கி விட்டது.

அந்த நாளில் "வேதனையே! கேடே!!" என்ற சப்தங்கள் அதிகமாக இருக்கும். பாபிகள் அந்நாளில் வெட்கிப்பார்கள். பாவங்கள் எழுதப்பட்ட பட்டோலை அன்றைய தினத்தில் விரிக்கப் படும். கூலி கொடுப்பவனாகிய அரசன் அந்நாளில் கோபிப்பான்.

அன்றைய தினத்தில் பிள்ளை பரிந்து பேசாது; பொருளும் பிரயோஜனப்படாது. அந்நாளில் மனிதன் தன் சோதரனையும், மாதா பிதாவையும், மனைவி மக்களையும் விட்டு விரண்டோடுவான். ஒவ்வொருவருக்கும் அந்நாளில் ஒரு நிலையிருக்கும். அது மற்றவர்களைப் பற்றிக் கவனிக்க அவர்களை விடாது.

சுவர்க்கவாதிகளது கால்களுங்கூட அன்றைய தினத்தில் ஆட்டங்கண்டு விடும். அப்படியிருக்க நானும், நீங்களும் ஏழைகளே! நாம் எம்மாத்திரம்? ஒவ்வொருவரும் அவரவர் செய்கைக்குப் பிணையாயிருப்பார்கள். அத்னான் கோத்திரத்துத் தலைவரான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சங்கை மட்டும் நம் விஷயத்தில் கவனிக்கப்படாமலிருந்திருக்குமாயின், இகத்தில் எல்லாருக்கும் இதஞ்செய்பவனான றஹ்மான் நம்மைக் கோபித்து விடுவான்; பூமி நம்மை விழுங்கி விட்டிருக்கும்.

சிறுபாவங்கள் என்ன? நம்மில் பெரும்பாவங்கள் எங்கும் பரவி விட்டன. மதுபானம் அருந்துவதும், வியபிசாரமும், அனாதைகளின் சொத்தை அபகரித்தலும், வட்டியும் மிகுந்து விட்டன. வரம்பை மீறுவதும் நம்மில் அளவு கடந்து விட்டது.

நாயனே! கிருபையாளனே! கேட்காமல் கொடை கொடுக்கும் வள்ளலே! நாங்களோ குற்றவாளிகளாகவும் பாவிகளாகவுமுள்ள உனது அடியார்கள். உன்னை யல்லாததை விட்டு எங்களுக்குத் தேவையில்லாமற் போகக்கூடியதான கிருபையை எங்களுக்கு அருள்வாயாக! நரகத்தின் வேதனையை விட்டு எங்களைக் காப்பாயாக!

எல்லாப் புகழும் அகிலத்தாருக்கு பரப்ரகிய அல்லாஹுத் தஆலாவுக்கே தகும்.

أَعُوذُ بِاللهِ السَّمِيعِ الْعَلِيمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ۝ كُلُّ مَنْ عَلَيْهَا فَانٍ ۝ وَّيَبْقَىٰ وَجْهُ رَبِّكَ ذُو الْجَلَالِ وَالْإِكْرَامِ ۝ فَبِأَيِّ آلَاءِ رَبِّكُمَا تُكَذِّبَانِ ۝

மிகவும் செவியேற்பவனுன, மிகவும் அறிந்தவனுன அல்லாஹுத் தஆலாவினிடத்தில், எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டுக் காவல் தேடுகிறேன்.

ஒவ்வொருவரும் அதில் அழிந்து போகுபவர்கள் தான் இன்னும், வல்லமையும் சங்கையுமுள்ள உனது றப்பின் முகம் நிரந்தரமாக இருக்கும். ஆகவே, உங்களது றப்பின் அநுக்கிரகங்களில் எதனை நீங்கள் பொய்ப்பிக்கிறீர்கள்?

(திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَىٰ جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ۝

# اَلْجُمُعَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الثَّانِيَةِ مِنْ شَعْبَانَ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ هَدَانَا سَوَاءَ السَّبِيْلِ ○ وَجَعَلَ لَنَا التَّوْفِيْقَ خَيْرَ دَلِيْلٍ ○ نَحْمَدُهٗ حَمْدًا كَثِيْرًا عَلٰى مَا اَنْعَمَ عَلَيْنَا بِاِنْزَالِ التَّنْزِيْلِ ○ اَنْزَلَهٗ فِيْ لَيْلَةٍ مُّبَارَكَةٍ وَّفَضَّلَهٗ عَلٰى سَائِرِ الْكُتُبِ اَكْبَرَ تَفْضِيْلٍ ○ وَنَشْكُرُهٗ شُكْرًا عَلٰى اَنْ اَرْسَلَ اِلَيْنَا النَّبِيَّ الْجَلِيْلَ ○ نَبِيٌّ عَظِيْمٌ قَدْرُهٗ فَخِيْمٌ لُطْفُهٗ خَصَّهُ اللهُ بِلُطْفِهِ الْعَمِيْمِ وَفَضْلِهِ الْجَلِيْلِ ○ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ صَاحِبُ التَّعْظِيْمِ وَالتَّبْجِيْلِ ○

صَلَّى اللهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ○

يَآ اَيُّهَا النَّاسُ ○ اِتَّقُوا اللهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ اُوْصِيْكُمْ عِبَادَ اللهِ وَاِيَّايَ بِتَقْوَى اللهِ ○

# ஷஅபான் மாதம்

## இரண்டாம் ஜும்ஆ

بسم الله الرحمن الرحيم

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

நேரான பாதையில் நம்மைச் சேர்த்து, நல்லுதவி செய்வதை நல்ல ஆதாரமாக நமக்கு ஏற்படுத்திய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப்புகழும் தகும். திருக் குர்ஆனை அருளியதன் மூலம் நமக்கு அநுக்கிரகம் செய்ததற்காக அவனைப் பெரிதும் புகழ்கின்றோம். அதனை ஒரு புனிதமான இரவில் அருளி, மற்றைய வேதங்களைப் பார்க்கினும் மேலான சிறப்பில் அதற்குச் சிறப்பளித்தான்,

வல்லமையுள்ள நபியை நம்மிடம் அனுப்பியதற்காக அவனுக்கு நன்றி செலுத்துகிறோம். அவர் மகத்தான அந்தஸ்துள்ள நபி; அவரது இரக்கச் சித்தம் மிகப் பெரியது, அல்லாஹுத் தஆலா எங்கும் வியாபகமாயுள்ள தனது கடாக்ஷத்துக்கும் அவரைச் சொந்தப் படுத்தி இருக்கிறான்.

வணக்கத்துக் குரியவன் அவனைத் தவிர்த்து (வேறு யாரும்) இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை இல்லை என்று சாக்ஷியங் கூறுகிறோம். எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்களென்றும் மரியாதைக்கும் பெருமைக்கு முரியவர்கள் என்றும் சாக்ஷியங் கூறுகிறோம்.

أَمَّا بَعْدُ ஜனங்களே! இரவுகளும் பகல்களும் சென்று விட்டன. ஆனால், நீங்களோ பாபங்களில் கவிழ்ந்திருக்கிறீர்கள், கடுமையான வேதனையில் நீங்களாகி விட்டீர்கள். நீங்கள் அளவுக்கு மீறிக்கடப்புச் செய்ததன் கைசேதமே! நீங்கள் செய்ததாலேற்பட்ட கேடே! இந்த உலகம் பிரயாண வீடு என்பதை நீங்களறியவில்லையா? அடக்கி ஆள்பவர்களான அரசர்களெங்கே? வல்லமை பொருந்திய ஸுல்த்தான்களெங்கே? அவர்களை காலச்சக்கரம் அழித்து விட்டது. இவ்விதமாகவே அதிகமானவர்களையும் சொற்பமானவர்களையும் அது அழித்து விடும்.

அவர்களது பராக்கிரமம் அவர்களுக்குப் பிரயோஜனப் படவில்லை, அவர்களை அரசாங்கம் நிலைக்கச் செய்ய வில்லை. மலக்குல் மவ்த்து இஸ்ராயீல் (அலை) அவர்கள் திடீரென நம்மிடம் வந்து விட்டால் நீங்களும் நாமும் யாது செய்வோம்?

அறிந்து கொள்ளுங்கள்! புனிதமான இரவு உங்களுக்கு வந்து விட்டது. அவ்விரவின் மேன்மை பிரபல்யமானது. அதன் அந்தஸ்து தெரிந்ததுதான். அதுதான். ஷஅபான் மாதத்தின் பாதி இரவு, எனவே, அவ்விரவில் நித்திரை செய்யாமலிருந்து தொழுவதன் மூலமும், அதன் பகலில் நோன்பு நோற்பதன் மூலமும் அதனைச் சந்தித்துக் கொள்ளுங்கள்! அவ்விரவில் கப்றுகளைத் தரிசிப்பதையும் பிழை பொறுக்கத் தேடுவதுடன் பிரார்த்தனைகள் புரிவதையும் அதிகப்படுத்திக் கொள்ளுங்கள்! அல்லாஹுத்தஆலா நமக்குக் கிருபை செய்து ஏராளமான நன்மைப் பயனை நமக்குக் கொடுக்கவும் கூடும்.

"ஷஅபான் மாதத்தின் பாதியின் இரவு வந்தால் அதன் இரவில் வணங்குங்கள்! அதன் பகலில் நோன்பு வையுங்கள்! ஏனெனில், அன்று சூரியன் அஸ்தமித்தவுடன் அல்லாஹுத்தஆலா இப்பூ மண்டலத்தின் வானத்துக்கு இறங்கி "பிழை

பொறுக்கத் தேடுபவர் இருக்கிறாரா? நான் அவருக்குப் பிழை பொறுக்கிறேன். சோதிக்கப்பட்டவர் இருக்கிறாரா? அவருக்கு நான் சௌக்கியத்தைத் தருகிறேன்; இரப்போர் இருக்கிறாரா? அவருக்கு நான் கொடுக்கிறேன்'' என்று சூரியோதயம் வரை கூறுகிறான்'' என்று அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு கூறி இருப்பதாக இப்னு மாஜா (றஹ்) அவர்களும், பைஹக்கீ (றஹ்) அவர்களும் றிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

"ஒரு இரவில் றஸூலுல்லாஹி (ஸல்) அவர்களை நான் காணவில்லை. ஆதலின், அவர்களைத் தேடிக் கொண்டு நான் வெளியில் புறப்பட்டேன். அப்பொழுது "பக்கீஉ'' என்ற கப்ருஸ்தானில் வானத்தின்பால் தலையை உயர்த்தியவர்களாக இருந்தார்கள்.

உடனே, "ஆயிஷாவே! உனக்கும், அவனது றஸூலுக்கும் அல்லாஹுத் தஆலா அநியாயம் செய்வான் என்பதை நீ பயப்படுகிறாயா?'' என்று கூறி விட்டு "ஷஃபான் மாதத்தின் பாதி இரவில் அல்லாஹுத் தஆலா இம்மண்ணுலகின் வானத்தில் இறங்கி பனூ கல்பு கோத்திரத்தாரின் ஆடுகளின் உரோமங்களின் எண்ணிக்கையைப் பார்க்கினும் அதிகமானவர்களுக்குப் பிழை பொறுக்கிறான்'' என்று நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்'' என்பதாக உம்முல் மூமினீன் ஹஜ்றத் ஆயிஷா ஸித்தீக்கா (றலி) அவர்கள் றிவாயத்துச் செய்திருப்பதாக இமாம் திர்மிதி (றஹ்) அவர்கள் இயம்பி இருக்கிறார்கள்.

"ஷஅபான் மாதத்தில் நோன்பு வைப்பதைப் பார்க்கினும் அதிகமாக வேறு மாதங்களில் றஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் நோன்பு வைப்பதில்லை. அதாவது றமலான் மாதம் நீங்கலாக மற்றெந்த மாதத்தைப் பார்க்கினும் அதிகமாகவே ஷஅபான் மாதத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நோன்பு வைப்பது வழக்கம்'' என்று உம்முல் மூமினீன் ஹஜ்றத் ஆயிஷா ஸித்தீக்கா (றலி) அவர்கள் கூறி இருப்பதாக இப்னு அஸாக்கிர் (றஹ்) அவர்கள் றிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

ஏனெனில், ஜீவித்துக் கொண்டிருப்பவர்களது ஆன்மாக்கள் மரித்தவர்களில் இம்மாதத்தில் மாற்றப்படுகிறது.

சகோதரர்களே! தோழர்களே! இந்த வருஷத்தில் மரிப்பவர்களது பெயர்கள் இந்த இரவில் தான் வெளிப்படுகின்றன. நமது பெயர்கள் மரித்தவர்களது ஜாப்தாவில் வெளியாகக்கூடும் என்பது உங்களுக்குத் தெரியுமா? அல்லது எங்களுக்குத்தான் தெரியுமா ரமோ பெரும் மறதியில் ஒட்டகக் குட்டிகளைப் போலும் தீவனமாகு பவர்களைப் போலும் இருக்கிறோம்.

எனவே, அல்லாஹுதஆலாவினிடத்தில் நீங்கள் தௌபாச் செய்து, வழிப்போக்கர்களைப் போலாகுங்கள்! மேலெண்ணத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்! மரணத் தவணையை வழி பாருங்கள்! பிரயாணத்துக்குக் கட்டமுதாக இருப்பதற்காக வணக்கம் செய்வதில் முனையுங்கள்!

உங்களது அன்பர்கள் உங்களை விட்டு விட்டு, உங்களது இஷ்டர்கள் உங்களை வெறுத்துத்தள்ளி, அந்நியர்களும் அயலகத்தாரும் உங்களை நல்லடக்கம்செய்து, உற்றாரும் உறவினரும் உங்களுக்கும் அவர்களுக்கும் இதற்கு முன் எவ்விதப்பற்றோ வாஞ்சையோ இல்லாதது போல் உங்களை கப்றில் மறைப்பதில் அவசரப்பட்டு, உங்களுக்கும் அவர்களுக்குமிடையில் அன்பில்லாத மாதிரியில் உங்கள் மீது மண்ணைப் போட்டால் உங்கள் நிலை என்னாகும் என்பதை எண்ணிப் பாருங்கள்!

அப்பொழுது நீங்கள் கைசேதப்படுவீர்கள், ஆனால், அந்தக் கைசேதம் உங்களுக்குப் பிரயோஜனப்படாது. அப்பொழுது நீங்கள் ஞாபகம் செய்வீர்கள். ஆனால், அந்த ஞாபகம் உங்களுக்கு உபயோகப் படாது. எனவே, நீங்கள் நன்மை செய்தவர்களாக இருந்தீர்களாயின், உங்களுக்கு மங்களமே! ஆனால், நீங்கள் தீமை செய்தவர்களாக இருப்பீர்களேல், ஏராளமான நன்கொடைகள் கிடைக்காமற் போவதால் உங்களுக்கு ஏற்பட்டுள்ள கைசேதம்தான் என்னே?

நாயனே! நாங்களோ குற்றவாளிகளான உனது அடியார்கள். எங்கள் வழிப்பாடு என்னும் கட்டமுதோ மிகக் கொஞ்சம், ஆகவே, கப்றிலும், மஹ்ஷருக்குப் பிறகும் எங்களுக்குக் கிருபை செய்வாயாக! அழகிய விதமாக எங்கள் குற்றங்களைப் புறக்கணிப்பாயாக! அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப்புகழும் தகும்.

أَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ○
حٰمٓ وَالْكِتَابِ الْمُبِيْنِ إِنَّا أَنْزَلْنَاهُ فِيْ لَيْلَةٍ مُّبَارَكَةٍ إِنَّا
كُنَّا مُنْذِرِيْنَ ○ فِيْهَا يُفْرَقُ كُلُّ أَمْرٍ حَكِيْمٍ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலாவினிடம் காவல் தேடுகிறேன்.

ஹாமீம், தெளிவான வேதத்தின் மீது பிரமாணமாக, நிச்சயமாக நாம் அதனை ஒரு புனித இரவில் இறக்கினோம். நிச்சயமாக நாம் (அச்சமூட்டி) எச்சரிக்கை செய்பவர்களாக இருந்தோம். அதில் விவேகமுள்ள ஒவ்வொரு காரியமும் விதிக்கப்படும்.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللّٰهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْاٰنِ الْعَظِيْمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْاٰيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ إِنَّهُ تَعَالٰى جَوَادٌ كَرِيْمٌ مَلِكٌ قَدِيْمٌ
بَرٌّ رَؤُوْفٌ رَّحِيْمٌ وَرَبٌّ حَلِيْمٌ ○

# اَلْخُطْبَةُ الْأُولٰى لِلْجُمُعَةِ الثَّالِثَةِ مِنْ شَعْبَانَ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

اَلْحَمْدُ لِلّٰهِ الْمُسَبِّبِ لِلْاَسْبَابِ ۝ وَمُفَتِّحِ الْاَبْوَابِ ۝ خَالِقِ الْاِنْسَانِ مِنَ التُّرَابِ ۝ وَمُشَرِّفِهٖ عَلٰى كَثِيْرٍ مِّنْ اُولِى الْاَلْبَابِ ۝ اَحْمَدُهٗ حَمْدًا مُّتَوَالِيًا عَلٰى مَا اَنْعَمَ عَلَيْنَا وَهُوَ الْعَزِيْزُ الْوَهَّابُ ۝ وَاَشْكُرُهٗ شُكْرًا مُّتَتَالِيًا وَّهُوَ الْكَرِيْمُ التَّوَّابُ ۝ اَشْهَدُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَلَا مُعِيْنَ لَهٗ وَهُوَ رَبُّ الْاَرْبَابِ ۝ وَاَشْهَدُ اَنَّ سَيِّدَنَا وَمَوْلَانَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ شَفِيْعُ الْعُصَاةِ يَوْمَ الْحِسَابِ ۝ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ خَيْرِ اٰلٍ وَّاَصْحَابٍ

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ۝

يٰاَيُّهَا النَّاسُ ۝ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ ۝ اُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ۝

# ஷஅபான் மாதம்

## மூன்ருவது ஜும்ஆ

بسم الله الرحمن الرحيم

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

எல்லாப் புகழும் காரணங்களுக்குக் காரணனை அல்லாஹுத் தஆலாவுக்கே தகும். மேலும், அவன் வாசல்களைத் திறப்பவன், மண்ணிலிருந்து மனிதனைச் சிருஷ்டிப்பவன், புத்தியுள்ளவர்களான அநேகரைச் சிறப்பித்தவன். நமக்கு அநுக்கிரகம் செய்ததற்காக அவனைத் தொடர்ந்து புகழ்கின்றேன். அவன் தான் மிகைத்தவன்; நன்கொடையளிப்பவன். இன்னும் அவனுக்குத் தொடர்ச்சியாக நன்றி செலுத்துகிறேன். அவன் தான் தயாளன்; தௌபாவை அங்கீகரிப்பவன்.

அவனைத் தவிர்த்து வணக்கத்துக் குரியவன் (வேறு யாரும்) இல்லை. அவன் தனித்தவன், அவனுக்கு இணையில்லை. அவனுக்கு உதவியாளனில்லை, போஷிப்பவர்களை யெல்லாம் போஷிப்பவன் என்று சாக்ஷியங்கூறுகிறேன். இன்னும் எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும், கேள்வி கணக்குக் கேட்கும் நாளில் பாபிகளுக்கு ஷபாஅத்துச் செய்பவர்களாகவும் இருக்கிறார்கள் என்று சாக்ஷியங்கூறுகின்றேன். அவர்களுக்கும், சிறந்த கிளையாரும் தோழர்களுமான அவர்களது கிளையாருக்கும் தோழர்களுக்கும் அல்லாஹுத் தஆலா ஸலாத் என்னும் கருணையை அருள்வானாக!

أما بعد தோழர்களே! நண்பர்களே!! நான்கு காரியங்கள் வருவதற்கு முன்னதாக உங்களுக்கு இருந்து வருகிற நான்கு காரியங்களை அதாவது நோய் வருவதற்கு முன்னதாக சௌக்கியத்தை, அலுவல்கள் வருவதற்கு முன்னதாக ஓய்வை, மரணம் வருவதற்கு முன்னதாக ஜீவிபத்தை, நரை வருவதற்கு முன்னதாக பால்யத்தை கொள்ளை முதலாகக் கொள்ளுங்கள்!

அல்லாஹுத் தஆலாவுக்கும் அவனது றஸூலுக்கும் வழிப்பாடு செய்வதில் முயலுங்கள்! அவனது கட்டளைகளை நிறைவேற்றுவதை விரும்புவதையும், உங்களுக்கு விநாசம் சூழ்ந்துகொள்ளாதிருப்பதற்காக அவன் விலக்கியதைச் செய்வதையும் தவிர்த்துக் கொள்ளுங்கள்! தவிர, ஒவ்வொரு க்ஷணத்திலும் நேரத்திலும் அல்லாஹுத் தஆலாவின் திருப்தியைத் தேடிக்கொள்ளுங்கள்! ஒவ்வொரு நாழிகையிலும் அவனது வேதனையை அஞ்சுங்கள்! ஏனெனில், அவன் பிடியில் மிகக் கடுமையானவன், வேதனை செய்வதில் மிகப் பலமானவன்.

தவிர, அல்லாஹுத் தஆலாவை வணங்குங்கள்! அவனுக்கு எவ்வஸ்துவையும் இணையாக்காதீர்கள். ஆகவே, எவர் அவனுக்கு இணைவைக்கிறரோ அவரது நற்கிரியைகள் அழிக்கப்பட்டு அவர் வேதனைக்கு உரியவராகிவிடுவார்.

மேலும், அவனை ஏகனாக்கிவையுங்கள்! ஏனெனில், ஏக தெய்வக் கொள்கையானது வழிப்பாடுகளுக்குத் தலையாகவும், நற்கிரியைகளுக்குச் சாவியாகவும் இருக்கிறது. மேலும், அதுதான் மறுமையில் முக்தியளிப்பதாகவுமிருக்கிறது. ஏனெனில், தவறான விசுவாசமும், தீய சேர்க்கையும் இருக்கும்போது சன்மார்க்கத்துக்கு இணக்கமான கிரியை பிரயோஜனம் செய்யாது.

அற்பத் தன்மைகளை விட்டு இருதயங்களைத் தூய்மைப்படுத்துவதை அவசியமாகக் கொள்ளுங்கள்! அதன் உயர்வான

தன்மைகளை நம்பிக்கொண்டிருக்காதீர்கள். ஏனெனில், இருதயம் மாறிக்கொண்டிருப்பதில் பலமானது. அல்லாஹுத் தஆலாவினது சன்மார்க்கத்தில் இருதயங்கள் ஸ்திரமாக இருக்கவேண்டும் என அவனைப் பிரார்த்தியுங்கள்! நற்கதியடையும் விஷயத்தில் அவன் மீது தவக்குல் வையுங்கள்!

சிறப்பான இந்த மாதங்களையும் புனிதமான நாட்களையும் கொள்ளை முதலாகக் கொள்ளுங்கள். வேதனைக்குரிய கிரியைகளையும் பாபக்கிர்த்தியங்களையும் செய்து, பரிசுத்தமான உங்களது நப்ஸுகளை அந்த மாதங்களிலும் அந்த நாள்களிலும் அநியாயஞ் செய்யாதீர்கள்.

நாசமும் வேதனையும் அழிவுமுள்ள இவ்வுலகில் உங்களைத் தாமதப்படுத்திவைத்து, இந்தக் காலங்கள் வரை உங்களை ஜீவித்திருக்கச் செய்துள்ள அவனது அநுக்கிரகங்களுக்காகவும் தயைகளுக்காகவும் அவனுக்கு நன்றி செலுத்துங்கள்!

சென்று போன தந்தையர், மூதாதையர், தனயர், பௌத்திரர், சகபாடிகள், தோழர்கள் ஆகியவர்களைப் படிப்பினையாகக் கொள்ளுங்கள்! இவை போன்ற காலங்களில் எத்தனை அஜாக்கிரதைக்காரர்கள் உங்களுடன் இருந்தார்கள்? இன்பங்களில் எத்தனை சுகவாசிகள் உங்களுடனிருந்து சுகித்தார்கள். அப்படியிருக்க இன்பங்களை இடிப்பவரும் கூட்டங்களைக் கலைப்பவருமானவர் அவர்களை கவர்ந்து சென்று உங்களது கும்பலைக் கலைத்து, உங்கள் கூட்டங்களை நசுக்கி, அவர்களை மண்ணறையில் வசிக்கச் செய்துவிட்டார்.

அவர்களது பூட்டுகள் உலைந்து விட்டன, அவர்களது அவயவங்கள் முறிந்து விட்டன. அவர்களது உரோமங்கள் உதிர்ந்து

விட்டன. அவர்களது வயிறுகள் நாற்ற மெடுத்து விட்டன. அவர்களது நேத்திரங்களிலிருந்து கண்ணீர்கள் வடிந்தன. அவர்களது கன்னங்களைப் புழுக்கள் அரித்துவிட்டன. வாலிப அழகால் அவர்கள் மருண்டு கொண்டிருந்தது போய்விட்டது.

மேலும், கப்றுகளை ஜியாரத்துச் செய்பவர்களான அவர்களை அழைத்துக் கூறுபவர்கள், "பாழடைந்த வீடுகளில் குடியிருப்பவர்களே! தனித்த வீடுகளில் தங்கி இருப்பவர்களே! எவ்வாறு நீங்களிருக்கிறீர்கள்? உங்களது மனைவியர்கள் மறுமணம் செய்து கொண்டார்கள், உங்களது இல்லங்கள் இடிக்கப்பட்டு விட்டன. உங்களது சொத்துக்கள் பந்துமித்திரர்களால் பாகிக்கப்பட்டு விட்டன என் செய்திகள் எங்களிடமிருந்து உங்களுக்குக் கிடைத்தனவா? வாய் மூடி மௌனமாக இருப்பவர்களே! இந்தச் சமாதிகளில் உங்களுக்கு நிகழ்ந்த தென்னவென்பதை எங்களுக்கறிவியுங்கள்" என்று கூறுவார்.

அப்பொழுது சமாதிகளுக்குள்ளிருந்து "ஆ! நாங்கள் செய்த குறைகளால் நேர்ந்த கைசேதமே! நாங்கள் தேடிக் கொண்டவைகளுக்கேற்பட்ட கேடே!! நாங்கள் செய்ததாலுண்டான நஷ்டமே! நாங்கள் புரிந்ததனால் ஏற்பட்ட கஷ்டமே! இவ்வுலகமாகிய வீட்டுக்கு நாங்கள் திரும்பமுடியுமா? அவ்வாறு திரும்பும் பக்ஷத்தில் முன்னர் நாங்கள் செய்து கொண்டிருந்த தல்லாததை நாங்கள் செய்து நன்மைப்பயன்களை நாங்களடைவோமே! எங்களுக்குத் தூரமாகித் தவறிவிட்டதற்காக நாங்கள் கைசேதப்படுகிறோம். வாலிபத்திலும் வயோதிகத்திலும் மறதியாயிருந்தற்காக நாங்கள் அழுகிறோம், எங்களை இருள் சூழ்ந்து கொண்டது. கப்று நெருக்குவது எங்களை அழித்துவிட்டது. எங்களைத் மண் தின்றுவிட்டது.

"எனவே, எங்களை நீங்கள் பார்த்தீர்களாயின் நீங்கள் புலிகளுக்கும் நாய்களுக்கும் பயந்து ஓடுவது போல எங்களை விட்டு நீங்கள் விரண்டோடுவீர்கள்.

"எங்களது நிலைகளைக் குறித்து விசாரிப்பவர்களே! எங்கள் சம்பந்தமான செய்திகளைத் துருவுபவர்களே! உங்களுக்கு நாங்கள் உபதேசம் செய்கிறோம். சன்மார்க்கம் என்பது உபதேசம் தான். அவசியமாகத் தவிர்த்துக் கொள்ளவேண்டிய தீமைகளையும் பாவங்களையும் தேடுவதில் நீங்கள் உங்களது அருமையான மூச்சுக்களைப் பழுதாக்காதீர்கள்.

"சமாச்சாரம் சொல்வது நேரில் பார்ப்பதைப் போலில்லை; நேரில் பார்க்கும் போது ஆதார ஆதேயங்கள் பிரயோஜனப்படாது" என்று அவர்கள் பதில் கூறுவார்கள்.

நுண்ணறிவுள்ளவர்களே! நோன்பை விடாமல் நோற்று, தொழுகையை நிறைவேற்றுவது கொண்டும், திக்றுகளை அதிகமாகச் செய்வது கொண்டும், திருக் குர்ஆனை ஓதுவதன் மூலமும், ஸலவாத்துச் சொல்வதால் சிறுபாவம் பெரும் பாவங்கள் பொறுக்கப்பட்டு, கேள்வி கணக்கு இலேசாக்கப்படுவதால் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அதிகமாக ஸலவாத்துச் சொல்வதன் மூலமும் உங்களது கப்றுகளை பிரகாசமுள்ளதாக்குவீர்களாக!

அல்லாஹுத் தஆலா உங்களையும் எங்களையும் தௌபாச் செய்து, அவன் பால் மீண்டவர்களாக ஆக்குவதுடன், கேள்வி கணக்குக் கேட்காமலே உங்களையும் எங்களையும் சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்வானாக! எல்லாப்புகழும் அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே தகும்.

اَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ○
حٰمٓ تَنْزِيْلُ الْكِتَابِ مِنَ اللهِ الْعَزِيْزِ الْعَلِيْمِ ○ غَافِرِ
الذَّنْبِ وَقَابِلِ التَّوْبِ شَدِيْدِ الْعِقَابِ ○

மிக அறிந்தவனான மிகச்செவி யேற்பவனான அல்லாஹுத் தஆலாவினிடம் எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டுக் காவல் தேடுகிறேன்.

ஹாமீம், வேதத்தை இறக்கிவைத்தல் மிக அறிந்தவனான, மிகைத்தவனான அல்லாஹ்வில் நின்று மிருக்கிறது. (அவன்) பாவத்தைப் பொறுப்பவன், தௌபாவை அங்கீகரிப்பவன், வேதனை செய்வதில் கடியவன்

(திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْاٰنِ الْعَظِيْمِ وَنَفَعَنَا وَاِيَّاكُمْ
بِالْاٰيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ اِنَّهٗ تَعَالٰى جَوَادٌ كَرِيْمٌ مَلِكٌ قَدِيْمٌ
بَرٌّ رَؤُوْفٌ رَحِيْمٌ وَرَبٌّ حَلِيْمٌ ○

---

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الرَّابِعَةِ مِنْ شَعْبَانَ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ تَحَيَّرَتْ فِيْ اِدْرَاكِ عَجَآئِبِ قُدْرَتِهِ الْاَفْهَامُ ○
وَعَجَزَتْ عَنِ الْوُصُوْلِ اِلٰى حَقَآئِقِ سَطْوَتِهِ الْعُقُوْلُ وَالْاَوْهَامُ ○
فَسُبْحَانَهٗ مِنْ اِلٰهٍ خَلَقَ الْخَلْقَ وَدَبَّرَهٗ عَلٰى اَحْسَنِ النِّظَامِ ○
وَاَوْدَعَ فِيْهِ اَسْرَارًا وَّلَطَآئِفَ تَدُلُّ عَلَى الْاِحْكَامِ ○ اَشْهَدُ
اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ شَهَادَةً دَآئِمَةً
بِدَوَامِ اللَّيَالِيْ وَالْاَيَّامِ ○ وَاَشْهَدُ اَنَّ سَيِّدَنَا وَمَوْلَانَا
مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ شَفِيْعُ الْعُصَاةِ يَوْمَ الْقِيَامِ ○
صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَمَنْ تَبِعَهُمْ بِاِحْسَانٍ
وَّالسَّلَامُ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ○

يَا أَيُّهَا النَّاسُ ○ اتَّقُوا اللهَ الْعَظِيمَ عَزَّ وَجَلَّ وَأَطِيعُوهُ
أُوصِيكُمْ عِبَادَ اللهِ وَإِيَّايَ بِتَقْوَى اللهِ ○

## ஷஅபான் மாதம்

## நான்காவது ஜும்ஆ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

எல்லாப் புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும். அவனது தத்துவத்திலுள்ள நூதனங்களை யுணர்ந்து கொள்வதில் விளக்கச் சக்திகள் திகைப்படைந்திருக்கின்றன. அவனது தாஷ்மகத்தின் அகமியங்களைக் கண்டுபிடிக்க அறிவுகளும் யூகங்களும் இயலாமலிருக்கின்றன.

அவன் தூய நாயன். சிருஷ்டிகளைச் சிருஷ்டித்து அழகிய அமைப்பில் அவைகளை நிர்வகித்தான். பலத்தையும் உறுதியையும் அறிவிக்கக்கூடிய இரகசியங்களையும் நுட்பங்களையும் அவைகளில் அமைத்தான்.

வணக்கத்துக்குரியவன் அவனைத் தவிர்த்து (வேறு ஒருவரும்) இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணையில்லை என்று இரவும் பகலும் இருக்கும் காலமெல்லாம் நிலைக்கக் கூடிய விதமான சாக்ஷியமாக சாக்ஷியங் கூறுகிறோம். எங்கள் நாயகம் எங்கள் எஜமானர் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும், தூதராகவும், கியாமத்து நாளில் குற்றவாளிகளுக்குப் பரிந்து பேசுபவர்களாவும் இருக்கிறார்கள் என்று சாக்ஷியங் கூறுகிறோம்.

அவர்களுக்கும் அவர்களது கிளையார் தோழர்களுக்கும் நன்மையுடனும் இஸ்லாம் மதப்பற்றுடனும் அவர்களைப் பின்பற்றியவர்களுக்கும் அல்லாஹுத் தஆலா ஸலாத் என்னும் கருணை புரிவானாக!

أَمَّا بَعْدُ சபையோர்களே! மறதி என்ற துயிலிலிருந்தெழுங்கள்! நித்திரை செய்பவர்களான அசட்டையாளர்களில் நின்றும் நீங்களிருக்காதீர்கள். உங்களுக்கு மரணத்துக்குப் பிறகு கவலை நொம்பலம் ஆகிவைகளுடன் கூடிய நீண்ட நித்திரை இருக்கிறது. துர்ப்பாக்கியமென்ற தூக்கத்தை விட்டெழுங்கள்! இவ்வுலகில் விழித்துக் கொள்ளாமல் தூங்குபவர்கள் பெரிய ஆபத்துக்களில் வீழ்ந்து விடுவார்கள்.

உங்களுக்கு நிழலிட்டுக் கொண்டிருக்கிற இந்த மாதத்தைக் கொள்ளை முதலெனக் கருதி நோன்புகளையும் தொழுகையையும் நிறைவேற்றுவது கொண்டு முயலுங்கள்! ஏனெனில், றஜபு மாதம் விதையிடும் மாதம். ஷஅபான் மாதம் ஜலம் பாய்ச்சும் மாதம். றமலான் மாதம் பலன் அறுக்கும் மாதம்.

ஆகவே, றஜபு மாதத்தில் தானதர்மம் என்ற வித்தைப் பாவி, ஷஅபான் மாதத்தில் நன்மையான கிரியைகள் என்ற மழையைக்

கொண்டு ஜலம் பாய்ச்சியவர் நிரந்தமாக நிலைத்திருக்கக்கூடிய இன்பங்களை றமலான் மாதத்தில் வெற்றிக்கொள்வார். ஆனால், றஜபு மாதத்தில் விதையை விதைக்க மறந்தவர் அல்லது றஜபு மாதத்தில் விதையை விதைத்தாலும் ஷஅபான் மாதத்தில் ஜலம் பாய்ச்ச மறந்தவருக்கு றமலான் மாதத்தில் அவரது பங்கு குறைந்து விடும். இருளில் வீழ்ந்து விடுவார்.

எனவே, அல்லாஹுத் தஆலாவின் அடியார்களே! அவனை அஞ்சுங்கள்! பயப்படுங்கள்! சன்மார்க்கத்துக்கு இணங்கியதா அல்லவா என்ற சந்தேகாஸ்பதமானவைகளையும், சன்மார்க்கத்துக்கு விலக்கலானவை என்று தெளிவாக இருப்பவைகளையும் விட்டுத் தவிர்த்துக் கொள்ளுங்கள்!

மிருதுவான உங்களது மூச்சுக்களைப் பழுதாக்கி, பரிசுத்தமான உங்களது ஆன்மாக்களை பெரிய மானக் கேடானவைகளைச் செய்வது கொண்டு அசுத்தஞ் செய்யாதீர்கள். அதிகமாகக் கேள்வி கேட்பதையும், வதந்திகளை நம்புவதையும், பொருளை வீணாக்குவதையும் சண்டை சச்சரவுகளைச் செய்வதையும் விட்டு உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்! தடுத்துக்கொள்ளுங்கள்! எவர் இவைகளைச் செய்தாரோ கடுமையான பழிவாங்குதலில் சிக்கிக் கொள்வார்.

முன்னோர்களும் பின்னோர்களும் ஒன்று சேர்க்கப்பட்டு, படித்தவரும் பாமரரும் ஆஜர் செய்யப்பட்டு, ஒவ்வொரு செய்கையும் சொல்லையும் குறித்துக் கேள்வி கணக்குக் கேட்கப்பட்டு, ஒவ்வொரு நீட்டத்தையும் வருஷத்தையும் குறித்து விசாரிக்கப்படும் நாளைப் பயந்து கொள்ளுங்கள்!

மேலும், அவர்களது கிரியைகள் எழுதப்பட்டுள்ள புத்தகங்களை சங்கைவான்களான மலக்குகளாகிய எழுத்தாளர்கள் அவர்களுக்கு எடுத்துக் காண்பிப்பார்கள். அவைகள் மீது அவர்களது

பார்வை விழும்போது கைசேதத்தில் அவர்கள் ஆழ்ந்து விடுவார்கள். அதனைத் தடுத்துவிடக் கூடியவர் இல்லை. "இது என்ன புத்தகம்? சிறியதையோ பெரியதையோ எதனையும் சூழ்ந்து கொள்ளாமல் விட வில்லையே!" என்று கூறுவார்கள். தவிரவும் இராக் காலங்களிலும் பகற் காலங்களிலும் அவர்கள் சம்பாதித்ததைக் குறித்து கனிவிரக்கங் கொள்வார்கள். தங்களுக்குத் தங்களது றப்பு கிருபை செய்தாலல்லாமல் அவர்கள் நிச்சயமாக அழிந்து விடுவார்கள் என்று உறுதியாக எண்ணிக் கொள்வார்கள். அவன் தான் சாந்த முள்ளவன், மிக அறிந்தவன்.

அந்த தினத்தில் நற்பாக்கியம் அடைவான் என நற்செய்தி கூறப்பட்டு, "இன்னான் மகன் இன்னான் நற்பாக்கியத்தை அடைந்தான். இதற்குப் பிறகு இனி ஒருபோதும் துர்ப்பாக்கிய மடையமாட்டான்" எனக் கூறுபவர் கூறியவருக்கே சோபனம்!

அந்நாளில் காரிய சித்தியடையாமல், "இன்னான் மகன் இன்னான் துர்ப்பாக்கிய மடைந்து விட்டான். அப்புறம் அவனுக்கு நற்பாக்கியமில்லை" என்று கூறுபவர் கூறி, அவரைத் துசுகளும், நஷ்டங்களும், இருளும் சூழ்ந்து கொள்பவருக்கே கைசேதம்!

என் சகோதரர்களே! அல்லாஹுத் தஆலாவினிடம் நீங்கள் யாவரும் தௌபாச் செய்து கொள்ளுங்கள்! அல்லாஹுத் தஆலாவின் கயிற்றினை நீங்கள் யாவரும் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்! உங்களது றப்பு உங்களுக்குக் கிருபை செய்து ஈடேற்றம் என்ற மழையை உங்கள் மீது வர்ஷிக்கக் கூடும்.

குற்றங்களை விட்டுத் தௌபாச் செய்து மிக அறிந்தவனான அரசனின் ஆக்கினைகளுக்குப் பணிந்தவர்களில் எங்களையும் உங்களையும் அல்லாஹுத் தஆலா ஆக்கி, மோக்ஷ வீடாகிய சுவன பதியில் நம்மையும் உங்களையும் பிரவேசிக்கச் செய்வானாக!

அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும். மேலும், அல்லாஹுத் தஆலா தனது சிருஷ்டிகளில் சிறந்தவரான முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் அவர்களது கிளையார் தோழர் யாவருக்கும் கருணை புரிவானாக!

أَعُوْذُ بِاللّٰهِ السَّمِيْعِ الْعَلِيْمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ۝
تَبَارَكَ اسْمُ رَبِّكَ ذِي الْجَلَالِ وَالْإِكْرَامِ ۝

மிகவும் செவியேற்பவனை, மிகவும் அறிந்தவனை அல்லாஹுத் தஆலாவினிடத்தில் எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டுக் காவல் தேடுகிறேன்.

சங்கையும் வல்லபமுமுள்ள உனது றப்பின் (திரு) நாமம் புனிதமாகிவிட்டது.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللّٰهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْاٰنِ الْعَظِيْمِ وَنَفَعَنَا وَاِيَّاكُمْ
بِالْاٰيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ اِنَّهُ تَعَالٰى جَوَادٌ كَرِيْمٌ مَلِكٌ قَدِيْمٌ
بَرٌّ رَؤُوْفٌ رَحِيْمٌ وَرَبٌّ حَلِيْمٌ ۝

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الْاٰخِرَةِ مِنْ شَعْبَانْ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الْغَفُوْرِ لِاَهْلِ الْعِصْيَانْ ○ اَلْحَلِيْمِ الْكَرِيْمِ الْمَنَّانْ ○ اَشْهَدُ اَنَّهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ خَلَقَ الْخَلْقَ وَعَلَّمَهُ الْبَيَانْ ○ وَاَشْهَدُ اَنَّ سَيِّدَنَا وَمَوْلَانَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ اَنْقَذَنَا مِنَ الضَّلَالَةِ وَاَخْرَجَنَا مِنْ حُفْرَةِ النِّيْرَانْ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ○

يَآاَيُّهَا النَّاسُ ○ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ اُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ○

# ஷஅபான் மாதம்

# ஐந்தாவது ஜும்ஆ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

பாபிகளுக்குப் பிழை பொறுப்பவனும், கேட்காமலிருக்கும் போதே கொடுப்பவனும், தயையுள்ளவனும், சாந்தமுள்ளவனுமான அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும்.

வணக்கத்துக்குரியவன் அவனைத் தவிர்த்து (வேறு யாரும்) இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணையில்லை. சிருஷ்டிகளைச் சிருஷ்டித்து அவர்களுக்குப் பிரசங்கத்தைக் கற்றுக்கொடுத்தான் என்று சாக்ஷியங்கூறுகிறேன். எங்கள் நாயகம் எங்கள் எஜமானர் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவும் இருக்கிறார்கள். வழி கேட்டை விட்டு நம்மை சுத்தப் படுத்தி, நரகக் குழியை விட்டு நம்மை வெளியேற்றினார்கள் என்று சாக்ஷியங் கூறுகிறேன்.

أَمَّا بَعْدُ தோழர்களே! சோதரர்களே! இதுவோ ஷஅபான் மாதம். இது முடிவு பெறும் தறுவாயிலிருக்கிறது. அதில் கொஞ்சம் தான் எஞ்சி இருக்கிறது. நற்கிரியைகளைக் கொண்டு அதனை வழியனுப்புபவர் உங்களிலிருக்கிறாரா? அதில் தீய காரியங்களைத் தவிர்த்துக் கொள்பவர் உங்களிலிருக்கிறாரா?

இம்மாதத்தில் நற்கிரியைகளைச் சம்பாதித்து தீய காரியங்களை விட்டு விலகினரோ அவருக்கே மங்களம்! சுவர்க்கத்தைக் கொண்டு அவருக்குச் சுபச் செய்தியுண்டாவதாக!! அசட்டையினுல் அதனைக் காலங்கடத்தி, தனது தவறுகளுக்காகப் பச்சாத்தாபப்படாமலும் தௌபாச்செய்யாமலும் இருந்து, நரகவேதனைக் காளாகிவிட்டாரே அவருக்கே கேடு! நாம் வீணுக்கி விட்ட வயதுக்கு ஆவோ! நாம் பழுதாக்கிவிட்ட வாணுளுக்கு அன்னே! பாபத்தைச் செய்ததற்கு அந்தோ! நாம் பொறுமை கொண்டோம், பின்னின்று குறை கூறினேம், ஒருவருக்கொருவர் கோபங்கொண்டோம். ஒருவருக் கொருவர் பிணங்கிக்கொண்டோம், பெரும்பாபம் நம்மில் பெருகி விட்டது. இரகசியமாகவும் பகிரங்கமாகவும் சிறுபாவங்கள் பரவி விட்டன.

அத்னுன் கோத்திரத்து நாயகம் (ஸல்) அவர்களது சங்கை மட்டு மில்லாதிருக்குமாயின், றஹ்மான் நம்மைக் கோபித்திருப்பான். பூமி நம்மை விழுங்கி இருக்கும் என்று திரு குர்ஆனை அருளிய அல்லாஹுத் தஆலாவின் மீது பிரமாணமாகக் கூறுகிறேன்.

ஜனங்களே! சென்றது சென்று விட்டது, இனி வருவதிலாவது விழித்துக் கொள்ளுங்கள்! அதுவே றமலான் மாதம். அதன் நிழல் நெருங்கிவிட்டது, அதன் பிரவேசம் அண்மையிலிருக்கிறது. அது புனிதமான மாதம். மற்றைய மாதங்களைப் பார்க்கினும் அதனை அல்லாஹுத் தஆலா மேன்மையாக்கி வைத்திருக்கிருன், காலங் களில் அதற்கு நிகரானதைக் காணமுடியாது.

அதில் எத்தனை பேருடைய கோரிக்கைகள் நிறைவேற்றப் படுகின்றன, அதில் எத்தனை பேருக்கு நன்மைகள் அதிகப்படு கின்றன, அதில் எத்தனை பேருக்குத் தீமைகள் அழிக்கப்படு கின்றன, எத்தனைபேருக்கு அந்தஸ்துகள் இரட்டிக்கப்படுகின்றன, அல்லாஹுத் தஆலாவுக்காக அம்மதியில் எத்தனை பேர் நரகை விட்டு விடுதலை பெற்றவர்கள்?

எனவே, அம்மதியை நலவுடனும் அழகுடனும் சந்தியுங்கள்! கண்ணியப்படுத்துவதனுலும் நற்கிரியைகளாலும் இதனை வர

வேறுங்கள்! அல்லாஹுத் தஆலா உங்களுக்குக் கிருபை செய்து நரகை விட்டு உங்களை இரட்சிக்கக் கூடும்.

"றஜபுமாதம் வந்தால் 'நாயனே! றஜபில் எங்களுக்கு பறக்கத்தை யருள்வாயாக!" என்றும், ஷஅபான் மாதத்தில் ("நாயனே) எங்களை றமலான்மாதத்தில சேர்த்துவைப்பாயாக!" என்றும் மனிதர்களது தலைவரான நாயகம் (ஸல்) அவர்கள் பிரார்த்திப்பது வழக்கம் என ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

"றமலான் மாதம் ஒரு புனிதமான மாதம். சுவர்க்கத்து வாசல்கள் அதில் திறக்கப்படுகின்றன, நரகத்தின் வாசல்கள் அடைக்கப்படுகின்றன. ஷைத்தான்கள் கைதி செய்யப்படுகின்றன. தீமையைத் தேடுபவர்களே குறைத்துக் கொள்ளுங்கள் என்று ஒவ்வொரு இரவிலும் றமலான் மாதம் முடியுமட்டிலும் கூறுபவர் கூறுகிறார்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளி இருப்பதாகவும் ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

ஒருமுறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷபான் மாதத்தின் கடைசியில் குத்பா என்னும் பிரசங்கஞ்செய்தார்கள். "ஜனங்களே! மகத்தானமாதம், புனிதமான மாதம் உங்களுக்கு நிழலிடுகிறது. அதில் ஒரு இரவு இருக்கிறது. அது ஆயிரம் மாதத்தைப்பார்க்கினும் மேலானது, அம்மாதத்தில் நோன்பு வைப்பதை அல்லாஹுத் தஆலா கடமையாகவும், அம்மாதத்தின் இரவில் வணங்குவதை வழிப்பாடாகவும் ஆக்கி இருக்கிறான். நன்மையான ஒரு காரியத்தை அதில் செய்தவர் அதல்லாத காலத்தில் ஒரு பர்லு செய்தவரைப் போலாகிறார். அதில் ஒருவர் ஒரு பர்லு செய்தவர் அதல்லாத மாதத்தில் எழுபது பர்லுகளைச் செய்தவரைப் போலாகிறார். இது பொறுமைக்குரிய மாதம். பொறுமைக்குரிய பிரதிபலன் சுவர்க்கம் தான். இந்த மாதத்தில் மூமின்களது உணவில் அதிகப்படுத்தப் படும். இதில் ஒருவர் ஒரு நோன்பாளியை நோன்பு திறக்க உபசரிப்பாராயின் அது அவருக்கு அவருடைய பாவங்களுக்கு மன்னிப்பாக

இருக்கிறது. அவரது பிடரி நரகை விட்டு விடுதலை செய்யப்படுகிறது. அந்த நோன்பாளியின் கூலியில் எவ்வஸ்துவும் குறை வில்லாமல் அவருக்கும் அது போன்ற கூலி கொடுக்கப்படுகிறது'' என்று கூறினார்கள்.

"வருஷ ஆரம்பத்திலிருந்து மறுவருஷம் வரும் வரை றமலான் மாதத்துக்காக சுவர்க்கலோகம் அலங்காரம் செய்யப்படுகின்றது. றமலான் முதல் தேதி வந்தவுடன் அர்ஷுக்குக் கீழில் சுவர்க்கத்து இலையிலிருந்து ஹூறுல்ஈன்கள் மீது ஒரு காற்று வீசும், அப்பொழுது "எங்கள் றப்பே! எங்களது கண்கள் அவர்களால் குளிர்ச்சியடையவும், கூடிய ஜோடிகளை உன் அடியார்களில் நின்றும் எங்களுக்கு ஆக்குவாயாக!'' என்று கூறுவார்கள்'' என்பதாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

சகோதரர்களே! இந்த நற்செய்தி நோன்பு நோற்று தொழுகையை நிறைவேற்றி, பாபங்களை விட்டு சன்மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட விதத்தில் சம்பாதிக்கப்பட்ட உணவால் நோன்பு திறந்து, சன்மார்க்கத்துக்கு விரோதமானவைகளைத் தவிர்த்துக் கொண்டவர்களுக்கே. இந்த அருட் கொடையை அல்லாஹுத் தஆலா உங்களுக்கு அளித்துள்ளான். அவன்தான் கேட்காமல் கொடுப்பவன், அருட் கொடையளிப்பவன்.

ஆகவே, அவனது அருட் கொடைகளுக்கு நன்றி செலுத்துவீர்களாக. அல்லாஹுத் தஆலாவினது அருட்கொடையை நீங்கள் கணித்துப் பார்ப்பீர்களாயின் அவைகளை நீங்கள் கணித்து விட முடியாது. எவர் நன்றி மறக்கிறாரோ அதனால் நன்றி மறந்தவருக்குத்தான் நஷ்டம்; ஏனெனில் அல்லாஹுத் தஆலா நன்றி மறந்தவர்கள் பால் தேவையற்றவன்.

அல்லாஹுத் தஆலா நம்மையும் உங்களையும் றமலான் மாதத்தில் நோன்பு நோற்று, அதன் இரவுகளில் தொழுது, தனது எஞ்சிய

வானுளை அவனுக்கு வழிப்பாடுசெய்து அசட்டை என்ற தூக்கத்தை விட்டெழுந்தவர்களிலாக்குவாளுக. இன்பங்களில் மூழ்குவதையும் இச்சைகளைப் பின்பற்றுவதையும் விட்டு உங்களையும் எங்களையும் விலக்கி, நரகத்து வேதனையை விட்டு எங்களையும் உங்களையும் ஈடேற்றுவாளுக!

கிருபையாளனுன நப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும்.

أَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○
شَهْرُ رَمَضَانَ الَّذِيْ أُنْزِلَ فِيْهِ الْقُرْآنُ هُدًى لِلنَّاسِ
وَبَيِّنَاتٍ مِنَ الْهُدٰى وَالْفُرْقَانِ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹ்விடம் காவல் தேடுகிறேன்.

றமலான் மாதம்: அதில் தான் ஜனங்களுக்கு நேர் வழிகாட்டியாகவும், நேர்வழி (சத்தியம், அசத்தியம் ஆகியவைகளை) பிரிப்பது ஆகியவைகளில் நின்றுமுள்ள (தெளிவான) அத்தாட்சிகளுமுள்ள (திரு) குர்ஆன் அருளப்பட்டது.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللّٰهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيْمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ إِنَّهُ تَعَالٰى جَوَادٌ كَرِيْمٌ مَلِكٌ قَدِيْمٌ
بَرٌّ رَؤُوْفٌ رَحِيْمٌ وَرَبٌّ حَلِيْمٌ ○

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الْاُوْلٰى مِنْ رَمَضَانَ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ هَدَانَا اِلٰى سَبِيْلِ الْهِدَايَةِ وَالْعِرْفَانِ ○ وَ
جَعَلَنَا مِنْ اَهْلِ الْاِسْلَامِ وَالْاِيْقَانِ ○ نَحْمَدُهٗ سُبْحَانَهٗ وَ
تَعَالٰى عَلٰى اَنْ اَظَلَّنَا بِهٖ شَهْرٌ عَظِيْمٌ وَنَشْكُرُهٗ عَلٰى اَنَّهٗ دَنَا
مِنَّا شَهْرٌ جَسِيْمٌ يُّدْعٰى بِرَمَضَانَ ○ تُرْمَضُ فِيْهِ الذُّنُوْبُ
وَتُكْشَفُ فِيْهِ الْكُرُوْبُ وَلِلّٰهِ فِيْهِ عُتَقَاءُ مِنَ النِّيْرَانِ ○
اَشْهَدُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ شَهَادَةً
بِالْقَلْبِ وَاللِّسَانِ ○ وَنَشْهَدُ اَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ وَ
رَسُوْلُهٗ شَهَادَةً تُدْخِلُنَا الْجِنَانَ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ○

يٰۤاَيُّهَا النَّاسُ ○ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ
اُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ○

## றமலான் மாதம்

# முதலாவது ஜும்ஆ

بسم الله الرحمن الرحيم

### (அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

நேர்வழியை அடைவதற்கும் ஞானத்துக்குமுரிய பாதையின் பால் நம்மைச் சேர்த்துச் முஸ்லிம்களாகவும் விசுவாச உறுதியுள்ளவர்களாகவும் நம்மை ஆக்கிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும்.

அவன் தூயவன், அவன் உயர்ந்தவன், மகத்தான மாதத்தை நமக்கு நிழலிடச் செய்ததற்காக அவனை நாம் புகழ்கிறோம். றமலான் என்று சொல்லக் கூடிய பெரிய மாதம் நமக்கு நெருங்கச் செய்ததற்காக அவனுக்கு நன்றி செலுத்துகிறோம். இம்மாதத்தில் பாபங்கள் கரிக்கப்படுகின்றன. வருத்தங்கள் இதில் நீக்கப்படுகின்றன. இதில் அல்லாஹுத் தஆலாவுக்காக நரகத்தை விட்டு விடுதலை பெற்றவர்கள் இருக்கிறார்கள்.

வணக்கத்துக் குரியவன் அல்லாஹ்வைத் தவிர்த்து (வேறு யாரும்) இல்லை. அவன் தனித்தவன்; அவனுக்கு இணை இல்லை. மனத்தாலும் நாவாலும் சாக்ஷியங் கூறுகிறேன். எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவும் இருக்கிறார்கள் என்று சுவர்க்கத்தில் எங்களைப் பிரவேசிக்கச் செய்யும் படியாக சாக்ஷியங் கூறுகிறேன்.

أَمَّا بَعْدُ ஜனங்களே !! இதுவோ புனிதமான மாதம். உங்களிடம் வந்திருக்கிறது. இதில் விசுவாசத்துடனும் பக்தியுடனும் நோன்பு வைப்பவருக்கு அவர் முன் செய்த பாவங்கள் மன்னிக்கப் படுகின்றன. பக்தி விசுவாசத்துடன் இதில் தொழுபவர் நரகத்தை விட்டு விடுதலை அளிக்கப்படுகிறார். ஆகவே, தீய காரியங்களால் இதனை வீணாக்கி விடாதீர்கள். பழிக்கத்தக்க செய்கைகளால் அதனை இலேசாக்கி விடாதீர்கள். வீணிலும் பாபத்திலும் முபாரக்கான அதன் இரவுகளையும், சிறப்பான அதன் பகல்களையும் விரயஞ்செய்து விடாதீர்கள்.

பொய்யையும், புறத்தையும் விட்டு உங்கள் நாவை தடுத்துக் கொள்ளுங்கள்! பொறாமை, புழுக்கம் ஆகியவைகளை விட்டு உங்கள் இருதயங்களைத் தூய்மை யாக்குங்கள்! அவதூறு செய்வதை விட்டு விடுங்கள்! மூன்று காரியங்களைச் செய்யாமல் தடுத்துக் கொள்வது தான் நோன்பு. அவைகளைத் தடுத்துக் கொண்டவன் சுவர்க்கத்தில் உயர்ந்த பதவிகளை அடைந்திடுவான் என்று எண்ணிக் கொள்ளாதீர்கள்.

அவ்வாறல்ல, இச்சைகளை விட்டு நோன்பிருந்து, இன்பங் களைத் துறந்து, அபாயகரமானவைகளை விட்டு தனது நோன்பு ஈடேற்ற மடைந்து, நேர்மையானவனை அரசனை ஜபிப்பதிலேயே தனது நா ஈரமாக இருக்கும்படி செய்தவருக்குத்தான் சுவர்க்கத் தின் உயர்ந்த பதவிகள்.

அறிந்துகொள்! "நோன்பாளிக்கு இரண்டு சந்தோஷங் களிருக்கின்றன. அவர் நோன்பு திறக்கும்போது ஒரு சந்தோஷம். தனது றப்பை அவர் சந்திக்கும்போது இன்னொரு சந்தோஷம்" என்று நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றிருக்கிறார்கள் (ஹதீது).

"சுவர்க்கலோகத்தில் இரு தலைவாசல்களிருக்கின்றன. அத்தலைவாசலுக்கு "ரய்யான்" என்று பெயர். நோன்பாளிகள் அத்தலைவாசலுக்கு அழைக்கப்படுவார்கள். நோன்பாளிகளாக இருந்தவர்கள் அந்தத் தலைவாசல் வழியாகப் பிரவேசிப்பார்கள். அதில் பிரவேசித்தவர் ஒருபோதும் தாகிக்கமாட்டார்" என்று நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக மற்றொரு ஹதீதில் வந்திருக்கிறது.

"நோன்பாளிக்கு அவர் நோன்பு திறக்கும்போது ஒரு விருந்திருக்கிறது. அது மறுக்கப்படாதது" என்றும் இன்னொரு ஹதீதில் எழுதப்பட்டிருக்கிறது.

அறிந்துகொள்ளுங்கள்! இந்த மாதத்தில் நோன்பிருப்பதை உங்கள் மீது அல்லாஹுத் தஆலா கடமையாக்கி இருக்கிறான். இந்த மாதத்தில் இராக்காலங்களில் தொழுவதை றஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஸுன்னத்தாக்கி இருக்கிறார்கள். ஆதலின் இம்மாதத்தில் பகற் காலங்களில் நோன்பிருந்து, இராக்காலங்களில் இறைவனைத் தொழுது வணங்குங்கள்! ஆகவே, இம்மாதத்தில் வணக்கத்தில் முயன்று, அதிகமான அந்தஸ்துகளுக்கும் தரைகளுக்கும் தகுதியாகிவிட்டவர்களுக்கே சோபனம்!

புனிதமான இந்த மாதம் கிடைத்து, நோன்பு வைக்காமல் இரவுகளில் தொழுது வணங்குவோருக்கும் அல்லது நோன்பு வைத்து இரவுகளில் தொழுது வணங்காதோருக்கும் நிலைமை. எத்தனை நோன்பாளிகள் தங்கள் நோன்பில் தாகத்தைத் தவிர்த்து வேறொரு பயனுமில்லாமலாகி விட்டார்கள்? எத்தனை பேர் இரவில் தொழுதவர்கள் அவர்கள் தங்கள் வணக்கத்தில் வெறும் முழிப்பையும் வழிகேட்டையும் தவிர்த்து வேறொரு பயனையும் அறியாமலிருக்கின்றனர்?

வானம் பிளந்து, செம்மேகம் படர்ந்து, பூமியின் மீதுள்ள மனு, ஜின் யாவரும் எழுப்பப்படும் நாளை நினைத்துப்பாருங்கள்!

இன்னும் அந்நாளில் ஒவ்வொருவரும் இரு சாக்ஷிகளுடன் வருவார்கள். கிரியைகள் எழுதப்பட்ட புத்தகமும் பட்டோலையும் விரிக்கப்படும். அல்லாஹுத் தஆலா கோபமடைவான். அக்கோபத்தால் இருதயங்கள் நடுக்கங் கண்டு விடும். ஈரல் குலைகளுக்கு அடி விழுந்து விடும். எக்காலத்திலும் அம்மாதிரியான கோபத்தைப்போல் அவன் கோபிக்கவில்லை. சிறியது, பெரியது ஆகிய யாவற்றையும் குறித்துக் கேள்வி கணக்குக் கேட்பான். உங்களுக்கு முன்னால் உங்களது புத்தகங்களை விரிப்பான். சிறியதையோ, பெரியதையோ அது தவற விட்டிருக்காது. இரகசியமாகவும் பகிரங்கமாகவும் உங்களை விசாரிப்பான்.

அச்சமயத்தில் பாபியானவன் வெட்கி, பாபத்துக்காக பச்சாத்தாபப்படுவான். வழிகேட்டிலும் அழிச்சாட்டியத்திலும் சம்பாதித்த தீமைகளுக்காகக் கைசேதப்படுவான்.

எத்தனையோ வாலிபர்கள், "அன்னோ வாலிபமே!" என்றும், எத்தனையோ ஸ்திரீகள், "அன்னோ அவமானமே!" என்றும், எத்தனையோ வயோதிகர்கள், "ஐயோ வயோதிகமே!" என்றும், எத்தனையோ பேர்கள், "கேட்காமலிருக்கும்போதே கொடுப்பவனும் சாந்த முள்ளவனுமான அல்லாஹுத் தஆலாவின் வழிப்பாட்டில் நான் செய்த குறைக்கு ஐயோ!" என்றும் கதறுவார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!

அல்லாஹுத் தஆலாவின் அடியார்களே! அல்லாஹ்வை அஞ்சுங்கள்! பயப்படுங்கள்! மறுமை வாழ்விற்கான கட்டுச்சாதத்தைச் சித்தஞ்செய்யுங்கள்! கட்டமுதில் சிறந்தது "தக்வா" தான். மன இச்சையைப் பின் பற்றுவதை விட்டு விடுங்கள்! எவர் அழிச்சாட்டியம் செய்து, இவ்வுலகத்தின் அற்ப வாழ்வைச் சிலாகித்தெடுத்துக் கொண்டாரோ அவர் மீளும் தலம் நரகம் தான்.

தனது றப்பின் அந்தஸ்தைப் பயந்து, இச்சையை விட்டு மனத்தை விலக்கியவர் தங்குமிடம் அழகிய நல்ல ஸ்திரீகளுள்ள சுவர்க்கமே.

மேலும், உங்கள் அகத்தை நோன்பைக் கொண்டு சுத்தப் படுத்துங்கள்! தராவீஹ் தொழுகையில் திரு குர்ஆனை ஓதுவதன் மூலம் உங்கள் ஆன்மாவுக்கு இன்பங்கொடுங்கள்! தூக்கத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள்!

உயிர்த் தெழுப்புவதை மறந்து, இச்சைக்கு மாறு செய்வதையும் பொறுமையையும் துறந்து, அற்பமாகிய உலக இன்பங்களில் வாழ்ந்து, மறு உலகப்பேறும், உயர்ந்த அந்தஸ்துகளும் தவறிப்போய், நரகத்தின் பாதாளங்களுக்கு ஆளாகிவிட்டவர்களைப் போல் நீங்களாகி விடவேண்டாம்.

நாயனே! கிருபையாளனே! கேட்காதிருக்கும்போதே கொடையளிப்பவனே! றமலான் மாதத்தை எங்களுக்கு நெருங்கி வரச்செய்து, நோன்பு வைக்கவும் தொழுகவும் எங்களுக்குப் பல மளித்ததற்காக உனக்கே எல்லாப்புகழும் தகும். எனவே, இம்மாதத்தின் பகற்பொழுதில் நாங்கள் நோன்பு நோற்றோம்; இராக் காலங்களில் தொழுதோம். நாங்களோ உன்னுடைய பாவிகளான குற்றவாளிகளான அடியார்கள்; நீ எங்களுக்கு இரங்காவிடில் வேறு எவர் எங்களுக்கு இரங்குவார்? எங்களை நீ மன்னிக்காவிடில் வேறு எவர் எங்களை மன்னிப்பார்? ஆதலின் எங்களையும், எங்கள் மாதா பிதாக்களையும் நரகத்தை விட்டு விடுவிப்பாயாக! உனது அதிகமான கடாக்ஷத்துக்கும், உனது அருமையான அருட்கொடைக்கும் எங்களைச் சொந்தப்படுத்தி சுவர்க்கத்தில் 'ரய்யான்' என்னும் வாசல் வழியாக எங்களைப் பிரவேசிக்கச் செய்வாயாக!!

மிக் அறிந்தவனான றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப்புகழும் தகும்.

أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ۝ وَإِذَا سَأَلَكَ عِبَادِي عَنِّي فَإِنِّي قَرِيبٌ أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ ۝

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலாவினிடம் காவல் தேடுகிறேன்.

எனது அடியார்கள் என்னைக்குறித்து உம்மிடம் விசாரித்தால், "நிச்சயமாக நான் மிகச் சமீபத்திலிருக்கிறேன்; என்னைப் பிரார்த்தித்தால், பிரார்த்திப்பவரது பிரார்த்தனையை நான் நிறைவேற்றுவேன்" (என்று கூறுவீராக).

(திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ بَرٌّ رَؤُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ۝

# الخطبة الاولى للجمعة الثانية من رمضان

بسم الله الرحمن الرحيم ○

الحمد لله الذي خلق الخلق وجعله سميعا بصيرا ○
وهداه الطريق اما شاكرا واما كفورا ○ نحمده على ان
جعلنا ممن يدخل الجنة فيشرب كاسا كان مزاجها كافورا ○
ونشكره على انه ادار علينا شهرا هو سيد الشهور لم
يوجد له نظير في ممر الدهور وكان شهرا كبيرا ○ ونشهد
ان لا اله الا الله وحده لا شريك له خلق الخلق فقدره
تقديرا ○ ونشهد ان سيدنا محمدا عبده ورسوله ارسله
بالحق بشيرا ونذيرا ○

صلى الله وسلم على سيدنا محمد وآله وصحبه اجمعين

يا ايها الناس ○ اتقوا الله العظيم عز وجل واطيعوه
اوصيكم عباد الله واياي بتقوى الله ○

## றமலான் மாதம்

# இரண்டாவது ஜும்ஆ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)**

சிருஷ்டிகளைச் சிருஷ்டித்து, அவைகளைப் பார்வையுள்ளனவாகவும் செவியேற்பனவாகவும் ஆக்கிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப்புகழும் தகும். அந்தச் சிருஷ்டிகளுக்கு நேர்வழியைக் காண்பித்தான். அவைகள் நன்றி செலுத்துவனவாகவோ அல்லது நன்றி மறந்தனவாகவோ ஆகிவிட்டன.

சுவர்க்கத்தில் பிரவேசித்து, கற்பூரக் கலவையுள்ள பானத்தை அருந்துபவர்களுடன் நம்மைச் சேர்த்ததற்காக அவனைப் புகழ்கிறோம். மாதங்களுக்கெல்லாம் தலைமையாக இருக்கிற மாதத்தை நம்மைச் சுற்றும்படிச் செய்ததற்காக அவனுக்கு நன்றி செலுத்துகிறோம், அம்மாதத்துக்கு நிகரானது காலங்களில் இல்லவே இல்லை அது பெரிய மாதமாக இருக்கிறது.

வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர்த்து (வேறு யாரும்) இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணையில்லை. சிருஷ்டிகளை அவன் சிருஷ்டித்து அமைப்பதாக அவைகளை அமைத்தான் என்று சாக்ஷியங்கூறுகிறோம். எங்களது நாயகம் முஹம்மது

(ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவும் இருக்கிறார்கள். அவர்களை நற்செய்தி கூறுபவராகவும், அச்ச மூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் உண்மையைக் கொண்டனுப்பினான் என்று சாக்ஷியங்கூறுகிறோம்.

أَمَّا بَعْدُ சகோதரர்களே! உங்களது வயதை வீணாக்கி விட்டீர்கள். எண்ணிக்கையிலுள்ள உங்களது மூச்சுக்களை விளையாட்டில் கழித்து விட்டீர்கள். ஒரு தினத்தை, அந்த தினத்தின் தீங்கு எழுதப் பட்டுள்ளது. அத்தகைய தினத்தை நீங்கள் பயப்படுவதில்லை.

எனவே றமலான் மாதம் உங்களிடம் வந்திருக்கிறது. அது பிழை பொறுக்கப்படும் மாதம். திரு குர்ஆன் ஓதப்படும் மாதம். இன்பங்களை நுகராமல் பொறுமையாயிருக்கும் மாதம். பாபங்களை விட்டுத் தௌபாச் செய்யும் மாதம்.

அம்மாதத்தில் உங்களுக்குக் கிடைத்த அவகாசத்தை நீங்கள் வீணாக்குகிறீர்களா? அம்மாதத்தில் உங்களது மூச்சுக்களுடன் நீங்கள் விளையாடுகிறீர்களா? பாவங்களை விட்டு நீங்கள் தௌபாச் செய்ய வேண்டாமா? கடுகடுப்பான கொடிய நாளை நீங்கள் பயப்படமாட்டீர்களா?

எனவே, உங்களது பாவங்களை விட்டு அல்லாஹுத் தஆலாவினிடத்தில் தௌபாச் செய்யுங்கள்! நீங்கள் செய்ததின்பால் இனி மேலும் திரும்ப மீளமாட்டீர்கள் என்று நீங்கள் உறுதிகொள்ளுங்கள்! உங்களது றப்பு உங்களை மலர்ந்த முகத்துடனும் சந்தோஷத்துடனும் உங்களைச் சந்திக்கக்கூடும்.

அறிந்துகொள்ளுங்கள்! இவ்வுலகம் கஷ்டமும் தொந்தரைகளுமுள்ள வீடாகும். சோதனைகளும் விஷமங்களுமுள்ள வீடாகும். இதில் நிரந்தரமானது எதுவுமில்லை. பிள்ளையோ பெற்றோரோ நிலைத்திருக்கவில்லை. இது அளவாக அமைக்கப்பட்டதாக இருக்கிறது.

பிரயாணம் செல்பவர்கள் எவ்வாறு பிரயாணஞ்செல்கிறார்கள், பிரயாணம் போகிறவர்கள் எவ்வாறு பிரயாணம் போகிறார்கள் என்பதை நீங்கள் பார்க்கவில்லையா? எத்தனை அசட்டையாளர்கள் தங்கள் விரிப்பிலிருந்த வண்ணம் இன்பமனுபவிக்கின்றனர்? அவ்வாறு அனுபவிப்பதை நம்பி தங்களது நிலை என்றும் நிலைத்திருக்கும் என்றெண்ணுகின்றனர். திடீரென அவர்களுக்கு மரணம் சம்பவித்து பறக்கும்படியான புழுதியாக அவர்களை ஆக்கி விடுகிறது.

இந்த உலகம் நிரந்தரமான வீடு என்று நீங்கள் நினைத்துக் கொண்டீர்களா? அல்லது கொள்ளிக்கட்டைகளுள்ள நரகத்தை விட்டு உங்களுக்கு உரிமைச் சீட்டு கிடைத்திருக்கிறதா? அல்லது சமாச்சாரம் அறிவிப்பவரையோ அல்லது எச்சரிக்கை செய்பவரையோ உங்கள் பால் மரணம் அனுப்பி இருக்கிறதா?

அவ்வாறில்லை, அல்லாஹுத் தஆலாவின் மீது பிரமாணமாகக்கூறுகிறேன். நிச்சயமாக மரணம் உங்களுக்குத் திடீரென வந்து உங்கள் கூட்டத்தைக் கலைத்து விடும்; உங்கள் சேர்க்கையைச் சிதறடித்துவிடும். ஆகவே, நீங்கள் மறுமையில் நற்பேறுள்ளவர்களாக இருப்பீர்களாயின், அது உங்களுக்கு மங்களமே! ஆனால், மறுமையில் நிர்ப்பாக்கியர்களாக நீங்களிருப்பீர்களாயின், உங்களது றப்பு உங்களுக்குக் கிருபை செய்யப்போதும். மேலும், அவன் சாந்தமுள்ளவனாகவும் பிழை பொறுப்பவனாகவுமிருக்கிறான்.

கடந்த றமலானில் வணக்கத்தில் ஈடுபட்டவர்களாகவும் பாவங்களை விட்டு விலகியவர்களாகவும் உங்களுடனிருந்தவர்களை நீங்கள் நினைத்துப் பாருங்கள்! இன்பங்களை இடிப்பவர் அவர்களை திடீரெனப்பிடித்துக்கொண்டார். அதனால், கவலைகள் என்ற சங்கிலிகளில் அவர்கள் கட்டுண்டு, துக்கங்கள் என்ற வளையங்களில் அவர்கள் பிணைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் எவரும் பேச முடியாதவராகவும், சிறியதையோ பெரியதையோ அறிவிக்கமுடியாதவராகவும் அவர்களை அவர் ஆக்கிவிட்டார்.

எனவே, தொடர்ச்சியாக வருகிற அநுக்கிரகங்களுக்கும் அருட்கொடைகளுக்கும் நீங்கள் நன்றி செலுத்துங்கள்! ஏனெனில், சிறப்பும், சங்கையும், மேன்மையுமுள்ள மாதத்தை உங்களுக்கு வெகுமதியாக அளித்து, அதன் பகற்காலங்களில் நோன்பு வைக்கவும்? இராக்காலங்களில் தொழுகவும் உங்களுக்குப் பலங்கொடுத்தான். இன்னும் உங்களது பாவங்களை அவன் அழித்து, உங்களது தவறுகளைப் புறக்கணித்து விட்டிருக்கிறான். மேலும், உங்களது றப்பு மறுமையில் தன் பக்தர்களுக்கு அன்பு பாலிப்பவனாகவும் பிழை பொறுப்பவனாகவும் இருக்கிறான்.

ஆகவே, இந்த மாதத்தின் மதிப்பையும் கண்ணியத்தையும் அறிந்து, வணக்கத்திலும், பிரார்த்தனையிலும், பிழை பொறுக்கத் தேடுவதிலும், தௌபாச் செய்வதிலும், முயலுங்கள்! ஏழைக்கும் சிறைப்பட்டவருக்கும் அன்னமிடுங்கள்! நன்மையான காரியங்களை அதிகப்படுத்தி, தீமையான காரியங்களை விட்டு விலகி, வேதனையுடைய நரகை தவிர்த்துக் கொள்ளுங்கள்!

நரகம் தூரத்திலிருந்து உங்களைப் பார்க்கும்போது கோபச் சத்தியும், இரைச்சலும் அதற்கிருப்பதை நீங்கள் செவியேற்பீர்கள். அதனை நீங்கள் சந்தித்தால் அங்கு உங்களுக்கு மரணம் வரவேண்டுமெனப்பிரார்த்திப்பீர்கள், எனவே, பயபக்தியுள்ளவர்களுக்கு நற்கூலியாகவும் அவர்கள் சேருமிடமாகவும் இருக்கிறதென வாக்களிக்கப்பட்டுள்ள நிரந்தரமான சுவர்க்கம் நல்லதா அல்லது இது நல்லதா என்று யோசித்துப் பாருங்கள்!

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருநாள் தங்களது மின்பர் படிகளில் முதலாவதில் ஏறி நின்று கொண்டு "ஆமீன்!" என்று கூறி இரண்டாவதில் ஏறி நின்று முன்போலவே "ஆமீன்!" என்று கூறினார்கள். இவ்விதமாக மூன்றாவதிலும் ஏறி நின்று "ஆமீன்!" என்று கூறினார்கள். இதனைக்குறித்து அஸ்ஹாபுமார்கள் நாயகம் (ஸல்)

அவர்களை விசாரித்தார்கள். அப்பொழுது நாயகம் (ஸல்) அவர்கள், "ஜிப்ராயீல் (அலை) என்னண்டையில் வந்து ''றமலான் மாதத்தை அடைந்து, பிழை பொறுக்கப்படாதிருப்பவர் அல்லாஹுத் தஆலாவின் றஹ்மத்தை விட்டுத் தூரமாகுவாராக!'' என்றார். அப்பொழுது நான் "ஆமீன்!'' என்றேன். இரண்டாவது படியில் நான் ஏறிய போது 'ஒருவரிடம் நீர் பிரஸ்தாபிக்கப்பட்டு அவர் தங்களுக்கு ஸலவாத்துச் சொல்லாமலிருக்கிறாரே அவர் தூரமாகுவாராக!' என்றார். அதற்கு நான் "ஆமீன்!'' என்றேன். மூன்றாவது படியில் நான் ஏறியபோது 'ஒருவர் தமது பெற்றோர்களிருவரையோ அல்லது ஒருவரையோ வயோதிகமாக அடைந்து அவ்விருவரும் அவரைச் சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்யவில்லையாயின் அவர் தூரமாகுவாராக!' என்றார். அதற்கு நான் "ஆமீன்!" என்றேன்'' என்று கூறியதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

''றமலான் மாதத்தில் அல்லாஹுத் தஆலாவை ஜபிப்பவர் பிழை பொறுக்கப்பட்டவராக இருக்கிறார். அம்மாதத்தில் அல்லாஹுத் தஆலாவினிடம் இரப்போர் நிராசையுள்ளவராக மாட்டார்'' என்று நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

''இதோ றமலான் வந்து விட்டது. இதில் சுவர்க்கத்து வாசல்கள் திறக்கப்படுகின்றன. நரகத்தின் வாசல்கள் மூடப்பட்டிருக்கின்றன. ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றன! றமலான் மாதத்தை அடைந்து மன்னிக்கப்படாமல் இருப்பவருக்குத் தூரமுண்டாவதாக." என்றும் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி இருப்பதாக மற்றொரு ஹதீதில் வந்திருக்கிறது.

இந்த மாதத்தில் மன்னிக்கப்படாவிடில் அப்புறம் எப்பொழுது மன்னிக்கப்படுவார்.

தோழர்களே! இந்த மாதத்தில் மன்னிக்கப்படாதவருக்கு அல்லாஹுத் தஆலாவின் றஹ்மத்தை விட்டுத் தூரம் ஏற்பட வேண்டும் என்று நாயகம் (ஸல்) அவர்கள் பிரார்த்தித்திருப்பதைக் கவனியுங்கள்!

எனவே, இச்சைகளில் நீங்கள் ஈடுபட்டு, இன்பங்களில் இம்மாதத்தைக் கழித்து விடுவதையும், பாபங்களை விட்டு நீங்கள் தௌபாச் செய்யாமலிருப்பதையும், பாபிகளின் ஜாபிதாவிலிருந்து நீங்கள் வெளியேறாதிருப்பதையும் விட்டு உங்களை நீங்கள் காத்துக் கொள்ளுங்கள்! காத்துக் கொள்ளுங்கள்!! இல்லையேல், மிகத் தூரமாகத் தள்ளப்பட்டவர்களில் நின்றும் நீங்களாகி விடுவீர்கள்.

எனவே, இம்மாதத்தில் உங்களுக்குப் பிழை பொறுக்கப்படவில்லையாயின், வேறு எந்த மாதத்தில் தான் உங்களுக்குப் பிழை பொறுக்கப்படும்? இம்மாதத்தில் நீங்கள் தௌபாச் செய்தவர்களாக இருக்கவில்லையாயின், வேறு எந்த மாதத்தில் தான் நீங்கள் தௌபாச் செய்தவர்களாக இருப்பீர்கள்? இந்த மாதத்தில் நீங்கள் விழித்துக் கொண்டவர்களாக இருக்கவில்லையாயின், வேறு எந்த மாதத்தில் நீங்கள் விழித்துக்கொள்ளப்போகிறீர்கள்?

சிறப்பிலும் மேன்மையிலும் இதற்கு நிகரான மாதம் வேறு உங்களிடமிருக்கிறதா? இல்லை, இல்லை, ஒருபோதும் இல்லை. அதுவோ அல்லாஹுத் தஆலாவினது சங்கையான மாதம். அதற்கு வேறு நிகரானதாகவோ சமமானதாகவோ இல்லை.

நாயனே! பாபம் செய்தோர்களுக்குக் கிருபை செய்வோனே! பிரார்த்திப்போருக்கு நிறைவேற்றுவோனே! நரக வாதிகளை விடுதலை செய்வோனே! பிழை பொறுப்போருக்கெல்லாம் அதிகமாகப் பிழை பொறுப்போனே! நாங்களோ உனது பாபிகளான அடியார்கள். ஆகவே, உனது வேதனையை விட்டு எங்களை விடுதலை

செய்வாயாக! உனது வழிப் பாட்டில் நாங்கள் தேடிக்கொண்டதை எங்களிலிருந்து அங்கீகரிப்பாயாக! மேலும், நீ வணக்கம் புரி வோருக்கு நன்றி யறிதலுள்ளவனாக இருக்கின்றனை.

மறுமையில் தன் பக்தர்களுக்கு மட்டிலும் விசேஷ அன்பு பாலிப்பவனும் றப்புமாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும்.

أَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ○
تَبَارَكَ الَّذِيْ جَعَلَ فِي السَّمَاءِ بُرُوْجًا وَّجَعَلَ
فِيْهَا سِرَاجًا وَّقَمَرًا مُّنِيْرًا ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலாவினிடம் காவல் தேடுகிறேன்.

வானத்தில் இராசிகளை ஏற்படுத்தி, அவைகளில் விளக்குகளையும் பிரகாசிக்கும்படியான சந்திரனையும் ஏற்படுத்தினனே அவன் முபாரக்காகி விட்டான்.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْاٰنِ الْعَظِيْمِ وَنَفَعَنَا وَاِيَّاكُمْ
بِالْاٰيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ اِنَّهٗ تَعَالٰى جَوَادٌ كَرِيْمٌ مَلِكٌ قَدِيْمٌ
بَرٌّ رَؤُوْفٌ رَّحِيْمٌ وَرَبٌّ حَلِيْمٌ ○

# اَلْخُطْبَةُ الْاُوْلٰى لِلْجُمُعَةِ الثَّالِثَةِ مِنْ رَمَضَانَ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ نَقّٰى قُلُوْبَ الصَّآئِمِيْنَ وَرَوَّحَ اَرْوَاحَ الْقَآئِمِيْنَ وَهَدَانَا اِلٰى سَوَآءِ السَّبِيْلِ ۝ نَحْمَدُهٗ عَلٰى نَعْمَآئِهِ الْمُتَكَاثِرَةِ وَاٰلَآئِهِ الْمُتَوَافِرَةِ فِيْ هٰذَا الشَّهْرِ الْجَلِيْلِ ۝ وَنَشْكُرُهٗ عَلٰى اَنْ جَعَلَ لَنَآ اَوَّلَهٗ مَغْفِرَةً وَّاَوْسَطَهٗ رَحْمَةً وَّاٰخِرَهٗ عِتْقًا مِّنَ الْعَذَابِ الْوَبِيْلِ ۝ اَشْهَدُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهُ الْمَلِكُ الْجَلِيْلُ ۝ وَاَشْهَدُ اَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهُ اللَّآئِقُ بِالتَّعْظِيْمِ وَالتَّبْجِيْلِ ۝

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ۝

يٰۤاَيُّهَا النَّاسُ ۝ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ اُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ۝

## றமலான் மாதம்

# மூன்றுவது ஜும்ஆ

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

நோன்பாளிகளது இருதயங்களை தூயதாக்கி, தொழுபவர்களது ஆன்மாக்களுக்குச் சுகமளித்து, நேரான பாதையில் நம்மைச் சேர்த்த அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும்.

மகத்துவமுள்ள இந்த மாதத்தில் மிகுதமான அவனது அருட் கொடைகளுக்காகவும், ஏராளமான அவனது அநுக்கிரகங்களுக்காகவும் அவனை நாம் புகழ்கின்றோம். இம் மாதத்தின் ஆரம்பத்தைப் பிழை பொறுப்பதற்காகவும், அதன் மத்திபத்தை கிருபை செய்வதற்காகவும், அதன் கடைசியை கடுமையான வேதனையை விட்டு விடுதலை யளிப்பதற்காகவும் நமக்கேற் படுத்தியதற்காக அவனுக்கு நாம் நன்றி செலுத்துகிறோம்.

வணக்கத்துக் குரியவன் அவனைத் தவிர்த்து (வேறுயாரும்) இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணையில்லை, வல்லமையுள்ள மெய்யரசன் என்று நாம் சாக்ஷியங் கூறுகிறோம். எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் திருத்தூதராகவும் மரியாதை செய்வதற்கும் போற்றுவதற்கும் தகுதியானவராகவும் இருக்கிறார்கள் என்றும் சாக்ஷியங் கூறுகிறோம்.

آمَّا بَعْدُ மனிதனே ! உன்னைச் சிருஷ்டித்து, உன்னைச் செவ்வையாக்கி, நேரான பாதையில் உன்னை நடத்திய உனது சங்கையான றப்பை விட்டு உன்னை ஏமாற்றியது எது? இது என்ன ஞாபகமின்மை? இது என்ன துணிவு? இந்த உலகம் பயண வீடு, சோதனைகளும் தொந்தரைகளுமுள்ள இல்லம், கஷ்டங்களும் சங்கடங்களுமுள்ள மனை என்பதை நீ அறியாயோ?

எத்தனை பேரை இது கொன்று விட்டது? இது ஒரு மனை. இதிலுள்ளவர் எவருக்கும் நிலை இல்லை. இதில் வாழ்ந்த எவருக்கும் லக்ஷியமில்லை. இதில் உழன்றவர் கடுமையான வேதனையில் வீழ்ந்திடுவார். எனவே, இவ்வுலகில் பரதேசியைப்போல அல்லது வழிப்போக்கனைப்போல இரு!

நோன்புக்கும் தொழுகைக்குமுரிய மாதமாகிய இப் புனித மாதத்தை, பாவங்களை விட்டுத் தௌபாச் செய்யும் மாதத்தை, தராவீஹ் தொழுகைக்கும் திருக் குர்ஆன் ஓதுவதற்கு முரிய மாதத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்! இதனைக் கொள்ளை முதலாகக் கருதுங்கள்! வீணாக்கி விடாதீர்கள். ஏனெனில், இதுவோ இப்பொழுது பாதி கழிந்து விட்டது. மற்றைய பகுதியும் உங்களை விட்டுச் செல்ல உங்களிடம் அனுமதி கேட்கிறது. அதன் மிகுதியான பகுதியோ சென்று விட்டது. இன்னமும் சொற்பம்தான் எஞ்சி இருக்கிறது.

இதில் நற்காரியங்களில் முயன்றவர் உங்களிலிருக்கிறாரா? தவறானவைகளை வெறுத்துத்தள்ளி ஏராளமான கொடையை அடைந்தவர் உங்களிலிருக்கிறாரா?

அறிந்துகோள் ! புனிதமான ஒரு இரவு, சிறப்பும் கண்ணியமும் பொருந்திய ஒரு இரவு அதாவது 'லைலத்துல் கத்ரி' என்ற இரவு வெகு சீக்கிரத்தில் உங்களுக்கு நிழலிடும். அது ஆயிரம்

மாதங்களைப் பார்க்கினும் மேலானது; அதாவது அவ்விரவில் விழித்திருந்து வணக்கம் புரிந்தால் ஆயிரம் மாதங்கள் வணக்கம் புரிவதைப் பார்க்கினும் அதிகப் புண்ணிய முண்டு. அவ்விரவில் மலக்குகளும் பரிசுத்த ஆவியாகிய ஹஜ்றத் ஜிப்ரயில் (அலை) அவர்களும் தங்களது றப்பின் கட்டளைப்படி பூமியில் இறங்கி, வணக்கத்திலும், ஸ்தோத்திரம் செய்வதிலும், லாஇலாஹ இல்லல்லாஹு என்ற கலிமாவை ஜபிப்பதிலும் ஈடுபட்டிருப்பவர்களுடன் முஸாபஹாச் செய்வார்கள்.

எனவே, அல்லாஹுத் தஆலாவுக்காக அவ்விரவில் நித்திரை செய்யாதீர்கள். ஏனெனில், மரணத்துக்குப் பின்னுள்ள உங்கள் நித்திரை நீளமாக இருக்கிறது. அவ்விரவில் அல்லாஹுத் தஆலாவை ஜபிப்பதையும், திருக்குர்ஆனை அழகாக ஓதுவதையும் அதிகப்படுத்திக் கொள்ளுங்கள்! இம்மாதத்தின் கடைசிப் பத்து நாட்களில் இவ்விரவு வருவதை எதிர் பாருங்கள்! அந்நாட்களுள் அதனைப் பெற்றுக் கொள்ளவும், உங்களது றப்பு அவ்விரவில் உங்களுக்குக் கிருபை செய்து, உங்களுக்குச் சிறிய பெரிய பாவங்கள் யாவற்றையும் மன்னிக்கவும் கூடும்.

"லைலத்துல் கத்ரி" என்னும் இரவில் பக்தி விசுவாசத்துடன் எவர் தொழுகிறாரோ அவர் முன் செய்த பாபம் அவருக்கு மன்னிக்கப்படும்" என்று நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய ஸஹீஹான ஹதீதில் கூறப்பட்டிருக்கிறது.

"றமலான் மாதத்தின் கடைசிப்பத்துத் தேதிகள் வந்தால் றஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தனித்து விடுவார்கள். தங்களது குடும்பத்தாரை எழுப்பி, இரவு முழுவதிலும் விழித்திருப்பார்கள்" என்று உம்முல் மூமினீன் ஹஜ்றத் ஆயிஷா ஸித்தீக்கா (றலி) அவர்கள் றிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

சகோதரர்களே! இவ்விரவு உங்களுக்கு மீண்டும் மீண்டும் வந்திருக்கிறது, வருஷந்தோறும் உங்களுக்கு நிழலிட்டுக் கொண்டிருக்கிறது. நீங்களோ அதனை வீணாக்கிக் கொண்டே இருக்கிறீர்கள்.

அதன் மகத்துவத்தையும் மேன்மையையும் நீங்களறியவில்லை. இந்த வருஷத்திலும் அதனை உங்களுக்கு அல்லாஹுத் தஆலா தந்திருக்கிறான். அந்தரங்க சுத்தியாகவும் அழகிய செயலுடனும் அதனை நீங்கள் வரவேற்புச் செய்யுங்கள்! இனிவருகிற வருஷங்களில் அது உங்களுக்குக் கிடைக்கும் என்று நம்பாதீர்கள்.

நீங்கள் அதனைப் பெற்றுக்கொள்வீர்கள் என்பது உங்களுக்கு உறுதியாகத் தெரியுமா? நீங்கள் அக்காலம் வரை ஜீவித்திருப்பீர்களோ அல்லது மரித்து விடுவீர்களோ உங்களுக்குத் தெரியாது. உங்களது வயது நீண்டதாக இருக்கிறதா அல்லது சொற்பமாக இருக்கிறதா என்பதை நீங்களறியமாட்டீர்கள். சென்றுபோன வருஷங்களைப் படிப்பினையாகக் கொள்ளுங்கள்! கடந்த வருஷத்தில் எத்தனை பேர் உங்களுடன் தொழுதார்கள்? கடந்துபோன இரவுகளில் எத்தனை நோன்பாளிகள் உங்களுடன் கூட இருந்தனர்? அவர்களுக்கு மரணம் வந்து விட்டது. தவறிப் போவதைக் குறித்த அழைப்பு அவர்களுக்கு விடுக்கப்பட்டது. சொற்பமான கட்டுச்சாதமே இருப்பதால் நைசேதத்தையும் கவலையையும் தவிர்த்து வேறெதையும் அவர்கள் காணவில்லை.

எனவே, அவர்களைப் போல் நீங்களுமிருக்க வேண்டாம். அவர்களது தூக்கத்தைப் போல் நீங்களும் தூங்கவேண்டாம். அவர்களது நைசேதத்தைப் போல் நீங்களும் நைசேதப்பட வேண்டாம் கடுமையான தினத்தை நீங்களஞ்சுங்கள்! அந்த நாள் குற்றவாளிகளுக்கு மிகக் கடினமானது. அந்த நாளில் பட்டோலைகள் விரிக்கப்படும்; பெரியவர்களும் சிறியவர்களும் அந்த நாளில் ஆஜர் செய்யப்படுவார்கள்; அற்பமானதும், பெரியதும், கொஞ்சமும், மிகுதமும் ஆகிய யாவற்றையுங் குறித்து விசாரிக்கப்படும்.

ஆகவே, எவர் தனது றப்பின் அந்தஸ்தைப் பயந்து தனது வாணாளில் நற்கருமங்களில் முயலுகிறாரோ அவர் பாக்கிய உலகில் பிரவேசிப்பார், அழகிய நற்பயனைப் பெற்றுக் கொள்ளுவார். இன்னும் எவர் அழிச்சாட்டியஞ் செய்து அற்பமாகிய இவ்வுலக ஜீவியத்தைத்

தெரிந்து கொண்டு, தவறானவைகளில் தனது வாணாளைச் செலவு செய்து, இன்பசுகங்களில் முங்குகிறாரோ அவர் கடுமையான பிடியால் பிடிக்கப்படுவார்.

நாயனே! கிருபை செய்வோனே! நீதான் எங்களது றப்பு! எங்களுக்குக் கிருபை செய்பவன். நாங்களோ உனது பாவிகளான அடியார்கள், ஆதலின், நீ எங்களுக்குக் கிருபை செய்வாயாக! எங்களது பாவங்களை எங்களை விட்டழிப்பாயாக! எங்களைப் பிடியாதிருப்பாயாக! ஏனெனில், உனது பிடிமிகக் கடுமையானது. நீ பிடித்தவருக் கேற்பட்டுள்ள தங்கடத்தை அகற்றவோ மாற்றவோ ஒருவராலும் இயலாது.

க்ஷமிப்பவனும், போஷித்துப் பரிபக்குவப்படுத்துவோனுமாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப்புகழும் தகும்.

أَعُوذُ بِاللَّهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ○

وَاللَّهُ يَقُولُ الْحَقَّ وَهُوَ يَهْدِي السَّبِيلَ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலா; வினிடம் காவல் தேடுகிறேன்.

மேலும், அல்லாஹ் சத்தியத்தையே உரைக்கிறான் இன்னும் அவன் தான் பாதையைக் காண்பிக்கிறான்.

(திரு குர்ஆன்)

بَارَكَ اللَّهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ
بَرٌّ رَءُوفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ○

# الخطبة الاولى للجمعة الرابعة من رمضان

بسم الله الرحمن الرحيم ○

الحمد لله الذي رفع السماء بغير عمد ترونها وزينها
بالنجوم والشمس والقمر بحسبان ○ وبسط الارض فراشا
ومهادا وزينها بالزرع والزيتون والاعناب والريحان ○
نحمده على ان خلقنا فحسن صورنا وجمل سيرنا وجعلنا
من اهل الايمان ○ ونشكره على ان ابقانا الى شهر رمضان ○
وما ادراك ما شهر رمضان ○ شهر تفتح فيه ابواب
الجنة للصائمين وتغلق ابواب النار على اهل العصيان ○
نشهد ان لا اله الا الله وحده لا شريك له ولا ضد
له ولا ند له في السلطان ○ ونشهد ان سيدنا محمدا
عبده ورسوله شفيع العصاة يوم الحشر سيد الانس والجان

صلى الله وسلم على سيدنا محمد وآله وصحبه اجمعين ○

يَا أَيُّهَا النَّاسُ اتَّقُوا اللهَ الْعَظِيمَ عَزَّ وَجَلَّ وَأَطِيعُوهُ
أُوصِيكُمْ عِبَادَ اللهِ وَإِيَّايَ بِتَقْوَى اللهِ

## றமலான் மாதம்

## நான்காவது ஜும்ஆ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

நீங்கள் பார்க்கிற வானத்தைத் தூண் இல்லாமல் உயர்த்தி, நக்ஷத்திரங்களையும், கணக்குப்படி சூரியனையும் சந்திரனையும் அதற்கு அலங்காரமாக்கிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப்புகழும் தகும். இன்னும் பூமியைத் தொட்டிலாகவும் விரிப்பாகவும் பரப்பி, விவசாயத்தையும், ஒலிவ்மரத்தையும், திராக்ஷைக் கொடியையும், புஷ்பங்களையும் கொண்டு அதனை அலங்கரித்தான்.

நம்மைச் சிருஷ்டித்து, நமது உருவங்களை அழகாக்கி, நமது தன்மைகளை நல்லனவாக்கி, ஈமானுள்ளவர்களில் நம்மை ஆக்கியதற்காக அவனை நாம் புகழ்கின்றோம். இன்னும் றமலான் மாதம் வரை

நம்மை நிலைத்திருக்கச் செய்ததற்காக அவனுக்கு நாம் நன்றி செலுத்து கிறோம்.

றமலான் மாதம் என்பது என்ன என்று தெரியுமா? அது ஒருமாதம். அதில் நோன்பாளிகளுக்கு சுவர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன. பாபிகளுக்கான நரக வாசல்கள் அடைக்கப்படு கின்றன.

அல்லாஹ்வைத் தவிர்த்து வணக்கத்துக் குரியவன் (வேறு யாரும்) இல்லை. அவன் தனித்தவன், அவனுக்கு இணை இல்லை, அவனுக்கு முரணானவனில்லை. அதிகாரத்தில் அவனுக்கு நிகரானவன் இல்லை என்று நாங்கள் சாக்ஷியங்கூறுகிறோம், எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும், தூதராகவும், உயிர்ப்பிக்கப்படும் நாளில் பாபிகளுக்குப் பரிந்து பேசுபவராகவும், மனிதனுக்கும் ஜின்னுக்கும் நாயகராகவும் இருக்கிறார்கள் என்று சாக்ஷியங் கூறுகிறோம்.

أَمَّا بَعْدُ மனிதர்களே! ஜின்களே!! சோதரர்களே!

இது ஒருமாதம். இதன் மகத்துவம் மகத்தானது. இதன் பெருமை பெரிது. இது உங்களுக்கு நிழலிட்டிருப்பதுடன் உங்களை விட்டுக் கடந்து போவதும் நெருங்கி விட்டது. இன்னும் கொஞ்ச காலம் தான் இதில் எஞ்சி இருக்கிறது. இதன் முற்பகுதியும் நடுப்பகுதியும் கழிந்து விட்டது, இதன் பிற்பகுதி வந்திருக்கிறது. இதன் முற்பகுதியோ மஃபிறத்தென்னும் பிழை பொறுக்குதலாகவும், நடுப்பகுதியோ றஹ்மத்தென்னும் கிருபையாகவும், பிற்பகுதியோ நரகத்தை விட்டு விடுதலையாகவும் இருக்கிறது. இப்பிற்பகுதியில் தான் சிறப்பும் மதிப்புமுள்ள இரவிருக்கிறது.

அது ஆயிரம் மாதங்களைப் பார்க்கினும் மேலானது என்று நான் பிரமாணமாகக் கூறுகிறேன். பக்தி விசுவாசத்துடன் அவ்

விரவில் தொழுதவருக்கு அவர் முன்னர் செய்த பாபம் மன்னிக்கப் படுகிறது. அதில் நோன்பாளிகளுக்கு அவர்களது நற்கூலிகள் பூர்த்தியாக நிறைவேற்றப் படுகிறது. அதில் வணங்குபவர்களுக்கு அவர்களது குற்றங்கள் மன்னிக்கப்படுகின்றன; நரகத்தை விட்டு உரிமைச்சீட்டு அவர்களுக்கு எழுதப்படுகிறது.

ஆதலின், சன்மார்க்கத்துக்கு விலக்கலானவற்றை விட்டு நோன்பு நோற்றவரும், சன்மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதைக் கொண்டு நோன்பை துறந்தவரும் உங்களில் இருக்கிறாரா? நன்மையான காரியங்களில் முயன்று, பாபங்களையும் அழிச்சாட்டியங்களையும் விட்டு நீங்கியவர் உங்களிலிருக்கிறாரா?

பகை, துவேஷம், பொறாமை ஆகியவைகளை விட்டுத் தங்கள் அகங்களை சுத்தஞ் செய்து, தற்பெருமை, பிறர் மெய்க்கச் செய்தல், கன்னெஞ்சம், அகம்பாவம் ஆகியவைகளை விட்டுத் தங்கள் நெஞ்சைத் தூய்மையாக்கியவர் உங்களில் இருக்கிறாரா?

பொய், புறம், கோள் முதலியவைகளை விட்டுத் தனது நோன்பில் தன்னைத் தடுத்துக் கொண்டு, அல்லாஹுத் தஆலா விலக்கலாக்கி வைத்த பெரிய காரியங்களை விட்டுத் தங்கள் பார்வையை மூடிக் கொண்டவர் உங்களில் இருக்கிறாரா?

விடியற்காலவேளைகளில் இறைவனிடம் பிழை பொறுக்கத் தேடி, அவனது வேதத்தை அல்லும்பகலும் அனவரதமும் ஓத முயன்றவர் உங்களில் இருக்கிறாரா? றமலானின் இரவுகளில் வணங்கியவர் உங்களில் இருக்கிறாரா?

பாபங்கள் மன்னிக்கப் பட்டவர்களுக்கும், குறைகள் மறைக்கப் பட்டவர்களுக்கும், தேவைகள் நிறைவேற்றப்பட்டவர்களுக்கும், பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்பட்டு றஹ்மானின் சந்திப்பு விதிக்கப்பட்டவருக்கும் மங்கள முண்டாவதாக! சோபனம்!!

சோபனம்!!! சென்ற இரவுகளையும் கடந்த பகல்களையும் நோன்பிலும் தொழுகையிலும் செலவு செய்து, பாபங்களை விடுவதில் முயன்று, தங்களது றப்பாகிய, கேட்காமலே கொடை கொடுப்போனாகிய அல்லாஹுத் தஆலாவை திருப்தி செய்வதில் உழைத்தவருக்கே சோபனம்!

இவர்கள் தாம் தங்கள் றப்பின் திருப்தியை அடைந்தவர்கள்; இவர்களது பாபங்களைத்தான் இவர்களது றப்பு மன்னிக்கிறான்; சுவர்க்கத்திலுள்ள உன்னதமான மாளிகைகளில் இவர்களை அவன் பிரவேசிக்கச் செய்வான்,

கடந்த மாதங்களையும் றமலான் மாதத்தையும் சமமாகக் கருதி, சமமாகவே நடந்து, வழிப்பாட்டுக்கும், வழிப்படாமைக்கும் வித்தியாசங்காணாமல், இச்சைக்கு அடங்கி, தங்களது றப்புக்கு மாறு செய்து, அடங்காத ஜின்னாகிய ஷைத்தானுக்குக் கீழ்படிந்தவர்கள் தான் பரிபூரணமாக முற்றிலும் நிர்ப்பாக்கியவான்களாகி விட்டார்கள். ஆகவே, அல்லாஹுத் தஆலா அவர்களுக்குக் கிருபை செய்து, அவர்களது பாபங்களை மன்னித்து, சுவர்க்கப்பாதையாகிய நேரான பாதையில் அவர்களுக்கு வழி காண்பிப்பானாக!

அல்லாஹுத் தஆலாவினது அடியார்களே! அவனுக்கு அஞ்சுங்கள்! பயப்படுங்கள்! கண்ணியம் பொருந்திய இந்த நாட்களில் உங்களுக்கு என்ன துணிவு? மகத்துவமுள்ள இவ்விரவுகளில் உங்களுக்கு என்ன அசட்டை? இந்த உறக்கமும் தூக்கமும் எத்தனை காலம்வரை? இந்தத் தூரமாகுவதும் நிர்ப்பாக்கியமும் எவ்வளவு காலத்துக்கு?

இம்மாதத்தில் எஞ்சியதைக்கொள்ளை முதலாகக் கருதுங்கள்! இம்மாதத்தில் சென்று போனதில் நிகழ்ந்தவைகளுக்காகத் தௌபாச் செய்யுங்கள், உங்களது றப்பு உங்களுக்குக் கிருபை செய்து, நரகத்தை விட்டு உங்களை விடுதலை செய்யக்கூடும். அல்லாஹுத்

தஆலாவின் அருளை விட்டு நிராசையாகாதீர்கள். அவனது கிருபை விஷயத்தில் நம்பிக்கை இழக்காதீர்கள். நன்றி கொன்றவரைத் தவிர்த்து மற்றவர் அல்லாஹுத் தஆலாவின் கிருபை விஷயத்தில் அவநம்பிக்கை கொள்ள மாட்டார்கள்.

அவனது கருணை விசாலமானது என்பதை நம்பிக்கொண்டிருக்காதீர்கள். அவனது பிடி மிகப்பலமானது. அவன் தான் ஆரம்பமாகச் சிருஷ்டிக்கிறான். அவன் தான் மீண்டும் உயிர்ப்பிக்கிறான், அங்கங்கள் செய்ததையும். அவயவங்கள் உண்டு பண்ணியதையும் குறித்து உங்களிடம் அவன் கணக்கு வாங்குவான்.

உயர்வுள்ளவனான றப்பின்பால் இருகரங்களையும் ஏந்தியவர்களாக "கிருபையாளனே! இம்மையில் யாவருக்கும் சமமாய்க் கிருபை செய்பவனே! நீதிவானே! கேட்பதற்கு முன் கொடையளிப்பவனே! நாங்கள் நினது ஏவலுக்கு இணங்கினோம்; உனது விலக்கலை விலக்கிக் கொண்டோம்; றமலானின் பகலில் நோன்பிருந்து இரவுகளில் வணங்கினோம்; நாங்கள் உனது அடியார்கள்; மீறி நடந்தவர்கள், குற்றவாளிகள்; எங்களது பாவங்கள் எங்கள் நன்மைகளை மிகைத்து விட்டன. எங்களது தீமைகள் எங்கள் வழிப்பாடுகளைப் பார்க்கினும் அதிகமாகிவிட்டன. நீயோ எங்களது றப்பு; எங்களை மன்னிப்பவன், எங்களுக்கருள்பவன், எங்களுக்கு நீ பிழை பொறுக்காவிடில், எங்களை எவர் மன்னிப்பார்? எங்களுக்கு நீ கிருபை செய்யாவிடில் பின்னை எங்களுக்குக் கிருபை செய்பவர் எவர்? எங்களை நீ துரத்தி விட்டால் எங்களை நெருங்கச் செய்பவர் எவர்? எங்களை நீ தூரமாக்கி வைத்தால் எங்களை ஆதரிப்பவர் எவர்? எங்களது பாவங்களுக்காக எங்களை அழிக்காதிருப்பாயாக! நாங்கள் முந்திச் செய்ததையும் பிந்திச் செய்ததையும் நாங்கள் இரகசியமாகச் செய்ததையும், பகிரங்கமாகச் செய்ததையும், நாங்கள் வெளிப்படுத்தியதையும் மறைத்ததையும் எங்களுக்குப் பொறுப்பாயாக! நரகை விட்டு எங்களுக்கு உரிமைச் சீட்டெழுதுவாயாக!" என்று கூறுங்கள்.

இரக்கமுள்ளவனான றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும்.

أَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ○
وَإِذَا سَأَلَكَ عِبَادِيْ عَنِّيْ فَإِنِّيْ قَرِيْبٌ أُجِيْبُ
دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ ○

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலாவினிடத்தில் காவல் தேடுகிறேன்.

என்னைக் குறித்து உம்மிடம் எனது அடியார்கள் வினவினால் "நிச்சயமாக நான் மிகச் சமீபத்திலிருக்கிறேன். என்னைப் பிரார்த்திக்கும்போது பிரார்த்திப்பவரது பிரார்த்தனைக்கு நான் பதில் கூறுவேன்" (என்று கூறுவீராக!)

(திரு குர்ஆன்)

بَارَكَ اللّٰهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْاٰنِ الْعَظِيْمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْاٰيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ إِنَّهُ تَعَالٰى جَوَادٌ كَرِيْمٌ مَلِكٌ قَدِيْمٌ
بَرٌّ رَؤُوْفٌ رَحِيْمٌ وَرَبٌّ حَلِيْمٌ ○

# خُطْبَةُ وَدَاعِ رَمَضَانَ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ فَضَّلَ عَلٰى كَثِيْرٍ مِّنْ خَلْقِهٖ نَوْعَ الْإِنْسَانِ ○ وَخَصَّ مِنْهُمْ بِمَزِيْدِ فَضْلِهٖ اُمَّةَ حَبِيْبِهٖ سَيِّدِ بَنِيْ عَدْنَانَ ○ نَحْمَدُهٗ عَلٰى اَنْ جَعَلَنَا مِنْهُمْ وَنَزَّلَ عَلَيْنَا الْقُرْاٰنَ ○ وَوَهَبَ لَنَا لَيْلَةَ الْقَدْرِ هِيَ خَيْرٌ مِّنْ اَلْفِ شَهْرٍ وَّ اَفْضَلُ اَجْزَاۤءِ الزَّمَانِ ○ مَنْ قَامَهَا اِيْمَانًا وَّاحْتِسَابًا نَالَ الْفَرَحَ وَ الرِّضْوَانَ ○ وَنَشْكُرُهٗ عَلٰى اَنَّهٗ جَعَلَ اَفْضَلَ الشُّهُوْرِ شَهْرَ رَمَضَانَ ○ اَلَّذِيْٓ اُنْزِلَ فِيْهِ الْقُرْاٰنُ هُدًى لِّلنَّاسِ وَبَيِّنَاتٍ مِّنَ الْهُدٰى وَالْفُرْقَانِ ○ اَشْهَدُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا هُوَ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ خَلَقَ الْخَلْقَ وَعَلَّمَهُ الْبَيَانَ ○ وَاَشْهَدُ اَنَّ سَيِّدَنَا وَمَوْلَانَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ سَيِّدُ اَهْلِ الْبَوَادِيْ وَالْعُمْرَانِ ○

صَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ۝

يَا اَيُّهَا النَّاسُ ۝ اِتَّقُوا اللّٰهَ الْعَظِيْمَ عَزَّ وَجَلَّ وَاَطِيْعُوْهُ
اُوْصِيْكُمْ عِبَادَ اللّٰهِ وَاِيَّايَ بِتَقْوَى اللّٰهِ ۝

## றமலான் மாதம்

# அல்விதாஉ குத்பா

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

எல்லாப் புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே தகும். அவன் மனித வர்க்கத்தாரை தனது சிருஷ்டிகளில் அநேக வர்க்கங்களைப் பார்க்கினும் சிறப்பித்துவைத்தான். அத்னான் கோத்திரத்துத் தலைவரான தனது ஹபீபாகிய அன்பரின் உம்மத்துக்களுக்கு தனது விசேஷ சிறப்புக்களைக்கொண்டு சொந்தமாக்கினான். அவர்களை நம்மிடம் சேர்ப்பித்து நமக்குத் திருக் குர்ஆனை அருளி, ஆயிரம் மாதங்களைப் பார்க்கினும் மேலானதாகவும், காலத்தில் மிகவும் சிறந்த பாகமுமாகிய "லைலத்துல் கத்ரை" நமக்கு நன்கொடையாக ஆக்கிய அவனை நாம்

புகழ்கின்றோம். பக்தி விசுவாசத்துடன் அவ்விரவில் தொழுதவர் சந்தோஷத்தையும் திருப்தியையும் அடைகிறார்.

மாதங்களில் றமலான் மாதத்தை மிகச்சிறந்ததாக ஆக்கிய அவனுக்கு நாம் நன்றி செலுத்துகிறோம். ஜனங்களுக்கு நேர்வழி காட்டியாகவும், நேர்வழிக்கும், நன்மை தீமைகளைப் பிரிப்பதற்கு முள்ள தெளிவான அத்தாட்சிகளுள்ளதாகவுமிருக்கிற திருக் குர்ஆன் அம்மாதத்தில்தான் அருளப்பட்டது.

வணக்கத்துக்குரியவன் அவனைத் தவிர்த்து (வேறுயாரும்) இல்லை. அவன் தனித்தவன், அவனுக்கு இணையில்லை. சிருஷ்டிகளை அவன் சிருஷ்டித்து பிரசங்கத்தை அவைகளுக்குக் கற்றுக் கொடுத்தான் என்று சாக்ஷியங்கூறுகிறோம். எங்களது நாயகம், எங்களது எஜமானர் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் திருத்தூதராகவும் நகரவாசிகளுக்கும் கிராமவாசிகளுக்கும் தலைவராகவும் இருக்கிறார்கள் என்று சாக்ஷியங்கூறுகிறோம்.

اَمَّا بَعْدُ மனு, ஜின் ஆகிய இருவர்க்கத்தாரே! மனு, ஜின் ஆகியவர்களில் நின்றும் இங்கு விஜயம் செய்தோர்களே! றமலான் மாதத்தின் பெரும்பாகம் சென்று விட்டது. இதில் எஞ்சிய பாகம் ஒரு க்ஷணப்பொழுது செல்வதுபோல வெகு சீக்கிரத்தில் சென்றுவிடும். ஆகவே, பக்தி விசுவாசத்துடன் அதன் இரவுகளில் தொழுது, பகற்காலங்களில் இச்சைகளை விட்டு விரதமிருந்தவர்களான முந்தியவர்களாகிய முதன்மையாளர்களுக்கே மங்களம்! அதன் மகத்துவத்தை அறியாமலும், நரகவேதனையை விட்டு தங்களை விடுவிக்காமலும் அதனை வீணாக்கியவர்களான தூரத்திலாகி விட்டவர்களுக்கே கேடு!

எனவே, அதில் எஞ்சியதைக் கொள்ளை முதலாகக் கொள்ளுங்கள்! சன்மார்க்கத்துக்கு இணக்கமான கிரியைகளைக் கொண்டு அதனை வழியனுப்புங்கள்! நன்றிக்குக் கூலி நன்றியைத் தவிர்த்து வேறில்லை.

கண்ணியமும் மதிப்பும் உயர்ந்த அந்தஸ்துமுள்ள இந்தமாதம் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? இது ஒரு புனித மாதம். சுவர்க்கத்து வாசல்கள் இதில் திறக்கப்படுகின்றன. எனவே, வழியனுப்புகை, பயண மனுப்புகை றமலான் மாதத்துக்கே! நரகத்தின் வாசல்கள் இம்மாதத்தில் அடைக்கப்படுகின்றன.

வழியனுப்புகை, பயண மனுப்புகை றமலான் மாதத்துக்கே! இது ஒரு மாதம். இதன் பகலில் நோன்பு நோற்பது நரகத்தை விட்டுக் காக்கும் கேடயமாக இருக்கிறது.

வழியனுப்புகை, பயண மனுப்புகை றமலான் மாதத்துக்கே! இது ஒரு மாதம். இதன் இரவில் நின்று வணங்குவது சவுக்கியமாகவும் நல்ல வாடையாகவும் இருக்கிறது.

வழியனுப்புகை பயண மனுப்புகை றமலான் மாதத்துக்கே! இது ஒருமாதம். இதில் நோன்பாளிக்கு இருவிதமான சந்தோஷம்: அதாவது நோன்பு திறக்கும்போது ஒரு சந்தோஷம்; இம்மையில் யாவருக்கும் சமமாகக் கிருபை செய்வோனாகிய றஹ்மானைச் சந்திக்கும்போது ஒரு சந்தோஷமும் இருக்கிறது.

வழியனுப்புகை, பயண மனுப்புகை றமலான் மாதத்துக்கே! இது ஒரு மாதம். இதில் ஷைத்தான்களின் கால்கள் விலங்கிடப்படுகின்றன. அடங்காத ஜின்கள் இதில் கைது செய்யப்படுகின்றன.

பிரிவு, பிரிவு றமலான் மாதத்துக்கே! இது ஒரு மாதம். பக்தி விசுவாசத்துடன் இதில் நோன்பு நோற்பவருக்கு அவர் முன்னர் செய்த பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

பயண மனுப்புகை, வழியனுப்புகை ரமலான் மாதத்துக்கே! இது ஒரு மாதம். பக்தி விசுவாசத்துடன் இதில் வணக்கம் புரிந்தவர் சவுக்கியத்தையும் சுகந்தவாடையையும் அடைவார்.

பயண மனுப்புகை, வழியனுப்புகை ரமலான் மாதத்துக்கே! அது ஒரு மாதம். அதில் "லைலத்துல் கத்ரி" இருக்கிறது. அவ்விரவில் இறைவனை வணங்குவது ஆயிரம் மாதங்கள் வணங்குவதைப் பார்க்கிலும் மேலானது. நரகத்தை விட்டு விடுதலையாகவுமிருக்கிறது.

வழியனுப்புகை, பயண மனுப்புகை ரமலான் மாதத்துக்கே! இது ஒரு மாதம். இதில் ஒரு நபிலை நிறைவேற்றுபவர் ஒரு பர்லை நிறைவேற்றிய நன்மையையடைவார். ஒரு பர்லை நிறைவேற்றியவர் எழுபது பர்லுகளை நிறைவேற்றிய நன்மையை அடைவதுடன் சுவர்க்கத்தைக் குறித்து நற்செய்தி கூறப்படுகிறார்.

வழியனுப்புகை பயண மனுப்புகை ரமலான் மாதத்துக்கே! இது ஒரு மாதம். இதில் ஒவ்வொரு இரவிலும் நரகத்தை விட்டு ஆறு லக்ஷம் பேர் உரிமை விடப்படுகிறார்கள். இதில் கடைசி இரவு வந்தால் இதற்கு முன்னர் ஒவ்வொரு இரவிலும் ஆறு லக்ஷம் பேராக எல்லா இரவுகளிலும் உரிமைவிடப்பட்ட அளவுக்கு நரகிலிருந்து ஜனங்களை அல்லாஹுத் தஆலா உரிமை விட்டு, கிருபையையும் திருப்தியையும் வர்ஷிக்கிறான்.

வழியனுப்புகை, பயணமனுப்புகை ரமலான் மாதத்துக்கே! பொறுமையும் அனுதாபமுமுள்ள மாதம், சந்தோஷமும் நிறைவேற்றுகையுமுள்ள மாதம். மேலதிகமாகக் கொடுப்பதும் உபகாரமுமுள்ள மாதம்.

வழியனுப்புகை, பயணமனுப்புகை ரமலான் மாதத்துக்கே! கொடையும் தயையுமுள்ள மாதம். அதன் மகத்துவத்தை அறிந்தவரது மகத்துவம் மிகுந்தவர்களெல்லாம் ஆஜர் செய்யப்படும் நாளில் மேலாக இருக்கும். திருப்தி என்ற வீட்டில் பிரவேசிப்பார்.

வழியனுப்புகை, பயணமனுப்புகை றமலான் மாதத்துக்கே! "பிரார்த்திப்பவர் இருக்கிறாரா? அவருக்கு நான் பதிலுரைக்கிறேன்; சம்பத்தைக் கேட்பவர் இருக்கிறாரா? அவருக்கு நான் சம்பத்தை அளிக்கிறேன்; பிழை பொறுக்கத்தேடுபவர் இருக்கிறாரா? அவருக்கு நான் பிழை பொறுக்கிறேன்; கிருபை நிறைந்த பாத்திரத்தை வர்ஷிக்கிறேன்" என்று இறைவனது கட்டளைப்படி கூறுபவர் தினந்தோறும் அம்மாதத்திலுள்ள ஒவ்வொரு இரவிலும் கூறுகிறார்.

வழியனுப்புகை, பயணமனுப்புகை றமலான் மாதத்துக்கே! இது ஒரு மாதம். இதில் தேவையுள்ளோர்களது தேவைகள் எத்தனையோ நிறைவேற்றப் படுகின்றன; பிரார்த்திப்பவர்களது பிரார்த்தனைகளுக்கு பதில் கூறப்படுகின்றன; நரகத்தை விட்டு விடுதலையளிக்கப்படுகிறது.

வழியனுப்புகை, பயணமனுப்புகை றமலான் மாதத்துக்கே! ஸ்தோத்திரங்களும், தராவீஹ் தொழுகையும், திரு குர்ஆன் ஓதுகையுமுள்ள மாதம்.

வழியனுப்புகை, பயணமனுப்புகை றமலான் மாதத்துக்கே!

சோதரீர்! தோழரீர்!! முழுமனதுடனும் அந்தரங்க சுத்தியான நாவுடனும் சிறப்பும் பெருமையும் பொருந்திய இந்த மாதத்தில் உங்களுக்கு தயை செய்ததைக் குறித்து அல்லாஹுத் தஆலாவுக்கு நன்றி செலுத்துவீர்களாக!

முஸ்லிம்களைப் பற்றிய ஆச்சரியமே! இந்த மாதத்தில் அவர்கள் எவ்வாறு மாறு செய்கிறார்கள்? பாபமன்னிப்பைச் சம்பாதித்துக் கொள்கிறார்களில்லை. இந்த மாதத்தில் தனக்குரிய புண்ணியத்தை தவற விட்டவருக்குள்ள கைசேதமே! தௌபாச் செய்யாமலிருந்து இந்த மாதத்தில் தனக்குத்தானே தீங்கிழைத்துக் கொண்டவருக்குள்ள நஷ்டமே! இந்த நாட்களில் அசட்டையை விட்டு

எழாமலும், பொய் சாக்ஷியங்கூறுதல், விளையாட்டு, சம்ஸர்க்கம், பாவம் ஆகியவைகளை விடாமலும் இருப்பவருக்குள்ள நிர்ப்பாக்கியமே!!

தற்பெருமை கொண்டுள்ளவனுக்கு இவ்வருஷம் போன்றது கிடைக்குமென்ற உறுதி இருக்கிறதா? மரணம் திடீரென வந்தெய்தும் என்பதை அவனறியவில்லையா? செய்தி அறிவிப்பவனையோ உற்றது உரைப்பவனையோ மரணம் முற்கூட்டியனுப்பாது. ஒவ்வொரு வஸ்துவுக்கும் மரணம் என்ற பானமுள்ள கோப்பை சுற்றி வரும். உண்மைப் பொருள்கள் யாவும் அழிந்து போகக்கூடியதே என்பதை அவனறியவில்லையா?

இந்தமாதத்தில் எஞ்சி இருப்பதையாவது நீங்கள் கொள்ளை முதலாகக் கருதவேண்டுமென்றும் அதனை வீணாக்கி விடவேண்டாமென்றும் அல்லாஹுத் தஆலாவின் மீது பிரமாணமாகக் கூறுகிறேன். அவ்வாறு செய்வீர்களாயின் உங்களுக்கு அல்லாஹுத் தஆலா கிருபை செய்து, நஷ்டம் வராமல் உங்களைக் காப்பாற்றக் கூடும்.

நாம் வீணாக்கி விட்ட வயதுக்கு ஆவோ! நாம் பழுதாக்கி விட்ட வாணுளுக்கு அன்னே!! றமலான்மாதம் போவதற்கு அச்சோ!!!

சென்றுவிட்ட நல்ல மாதத்துக்கு ஒவ்வொரு க்ஷணத்திலும் றஹ்மானில் நின்றும் ஸலாம் உண்டாவதாக! ஏனெனில், அது அல்லாஹுத் தஆலாவில் நின்றுமுள்ள அப்யமாக இருக்கிறது. பிரகாசமுள்ள உனது நாட்கள் திடீரென அழிந்து போனால் உன்னைப்பற்றிய என் இதயத்திலுள்ள துக்கம் அழியவே மாட்டாதே! அப்படி இருக்க றமலான் மாதத்தின் பிரிவால் உண்மை மூமினின் கண்களிலிருந்து நீர் வடியாமல் எப்படி இருக்கும்? மேலும், விசுவாசி தனக்கு எஞ்சியுள்ள வாணுளில் திரும்பவும் றமலானை அடைய முடியும் என்பதை அறியாமல் இருக்கிற நிலையில்,

வழியனுப்புகை, பயணமனுப்புகை றமலான் மாதத்துக்கே!

பிரிவினை பயமுறுத்திற்று, பிரிவுக்காக நீ பொறுமையாக இருப்பாயா? அல்லது பொறுமையை இழப்பாயா? அவர்கள் அயலகத்தாராக இருந்த போதினிலே நீ அழுது கொண்டிருந்தால், அவர்கள் விடை பெற்றுக் கொண்டால் நீ என்ன செய்வாய்!

"சென்ற பகல்களையும் கழிந்த இரவுகளையும் நான் நினைத்துக் கொண்டேன். அவைகளை நினைத்துக் கொள்வதால் கண்ணீர்கள் வடிந்தன."

அறிந்துகொள்! சென்ற காலம் மீளுவது நமக்குக்கிடைக்குமா? அந்தச் சந்திப்பினை வேளை நமக்குத் திரும்பவும் மீளுமா? அன்பன் புறக்கணித்த பிறகு சேருவதிருக்கிறதா? பூரணச் சந்திரன் மறைந்த பிறகு உதயமாகுமா? ஒருபோதும் உதயமாவதில்லை.

நாயனே! அல்லாஹ்வே! இம்மையில் யாவருக்கும் சமமாகக் கருணை புரிபவனே! எங்களுக்கு ஆறுதலளிப்பதாகவும், எங்களுக்குத் தோழனாகவும், எங்களுக்குப் பரிந்து பேசுவதாகவும், நற்செய்தி நவில்வதாகவும் இருந்த இந்த மாதம் விடை பெற்றுக் கொள்வதை அறிவித்திருக்கிறது. அதில் கொஞ்சம்தான் எஞ்சி இருக்கிறது. உனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்தும் உனது நபியின் ஷரீஅத்துக்குக் கட்டுப் பட்டும் அதில் நாங்கள் நோன்பு நோற்று வணக்கம் புரிந்தோம். ஆதலின், எங்களது குற்றங்களுக்காக எங்களை நீ அழிக்காதிருப்பாயாக! தூரத்தப்பட்டு, நிர்ப்பாக்கியவான்களாக இருப்பவர்களில் எங்களை ஆக்காதிருப்பாயாக! எங்களது தவறுகள் யாவற்றையும், எங்களது குற்றங்களையும் எங்களுக்கு மன்னித்து, நரகத்தை விட்டு எங்களைக் காப்பாயாக!

மிகவும் அறிந்தவனுமான றப்பாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப்புகழும் தகும்.

أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ۝
وَإِذَا سَأَلَكَ عِبَادِي عَنِّي فَإِنِّي قَرِيبٌ أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ
إِذَا دَعَانِ ۝

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹுத் தஆலா வினிடத்தில் காவல் தேடுகிறேன்.

மேலும், என்னைக் குறித்து என் அடியார்கள் உம்மை விசாரித்தால், "நிச்சயமாக நான் மிகச் சமீபத்திலிருக்கிறேன். என்னைப் பிரார்த்திக்கும்போது பிரார்த்தனை செய்வோரின் பிரார்த்தனைக்கு நான் பதில் கூறுவேன்" (என்று கூறுவீராக).

(திரு குர்ஆன்)

بَارَكَ اللهُ لَنَا وَلَكُمْ بِالْقُرْآنِ الْعَظِيمِ وَنَفَعَنَا وَإِيَّاكُمْ
بِالْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ إِنَّهُ تَعَالَى جَوَادٌ كَرِيمٌ مَلِكٌ قَدِيمٌ
بَرٌّ رَؤُفٌ رَحِيمٌ وَرَبٌّ حَلِيمٌ ۝

# الخطبة الثانية لجمع رجب وشعبان ورمضان

بسم الله الرحمن الرحيم ○

الحمد لله الكريم الجليل ○ الذي خلق الخلق وبعث منهم
رسلا وانبياء ذوي المهابة والتبجيل ○ نحمده حمدا
كثيرا على ان شرفنا بان جعلنا من امة حبيبه وصفيه
مكمل قصر النبوة بحسن التكميل ○ ونشكره على ان
فضل لنا بعض الشهور على بعض وادار علينا من
الشهور الفاضلة رجب وشعبان ورمضان وفضله
اكبر تفضيل ○ اشهد ان لا اله الا هو وحده لا شريك
له ولا ند له ولا ضد له ولا مثيل ○ وان سيدنا ومولانا
محمدا عبده ورسوله صاحب المقام المحمود والعز الجميل ○
صلى الله عليه وعلى اله وصحبه الهادين الى سواء السبيل ○
اما بعد ايها الناس هذا شهر مبارك ○ قد من عليكم
به ربكم تعالى وتبارك ○ من اتى فيه بحسنة كتبت له

اَضْعَافًا مُّضَاعَفَةً وَّفَازَ بِالدَّرَجَاتِ الْمُتَصَاعِدَةِ، فَاجْتَهِدُوْا
فِيْهِ بِالْاَعْمَالِ الصَّالِحَةِ ، وَاجْتَنِبُوْا فِيْهِ الْاَفْعَالَ الْفَاحِشَةَ
وَهٰذَا يَوْمُ الْجُمُعَةِ مِنْهُ مُبَارَكٌ قَدْ فَاقَ عَلٰى جَمِيْعِ الدُّهُوْرِ ○
وَفَاقَ بِاللَّطَآئِفِ وَالسُّرُوْرِ ○ فَاَكْثِرُوْا فِيْهِ الصَّلٰوةَ وَ
السَّلَامَ عَلٰى سَيِّدِ الْاَنَامِ ○ وَاَصْحَابِهِ الْغُرِّ الْكِرَامِ ○ وَادْعُوا
اللهَ فِيْهِ فَاِنَّ الدُّعَآءَ فِيْهِ مُسْتَجَابٌ ○ وَاسْتَغْفِرُوْهُ مِمَّا مَضٰى
وَمَا بَقِيَ فَاِنَّ الْاِسْتِغْفَارَ فِيْهِ يَمْحُو الذُّنُوْبَ عَنِ الْكِتَابِ ○
اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا وَمَوْلَانَا مُحَمَّدٍ شَفِيْعِ الْعُصَاةِ وَ
مُطَهِّرِهِمْ مِنَ الذُّنُوْبِ ○ وَدَافِعِ هُمُوْمِهِمْ وَكَاشِفِ الْكُرُوْبِ ○
صَلٰوةً دَآئِمَةً بِدَوَامِكَ ، بَاقِيَةً بِبَقَآئِكَ ، وَصَلِّ عَلٰى جَمِيْعِ
الْاَنْبِيَآءِ وَالْمُرْسَلِيْنَ ، وَجَمِيْعِ الْمَلٰٓئِكَةِ الْمُقَرَّبِيْنَ ،
وَعَلٰى جَمِيْعِ الصَّحَابَةِ وَالتَّابِعِيْنَ ، وَسَآئِرِ عِبَادِكَ الصَّالِحِيْنَ
لَاسِيَّمَا عَلَى الْبَدْرِ التَّمَامِ ○ اَوَّلِ مَنْ دَخَلَ فِي الْاِسْلَامِ ○
رَفِيْقِ الْمُصْطَفٰى فِي الْغَارِ ○ صَاحِبِ الْعِزِّ وَالْاِفْتِخَارِ ○ اَفْضَلِ

الْبَشَرِ بَعْدَ الْاَنْبِيَاءِ بِالتَّحْقِيْقِ سَيِّدِنَا عَبْدِ اللهِ اَبِيْ بَكْرِ
الصِّدِّيْقِ ○ رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ ۞ وَعَلٰى صَاحِبِ الْعَدْلِ
وَالْاِحْتِسَابِ ○ مُزَيِّنِ الْمِنْبَرِ وَالْمِحْرَابِ ○ اَلَّذِيْ كَانَ رَاْيُهٗ
مُوَافِقًا لِاُمِّ الْكِتَابِ ○ سَيِّدِنَا عُمَرَ بْنِ الْخَطَّابِ ○ رَضِيَ
اللهُ تَعَالٰى عَنْهُ ۞ وَعَلٰى صَاحِبِ الْحَيَاءِ وَالْعِرْفَانِ ○ اَلَّذِيْ
تَسْتَحْيِيْ مِنْهُ مَلٰٓئِكَةُ الرَّحْمٰنِ ○ جَامِعِ اٰيَاتِ الْقُرْاٰنِ ○
كَمِثْلِ التَّرْتِيْبِ فِيْ لَوْحِ الْمَنَّانِ ○ سَيِّدِنَا عُثْمَانَ بْنِ عَفَّانَ ○
رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ ۞ وَعَلٰى اَسَدِ اللهِ الْغَالِبِ ○ ذِي الْمَنَاقِبِ
وَالْمَنَاصِبِ ○ سَيِّدِنَا عَلِيِّ بْنِ اَبِيْ طَالِبٍ ○ كَرَّمَ اللهُ وَجْهَهٗ ۞
وَعَلٰى سِبْطَيْنِ النَّيِّرَيْنِ ○ اَلسَّيِّدَيْنِ الْاَنْوَرَيْنِ ○ سَيِّدِنَا
الْحَسَنِ وَسَيِّدِنَا الْحُسَيْنِ ○ رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُمَا ۞
وَعَلٰى اُمِّهِمَا سَيِّدَةِ النِّسَآءِ فَاطِمَةَ الزَّهْرَآءِ رَضِيَ اللهُ تَعَالٰى
عَنْهَا ۞ وَعَلٰى سَآئِرِ بَنَاتِ رَسُوْلِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلٰى
اٰلِهٖ وَسَلَّمَ وَجَمِيْعِ اَزْوَاجِهٖ وَذُرِّيَّاتِهٖ ۞ وَعَلٰى عَمَّيْهِ

الْمُعَظَّمِيْنَ الْمُكَرَّمِيْنَ بَيْنَ النَّاسِ ○ الْمُنَزَّهِيْنَ مِنَ الدَّنَسِ وَالْأَرْجَاسِ ○ سَيِّدِنَا حَمْزَةَ وَسَيِّدِنَا الْعَبَّاسِ ○ رَضِيَ اللّٰهُ تَعَالٰى عَنْهُمَا ۞ وَعَلٰى سَائِرِ الصَّحَابَةِ وَالتَّابِعِيْنَ ○ وَمَنْ تَبِعَهُمْ إِلٰى يَوْمِ الدِّيْنِ ○ اَللّٰهُمَّ انْصُرْ مَنْ نَّصَرَ دِيْنَ سَيِّدِنَا مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَاجْعَلْنَا مِنْهُمْ ۞ وَاخْذُلْ مَنْ خَذَلَ دِيْنَ سَيِّدِنَا مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَلَا تَجْعَلْنَا مِنْهُمْ اَللّٰهُمَّ اَهْلِكِ الْكَفَرَةَ وَالْمُبْتَدِعَةَ وَالْمُشْرِكِيْنَ ۞ وَلَا تَجْعَلْنَا مِنَ الْقَوْمِ الظَّالِمِيْنَ ۞ اَللّٰهُمَّ شَتِّتْ شَمْلَهُمْ ۞ اَللّٰهُمَّ مَزِّقْ جَمْعَهُمْ ۞ اَللّٰهُمَّ دَمِّرْ دِيَارَهُمْ ۞ اَللّٰهُمَّ خَرِّبْ بِلَادَهُمْ ۞ اَللّٰهُمَّ اغْفِرْ لَنَا وَلِوَالِدِيْنَا وَلِمَشَائِخِنَا وَلِأَحْبَابِنَا وَلِجَمِيْعِ أُمَّةِ نَبِيِّنَا صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ ۞ اَللّٰهُمَّ اهْدِنَا وَعَافِنَا وَاجْبُرْنَا وَانْصُرْنَا وَاعْفُ عَنَّا وَتَجَاوَزْ عَنَّا يَا أَرْحَمَ الرَّاحِمِيْنَ وَيَا أَكْرَمَ الْأَكْرَمِيْنَ ۞ اَللّٰهُمَّ اغْفِرْ لِمُصَنِّفِ هٰذِهِ الْخُطَبِ الْمُذَكَّرَةِ ۞ وَنَجِّهِ مِنْ خِزْيِ الدُّنْيَا وَعَذَابِ الْاٰخِرَةِ ۞

أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ ۝

إِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَىٰ وَيَنْهَىٰ
عَنِ الْفَحْشَاءِ وَالْمُنْكَرِ، اُذْكُرُوا اللهَ الْعَظِيمَ يَذْكُرْكُمْ
وَادْعُوهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللهِ تَعَالَىٰ أَعْلَىٰ وَأَوْلَىٰ
وَأَعَزُّ وَأَجَلُّ وَأَتَمُّ وَأَهَمُّ وَأَقْوَىٰ وَأَكْبَرُ ۝

# றஜபு, ஷஅபான், றமலான் ஆகிய மூன்று மாதங்களுக்கும் இரண்டாவது குத்பா

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்)

சங்கையும் மகத்துவமும் உள்ள அல்லாஹுத் தஆலாவுக்கே எல்லாப் புகழும் தகும். அவன் சிருஷ்டிகளைச் சிருஷ்டித்து, அவர்களில் சிறப்பும் மேன்மையுமுள்ள நபிமார்களையும் றஸூல்மார்களையும் அனுப்பி வைத்தான்.

நபித்துவம் என்ற மாளிகையை அழகான முறையில் பரிபூரணமாக்கி நிறப்பமாக்கிய அவனது ஹபீபென்னும் அன்பராகிய களங்கமற்றவராகிய நபியின் உம்மத்தில் எங்களைச் சேர்த்ததுச் சிறப்பித்ததற்காக அவனை அதிகமாகப் புகழ்கிறோம்.

சில மாதங்களைப் பார்க்கினும் சில மாதங்களைச் சிறப்பித்து, சிறப்பான றஜபு, ஷஅபான் மாதங்களை நமக்கு வரும்படிச் செய்து, அதனைப் பெரும் சிறப்பினும் சிறபபாகச் சிறப்பித்தற்காக அவனுக்கு நாங்கள் நன்றி செலுத்துகிறோம்.

வணக்கத்துக்குரியவன் அவனைத் தவிர்த்து (வேறும் யாரும்) இல்லை; அவன் தனித்தவன், அவனுக்கு இணையில்லை, அவனுக்குப் போட்டியானவனோ நிகரானவனோ சமமானவனோ இல்லை என்று நான் சாக்ஷியங்கூறுகிறேன்.

எங்களது நாயகம், எங்கள் தலைவர் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும் தூதராகவும், அழகிய மதிப்பும் மக்காமுல் மஹ்மூது முள்ளவராகவும் இருக்கிறார்கள் என்று சாக்ஷி யங்கூறுகிறேன். நேரானவழியின்பால் வழி காட்டுபவர்களான அவர் களது கிளையார், தோழர்கள் யாவருக்கும் அல்லாஹுத் தஆலா ஸலாத் என்னும் கருணை புரிவானாக!

أَمَّا بَعْدُ ஜனங்களே! இதுவே புனித மாதம். இந்த மாதத்தை அல்லாஹுத் தஆலா உங்களுக்கு உபகாரமாக அளித் திருக்கிறான். இதில் ஒருவர் ஒரு நன்மையான காரியத்தைச் செய் வாராயின் அவருக்குப் பன்மடங்கு இரட்டிப்பான நன்மை எழுதப்படு கிறது. இன்னும் பல உயர்ந்த அந்தஸ்துகளை அடைகிறார். ஆதலின், சன்மார்க்கத்துக்கு இணக்கமான காரியங்களை இம்மாதத்தில் செய்யப் பிரயத்தனப்படுங்கள்! மானக்கேடான செயல்களை இதில் தவிர்த்துக் கொள்ளுங்கள்!

மேலும், இதுவே அம்மாதத்திலுள்ள புனிதமான ஜும்ஆ வுடையநாள். மற்றைய காலங்களிலுள்ள ஜும்ஆவின் நாட்களைப் பார்க்கினும் மேலாகிவிட்டது. சந்தோஷங்களும் அனுக்கிரகங்களும் கூடி மிகைத்து விட்டது. ஆதலின், அதில் மனிதர்களின் தலைவரின் மீதும், சங்கைவான்களான கண்ணியவான்களான அவர்களது தோழர்கள் மீதும் ஸலாத்தையும் ஸலாமையும் அதிகமாக்குங்கள்! அல்லாஹுத் தஆலாவையும் பிரார்த்தியுங்கள்! ஏனெனில், அதில் அல்லாஹுத் தஆலாவைப் பிரார்த்திப்பது அங்கீகரிக்கப்படுகிறது. முன்னர் நடந்ததையும் இனி நடக்க இருப்பதையும் குறித்து அவனிடத்தில் பிழை பொறுக்கத்தேடுங்கள், ஏனெனில், அதில் பிழை பொறுக்கத்தேடுவதானது பட்டோலையில் எழுதப்பட்டிருக்கிற குற்றங்களை அழிக்கிறது.

நாயனே! பாபிகளுக்குப் பரிந்து பேசுபவரும், குற்றங்களை விட்டு அவர்களைச் சுத்தப்படுத்துபவரும் அவர்களது கவலைகளை நீக்கி,

வருத்தங்களை அகற்றுபவரும் எங்கள் எஜமானரும் எங்கள் நாயகரு மான முஹம்மது (ஸல்) அவர்களுக்கு உனது நிலை நிலைத்திருக்கும் காலமெல்லாம் ஸலாத் என்னும் கருணையை அருள்வாயாக!

இன்னும் நபிமார்கள், முர்ஸல்கள் யாவருக்கும், உன்னை யண்டியுள்ள மலக்குகள் யாவருக்கும், ஸஹாபிகள் என்னும் தோழர்கள், தாபிஈன்கள் என்னும் இவர்களைப் பின்பற்றியவர்கள் ஆகியவருக்கும், சன்மார்க்கத்துக்கு இணங்கி நடப்பவர்களான உனது நல்லடியார்கள் எல்லோருக்கும், பொதுவாகவும், சிறப்பாக பூரணச்சந்திரனும், இஸ்லாம் மதத்தில் முதலாவதாகப் பிரவேசித்தவரும், மலைப்பொதும்பில் முஸ்தபா (ஸல்) அவர் களுக்குப் பிரயாணத் தோழராக இருந்தவரும், பெருமையும் கண்ணியமும் பொருந்தியவரும், நபிமார்களுக்குப் பிறகு நிச்சயமாக மனிதரில் சிறந்தவரும், எங்கள் நாயகருமான அப்துல்லாஹி அபூ பக்கிரினிஸ் ஸித்தீக் (றலியல்லாஹு தஆலா அன்ஹு) அவர் களுக்கும், நீதியும் கண்காணிப்புமுள்ளவரும், மின்பரையும் மிஹ் ராபையும் அலங்கரிப்பவரும், திருக் குர்ஆனுக்கு இயைந்த ஆலோ சனையுள்ளவரும், எங்கள் நாயகருமான உமறுப்னுல் கத்தாபு (றலியல் லாஹு தஆலா அன்ஹு) அவர்களுக்கும்,

நாணயமும் மெஞ்ஞானமுமுள்ளவரும், அல்லாஹுத் தஆலா வின் அமரர்களும் கூட இவரைக் கண்டு வெட்கிக்கும்படியானவரும், கேட்காதிருக்கும்போதே கொடையளிப்பவனது வெளஹு என்னும் பலகையில் இருப்பதைப்போல் திருக் குர்ஆன் ஆயத்துக்களைத் திரட்டியவரும் எங்கள் நாயகருமான உதுமானுப்னு அப்பான் (றலி யல்லாஹு தஆலா அன்ஹு) அவர்களுக்கும்,

அல்லாஹுத் தஆலாவின் வெற்றி வேங்கையும், அந்தஸ்து களும், புதவிகளுமுள்ளவரும் எங்கள் நாயகருமான அலிய்யுப்னு அபீதாலிப் கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களுக்கும்,

சந்திர சூரியர்களான இரு பேரர்களும், பிரகாசமுள்ளவர் களும், தலைவர்களுமான ஸய்யிதுனல் ஹஸன், ஸய்யிதுனல் ஹுஸைன் (றலியல்லாஹு தஆலா அன்ஹுமா) ஆகியவர்களுக்கும்,

இவர்களது மாதாவும் ஸ்திரீகளது நாயகியுமான பாத்திமத்துஸ் ஜஹ்ராஉ (றலியல்லாஹு தஆலா அன்ஹா) அவர்களுக்கும், றஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது ஏனைய புதல்விகளுக்கும், நம் பிராட்டிமார் சந்ததியினர் யாவருக்கும், ஜனங்களால் மதிக்கத்தக்கவர்களும், மகத்துவமுள்ளவர்களும், அழுக்கு, அசூயை ஆகியவைகளை விட்டு நீங்கியவர்களும், இரு சிறிய தந்தைகளுமான ஸய்யிதுனா ஹம்ஜா, ஸய்யிதுனல் அப்பாஸ் (றலியல்லாஹு தஆலா அன்ஹும்மா) ஆகியவர்களுக்கும், ஏனைய ஸஹாபிகள், தாபிஈன்கள், இவர்களைப் பின் பற்றியவர்கள் யாவருக்கும் கியாமத்து நாள்வரை ஸலாத்து என்னும் கருணையை அருள்வாயாக!

நாயனே! எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களது மார்க்கத்துக்கு உதவி செய்தவர்களுக்கு நீ உதவி செய்து, எங்களையும் அவர்களில் சேர்ப்பாயாக!

எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களது மார்க்கத்துக்கு உதவி மறுத்தவர்களுக்கு நீயும் உதவி மறுத்து எங்களை அவர்களில் சேர்க்காதிருப்பாயாக!

நாயனே! காபிர்களையும் பித்அத்துக்காரர்களையும் முஷ்ரிக்குகளையும் அழித்து, அநியாயக்காரக் கூட்டத்தாரில் எங்களை ஆக்காதிருப்பாயாக! நாயனே! அவர்களது கூட்டத்தைக் கலைப்பாயாக! நாயனே! அவர்கள் சேகரமாவதைச் சிதறவைப்பாயாக! நாயனே! அவர்களது இல்லங்களை இடித்துப் போடுவாயாக! நாயனே! அவர்களது நகரங்களைக் கெடுத்து விடுவாயாக!

நாயனே! எங்களுக்கும், எங்கள் பெற்றோர்களுக்கும், எங்கள் குருமார்களுக்கும், எங்களன்பர்களுக்கும், எங்கள் நபி (ஸல்) அவர்களது உம்மத்துகள் யாவருக்கும் பிழை பொறுப்பாயாக!

நாயனே! எங்களை நேர்வழியில் நடத்துவாயாக! எங்களை மன்னிப்பாயாக! எங்கள் குறைகளை நிவர்த்தித்துத் தன்னிலையாக்குவாயாக! எங்களுக்கு உதவி புரிவாயாக! எங்களை விட்டு எங்கள் பாவங்களை அகற்றுவாயாக! எங்கள் குறைகளைப் புறக்கணிப்பாயாக!

*கிருபையாளர்களுக்கெல்லாம் அதிகக் கிருபை செய்வோனே! சங்கையாளர்களுக் கெல்லாம் அதிகச் சங்கையுள்ளோனே!*

*நாயனே! ஞாபக மூட்டிகளான இவ்வுபதேசங்களைத் தொகுத்தவருக்கு மன்னிப்புச் செய்து, உலக இழிவுகளையும் மறுமையின் வேதனையையும் விட்டு அவரை விடுவிப்பாயாக!*

أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ

إِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى وَيَنْهَى عَنِ الْفَحْشَاءِ وَالْمُنْكَرِ ۝ اُذْكُرُوا اللهَ يَذْكُرْكُمْ وَادْعُوا يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللهِ تَعَالَى أَعْلَى وَأَوْلَى وَأَعَزُّ وَأَجَلُّ وَأَهَمُّ وَأَقْوَى وَأَكْبَرُ ۝

மிக அறிந்தவனான, மிகச் செவியேற்பவனான அல்லாஹுத் தஆலாவினிடம் எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு நான் காவல் தேடுகிறேன்.

நிச்சயமாக அல்லாஹ் நீதியையும், உபகாரத்தையும், பந்துக்களுக்குக் கொடுப்பதையும் ஏவுகிறான். இன்னும் மானக்கேடானவைகளையும் வெறுக்கத்தக்கவைகளையும், அழிச்சாட்டியத்தையும் விட்டு விலக்குகிறான். நீங்கள் ஞாபகப்படுத்திக் கொள்வதற்காக உங்களுக்கு உபதேசிக்கிறான்.

*மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள்! உங்களை அவன் நினைவு கூறுவான்; அவனைப் பிரார்த்தியுங்கள்! உங்களுக்கு அவன் பதில் கூறுவான்; அல்லாஹுத் தஆலாவை நினைப்பது மிக உயர்ந்தது, மிக மேலானது, மிக அருமையானது, மிகப்பெரியது, மிக சிறப்பமானது, மிக முக்கியமானது, மிக வன்மையுள்ளது.*

முஹர்ரம் மாதம் முதல் றமலான் மாதம் வரையிலுள்ள குத்பாக்கள் முற்றிற்று.

மௌலானா அப்துல்ஹை லக்னவி (ரஹ்) அவர்களின்

# குத்பா கொத்து

## தமிழ் பெயர்ப்பு

ترجمة الخطب المجموعة لعبد الحي اللكنوي

### 2-வது பாகம்

#### பொருள் அட்டவணை

ஷவ்வால் மாதம் முதல் ஜும்ஆ, ஷவ்வால் மாதம் இரண்டாவது ஜும்ஆ, ஷவ்வால் மாதம் மூன்றாவது ஜும்ஆ, ஷவ்வால் மாதம் நான்காவது ஜும்ஆ, ஷவ்வால் மாதம் ஐந்தாவது ஜும்ஆ.

துல்காயிதா முதல் ஜும்ஆ, துல்காயிதா இரண்டாவது ஜும்ஆ, துல்காயிதா மூன்றாவது ஜும்ஆ, துல்காயிதா நான்காவது ஜும்ஆ, துல்காயிதா ஐந்தாவது ஜும்ஆ.

துல்ஹஜ் முதல் ஜும்ஆ, துல்ஹஜ் இரண்டாவது ஜும்ஆ, துல்ஹஜ் மூன்றாவது ஜும்ஆ, துல்ஹஜ் நான்காவது ஜும்ஆ, துல்ஹஜ் ஐந்தாவது ஜும்ஆ.

மூன்று மாதங்களுக்கு பொதுவாய் இரண்டாவது குத்பா.

ஈதுல் பித்ர் முதல் குத்பா, ஈதுல் அல்ஹா இரண்டாவது குத்பா, ஈதுல் பித்ர், ஈதுல் அல்ஹா பொதுவாய் இரண்டாவது குத்பா.

நிகாஹ் குத்பா, ஈஜாப் கபூல் பின்னுள்ள துஆக்கள்.

இதன் விலை ரூ. 2 80

தமீமுல் இஸ்லாம் புக் டிப்போ.
நெ. 612, திருவல்லிக்கேணி ஹைரோட், மதராஸ்-5.

# حنفي تعليم الاسلام ثانية

## فقه كتاب

ايمان تضكي نونف زكوة حج اكو يكضبدي فرض شرط
سنة واجب مستحب مكروه مثليو يكضيم او يكضن
تا تفريعكضيم تضكيلم برم سنمارك كريكي كضلم
اوتويندي او ثلكضيم تلامفرماي وروان مريل
تضواي عربتمضل اجدبد وكرث انال حنفي
مذهبيدبور كضك حنفي فقه مسئلة كضي اميتم
شافعي مذهبيد يور كضك شافعي فقه مسئلة كضي
اميتم ووبركتاباك اجدبد وكرث انزيم حج ياتري
كارو كضك مك اوشيم تيو يانت حنفي كتاب روفاار
شافعي كتاب روفاار،

ست تمض فستكم ميلفبد كتابلض
يلاوشيعكضيم تمضل يضث اتلض عرب اوثل
سورة كضي عرب يضتل يضث اضكي مريل اجدبد
يركرث حنفي فستكم روفانال شافعي فستكم روفانال

تعليم الاسلام فرس انديك دبو ٢٤٦ ترليكين ﻫ وده دانس